முத்துலட்சுமி ராகவன்

எண்ணியிருந்தது ஈடேறு...

எட்டாம் பாகம்

முத்துலட்சுமி ராகவன்

எழுதிய

எண்ணியிருந்தது ஈடேற...

எட்டாம் பாகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	எண்ணியிருந்தது ஈடேற... 8
நூலாசிரியர்	:	முத்துலட்சுமி ராகவன்
நூல் உரிமை	:	எழுத்தாளருக்கு
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு, செப்டம்பர் 2017
தாள்	:	11.6 Kg புக் பிரிண்ட்
நூல் அளவு	:	1 X 8 கிரவுன்
பக்கங்கள்	:	400
விலை	:	ரூபாய் 200.00
பதிப்பகம்	:	லட்சுமி பாலாஜி பதிப்பகம் 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486

முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

ஆசிரியர் கடிதம்

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

எட்டு பாக நாவலை எழுத வேண்டும் என நான் எண்ணியிருந்தது ஈடேறி விட்டது.. இதை எழுத ஆரம்பித்த இந்த எட்டு மாதங்களில் என் வாழ்வில் நடந்த சில திருப்பங்கள், மாறுதல்கள் எனது கையைக் கட்டிப் போட முனைந்தன.. தடைகளைத் தகர்த்து என் பேனா தான் நினைத்ததை சாதித்து விட்டது..

தடைகளற்ற ஓட்டமில்லை.. என் வாழ்வின் ஓட்டத்தில் தடைகளைத் தவிர எதுவுமில்லை.. தடைகளைக் கண்டு நான் அஞ்சவில்லை.. தடை தாண்டும் ஓட்டத்தில் சில நேரம் நான் வீழ்ந்தபோது மனதில் அடி வாங்கினேன்.. கண்ணீர் விட்டேன்.. அடிபட்டால் வலிக்காதா..?

என்னை உற்சாகப் படுத்தும் ஊக்க மருந்தாக ஏதேனும் ஓர் நிகழ்வு என் வாழ்வில் நிகழ்ந்து விடாதா.. எனக்கான அங்கீகாரம் கிடைத்து விடாதா என்று ஏங்கும் ஏக்கம் இன்றளவும் என் மனதில் உண்டு.. இவ்வுலகம் நமது முகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியல்ல.. நாம் காட்டும்

இன்முகத்தையும், நேர்மையையும் இந்த உலகம் திருப்பிக் காண்பிப்பதில்லை.. எதிராளிகளின் குணங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக நான் மாற வேண்டிய சூழ்நிலைகளை எதிர் கொள்ளும் போது என் மனம் அதிர்கின்றது.. ஏன் இந்தப் போராட்டம் என்ற கேள்வி என் மனதை ரணமாக்குகிறது..

போராடும் வாழ்க்கையிலே..

போர்புரிய நான் சளைத்ததில்லை..

இருந்தபோதும் என் இறைவா..!

இறுதிவரை எனக்குப் போர்தானா..?

எப்போதும் இறைவனிடம் நான் கேட்கும் கேள்வியையே இப்போதும் முன் வைக்கிறேன்.. ஆற்றுக்கு அணை கட்டலாம்.. அருவிக்கு அணை கட்ட முடியுமா..? என் எழுத்து கொட்டுகின்ற பேரருவி..! இது வெறும் கர்வமல்ல.. எனக்கே எனக்கான வித்யா கர்வம்..!

இதுவரை 140 கதைகளைப் படைத்திருக்கிறேன்.. இவை அனைத்துமே மென்மையான காதல் உணர்வுகளைக் கொண்ட நகைச்சுவை இழையோடும் கதைகளல்ல..

துன்பங்களையும், துயரங்களையும் சுமந்த கதைகளையும் நான் படைத்திருக்கிறேன்.. சோகங்களையும் சுமை நிரம்பிய உள்ளங்களையும் எனது பேனா சொல்லியிருக்கின்றது.

இன்றும் அந்திவானம், தென்றலைத் தேடி, அக்கினி பறவை, காத்திருந்தேன் காற்றினிலே, மௌனத்தின் குயிலோசை, யாரோடு யாரோ, ஆராதனை போன்ற கதைகளை எனது வாசக, வாசகியர் தேடித்தேடிப் படிக்கிறார்கள்.. நெஞ்சில் நெருஞ்சி முள்கள் நிரட வாழும் சாபம் பெற்ற மனிதனின் கதையைச் சொல்லும் 'இது நீரோடு செல்கின்ற ஓடம்..' நாவல் மூன்று பாக நாவல்களாக விரிந்து மனதைக் கசக்கிப் பிழியும் சோகத்தை மட்டுமே சொன்னது..

இது மிகப் பெரிய வெற்றியை பெற்றுத் தந்த நாவல்.. எனது 'ஏழு ஸ்வரங்கள்..' நாவல் வழக்கமான எனது பாணியிலிருந்து மாறுபட்டு, ஏழு ஸ்வரங்களாகப் பிரிந்து, ஏழு பிறவிகளின் ஏழு காலகட்ட கதையைச் சொன்ன நாவல்.. இந்தக் கதையை எழுதியது ஒரு மிகப் பெரும் சவால்.. எனது வாசக, வாசகியர் இந்தச் சவாலில் என்னை வெல்ல வைத்தார்கள்.. ஏழு ஸ்வரங்களையும் விரும்பிப் படித்தார்கள்..

என் மனம் வலித்தால் அந்த மன வலிமையும் நான் எழுத்தாக்குவேன்.. சிரிப்பில் மட்டுமல்ல, உன் சோகத்திலும் நாங்கள் துணை நிற்போம் என்று என் வாசக, வாசகியர் என்னுடன் கை கோர்ப்பார்கள்.. எனை நோக்கி வீசப்பட்டக் கற்களைக் கொண்டு பல அடுக்கு மாளிகைகளைக் கட்டிக் கொண்டவள் நான்..

எங்கோ ஓர் மூலையில் இந்த பிரபஞ்சத்தின் சிறு துகளாக அடையாளமற்ற மனுஷியாக ஜீவித்திருந்தேன்.. எனது பத்து வயதில் கவிதை எழுதினேன்.. இருபத்தி நான்காம் வயதில் கதைகளை எழுத ஆரம்பித்தேன்.. முப்பத்தி ஒன்பதாம் வயதில் 'முத்துலட்சுமி ராகவன்' என்ற எழுத்தாளராக அயைாளம் காணப்பட்டேன்..

எனக்கென்ற இந்த அடையாளம் கிட்ட முப்பது ஆண்டுகள் காத்திருந்தேன்.. இன்று எழுதி, நாளை பிரசுரமாகி, நாளை மறுநாள் 'நானும் எழுத்தாளர்தான்' என்று கூவி விடவில்லை.. இப்போதும் எனது அக்கம் பக்கத்தினரால் கூட அறியப்படாத சாதாரண மனுஷியாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.. பெயரையும் புகழையும் தேடவில்லை.. பாராட்டும் மேடைகளை நாடிய தில்லை.. மௌனத்திரையின் மறைவில் மறைந்து என் பேனாவை மட்டும் இவ்வுலகிற்கு

வெளிப்படுத்தும் என்மீது போட்டியையும், பொறாமையையும், காழ்ப்புணர்ச்சியையும் ஏவி விட வேண்டாம்..

‘எம்.ஆர் போல எழுதுங்கள்’ என்று எனது சக எழுத்தாளர்களை தூண்டும் அளவிற்கு நான் ஒன்றும் பெரிய அப்பா டக்கர் அல்ல.. எழுத்துலகில் நான் வெளிப்பட்ட போது புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவரின் பெயரைச் சொல்லி அவரைப் போல எழுதுங்கள் என்றார்கள்.. நான் மறுத்து விட்டேன்..

“என் கதைகளில் எனது உணர்வுகளும் கதை சொல்லும் பாணியும்தான் வெளிப்படும்.. வேறு ஒருவரின் பாணியில் என்னால் எழுது முடியாது.. எனது எழுத்துக்கள் என்னைத்தான் அடையாளம் காட்ட வேண்டும்.. வேறு ஒருவரை அல்ல..”

இதைச் சொல்லும் போது எனது முதல் கதை கூட வெளிவந்திருக்கவில்லை.. இந்த சுய அடையாளத்தில் உறுதியாக இருப்பவர்களே உண்மையான எழுத்தாளர்கள்.. வேறு என்ன செல்ல..?

எனக்கென்று சிறு வாசக வட்டம் இருக்கிறதுதான்.. அது நான் உருவாக்கிய வாசக வட்டமல்ல.. தானாக உருவாகிய

வாசக வட்டம்..! ஜனரஞ்சகமான வார இதழ்களில் எனது சிறுகதைகளோ, குறும் கதைகளோ, தொடர்கதைகளோ வெளி வந்ததில்லை.. புகழ்பெற்ற எழுத்தாளர்களின் வரிசையில் என் பெயர் உச்சரிக்கப் படவில்லை.. மெர்க்குரி விளக்குகளின் ஒளிச்சிதற்களில் இருந்து தனிமைப்பட்டு சின்னஞ்சிறு அகல்விளக்காக கானகத்தில் தொலைந்திருப்பவள் நான்.. மற்றவர்களின் கண்களை உறுத்தும் அளவிற்கு புகழ் ஏணியில் ஏறி விடவில்லை.. ஆதலினால் அறிவாளர்களே..! பொறுமை காத்து விலகிச் செல்லுங்கள்..

ஆகஸ்ட் 2016-ல் வெளிவந்த எனது 'தென்னங் கீற்றின் பாடலிலே...' என்ற நாவலின் கதை சுவராஸ்யமானது ஒரு தாய்..! அவளுக்கு இரண்டு மகன்கள்.. ஒருவன் பெற்ற மகன்.. இன்னொருவன் வளர்ப்பு மகன்.. இருவரில் ஒருவன் திருமணவயதில் தாயைப் பிரிந்து வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான்.. வெளியேறிய தம்பிகாரன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான்.. அவனது காதல் விவாகரம் அண்ணனுக்குத் தெரிந்து விடுகிறது.. அவன் தம்பியின் காதலைப் பற்றியும், காதலியைப் பற்றியும் தாயிடம் சொல்லாமல் அவனுக்காக தம்பியின் காதலியை அவர்களது அம்மாவே பெண் கேட்கும்படியான சூழ்நிலையை உருவாக்கி விடுகிறான்..

அந்தப் பெண் இளைய மகனின் காதலி என்பதை அறியாமல் மூத்த மகனுக்காக பெண் கேட்டு விடுகிறாள் அம்மா.. இளைய மகனோ அவனது காதல் விவாகரம் தெரிந்து அவனுக்காகத்தான் அவனுடைய அம்மா பெண் கேட்டிருக்கிறாள் என்று மகிழ்ந்து போகிறான்..

என்னங்க.. 'பாகுபலி-2' கதையைப் போலவே இருக்கிறதே என்று நினைக்கறீங்களா..? இது எனது 'தென்னங் கீற்றின் பாடலிலே..' நாவலின் கதைங்க.. இந்தக் கதையைத்தான் திரையிடப் பட்ட முதல் வாரத்திலேயே ஆயிரம் கோடி வசூலை ஈட்டிய 'பாகுபலி-2' திரைப்படத்தின் அதி முக்கிய சம்பவங்களாக கொண்டு வந்திருக்கிறார்கள்.. ஒரே கற்பனை இருவருக்கும் வருமென்றால் முதல் கற்பனை என்னுடையது.

அது என்ன மாயமோ, மந்திரமோ தெரிய வில்லை.. எனது கற்பனையில் உருவான கதைகளை மிகப் பெரும் படைப்பாளிகள் தத்தம் கற்பனைகளின் உருவான கதைகளாக படைத்து விடுகிறார்கள்.. என்னதான் அவர்கள் சீவி முடித்து சிங்காரித்து.. சிவந்த நெற்றியில் பொட்டும் வைத்து திரையிட்டாலும் படைத்தவளுக்குத் தெரியாதா, தான் படைத்த கதை இதுவென்று..?

எனது முந்தைய ஆசிரியர் கடிதத்தில்.. பதிவிட்டிருந்ததை மறுபடியும் இங்கே நினைவுறுத்து கிறேன்.. வெளிநாடுகளில் கலைவளங்களும், கற்பனை வளங்களும் பாதுகாக்கப் படுவதைப் போல நம் நாடுகளில் பாதுகாக்கப் படுவதில்லை..

ஓர் படைப்பாளியின் படைப்பு களவாடப்படும் போது அந்த படைப்பாளியின் மனம் படும் வேதனை எத்தகையதாக இருக்கும் என்பதை எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை.. திரைப்படப் பாடலை எழுதிய பாடலாசிரியர், அதைப் பாடும் பாடகர், துணை நிற்கும் இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் என்று பலரின் துணையோடு ஓர் பாடலுக்கு இசையமைக்கும் இசையமைப்பாளரால் தான் இசையமைத்த பாடல்களுக்குக் காப்புரிமை பெற முடிகின்றது.

அதுவே.. நோயாளியாக நடமாடியபடி இரவும், பகலும் கண்விழித்து எழுதும் எழுத்தாளரின் தனிப்பட்ட படைப்பான கதைகளுக்கு காப்புரிமை பெற முடியவில்லை எனும் போது விரக்தி வரவில்லை.. வெறுப்புத்தான் வருகின்றது.

- நட்புடன்

முத்துலட்சுமி ராகவன்

அத்தியாயம் 239

தொட்டிலில் தாலாட்டுப் போல இதமான குலுங்கலில் சுகமான உறக்கத்தின் ஊடே விழிப்பு வருவதைப் போல மயக்கத்திலிருந்து விழிப்பு வந்தது நந்தினிக்கு.. உடலின் அயர்வு போகவில்லை.. இமைகளைத் திறக்க முடியாமல் அசதி அழுத்தியது.. உடலின் ஒட்டுமொத்த சக்தியையும் திரட்டி வலுக் கட்டாயமாக கண்களைத் திறக்க முயன்றாள்.. முடியவில்லை.. தடக், தடக் என்ற ரயிலின் தாளலயத்துடன் கூடிய குலுக்கலாக இல்லாமல் திடிரென்று பலமான குலுக்கலும்.. மற்ற நேரங்களில் மிதமான குலுக்கலுமாக இருந்ததில் ரயில் பயணம் இப்படி இருக்காதே என்று குழம்பினாள்..

கால்களை நீட்டி நிமிர்ந்து படுக்க முடியாமல் குறுகலாக முடங்கியிருப்பதைப் போல் தோன்றியதில் இமைகளைத் திறக்காமல் அடிப்பார்வையாய் கம்பார்ட் மெண்டை ஆராய்ந்தாள்..

‘இது டிரெயின் போலத் தெரியலையே..’

அவள் குழம்பிக் கொண்டிருக்கும் போதே பலமான குலுக்கல் ஏற்பட்டது.. சீட்டிலிருந்து நழுவி விழப் போய் கடைசி நொடியில் தப்பித்தாள்..

“பார்த்து ஓட்டுடா.. பன்னாடை..!”

கர்ண கடூரமாக காதுகளில் விழுந்த குரலில் நந்தினியின் மயக்கம் துளிக்கூட மிச்சமில்லாமல் தலை தெறிக்க ஓடிவிட்டது..

‘டிரெயின் டிரைவரை இப்படித் திட்ட முடியாதே..’

முழுவதுமாக விழித்துப் பார்த்தால் அவளுக்கு மயக்கம் தெளிந்து விட்டதை ‘அவன்’ கண்டு பிடித்து விடுவான் என்று இமைகளை முழுவதுமாகத் திறக்காமல் லேசாகத் திறந்து பார்த்தாள்..

‘அடி நந்தினி..! இது கார்டி..’

மகாப்பெரிய கண்டுபிடிப்பை கண்டு பிடித்து விட்டதைப் போல அவளது மனம் அவளுக்கு அறிவுறுத்தியது..

‘காரா..?’

நந்தினிக்கு வெகு அருகில் தெரிந்த காரின் மேல் பகுதி.. அது கார்தான் என்பதை தெள்ளத் தெளிவாக அறிவுறுத்தியது..

‘டிரெயினில இல்ல போய்க்கிட்டு இருந்தேன்.. காருக்குள் எப்படி வந்தேன்..? எப்போது வந்தேன்..?’

யோசிக்க முடியாமல் நந்தினியின் தலை விண் விண்னென்று தெறித்தது.. அசைந்து படுத்தால் ‘அவன்’ கண்டு கொள்வான் என்பதால் உடலை அசைக்காமல் அரைப் பார்வையில் பார்த்தாள்..

அவளை பின் இருக்கையில் படுக்க வைத்திருந்தான்.. அடுத்த சீட்டில் இருவர் அமர்ந்திருக்க முன் பக்கத்தில் டிரைவர் மட்டும் அமர்ந்து காரை ஓட்டிக் கொண்டிருந்தான்..

‘இது பார்ச்சுனர் கார்..’

பின்பக்கத்தில் அவளைத் தூக்கிக் கடாசி விட்டு நடுப்க்க இருக்கையில் காவலாக ‘அவன்’ உட்கார்ந்திருக்கிறான்.. நந்தினி மயக்கத்தில் ஒடுங்கியிருந்த இருக்கையின் பக்கமாக கதவு இருக்காது.. அவள் வெளியே வர வேண்டுமானால் நடுப்பக்க இருக்கையைக் கவிழ்த்து வழி ஏற்படுத்தித்தான் வெளியேறியாக வேண்டும்..

‘படுபாவி..! பிளானெல்லாம் பக்காவா போடுறான்..’

இல்லையென்றால் மட்டும் கார்க்கதவை திறந்து நந்தினியால் வெளியே குதித்து விட முடியுமா..? கார்க்கதவைத் திறந்து மூடும் கட்டுப்பாடு காரை ஓட்டுபவரின் கையில் அல்லவா இருக்கும்..?

இதைக்கூட சிந்திக்க முடியாத நிலையில் செயலிழந்து இருந்தாள் நந்தினி.. மயக்கம் தெளிந்திருந்தாலும் உடல் களைப்படைந்திருந்தது..

'எவ்வளவு நேரமா மயக்கத்திலிருக்கிறேனோ.. தெரியலையே..' கார்க் கண்ணாடி வழியாக மெல்லிய வெளிச்சம் தெரிந்தது... கார் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை... அடுத்த இருக்கையில் உட்கார்ந்திருந்தவனின் பின்பக்கத் தோற்றம் மட்டுமே தெரிந்தது.. ரயிலில் பயணித்த போது 'அவன்' முகத்தைக் கூட அவள் தெளிவாகப் பார்த்துத் தொலைக்கவில்லை..

எவனோ ஒருவன்.. எதிர்சீட்டில் பயணிப்பவன் என்றுதான் நினைத்தாள்.. படுபாவி.. அவளைக் கடத்துவதற்காக வந்திருக்கிறான் என்று ஆருடமா கணித்திருந்தாள்..?

‘எப்படி என் சீட்டுக்கு எதிர்சீட்டில் வந்து உட்கார்ந்திருந்தான்..? நான் ஒன்றும் டிக்கெட்டை ரிசர்வ் பண்ணவில்லையே.. நான் அந்த சீட்டிற்குத்தான் வரப் போகிறேன்னு இவனுக்கு எப்படித் தெரியும்..?’

கம்மாண்டர் அவளுடன் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஒன்றாகப் பயணித்தான் என்றால் அவனுடைய கதையே வேறு.. அவனுக்கும் அவளுக்குமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து அவளுக்கான டிக்கெட்டை உத்ராவுக்கு அனுப்பி வைத்திருந்தான்.. இங்கே அப்படியில்லையே..

‘அவன்...’ பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனின் பின்பக்கத் தோற்றம் அவளுக்கு அறிமுகமானதைப் போல இருந்தது..

‘யார் இவன்..?’

அவள் மூளையைக் கசக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்காமல் ‘அவன்..’ பக்கத்திலிருந்தவனிடம் பேச ஆரம்பித்தான்..

“தேங்க் யு அபராஜிதா.. உன்னோட ஹெல்ப் இல்லைன்னா இவளைக் கடத்தியிருக்க முடியாது..”

‘அடப்பாவி..! இவன் அபராஜிதனா..?’

சமுத்ரா பீச்சில் அவளிடம் நல்லவன் போல உண்மைகளை விளம்பி விட்டுப் போனவன் திருவணந்தபுரத்தை விட்டு நகராமல் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தானா..?

“எனக்கு இவளோட குணத்தைப் பற்றி நன்றாகத் தெரியும் மகேந்திரன்... ரவிச்சந்திரன் இவளிடம் உண்மையை மறைத்துட்டான்னு தெரிந்த அடுத்த செகண்டில் அவனையும் விட்டு ஓடுவாள்ன்னு உன்னிடம் சொன்னேனா இல்லையா..? எப்படி..? என்னோட கெஸ்ஸிங் சரியா இருந்ததா..?”

“பின்னே..? யார் நீ.. யோகானந்தனோட மகனாச்சே.. புள்ளி வைக்காமலே கோலம் போடறதில கில்லாடியாச்சே.. என்றைக்கு உன்னோட கெஸ்ஸிங் மிஸ்ஸிங் ஆகியிருக்கு..? தூள் கிளப்பிட்ட போ..”

“இவ சரியான தத்தி மகேந்திரா.. முன்கோபமும் முரட்டுப் பிடிவாதமும் அதிகம்.. மனசில ஒன்று தப்புன்னு பட்டிருச்சுன்னா அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா.. ஆனால் ஒன்று மகேந்திரா.. இவ மனதில தப்புன்னு படறது தப்பாகத்தான் இருக்கும்.. அந்த வகையில் இவள்

கெட்டிக்காரி.. சரி எது, தப்பு எதுன்னு பார்க்கிற பார்வையிலேயே துல்லியமா கண்டு பிடிச்சுருவா..”

“அப்படித்தான் உன்னையும், உன் தங்கையையும் தப்பானவங்கன்னு கண்டு பிடித்தாளோ.. ஹா.. ஹா..”

மகேந்திரன் என்று அபராஜிதனால் அழைக்கப்பட்ட ‘அவன்..’ பலமாகச் சிரித்தான்.. அபராஜிதன் அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை..

“ஸாரி நண்பா.. சிரிப்பை அடக்க முடியலை..” என்றான் மகேந்திரன்..

“நானும், என் தங்கையும் தப்பானவங்கன்னா, நீயும் உன் அம்மாவும் யார் மகேந்திரன்..? நல்லவர்களுக்கும் நல்லவர்களோ..?”

அபராஜிதனின் குரலில் அப்பட்டமான எள்ளலும், இடக்கும் கலந்து ஒலித்தன.. மகேந்திரன் பல்லைக் கடிப்பது அவன் வார்த்தைகளை மென்று துப்புவதி லிருந்தே தெள்ளத் தெளிவாக தெரிந்தது..

“வார்த்தைகளைப் பார்த்து விடனும் அபராஜிதா.. நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதை நினைவில்

வை.. மார்த்தாண்ட பூபதியின் மகன் மகேந்திர பூபதியிடம் பேசிக் கொண்டிருக்கிறாய்..”

‘அடக்கடவுளே..! இவனும் ராஜ வம்சமா..’

நந்தினிக்குள் எரிச்சல் மண்டியது..

இருபத்தி இரண்டாம் நூற்றாண்டைத் தொட்டுக் கொண்டிருக்கும் கால கட்டத்திலும் மன்னரும், மகுடமும் வந்து நின்றால் பற்றிக் கொண்டு வராதா..?

“ஹ..! நீதான் ராஜ வம்சம்..! நான் சாமானியன் பாரு..”

“உன்னைப் போல பெயருக்கு ராஜவம்சம்ன்னு பீற்றிக்கிற ஆளில்லை நான்.. பெயருக்கு ஏற்றதைப் போல ராஜ வாழ்க்கை வாழ்கிறவன்.. நீ உன் தாய்மாமன் மகனின் தயவில் அண்டிப் பிழைப்பவன்.. நினைவில் வைத்துக் கொள்..”

“மகேந்திரா..” அடிபட்ட வேங்கையின் ஆவேசத்துடன் உறுமினான் அபராஜிதன்..

“உஷ்ஷ்.. சத்தம் போடாதே.. உன்னையெல்லாம் சரிசமமாக என்னுடன் உட்கார வைத்திருப்பதால் நீயும், நானும் சமம்ன்னு மனப்பால் குடிக்காதே.. என் கால் தூசிக்கு

இணையாக மாட்டாய் நீ.. மனதில் இருக்கட்டும்.. நண்பன்னு வாய் வார்த்தைக்குச் சொன்னால் நீ எனது நண்பனாகி விடுவாயா..?”

“நான் உனக்கு நண்பனாக முடியாது மகேந்திரன்.. ரவிச்சந்திரன்தான் உனக்கு உயிர் நண்பன்..”

மறுபடியும் அபராஜிதனின் குரலில் எள்ளலும், இடக்கும் திரும்பியிருந்தன..

“அவனைப் பற்றிப் பேசாதே..” மகேந்திரனின் கோபம் திசை திரும்பியிருந்தன..

“அவன் சிநேகித துரோகி.. நீயும் உன் தங்கையும் சரியான சமயத்தில் எனக்குத் தகவல் கொடுக்கலைன்னா இவளை கண்டு பிடிக்க முடியாமல் நான் வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து தொலைத்திருப்பேன்..”

“உனக்குத்தான் கல்யாணம்ன்னாலே வேம்பாச்சே மகேந்திரா.. வெரைட்டியாய் ஹோட்டலில் சாப்பிட்டுப் பழக்கப் பட்டவனுக்கு வீட்டுச் சாப்பாடு பிடிக்காதுன்னு வியாக்கினம் பேசியவன்தானே நீ.. இப்ப என்ன கல்யாணத்தில இவ்வளவு இண்ட்ரெஸ்ட்டா இருக்கிற..”

“இண்ட்ரெஸ்ட்டாவது.. மண்ணாவது.. அதெல்லாம் ஒரு கழுதையும் இல்லை.. எனக்குக் கல்யாணம்ன்னு கண்யாகுமரி பூரா நியுஸ் பரவிருச்சு.. அது நடந்து தொலைக்கலைன்னா பிரஸ்டிஜ் இஷ்யூவாகி விடும்.. அதுதான் பிராப்ளம்..”

“ஓ.. அதிதான் பிராப்ளமோ..”

அபராஜிதன் திரும்பி பின்சீட்டைப் பார்த்தான்.. நடுங்கிப் போன நந்தினி மயக்கம் தெளியாதவளைப் போலக் கண்களை இறுக்கி மூடிக் கொண்டாள்.. பயமாக இருந்தது..

‘கடவுளே..! காப்பாற்று..’ மனதுக்குள் பிரார்த்தித்தாள்.

“இன்னும் மயக்கம் தெளியலை..” என்றான் அபராஜிதன்..

“இரண்டு நாளைக்குத் தெளியாது..” அலட்சியமாகச் சொன்னான் மகேந்திரன்..

‘என்ன ஒரு நம்பிக்கை.. இதில் இவன் எக்ஸ்பர்ட் போல..’ நந்தினி நினைத்துக் கொண்டாள்..

‘இவன் சொல்வதைப் போல இரண்டு நாள்களுக்கு மயக்கம் தெளிந்திருக்காதுதான்.. நான்தான் இவன் மயக்க

மருந்துக் கர்ச்சீப்பை முகத்தில் வைத்து அழுத்துகிறான்னு தெரிஞ்சதுமே மூச்சை அடக்கிட்டேனே.. அப்படியிருந்தும் ஒண்ணு, ரெண்டு செகண்ட் மயக்க மருந்தை சுவாசிக்க வேண்டியதாப் போயிருச்சு.. அதில் வந்த மயக்கத்தில இவனுக என்னை அள்ளிப் போட்டுக்கிட்டு வந்துட்டானுக..'

ரயிலில் மகேந்திரன் அவளது முகத்தில் மயக்க மருந்தில் நனைக்கப்பட்டக் கைக்குட்டையை அழுத்திய நொடிகள் அவள் மனதில் வந்தன..

'நான் தான் பெல்ட் மன்னன்னு சொன்னானே.. இவன்தான் பெல்ட் மன்னன்னா.. கம்மாண்டர் யார்..? அபராஜிதன் கம்மாண்டரைத்தானே பெல்ட் மன்னன்னு சொன்னான்..?'

மயக்க மருந்தின் வீர்யம் குறைந்தும் நந்தினிக்குத் தலையைச் சுற்றியது.. பெல்ட் மன்னன் எனப்பட்ட கொடியவனைத் திருமணம் செய்து கொள்வதிலிருந்து தப்பிக்க வயநாட்டுக்கு ஓடி அடைக்கலம் புகுந்தால் அங்கே கம்மாண்டர் அவளை மயக்கித் தொலைக்கிறான்.. அவன் மீதான மயக்கத்திலிருந்து விடுபட முடியாமல் தத்தளித்த பேதையிடம் காதலைச் சொல்லி அவள் மனதை அலைக்கழிக்கிறான்.. ஒரு

வழியாக அவன் மீதான காதலை அவள் ஒப்புக் கொண்ட சில நாள்களில் அவன்தான் பெல்ட் மன்னன் என்று அவனுடைய அத்தை மகளும், அத்தை மகனும் சொல்கிறார்கள்.. உனக்கு என்னை முன்னரே தெரியுமா..? உன் அம்மாவும்,தங்கையும் என்னைப் பெண் கேட்டு வந்தார்களா என்ற கேள்விக்கு அவன் 'ஆமாம்' என்று பதில் சொல்கிறான்.. அவளிடமிருந்து உண்மையை மறைத்ததை ஒப்புக் கொள்கிறான்.. மனம் வெறுத்துப் போய் அவனிடமிருந்து பிரிந்து ஓடினால் வழியில் அவளை ஒருவன் கடத்துகிறான்.. கடத்துகிறவன் சொல்கிறான்.. அவன்தான் 'பெல்ட் மன்னன்..' என்று..

'இது சிந்தாநதிச் சுழலைவிடத் திணற வைக்கும் சுழல்..!'

திக்குத் தெரியாத கானகத்தில் மாட்டி விட்டதைப் போல இருந்தது நந்தினிக்கு.. அடர்ந்த இருளில் வெளிச்சப் புள்ளியைத் தேடித் தேடிக் களைத்துப் போனாள்.. அவளைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் திகைத்துப் போனாள்..

'இவன் தான் பெல்ட் மன்னன் என்றால் கம்மாண்டர் ஏன் அப்படிச் சொன்னான்..? அத்தையும், ரம்யாவும் அவனுக்காக

நந்தினியைப் பெண் கேட்டார்கள் என்பதை ஒப்புக் கொண்டானே..'

ரவிச்சந்திரன் பொய் சொல்ல மாட்டான்..

இதில் நந்தினிக்கு மாற்றுக் கருத்தில்லை.. அவளிடமிருந்து உண்மையைத்தான் அவன் மறைத்தான்.. பொய் சொல்லவில்லை.. அதை அவனிடம் நேரடியாகக் கேட்டபோது ஆமாம், நான் உண்மையை மறைத்தேன் தான்.. அதனால் என்ன வந்து விட்டது..? உனக்கு என் மீது காதலில்லையா என்று கோபப்பட்டானே தவிர பொய் சொல்லி மழுப்பவில்லை..

ரவிச்சந்திரன் நேரிடையாக யுத்தம் புரிபவன்.. முதுகில் குத்திப் பெறும் வெற்றிகளில் விருப்பமில்லாதவன்.. நந்தினியைப் பணிய வைக்க மயக்க மருந்து கொடுத்து அவளைக் கடத்த நினைக்கவில்லை.. மயக்கி காதல் புரியத்தான் நினைத்தான்.. நினைத்ததை நடத்தி முடித்து விட்டான்..

மகேந்திரன் அப்படியில்லையே.. நேர்வழியை விரும்பாத அயோக்கிய சிகாமணியாக பெண்ணைக் கடத்துகிறானே..

யார் இவன்..? இவன்தான் பெல்ட் மன்னன் என்றால் கம்மாண்டர் யார்..?

ரவிச்சந்திரன், மகேந்திரன்.. இருவரில் யார்தான் பெல்ட் மன்னன்..?

அத்தியாயம் 240

ஒருவன் தானே முன்வந்து நான்தான் பெல்ட் மன்னன் என்று ஒப்புக் கெள்வானா என்ன..? ஒருவேளை அவ்வளவு சொல்லியும் ரவிச்சந்திரனின் மேலுள்ள காதலில் நந்தினி அவன் பெல்ட் மன்னன் என்பதை பெரிதுபடுத்தாமல் ஏற்றுக் கொண்டால் என்ன செய்வது என்று அபராஜிதனே வேறு ஒருவனை பெல்ட் மன்னன் என்று சொல்ல வைத்து அவளைக் கடத்துகிறானோ..

‘அபராஜிதன் அப்படியாப்பட்ட ஃபிராடு வேலைகளுக் கெல்லாம் பெயர் பெற்றவன்தான் என்றாலும் இவர்கள் பேசிக்கிறதைப் பார்த்தால் அப்படித் தெரியலையே..’

நந்தினி மயக்கம் தெளிந்து விட்டதை உணராதவர்களாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.. மகேந்திரன் அபராஜிதனின் அடியாளைப் போலத் தெரியவில்லை.. அபராஜிதனை அடியாளாக அமர்த்திக் கொள்பவனைப் போலதான் தெரிந்து வைத்தான்..

அவனது திமிரான பேச்சும், சிரிப்பும் அபராஜிதனை மிஞ்சிய பணக்காரன் அவன் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டின..

‘இவன் ராஜவம்சம்ன்னு சொல்லிக்கிறானே.. ராஜ வாழ்க்கை வாழ்கிறானாமே..’

தலையைச் சுழற்றிய மயக்கம் போதாதென்று நெற்றிப் பொட்டுக்கள் வேறு விண் விண்ணென்று தெறித்தன.. விரல்களால் நீவி விட்டால் வலி குறையலாம்.. அதைச் செய்ய முடியாமல் மூச்சை அடக்கி அசைவற்று படுத்திருந்தாள் நந்தினி..

“இதிலெல்லாம் நீ எக்ஸ்பர்ட்டாச்சே..” பார்வையைத் திருப்பி நேராக அமர்ந்தவாறு சொன்னான் அபராஜிதன்..

‘அப்பாடி.. அந்தப் பக்கமாத் திரும்பிட்டான்..’ நந்தினியின் சுவாசம் சீரானது..

“நீ பாராட்டறதைப் போலத் தெரியலையே...” மகேந்திரன் ஒரு தினுசான குரலில் கூறினான்..

“நான் சாதாரணமாத்தான் சொன்னேன் மகேந்திரன்.”

“இதை நம்ப நான் ஒன்றும் முட்டாளில்லை அபராஜிதா..”

“உனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறேன்னு நினைத்துப் பார்.. இவளைப் பற்றி உன்னிடம் யார் சொன்னது..? நான்தானே..?”

“எப்போது சொன்னாய்..? இரண்டு நாள்களுக்கு முன்னால்தான் சொன்னாய்.. அதுவும் உனக்கு பண நெருக்கடி வந்ததால் சொன்னாய்..”

“உன்னிடம் சொல்லாமல் மறைத்து ரவிச்சந்திரனுக்கு இவளை மேரேஜ் பண்ணி வைக்கிறதில எனக்கென்ன லாபம் மகேந்திரன்..?”

“அ.. அ.. அ.. யாரிடம் காது குத்துகிறாய்..? நீ இவளை ரவிச்சந்திரனுக்கு மேரேஜ் முடிக்க விட்டு விடுவாயா..? உன் தங்கையை ரவிச்சந்திரன் மேரேஜ் பண்ணிக் கொண்டால்தான் உன் ஃபேமிலிக்கே ‘புவ்வா..’ கிடைக்கும்.. சோற்றுக்கு வழி செய்யாம உன் தாய்மாமன் மகனின் காதலுக்கு அட்சதை தூவி வாழ்த்துச் சொல்ல நீயென்ன கேணையனா..?”

“நீ ரொம்பவும் எங்களைக் குறைவாப் பேசுகிறாய் மகேந்திரன்..”

“நான் பேசுவது ரொம்பவும் குறைவுதான் நண்பனே.. ஊர் உலகத்தில் கேட்டுப்பார்.. வண்டி, வண்டியாகக் கூட இல்லை.. லாரி, லாரியாகப் பேசுவார்கள்.. கழுவிக் கழுவி ஊற்றுவார்கள்.. நான் உனக்கு அதிகப்படியான மரியாதை கொடுக்கிறேன்னு அப்ப உனக்குத் தெரியும்..”

“எனஃப் மகேந்திரன்.. பேசிய வரைக்கும் போதும்..”

“அதைத்தான் நானும் சொல்கிறேன் அபராஜிதா.. நீ நாடகமாடியது போதும் .. ரவிச்சந்திரன் எனக்கு வில்லன்னா நீ வில்லாதி வில்லன்டா.. அவன் நண்பனுக்கு நிச்சயமான பெண்ணை காதலித்தான்.. நீ அவன் காதலிக்கும் பெண்ணை லவட்டிக்கப் பார்த்த.. விழுகின்ற மட்டையில் முன்மட்டை, பின் மட்டைன்னு உயர்வு தாழ்வு பார்க்க மாட்டாங்க... எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்..”

ஒன்றும் புரியாமல் தலை கிறுகிறுத்ததுதான் மிச்சம்.. சந்திரபாபு பாடிய பழைய பாடல் ஒன்றை மனதுக்குள் பினாத்திக் கொண்டாள் நந்தினி.. ஐயோ.. யாராச்சும் என்ன

நடந்ததுன்னு சொல்லித் தொலையுங்களேன் என்று கத்தலாம் போல இருந்தது..

‘ஒண்ணுமே புரியல உலகத்திலே..

என்னமோ நடக்குது..

மர்மமா இருக்குது..

ஒண்ணுமே புரியல உலகத்திலே..’

மயக்கமற்ற விழிப்பு நிலை தோதானதாக இருந்தது.. ஒட்டுக் கேட்க வேண்டிய அவசியமின்றி அவள் மயங்கிக் கிடக்கிறாள் என்ற நினைவில் அவர்கள் இருவரும் வெளிப்படையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்..

“வெல்.. உன்னிடம் நான் வேஷம் போட வேண்டிய அவசியமில்லை.. நீயே எல்லாத்தையும் புரிந்துக்கிட்ட..”

“அடேங்கப்பா.. இல்லேன்னா நீ வேஷம் போடாத ஆள்தான்.. இந்த நடிப்பையெல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக் கொள்.. உன்னை இன்றைக்கு நேற்றில்லை.. வருடக் கணக்கில் அறிந்து வைத்திருப்பவன் நான்.. ரவி மட்டும் துரோகியாக மாறாமல் இருந்திருந்தால் என்

நிழலைக்கூட நீ நெருங்கியிருக்க முடியாது.. நீயெல்லாம் எனக்கு ஈக்குவலான ஆளா..?”

என்னதான் வேண்டாதவனாக இருந்தாலும் வார்த்தைக்கு வார்த்தை இழிவுபடுத்தி மட்டமாக பேசக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அடிப்பார்வையில் பார்த்த போது மகேந்திரனை விடத் தோற்றத்திலும், நடையுடை பாவனைகளிலும் அபராஜிதன் நாகரிகத்தில் மேம்பட்டவனாக இருந்தான்.. அவனிடம் மேல்தட்டு வர்க்கத்தின் சாயல் தென்பட்டது.. மகேந்திரனின் தோற்றத்தில் ஒர்விதமான காட்டுத்தனம் இருந்தது.. மைனர்தனமாக இருந்தான்.. பணக்காரப் பொறுக்கி என்பது அப்பட்டமாகத் தெரிந்தது.. வேட்டை நாயின் குரூரத்தை அவன் முகத்தில் கண்டாள் நந்தினி.. இவனிடம் சிக்கியிருக்கிறோமே என்று பயந்தாள்..

“நன்றி மறந்து பேசுகிறாய் மகேந்திரன்.. நான் மட்டும் இவள் திருவனந்தபுரத்தில் இருக்கிறாள் என்று சொல்லாமல் இருந்திருந்தால் இவளிருக்கும் இடத்தை கடைசிவரை உன்னால் கண்டு பிடித்திருக்கவே முடியாது.”

‘எட்டப்பன்..’ மனதுக்குள் திட்டித் தீர்த்தாள் நந்தினி..

நல்லவன் போல நடித்து ஏமாற்றும் நயவஞ்சகன்.. அவனை நல்லவன் என்று நந்தினி நினைத்ததேயில்லை யென்றாலும் அவன் வார்த்தைகளில் உண்மை இருக்குமோ என்று சஞ்சலம் கொண்டாள்.. ரவிச்சந்திரனிடம் அது பற்றிக் கேட்டாள்.. அவனும் தான் உண்மையை மறைத்தது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டான்.. அதனால்தானே அவள் 'யாழ்' ஹோட்டலை விட்டு வெளியேறினாள்.. இல்லாவிட்டால் தாய்பறவையின் சிறகுகளுக்கடியில் பாதுகாப்பாய் இருந்ததைப் போல அவனது இரும்புக் கைகளின் அரவனைப்பில் பாதுகாப்பாய் இருப்பதைத் துறந்து விட்டு வெளியேறுவாளா..?

அபராஜிதனும் அதைத்தான் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான்..

"நான்தான் இவளைக் காட்டிக் கொடுத்தேன் மகேந்திரன்.."

"ரவி இப்படிச் செய்வான்னு நான் நினைத்துப் பார்க்காததினால் கேரளாப் பக்கம் இவளைத் தேடவில்லை.. இல்லைன்னா நீ காட்டிக் கொடுக்கிறதுக்கு முன்னாடியே நான்

இவளைக் கண்டு பிடித்திருப்பேன் அபராஜிதா.. ரொம்பவும் துள்ளாதே..”

“ஈஸிட்..?” அலட்சியப் புன்முறுவல் பூத்தான் அபராஜிதன்..

“எதுக்கு இந்த எகத்தாளச் சிரிப்பு..?” மகேந்திரன் உஷ்ணமானான்..

“ரவிச்சந்திரனின் பாதுகாப்பில் இவள் இருப்பதை நீ கண்டு பிடித்திருந்தாலும் ஒன்றும் கிழித்திருக்க முடியாது மகேந்திரன்.. அது உனக்கே தெரியும்..”

“அவன் என்ன பெரிய இவனா..?”

“பின்னே.. இல்லையா..?”

“பாருடா.. மாமன் மகன் மேலே பாசம் கொடி கட்டிப் பறக்குது..”

“இது பாசமில்லை.. உண்மை..”

“அதுக்கும் உனக்கும் ரொம்பத் தூரமாச்சே அபராஜிதா..”

“உனக்கு மட்டும் பக்கமா..? ரவிச்சந்திரனின் பாதுகாப்பில் இருக்கிறவர்களின் நிழலைக் கூட நீ நெருங்கி விட முடியாது மகேந்திரன்.. உனக்கும் இது தெரியும்..

அதனால்தானே இவள் இருக்குமிடத்தை நான் சொன்னவுடன் பணத்தைக் கொடுத்துச் செட்டில் பண்ணாமல் இவளை ரவிச்சந்திரனின் பாதுகாப்பிலிருந்து வெளியே கொண்டு வந்தால்தான் மொத்த பணத்தையும் கொடுப்பேன்னு கண்டிஷன் போட்ட..”

“அதுசரி.. வெறும் நியுஸுக்கு மட்டும் கோடிக் கணக்கில் பணம் கொடுக்க நானென்ன முட்டாளா..? பொய்யை உண்மையைப் போலத் திரித்துச் சொல்ல உன்னால்தானே முடியும்..”

“ஏன்..? உன்னால் அது முடியாதா..?”

“என்ன தேவைக்கு நான் உண்மையைத் திரித்துச் சொல்லனும்..? இதுதான் உண்மை.. வாயை மூடிக்கிட்டு கேளுன்னு பெல்ட்டைக் கழட்டி விளாசிற மாட்டேனா..?”

“அதைச் சொல்லு.. அதுவும் முடியலைன்னா இருக்கவே இருக்கு துப்பாக்கி.. கொலைக் கேஸை ஒன்றுமில்லாமல் ஆக்குவதில் உனக்கு நிகர் நீதானே..”

அபராஜிதனின் பாராட்டைக் கேட்ட நந்தினி உறைந்து போனாள்.. அந்தக் காரிலிருந்து எப்படித் தப்பிப்பது என்ற திகில் அவளைப் பற்றிக் கொண்டது..

‘கடவுளே..! நந்து சொன்ன பெல்ட் மன்னன் இவன்தான் போல.. அப்புறம் கம்மாண்டர் ஏன் அப்படிச் சொன்னான்..?’

நந்தினியின் உடல் வெடவெடக்க ஆரம்பித்தது.. காருக்குள் ஒருவனல்ல... இரண்டு கயவன்கள் இருக்கிறார்கள்.. இருவருக்குமே நந்தினியை அடையும் வெறி இருக்கிறது.. இப்படி வந்து மாட்டிக் கொண்டாளே..

‘பாஸ்..’

கண்ணீரை அடக்கிக் கொண்டாள் நந்தினி.. அவளது கண்ணீரை அந்தக் கயவர்கள் கண்டு விட்டால் அவளுக்கு மயக்கம் தெளிந்து விட்டதைக் கண்டு பிடித்து விடுவார்கள்..

‘கம்மாண்டருக்கு மட்டும் இது தெரிந்தால் இவர்களைச் சும்மா விட மாட்டான்.. பந்தாடிச் சுட்டுத் தள்ளி விடுவான்..’

அவனைப் போய் சந்தேகப்பட்டாளே.. அவன் அடித்த பெல்ட் அடிக்கும், சுட்ட துப்பாக்கிக் குண்டிற்கும் பின்னால் சரியான காரணம் இருக்கக் கூடும் என்று அவளுக்கு ஏன் தோன்றவில்லை..? அவளுடைய கம்மாண்டர் கொடுமைக்காரனாக இருப்பானா..? அப்படி அவனால் இருக்கத்தான் முடியுமா..?

காதலுக்கு அடிப்படையே நம்பிக்கைதான்.. அந்த நம்பிக்கை அவன் மீது அவளுக்கு இல்லாமல் போய் விட்டதே.. முதலில் அவனது காதலை சந்தேகித்தாள்.. அடுத்து அவனையே சந்தேகித்து விட்டாள்.. அஜந்தா சொன்னாலும் அபராஜிதன் சொன்னாலும் அவளுக்கு எங்கே போனது புத்தி..? யார் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ளலாமா..? என் கம்மாண்டர் ஒருநாளும் ஏமாற்றுக்காரனாக இருக்க மாட்டான் என்று உறுதியாக நம்பியிருக்க வேண்டாமா..?

‘எனக்கு இந்த தண்டனை தேவைதான்..’ மருகினாள் நந்தினி..

தாய், தந்தை, தம்பி, சொந்த பந்தம் என அனைவரையும் பிரிந்து நீயே சகலமும் என அவனிடம் அடைக்கலம் புகுந்து அவனைப் பின் தொடர்ந்தாளே.. மங்களூர் எக்ஸ்பிரஸில் அவளைக் கண்ட நொடி முதல் யாழ் ஹோட்டலில் இருந்து அவள் வெளியேறிய நொடி வரை கண்ணுக்குள் வைத்துப் பாதுகாத்தானே... அந்த நினைவிருந்தால் அவள் அவனது பாதுகாவலை விட்டு வெளியேறியிருப்பாளா..?

அவனிடம் அவள் கொண்டிருந்த மயக்கத்தை நன்கறிந்தும் தள்ளி நின்றான்.. அவனுடைய காதலை அவள்

சந்தேகித்து மறுத்தபோது கோபம் கொண்டானே தவிர.. அவளை ஒருபோதும் வற்புறுத்தி காதலை ஏற்க வைக்க முனைந்ததில்லை.. அவளது அனுமதியின்றி அவனது விரல் நகம்கூட அவள்மீது பட்டதில்லை.. அனைத்தும் உனக்கே என்று அவள் அனுமதித்த போது எல்லை மீறியதில்லை..

எப்படி சிந்தித்தாலும் அவன் அவளுக்கு அனாதை ரட்சகனாக, ஆபத்பாந்தவனாக, அனைத்துமானவனாகவே இருந்தான்.. வாராது வந்த மாமணியைத் தொலைத்து விட்டு ஏமாளியாய் அவள் சிறைபட்டு கிடக்கிறாள்.

'நான் தொலைந்து விட்டதை அவன் அறிவானா..?'

ததும்பிய கண்ணீரை விழுங்கிக் கொண்டாள்.. அவனுக்கு எப்படித் தெரியுமாம்..? அவள்தான் அறையைக் காலி செய்யாமல் உடுத்திய சுரிதாரோடு வெளியேறி விட்டாளே.. அன்றைக்கென்று அவனுக்கு ஹோட்டல் நிர்வாகக் கணக்கை சரி பார்க்கும் வேலை இருந்தது.. ஆடிட்டரை வரச் சொல்லிவிட்டு அவளை அறைக்கு உணவை வரவழைத்து சாப்பிட்டு விட்டு உறங்கி ஓய்வெடுக்கச் சொல்லியிருந்தான்.. அவன் வேலைச் சுமையில் மூழ்கியிருக்கும் தைரியத்தில்தான் அவள் ஜூட் விட்டிருந்தாள்..

‘அவன் ஏமாற்றி விட்டதாய் நினைத்தேனே.. இப்போது நான் ஏமாந்து சிக்கியிருக்கிறேனே.. இப்படி இவனிடம் மாட்டவா கிரேட் எஸ்கேப் ஆனேன்..?’

“ஏன் அபராஜிதா..?”

முன் இருக்கையில் பேச்சு ஆரம்பமானது.. திரைப்படத்திற்கு இடைவேளை விடுவதைப் போல அவர்களின் பேச்சுக்கு இடைவேளை விட்டிருந்தார்களோ என்னவோ என்று நொந்து போனாள் நந்தினி.. அவர்களின் பேச்சைக் கவனிக்கும் பெல்ட் மன்னன் என்று உறுதியானதிலிருந்து அவளது உயிர் பதறிக் கொண்டிருந்தது..

‘கம்மாண்டரின் முகத்தைப் பார்ப்பேனா..?’ அவள் ஏங்கிய ஏக்கத்தை ரவிச்சந்திரனுக்கு அறிவிக்க தூது செல்ல எவர் வருவார் என்று அவள் ஏங்கினாள்..

‘கண்கள் இரண்டும் என்று

உன்னைக் கண்டு பேசுமோ..?

காலம் இனிமேல் நம்மை

ஒன்றாய் கொண்டு சேர்க்குமோ..?’

அவளது மனம் பதறிப் பாடியது.. அவனது செவிகளை எட்டுமா..?

அத்தியாயம் 241

LDகேந்திரனின் முகத்தைப் பார்த்துப் பேசத் தோதாக சற்றுத் திரும்பி அமர்ந்து கொண்டான் அபராஜிதன்.. அவனது பக்கவாட்டுத் தோற்றத்தில் தெரிந்த கண்ணியத்தையும், நாகரிகத்தையும் கண்ட நந்தினிக்கு அருவெறுப்பாக இருந்தது.. முகம் அழகாய் இருந்தால் போதுமா..? அகம் அழகாய் இருக்க வேண்டாமா..? அபராஜிதன் எப்பேற்பட்டவன் என்பதை அறிந்து தொலைத்து விட்ட நந்தினி அவன் முகத்தைப் பார்க்கப் பிடிக்காதவளாக கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. அவர்களின் பேச்சு மட்டும் தெளிவாக காதில் விழுந்து வைத்தது..

“என்ன மகேந்திரன்..?”

“நீதான் ரவியோட தங்கையைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு தலைகீழா நின்று பார்த்தாயே.. அப்புறமும் எதுக்காக எனக்கு நிச்சயம் பண்ணின பெண்ணைத் தேடிப் போய் ஃபாலோ பண்ணினே..? ரவி உன்னை வயநாட்டு மலையுச்சியில இருந்து தலைகீழே தொங்க விட்டு அடிச்சதில பயந்துட்டியா..?”

“பயமா..? எனக்கா..? அது என் பரம்பரைக்கே வராது..”

“அதுதான் தெரிந்த சங்கதியாச்சே.. நீயும் உன் அப்பனும் எதுக்குப் பயந்திங்க..? கௌரவத்துக்கு பயந்தீங்களா.. கடன் வாங்க பயந்தீங்களா.. இல்லை சொத்து பத்தை தொலைச்சிட்டு மாமன் வீட்டில அகதிகளா வாழ்கிறதுக்குப் பயந்தீங்களா..? ஹா.. ஹா.. ஹா.. மானம் மரியாதைக்குப் பயந்தீங்களா..?”

இதைக் கேட்டதும் அபராஜிதனின் முகம் எப்படி மாறுகிறது என்று பார்க்க ஆவலானாள் நந்தினி.. அவளிருக்கும் நிலையை மறந்து அரைப்பார்வையாய் இமைகளைச் சற்றுத் திறந்து கவனித்தாள்.. அபராஜிதனின் முகம் அஷ்ட கோணலானதில்..

‘அப்படியே இஞ்சி தின்ன குரங்கைப் போலவே இருக்கான்..’ என்று அவதானித்து விட்டு அந்த முகத்தைக் காணச் சகிக்காமல் மறுபடியும் கண்களை இறுக்கி மூடிக் கொண்டாள்..

“நந்தினியை கடத்திட்ட தெம்பில பேசுகிறயா மகேந்திரா..?”

“ஆமாமாம்.. இவ பெரிய பாக்தாத் பேரழகி..! இவளைக் கடத்தி விட்ட சந்தோஷத்தில பேசுகிறேன்.. போவியா.. எங்க கணக்கே வேற..”

“என்ன..?”

“அது எதுக்கு உனக்கு..?”

“நீ காட்டிக் கொடுக்கிற எட்டப்பனாச்சே.. என்னவோ பயமே உன்னிடம் பயந்து போகும்ன்னு பீலா விடறியே.. இந்த டயலாக்கை ரவிச்சந்திரன் முன்னாடி சொல்கிற தைரியம் உனக்கிருக்கா..?”

“என்ன மகேந்திரன்.. உன் நண்பன் மேலே பாசம் பொங்குதோ..?”

“அவனா நண்பன்.. துரோகி..”

“அப்ப நான் உனக்கு நண்பன்தானே..” “சந்தடிசாக்கில ஒட்டிக்கப் பார்க்கிற பார்த்தியா..? உன்னை என் நண்பன்னு சொன்னா மலையாள தேசமே என்னை ஒதுக்கி வைச்சிரும்.. கேட்டே..”

“நீயென்ன கேரளாவா..? கன்யாகுமரிதானே..?”

“ரெண்டும் பக்கம், பக்கம்தானே.. என்னோட அப்பா கேரள ராஜவம்சம்.. மனசிலாயி..”

“நான் மனதில் வைத்து என்ன பண்ண மகேந்திரன்.. எனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை சீக்கிரமா செட்டில் பண்ணனும்னு நீ மனதில் வை..”

“அது எப்படி அபராஜிதா.. உழைத்துச் செலவளிக்காம அடுத்தவங்க பணத்தை ஊதாரித்தனமா செலவளிக்க உன்னால் மட்டும் முடியுது..?”

“ஏன்னா.. உங்க அப்பாவைப் போல என் அப்பா பத்து தலைமுறைக்குத் தேவையான சொத்தை சேர்த்து வைக்கலை.. பத்து தலைமுறைக்கும் உட்கார்ந்து சாப்பிடுகிற அளவுக்கு இருந்த சொத்தை அழித்து வைத்திருக்கிறான்.. உனக்கென்ன.. கொடுத்து வைத்தவன்..”

“உன் மாமன் மகன்மீது பொறாமைப்பட்டு வயியெரிந்தது போதாதுன்னு என் பக்கமும் திரும்பப் பார்க்காதே.. நான் வேற கேட்டகிரி.. துவைத்துத் தோரணம் கட்டித் தொங்க விட்டிருவேன்.. நீ எதுக்காக இந்த நந்தினி பின்னாலே சுற்றியிருப்பேன்னு எனக்குத் தெரியாதா..? ரவிச்சந்திரன் ஆசைப் படற பெண்ணை நீ அடைந்து காட்டனும்ங்கிற

கீழ்த்தரமான எண்ணம்... அவனை ஜெயிக்க நீ தேர்ந்தெடுத்த வழியிருக்கே.. பிரமாதம்..”

“நீ கல்யாணம் பண்ணிக்க இருந்த பெண்ணை அவன் ஆசைப்படலாம்.. அவன் ஆசைப்பட்ட பெண்ணை நான் கண் வைக்கக் கூடாதா..?”

“ஏன் கூடாது..?”

மகேந்திரன் குரலில் மண்டியிருந்த வெறுப்பு நந்தினியை கண் திறக்கச் செய்தது.. வெறுப்பென்றால் வெறுப்பு.. அப்படியொரு வெறுப்பு.. ரவிச்சந்திரனின் மீதும் ஒருவன் இப்படியொரு வெறுப்பைக் காட்ட முடியும் என்று அன்றுதான் நந்தினி அறிந்தாள்.. ரவிச்சந்திரன்தான் பெல்ட் மன்னன் என்ற நிலைமை உருவான போதும் அவளால் ரவிச்சந்திரனை வெறுக்க முடியவில்லையே.. இவன் ஏன் இப்படி வெறுக்கிறான்..?

“நம்பி ஃபோட்டோவைக் காட்டினேன்.. என் மனதிலிருந்ததை அவனிடம் சொன்னேன்.. பெரிய ஞானி போல பழியுணர்ச்சி இருக்கக்கூடாதுன்னு எனக்கு உபதேசம் பண்ணினான்.. எப்போதும் போலதான் அப்போதும் அட்வைஸ் பண்றான்னு இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில்

விட்டு விட்டேன்.. அவன் என்னடான்னா எனக்குத் துரோகம் பண்ணிட்டான்.. என்னைப் பிடிக்கலைன்னு ஓடி வந்தவளுக்கு அடைக்கலம் கொடுத்து வயநாட்டு அரண்மனையிலே தங்க வைச்சிருக்கான்.. நான் ஃபோட்டோவைக் காட்டினப்பவே அவன் முகம் மாறுச்சு.. உனக்கு இவளைத் தெரியுமான்னு கேட்டதுக்கு மழுப்பினான்..”

“நான் சொல்லப் போய் உண்மையைத் தெரிந்துக்கிட்ட.. இல்லேன்னா கேரளத்தில ஒரு குருவிகூட ரவிச்சந்திரனைக் காட்டிக் கொடுத்திருக்காது.. அது அவனோட கோட்டை..”

“அவன் போடும் சோற்றைத் தின்றுக்கிட்டேக் காட்டிக் கொடுக்க உன்னாலும் உன் குடும்பத்தாலும் மட்டும்தான் முடியும் அபராஜிதா..”

“போதும்ன்னு ஏற்கனெவே சொல்லிட்டேன் மகேந்திரன்.. உனக்கு உதவி செய்து விட்ட கொடுமைக்காக என்னையும் என் குடும்பத்தையும் டேமேஜ் செய்த வரைக்கும் போதும்.. பணத்திற்காகத்தான் இதைச் செய்தேன்..நினைவிருக்கட்டும்..”

“சும்மா அனத்தாதே.. உன் பணத்தை செட்டில் பண்ணத்தானே கூப்பிட்டுக்கிட்டுப் போகிறேன்.. வாயை மூடிக்கிட்டுப் பேசாமல் வா..”

எரிச்சலுடன் திரும்பிய மகேந்திரன் நந்தினியைப் பார்த்து விட்டு முகத்தைச் சுளித்தான்.

“கட்டை போல கிடக்கிறா.. அந்த ரவிச்சந்திரன் இவளிடம் என்ன அழகைக் கண்டு மயங்கி என்னைப் பகைச்சுக்கிட்டான்..? இவளும் இவ மூஞ்சியும்..”

நந்தினிக்குக் கோபம் வந்தது.. இவனுடைய முகரக் கட்டைக்கு என் மூஞ்சியை வழுப்பம் செப்புகிறானா என்று ஆத்திரம் கொண்டாள்.. ரவிச்சந்திரன் காதலித்ததால் நானும் அழகிதான் என்று கொஞ்ச நாளாக அவள் மனதில் குடி கொண்டிருந்த தன்னம்பிக்கையும் கர்வமும் ஆட்டம் கண்டன..

‘இந்த மூஞ்சியைத்தானே கம்மாண்டர் பருகு, பருகுன்னு பார்த்து வைப்பான்..’

இந்த ஒன்றிற்காகவே அவன் காலடியில் வீழ்ந்து ஆயுள் முழுவதும் பாதபூஜை பண்ண வேண்டும் போல இருந்தது..

‘பாக்தாத் பேரழகியான்னு இவன் கேட்கிறானே.. என்னோட கம்மாண்டர் பாக்தாத் பேரழகியெல்லாம் உன் பக்கத்தி ல் நிற்க முடியுமாடின்னு புளுகுவானே..’

அதைப் புளுகல் என்றுதான் நினைத்தாள் நந்தினி.. அது பொய்யாகத்தான் இருக்க வேண்டும்.. உண்மையாக இருந்தால் இவன் இப்படிச் சொல்லுவானா..?

"இந்த மூஞ்சியைப் பிடித்துப் போனதினால்தானே நீ நிச்சயம் செய்தாய்..? உன்னைப் பிடிக்கலைன்னு ஓடி ஒளிந்தவளைத் தேடி வந்து கடத்திக் கொண்டு போகிறாய்..?" அபராஜிதனும் நன்றாகத்தான் கேட்டான்..

"ஆசைப்பட்டு நிச்சயம் பண்ணலை.. இந்த மூஞ்சி பிடித்திருக்குன்னு கடத்திக்கிட்டுப் போகலை..." வெறுப்புடன் முகம் சுளித்தான் மகேந்திரன்..

"உன் அம்மாவோட ரிலேட்டிவ்ன்னு சொன்னாயே.. இவள்தான் மருமகளா வரனும்னு உன் அம்மா ஆசைப்பட்டாங்களா..?"

"ஒரு வகையில் அப்படித்தான்.. இவளை மருமகளாக்கிக் கொடுமைப்படுத்தி இவ அம்மாவை கதற வைக்கனும்னு ஆசைப்பட்டாங்க.."

மகேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பள்ளத்தில் பதிந்து எழுந்து குலுங்கியது கார்.. அதிர்ச்சியில் தன்னையும் அறியாமல் நந்தினி கண் விழித்து விட்டாள்..

“டேய் மடச் சாம்பிராணி.. கார் ஓட்டத் தெரியலைன்னா ஏண்டா டிரைவர் வேலைக்கு வர்ற..? இதுக்குத்தான் புதுசா வேலைக்கு வருகிறவனை டெஸ்ட் பண்ணிட்டு வேலைக்கு வைத்துக்கனும்ங்கிறது.. இன்னொரு தரம் காரை பள்ளத்தில் இறக்கினேன்னு வை.. உன் முகரையைப் பேர்த்திருவேன்.. ஜாக்கிரதை..” என்று டிரைவரைத் திட்டியபடி மயங்கிக் கிடந்த நந்தினி சீட்டிலிருந்து சரிந்து விழுந்து விட்டாளோ என்று பார்த்த மகேந்திரன் அவள் கண் விழித்திருந்ததைப் பார்த்து விட்டான்..

“அபராஜிதா.. இவ முழித்துக்கிட்டு இருக்காடா..”

அவன் போட்ட சப்தத்தில் பயந்து போன நந்தினி சுருண்டு ஒதுங்கி பின்சீட்டின் மூலையில் ஒடுங்கிக் கொண்டாள்.. அபராஜிதன் அவளைப் பார்க்கத் தயக்கப்படுவான் என்றுதான் நினைத்தாள்.. இத்தனை நாளாக போட்டுக் கொண்டிருந்த கண்ணியவான் வேடம் கலைந்து விட்டதே என்று கூசிப் போவான்.. சங்கடம் கொள்வான் என்றெல்லாம் பேராசைப்பட்டாள்..

எத்தனைதான் நந்தினி அவனை அவமானப் படுத்தினாலும் அத்தனையையும் துடைத்து விட்டு நந்தினியின்

முன்னால் 'ஈ' யென பல்லைக் காட்டியபடி வந்து நின்றவன்தானே அவன்.. என்னதான் அவள் மூக்கை உடைத்தாலும் கண்டு கொள்ளாமல் அவளிடம் 'ஜொள்' விட்டவன்தானே அவன்.

அவளது எதிர்பார்ப்பை முற்றிலுமாக உடைத்து விட்டவனாக அவளை சங்கடமில்லாமல் ஓர் பார்வை பார்த்து விட்டு..

"இவளுக்கு மயக்கம் தெளிய இரண்டு நாள்களாக்கும் என்று சொன்னாயே.. இவ்வளவுதானா நீ.." என்று மகேந்திரனை மட்டம் தட்டினான் அபராஜிதன்..

'அடப்பாவி..' என்று பார்த்த நந்தினியின் பார்வையை அவன் லட்சியமே பண்ணவில்லை..

"ஒரு பாட்டில் மயக்க மருந்தில முக்கி எடுத்த கர்ச்சீப்பை இவ மூஞ்சியில வைச்சு அமுக்கினேன் அபராஜிதா.."

"இவ மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்கலைன்னு ஒழுங்கா அமுக்காம அரைகுறையாய் அமுக்கிட்டியோ என்னவோ.. அந்த வகையில் நீயும் என்னைப் போலதான் மகேந்திரன்.. ரம்யாவைக் கல்யாணம் பண்ணி கதற வைக்கனும்னு நான் ஆசைப்பட்டேன்.. அதையே நீ சொல்லும்போது என்

இனம்ன்னு சந்தோஷமா இருக்கு.. இப்ப என்ன பண்ணலாம்..? இவ முழிச்சுக்கிட்டாளே..”

“எதுவும் பண்ண வேண்டாம்... கழுதை எங்கேயிருக்கு..? என் காருக்குள்தானே இருக்கு..? நான் பார்த்துக்கறேன்...”

“என் பணம்..?”

“விட மாட்டியே.. கடலோர பங்களாவுக்குப் போன பின்னால் தருகிறேன்.. அதுவரை நச்சரிக்காம வாயை மூடிக்கிட்டு வா..”

வாயை மூடிக்கொண்ட அபராஜிதன் கண்ணையும் சேர்த்து மூடாமல் நந்தினியை மிதப்பாக ஓர் பார்வை பார்த்து வைக்க அவள் கொதித்துப் போனவளாக..

“த்தூ.. நீயும் ஒரு மனிதனா..?” என்றாள்..

“என்ன நந்தினி.. வயநாட்டில் ரவிச்சந்திரனின் பாதுகாப்பில் இருக்கிறதைப் போல திமிராய் பேசுகிற.. இது வயநாட்டில்லை.. கன்யாகுமரிக்குப் போகிற ரோடு.. இங்கே உன்னைக் காப்பாற்ற ரவி வரமாட்டான்.. எவனுக்கு கழுத்தை நீட்ட பயந்து நீ ஊரை விட்டு ஓடினாயோ அந்த

மகேந்திரன்தான் இங்கே இருக்கிறான்.. உனக்குத் தாலிகட்டி வதைக்கப் போகிறான்.. இவனை வேண்டாம் என்று சொல்லி நீ வயநாட்டுக்கு ஓடினதுக்கு வாழ்நாள் முழுவதும் பனிஷ்மெண்ட் கொடுக்கப் போகிறான்..''

'படுபாவி.. எடுத்துக் கொடுக்கிறானே..' கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது நந்தினிக்கு..

''உன் தங்கையாய் இருந்தால் இப்படிச் செய்வாயா..?'' குமுறினாள்..

''இதைச் செய்யச் சொன்னதே என் தங்கைதானே..'' தோளைக் குலுக்கினான் அபராஜிதன்..

''நல்ல குடும்பத்தில் பிறந்த எந்த ஆணும் இது போன்ற செய்கையைச் செய்ய மாட்டான்..''

''என் குடும்பத்தைப் பேசுகிற வேலையை வைத்துக் கொள்ளாதே.. இப்படிப் பேசிப் பேசியே உன்னை கோட்டை விட்டு விட்டான் அந்த ரவிச்சந்திரன்.. அவன்தான் நல்ல குடும்பத்தில் பிறந்தவன்.. நான் ஊதாரிக் குடும்பத்தில் பிறந்தவனா..? அவனுடைய திமிருக்கு அவன் கண் முன்னால் உன்னைக் காதலித்துப் பழி வாங்கனும்னு நினைத்தேன்.. நீ மசியலை.. அவன்தானே பணக்காரன்.. கோடிஸ்வரன்.. நான்

அப்படியில்லையே.. நீ அவனைத்தான் காதலிப்பாய்.. என்னை எப்படிக் காதலிப்பாய்..?”

“ரவியைப் பற்றி நீ பேசாதே.. அவர் பணக்காரர் என்பதையும் தாண்டி சாதிக்கப் பிறந்தவர்.. ஹீ மேன்..! அவருடைய நிழலுக்குப் பக்கத்தில் நிற்கக்கூட உனக்குத் தகுதியில்லை.. உழைத்து முன்னேறி இன்றைக்கு உலகம் முழுவதும் தெரிந்த ஸ்டார் பிஸினெஸ் மேனான அவர் எங்கே..! நீ எங்கே..? அவரோட கால் தூசிக்கு சமமாவியா நீ..”

“நந்தினி..”

“அவர் முன்னால் இப்படி என் பெயரைச் சொல்லி நீ கூப்பிட்டு விட முடியுமா..? உன்னைக் கொன்று புதைத்திருப்பார்.. அவர் பக்கத்தில் இல்லைன்னதும் என்னமாய் சவுண்ட் விடற.. பார்த்தியா..”

“தெரியுதில்ல.. அவன் பக்கத்தில் இல்லேன்னு தெரியுதில்ல.. நீ தன்னந்தனியா மாட்டியிருக்க நந்தினி.. காப்பாற்ற அவன் வரமாட்டான்..” அபராஜிதன் கத்திக் கொண்டிருந்த போது..

“யார் சொன்னது..?” என்றபடி காரை ஓட்டி க் கொண்டிருந்த டிரைவர் திரும்பினான்..

“கம்மாண்டர்..”

நந்தினியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை..

அத்தியாயம் 242

அம்மாவைப் போன்ற அழகும், வீரமும் நிறைந்த காருண்யமே வடிவான பெண்ணொருத்தி மனைவியாக அமைய வேண்டும் என்று ஆற்றங்கரையோரமாக அரசமர நிழலில் மேடை போட்டு வீற்றிருக்கிறாராம் பிள்ளையார்.. இன்றைய காலம் போல குழாய் அதிலிருந்து தண்ணீரை அதி சுத்தமாக வடிகட்டித் தர ஆர்.ஓ என்று எதுவும் இல்லாமல்.. துவைக்க, குளிக்க, வீட்டிற்கான தண்ணீர் தேவைகளுக்கு என்று பெண்கள் ஆற்றை மட்டுமே நம்பியிருந்த அன்றைய கால கட்டத்தில் ஆற்றுக்கும், குளத்துக்கும் குடத்துடன் வரும் பெண்களைப் பார்வையிடத் தோதாக ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும் அவளுக்கான கோவில்களை அமைத்துக் கொண்டாராம்..

ரவிச்சந்திரனும் அது போலதான்.. அன்னையின் உபாசகன்.. வீணாவின் சாத்வீக குணத்தில் பெருமை கொள்பவன்.. வீணாவைப் போன்ற பெண் கிடைக்க வேண்டும் என்று அவன் நினைக்கவில்லை..

அவனது தாய்க்குப் பிடித்தமான பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான்..

அவனை, அவனது தாயை, தங்கையை, நேசிப்பவளாக போற்றுபவளாக ஒரு பெண் அமைய வேண்டும்.. அவள் வீணாவின் பாதம் பணிந்து அவளது பெருமையை மதித்துப் புரிந்து நடந்து கொள்ளும் மருமகளாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.. ரவிவர்மனைப் பற்றி அவன் எதுவும் நினைக்க வில்லை.. அவர் மனைவி, பிள்ளைகளின் மீது பற்று வைப்பதே குற்றம் எனச் சண்டை போடும் யாழினிக்கு மகனாகப் பிறந்தவர்.. அவந்திகாவின் அண்ணன்.. வரப் போகும் மருமகளைப் பற்றிய பொிதான எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லாதவர்..

வீணா அப்படியில்லை.. அவள் மனதில் ரவிச்சந்திரனுக்கு மனைவியாக வரப்போகும் அவளது மருமகளைப் பற்றி நிறைய எதிர்பார்ப்புகள் இருந்தன.. கனவுகளும், கற்பனைகளும் இருந்தன.. அதற்கேற்றாற் போல மகனுக்குப் பெண் அமைய வேண்டும்

என்று அவள் ஆசைப்பட்டாள்.. அவளது ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று ரவிச்சந்திரன் ஆசைப்பட்டான்..

தமிழ்நாட்டில் பிறந்து வயநாட்டு அரண்மனையின் மருமகளாக அவள் வாழ வந்தாலும் அந்த அரண்மனையின் ராணியாக அனைத்து விதமான அதிகாரங்களுடன் வாழ்ந்து விடவில்லை.. யாழினியின் மருமகளாக அவளுக்கு அடங்கி அவந்திகாவிடம் பொறுத்துப் போய் என்று இருக்கும் இடம் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள்.. அது ரவிச்சந்திரனைக் கோபப் படுத்தியது.. அவனுடைய அம்மா அதிகாரம் மிக்க மாமியாராக இருக்க வேண்டும்.. அவளை மதித்துப் பணிவுடன் அன்பையும் பிரியத்தையும் பொழியும் மருமகள் அவளுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவன் நினைத்தான்.. அப்போதுதான் அந்த அரண்மனையில் வீணவுக்கான அனைத்து உரிமைகளும் தடையற்று கிடைக்கும் என்பது அவனது கணக்கீடு..

கேரளத்தில் அவன் பெண்ணெடுத்தால் வருகின்ற மருமகள் வீணாவிற்கு முக்கியத்துவம் தருவாளா..? பிரியத்தைப் பொழிவாளா..? ரவிச்சந்திரனின் மனைவி யாராக இருந்தாலும் வீணா பிரியம் காட்டுவாள்.. பதிலுக்கு அவன் மனைவியும் பிரியத்தைக் காட்ட வேண்டுமே..

அதனால்தான் ரவிச்சந்திரன் வீணாவிடம் அவனுடைய வருங்கால மனைவியை தமிழகத்தில் தேடக் சொன்னான்..

“நீங்க மலையாளமில்லை.. தமிழ்நாட்டில் பிறந்தவங்கன்னு பாட்டியும், அத்தையும் வம்பிழுக்கிறதைப் போல அடிக்கடிக் குத்தித் காட்டிப் பேசறாங்கம்மா.. வரப்போகும் என் வொய்ஃபும் அப்படியே பேசினால் நான் சும்மாயிருக்க மாட்டேன்.. அவள் சும்மா இருந்தாலும் அத்தையும், பாட்டியும் சும்மாயிருக்க மாட்டாங்க.. அவளைக் கூட்டுச் சேர்த்துக்கிட்டு உங்களைத் தனிமைப் படுத்துவாங்க.. ஸோ.. எனக்கான வுட்-பியை தமிழநாட்டில் தேடுங்க.. இவதான் உன் வொய்ஃபுன்னு எவளை நீங்க கை காட்டறீங்களோ, அவளை நான் மேரேஜ் பண்ணிக்குவேன்.. இது சத்தியம் அம்மா..”

தாய்க்கு அவன் கொடுத்திருந்த வாக்குறுதியை மறந்து விட்டு அவன் உலகம் முழுவதும் சுற்றித் திரவியம் தேடும் வணிகனாக தொழில்களைப் பார்க்கப் போய் விட்டான்.. அவன் உலகம் சுற்றிக் கொண்டிருந்த நாள்களில் தமிழ்நாட்டுக் கோவில்களைச் சுற்றிப் பார்க்க.. மகளுடன் கிளம்பிப் போய் விடும் வீணா மகன் வய நாட்டுக்கு வந்திருந்த சமயத்தில் ஃபோட்டோ ஒன்றை அவனிடம் நீட்டி..

“ரவி.. இந்தப் பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் சந்தோஷப் படுவேண்டா..” என்று ஏக்கமாகச் சொன்னாள்..

“மாம்.. உங்களுக்கு மருமகளாக வர முடியுமான்னு அந்தப் பெண்தான் ஏக்கப் படனும்.. இங்கே நேருக்கு மாறா நீங்க ஏக்கப்படறிங்க.. வாட் இஸ் திஸ் மம்மி.. நீங்க ரவிச்சந்திரனோட அம்மா.. அந்த நினைவு மனதில் எப்பவும் இருக்கனும்..”

ஃபோட்டோவை வாங்கிப் பார்க்காமல் அவன் அதட்டல் போட்டான்..

“அப்படிச் சொல்லாதே அண்ணா.. இவங்களை ஃபர்ஸ்ட் டைம் பார்த்தப்பவே இம்ப்ரெஸ் ஆகிட்டேன்.. செம கியூட் தெரியுமா..? வாலுன்னா வாலு.. அப்படியொரு வாலு.. திருத்தணிக்குப் போகனுமின்னு அம்மாவும் நானும் போயிருந்தோமா.. இவங்க காலேஜ் ஃபிரண்ட்ஸோட அங்கே வந்திருந்தாங்க.. இவங்க அடிச்ச லூட்டியைச் சொல்ல முடியாது போ.. நான் ‘ஆ’ன்னு இவங்களைத்தான் பார்த்துக்கிட்டு இருந்தேன்னா பார்த்துக்கயேன்.. ஸ்மார்ட் கேர்ள் அண்ணா.. சிரிக்கிறப்ப கண்களும் சேர்ந்து

சிரிக்குதுண்ணா..'' ரம்யா மூச்சு விடாமல் பேசியதில் ஆச்சரியப்பட்டவன்..

''கொஞ்சம் நிறுத்தி நிதானமாகத்தான் சொல்லேன்..'' என்று செல்லமாக தங்கையின் தலையில் ஒரு குட்டை வைத்தான்..

''நீ ஒருதரம் இவங்க ஃபோட்டோவைப் பார்த்தேன்னு வை.. உனக்கும் பிடிக்கும்..'' ரம்யா பிடிவாதம் பிடித்தாள்.

''ஓ..! அப்பேற்பட்ட உலக அழகியோ..''

ரவிச்சந்திரன் அப்போதும் ஃபோட்டோவை வாங்கிப் பார்க்கவில்லை..

''உலக அழகிக்கான அளவுகோல் எதுன்னு எனக்குத் தெரியலை அண்ணா.. இவங்களை உலக அழகின்னு சொல்ல முடியாது.. பட்.. இன்னதுன்னு சொல்ல முடியாத ஓர் அழகு இவங்களிடம் இருக்கு.. அதை எப்படிச் சொல்கிறதுன்னுதான் தெரியலை.. ஐ லைக் ஹெர்.. கால் தரையில் பாவ மாட்டேங்குது.. நடக்கவே மாட்டேங்கறாங்க.. ஒரே தாவல்தான் போங்க.. அதிலும் அந்த சிரிப்பு இருக்கே.. நோ சான்ஸ்.. எப்படித்தான் வார்த்தைக்கு வார்த்தை சிரிக்கிறாங்களோ..'' மடை திறந்த வெள்ளம் போலப் பேசிய

தங்கையின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட ரவிச்சந்திரனின் மனம் வலித்தது.. அவளால் செய்ய முடியாததைச் செய்யும் இளம் பெண்ணை முதன் முறையாகப் பார்த்திருக்கிறாள்.. அதிர்ந்து நடக்காத நடை, மௌனம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் அரண்மனைக் கிளி அவள்.. இருப்பது வைரங்களினால் இழைக்கப் பட்ட உயர்ந்த இடம் என்றாலும் அந்த அரண்மனை அவளுக்குச் சிறைதான்.. வைரக் கூண்டு என்பதற்காக பறக்க முடியாமல் சிறைபட்டிருக்கும் அரண்மனைக் கிளி கூண்டை விரும்பி விடுமா..?

ரம்யா விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவி போன்ற ஓர் பெண்ணை பார்த்திருக்கிறாள்.. குதூகலமும் துறுதுறுப்பும் நிரம்பிய அந்தப் பெண்ணைப் பார்த்த நொடியிலேயே அவளுக்குப் பிடித்து விட்டது.. அந்தப் பெண் அண்ணியாக வந்தால் நன்றாக இருக்கும் என்று பரபரக்கிறாள்..

‘யார், எவள் என்று தெரியாத பெண்ணின் மீதா இவர்கள் இருவரும் அன்பு வைக்கிறார்கள்..?’ ரவிச்சந்திரனுக்கு யோசனையாக இருந்தது..

அதை அவன் சொன்ன போது.. "அப்படியில்லைடா.." என்றாள் வீணா..

"திருத்தணியில் பார்த்த பெண்ணை மறந்துட்டோம்.. தஞ்சாவூரில் என் சொந்தக்காரங்க இருக்காங்கன்னு உனக்குத் தெரியுமில்ல.."

"தெரியுமே.."

"தஞ்சாவூர் கோவிகளுக்குப் போனப்ப சாமியைக் கும்பிட்டுட்டு அப்படியே சொந்தக்காரங்க வீடுகளுக்கும் ஒரு ரவுண்டு போய் விட்டு வந்தோம்.."

"குட் ஜாப்.."

"அங்கே ஒரு சொந்தக்காரங்க வீட்டிலதான் இந்தப் ஃபோட்டோவைப் பார்த்தேன்.. அவங்களோட ஆல்பத்தில இருந்தது.."

"உடனே அவங்களைக் கேட்காம உருவிக்கிட்டு வந்துட்டிங்களா..?"

வீணா அப்படிச் செய்திருக்க மாட்டாள் என்றுதான் ரவிச்சந்திரன் நினைத்தான்.. விளையாட்டாகத்தான் அந்தக் கேள்வியையும் கேட்டான்.. ஆனால் அவளோ..

“ஆமாம்டா ரவி.. எப்படிக் கண்டு பிடித்த..?” என்று உண்மையாக கண்களை விரித்தாள்..

“மாம்..” ரவிக்கு கோபம் வந்து விட்டது..

“என்னம்மா ஆச்சு உங்களுக்கு..? ஒருவருக்குத் தெரியாமல் அவங்க வீட்டு ஆல்பத்தில இருந்து ஒரு பெண்ணோட ஃபோட்டோவை உருவிக்கிட்டு வந்தது நீங்கதானா..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.. அந்த அளவுக்கா நாம் குறைந்து போய் விட்டோம்..? அவளென்ன பெரிய இவளா..?”

“கோபிச்சுக்காதேடா.. எனக்கு வேறு வழியில்லை..”

“ம்ப்ச்.. பேசாதீங்கம்மா.. அவங்களிடம் சொல்லி விட்டே படத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்கலாமே..”

“சொல்ல முடியாத நிலைமை என்கிறேனே..”

“அப்படியென்ன நிலைமை..?”

“முதலில் நீ இந்த ஃபோட்டோவைப் பார்..”

“நீங்க செய்திருக்கும் வேலைக்கு இந்த ஃபோட்டோவை சுக்கு நூறாய் கிழித்துப் போடனும் என்கிற வெறிதான் வருது.. தெரியாம ஃபோட்டோவை எடுத்துக் கொண்டு வந்தாங்களாம்.. அப்படி இவ ஃபோட்டோவைக் கட்டாயம்

கொண்டு வரனுமா என்ன..? தமிழ்நாட்டில் வேற பெண்ணே இல்லையா..?”

“எனக்கு இவளைப் பிடித்திருக்கு ரவி.. ரம்யாவுக்கும் கொள்ளைப் பிரியம்..”

தழைந்து பேசிய வீணாவின் வார்த்தைகளில் தழுதழுப்பில் கோபம் குறைந்தான் ரவிச்சந்திரன்.. தாயின் விருப்பத்துக்காக ஃபோட்டோவை வாங்கிப் பார்த்தாலும் வீணாவின் இயல்பை மாற்றித் தெரியாமல் ஃபோட்டோவை எடுத்து வர வைத்த பெண்ணின் ஃபோட்டோ என்ற வெறுப்புடன்தான் பார்த்தான்.. பார்த்தவனின் விழிகள் விரிந்தன.. வைத்த பார்வை மாறாமல் ஃபோட்டோவைப் பார்த்துக் கொண்டே இருந்தான்..

யார் என்று தெரியாத ஒரு பெண்ணிடம் அவனது மனம் தொலைந்து போகும் என்று மலையாள மாந்திரிகர்கள் கோடி முறை சோழிகளை உருட்டி ஆருடம் சொல்லியிருந்தாலும் ரவிச்சந்திரன் நம்பியிருக்க மாட்டான்..

காதல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவன் அவன் என்றே அந்த நொடி வரை அவன் நினைத்திருந்தான்.. எந்தப் பெண்ணாலும் அவன் மனதை அசைத்து விட முடியாது என்ற

ஆணவம் அவனிடத்தில் வேரூன்றியிருந்தது.. அவனுடைய பணத்துக்காகவும், புகழுக்காகவும் அவனை மொய்த்த பெண்கள் அவன் மனதில் காதல் உணர்வுகள் எழுந்து விடாமல் தடுத்தாட் கொண்டதில் அவன் மனதில் மென்மையான காதல் உணர்வுகளுக்கு இடமில்லாமல் போயிருந்தது.. காதல் ஒரு 'ஹம்பக்' என்பதே அவனது எண்ணம்..

ஒவ்வொரு நொடியையும் பணமாக்க ஓடிக் கொண்டிருந்த ரவிச்சந்திரனுக்கு நிற்க நேரம் இருந்த தில்லை.. ஒருநாளுக்கான இருபத்தி நான்கு மணி நேரம் அவனுக்குப் போதவில்லை.. காதலிக்க நேரமும் இல்லை.. காதலிக்கத் தோன்றியதும் இல்லை.. இப்படியாகத்தானே மனதில் காதல் உணர்வுகளைத் துளிர்க்க வைக்க யாருமில்லாமல் பணம், புகழ், அவற்றை அள்ளித் தரும் தொழில்கள் என்று இறக்கை கட்டிய இயந்திரக் குதிரையாப் பயந்து கொண்டிருந்தவனின் வாழ்வில் அந்தப் பொன்மாலைப் பொழுதில் திருப்பத்தை ஏற்படுத்திய சுட்டிப் பெண் ஃபோட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தாள்..

அது அழகிய இளவேனிற் காலம்.. வயநாட்டு மலையில் மழை தணிந்திருந்த அற்புத நேரம்.. குளிர் மிகுந்த மலை

நாட்டில் பிறந்து வளர்ந்த அந்தப் பேரழகன் தமிழகத்தின் தஞ்சாவூரில் பிறந்து வளர்ந்திருந்த நந்தினியை ஃபோட்டோவில் பார்த்தான்..

மூக்கு சுருங்க, இமைகள் குடை போல கவிழ்ந்திருக்க, முன்னுச்சியில் முடிக்கற்றை விழுந்திருக்க, கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை எடுத்துப் பற்களால் கடித்தபடி நாக்கைத் துருத்தி அழகு காட்டிக் கொண்டிருந்த நந்தினி முதல் பார்வையிலேயே அவனை வசீகரித்து விட்டாள்..

'வாட் எ நேச்சர் பியூட்டி..!'

விழிகளை விலக்க முடியாமல் அந்த ஃபோட்டோவையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த மகனின் முகத்தை வருத்தத்துடன் பார்த்த வீணா..

"பிடிச்சிருக்கில்ல..?" என்று கேட்டாள்..

'இதை எதுக்கு இவ்வளவு சோகமா கேட்டு வைக்கிறாங்க..' ரவிச்சந்திரன் துணுக்குற்றான்..

வீணாவின் முகத்திலும் ரம்யாவின் முகத்திலும் ஓடிய ஏமாற்றத்தின் இழைகளை அவனால் துல்லியமாக கண்டு

கொள்ள முடிந்தது.. எதனால் அந்தத் துயரம் என்று தான் கண்டு கொள்ள முடியவில்லை..

அத்தியாயம் 243

இவளை நீ திருமணம் செய்து கொண்டால் சந்தோஷப் படுவேன் என்று வீணாவும்.. இவளது சிரிப்பு அழகாக இருக்கிறது, இவள் சிரிக்கும் போது கண்களும் சேர்ந்து சிரிக்கின்றன என்று ரம்யாவும் நந்தினியின் ஃபோட்டோவை ரவிச்சந்திரனிடம் காட்டுகிறார்கள்... அவன் அந்தப் ஃபோட்டோவைப் பார்த்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.. அவனும் ஃபோட்டோவைப் பார்க்கிறான்.. அதிலிருந்த பெண்ணின் துறுதுறுப்பு மிக்கத் தோற்றப் பொழிவில் ஈர்க்கப் படுகிறான்.. அவன் முகத்தில் பரவிய வெளிச்சத்தைப் பார்த்ததும் சந்தோஷப் படாமல்.. அவனது தாயும், தங்கையும் சோகமாகிறார்கள் என்றால் அது விசித்திரத்திலும் விசித்திரமல்லவா..?

“எனக்கு இவளைப் பிடித்திருக்கிறதா இல்லை பிடிக்கவில்லையா என்பது ஒரு பக்கமிருக்கட்டும்.. நீங்க இரண்டு பேரும் எதுக்காக இப்ப மூட்-அவுட் ஆகிறீங்க..?

அதைச் சொல்லுங்க முதலில்.. இந்தப் பெண்ணைப் பிடிக்கலைன்னு நான் சொல்லிருவேன்னு மூட்-அவுட் ஆகிறீங்களா..?" யோசனையுடன் அவன் கேட்டான்..

"ஐய்யே.. உனக்கு இந்தப் பெண்ணை பிடிக்கலையாக்கும்.. பிடிக்காமல்தான் ஃபோட்டோவை இந்தப் பார்வை பார்க்கிறயா..? உன் முகம் பிரைட்டா ஆனப்பவே உனக்கு இந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்குன்னு எனக்கும் அம்மாவுக்கும் தெரிந்திருச்சு.."

"வாட் எ கான்பிடெண்ஸ்..! முகத்தைப் பார்த்தே கண்டுபிடிச்சிட்டியா..?"

"இருக்காதா பின்னே..? உன்னுடன் பிறந்து.. உன் நிழலில் வளர்ந்தவளுக்கு உன் முகத்தைப் பார்த்தே உன் விருப்பு, வெறுப்பைக் கண்டு பிடிக்க முடியாதாண்ணா..?"

ரவிச்சந்திரன் நெகிழ்ந்து போனவனாக பாசத்துடன் தங்கையை அணைத்துக் கொண்டான்.. ஆறடிக்கும் மேல் வளர்ந்திருந்தவனின் தோளில் தலை சாய்த்துக் கொண்ட தங்கையின் தலைமீது தலை சாய்த்தான்.. மகன் தங்கையிடம் காட்டிய வாத்சல்யத்தில் வீணாவுக்குள் நிறைவு வந்தது.. அவள் பிள்ளைகளை வளர்த்திருக்கும் தன்மையில்

அவந்திகா பொறாமையில் பொசுங்கிப் போவாள்.. அவள் வளர்த்த அபராஜிதனும் அஜந்தாவும் இப்படியொரு அண்ணன் தங்கை பாசத்துடன் இல்லையே.. சுயநலமே உருவானவர்கள் அவர்கள்..

'ஈ வீணா எல்லா விதத்திலும் கொடுத்து வைத்தவளல்லோ..'

கீதை வளர்த்த லவ, குசர்களுக்கும் தாடகை வளர்த்த பிள்ளைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்தான் வீணா வளர்த்த பிள்ளைகளுக்கும் அவந்திகா வளர்த்த பிள்ளைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.. பாத்திரத்தில் உள்ளதுதானே கரண்டியில் வரும்..? அதை உணராமல் அவந்திகா பொருமுவாள்..

'என் மகன்..!' வீணாவின் தாயுள்ளம் பெருமிதம் கொண்டது..

"அண்ணனும் தங்கையும் செல்லம் கொஞ்சியது போதும்.."

மனதிற்குள் பிள்ளைகளுக்குச் சுற்றிப் போட வேண்டும் என்ற நினைவுடன் வெளியே போலியாக அலுத்துக் கொண்டாள் அவள்..

“உங்களுக்கும் இது போல ஒரு அண்ணனில்லையே என்கிற ஜெலஸ்ம்மா..” ரம்யா சலுகையுடன் தமையனின் தோள் வளைவில் கை கொடுக்க.. அவன் தங்கையின் கையை இறுக்கமாக பிணைத்துக் கொண்டு..

“வெல் செட் ரம்யா..” என்றான்..

“ஆஹா.. உன் தங்கை அருமையாகத்தான் பேசிட்டா.. மகிழ்ந்து தள்ளு.. இவர்களைப் பார்த்து எனக்குப் பொறாமையாம்..”

வாடின பூவின் மலர்ச்சியைத் தாயின் முகத்தில் கண்ட ரவிச்சந்திரன் தங்கையிடம் ரகசியமாய்..

“வாட் ஹேப்பன்ட்..?” என்று விசாரித்தான்..

“வாட் ஹேஸ் ஹேப்பன்ட்னு சொல்வேன்னு நினைத்தியா..? அதுதான் இல்லை.. உனக்காக அம்மாவும் நானும் ஆசையாசையாய் பெண் பார்த்தோம் பாரு.. அதுதான் ஹேப்பன்ட்..” ரம்யா மூக்கை உறிஞ்சினாள்..

“அதில் என்ன பிராப்ளம்..? பெண் நம்பைப் போல வெல்த்தா இல்லாமல் மிடில் கிளாஸ் ஃபேமிலியில் பிறந்தவளா..?”

“இல்லை அண்ணா.. நம் அளவுக்கு இல்லைன்னாலும் பெண்ணோட அப்பா தஞ்சாவூரில் இருக்கும் பெரிய பணக்காரர்களில் ஒருவர்தான்.. அது பிராப்ளம் இல்லை..”

“வேறு இனமா..?”

“இல்லையே.. அம்மாவுக்கு பெண்ணோட அம்மா ரிலேட்டிவ்வாமே..”

“என்னடா இது..!”

ரவிச்சந்திரன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

அவனுக்குப் பிடித்த பெண்ணை அடைய அவனுக்கு யாதொரு தடையுமில்லை.. ஆனால் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டி ஆட்சேபிப்பார்கள்.. அவர்களுடைய ஆட்சேபங்களை யெல்லாம் அவன் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டான்தான்.. கண்டு கொள்ளாமல் கடந்து போய் விடுவான்தான்.. அப்படிப்பட்ட கதாநாயக வேலைகளை அவன் செய்ய வேண்டிய அவசியமின்றி அனைத்தும் அவனுக்குச் சாதகமாகவே இருக்கின்றனவா..?

“எனக்கும் இது பிளஸண்ட் சர்ப்ரைஸ்தான் அண்ணா.. இந்தப் பெண்ணின் அம்மா, அப்பா ராஜ பாரம்பர்யத்தைச் சேர்ந்தவங்கதானாம்.. இதில ஒரு பியூட்டி என்னன்னா அவங்க ஃபேமிலியில அதை ஒரு மேட்டராவே நினைத்துக்க மாட்டாங்களாம்.. இந்தப் பெண்ணோட தம்பி இருக்கிறானே.. படு சுட்டி..”

“இவளோட தம்பி வேற எப்படி இருப்பான்..?” நந்தினியின் புகைப்படத்தை ஜாடையாய் பார்வையிட்டபடி ரசனையுடன் கூறினான் ரவிச்சந்திரன்..

“அண்ண்ண்ண்ண்...ணா..”

அவனது பார்வையிடலைக் கவனித்து விட்ட ரம்ய மாலினி ஒற்றை விரலை உயர்த்தி அவனைச் செல்லமாக மிரட்டினாள்..

“என்ன..?” ஏதுமறியாதவனைப் போல அவன் புருவங்களை உயர்த்தினான்..

“ஓ..! உலக மகா நடிகன் அண்ணா நீ.. என்ன்..ன.. ஜொள்ளு விடறியா..?”

“இல்லேன்னு சொல்ல மாட்டேன்..”

“என்ன ஜொள்ளு விட்டாலும் இவங்க உனக்குக் கிடைக்க மாட்டாங்க அண்ணா.. எனக்கு அண்ணியாக வரவும் மாட்டாங்க..” ரம்யா பெருமூச்சுடன் தமையனின் தோளை விட்டு விலகினாள்.. அவள் முகத்தில் தெரிந்த ஏக்கத்தில் புருவங்களைச் சுருக்கிய ரவிச்சந்திரன்..

“அதை நீ சொல்லக்கூடாது ரம்யா.. நான் சொல்லனும்..” என்று அழுத்தமான குரலில் சொன்னான்..

“ஆர் யு ஷ்யூர்..?” ஆவலாக கேட்டாள் ரம்யா..

“என்ன நடந்ததுன்னு சொல்லு... எது நடந்திருந்தாலும் அவளை உனக்கு அண்ணியாக்கிக் காட்டுகிறேன்..”

“இவங்களுக்கு வேறு ஒரு மாப்பிள்ளையை ஃபிக்ஸ் பண்ணியிருந்தாலுமா..?”

“வாட்..?”

ரவிச்சந்திரன் அதிர்ந்தான்.. திருமணம் நிச்சயமாகியிருக்கும் பெண்ணின் புகைப்படத்தையா அவனுடைய அம்மாவும், தங்கையும் காட்டினார்கள்..?

“ஆமாம் அண்ணா.. இவங்களுக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்காம்.. அது தெரியாம அம்மா உனக்காக

இவங்களைப் பெண் கேட்டு இவங்க வீட்டுக்கே போயிட்டாங்க..”

“ஓ..”

ரவிச்சந்திரன் தாயைப் பார்த்தான்.. அடிபட்ட பறவையின் வேதனையை விழிகளில் பிரதிபலித்த வீணா மகனின் பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்.. தவித்தாள்.. ரவிச்சந்திரனுக்குள் கோபம் மூண்டது..

“அம்மா மனது புண்படுகிறதைப் போல அவங்க ஏதும் பேசிட்டாங்களா ரம்யா..?”

“இல்லை அண்ணா.. அப்படியெதுவும் இல்லை.. இவங்க அப்பா வெரி டீஸண்ட் மேன்.. அம்மாவும் அப்படித்தான்.. இவங்க அம்மாதான் நம்ம அம்மாவுக்கு ரிலேட்டிவ்வாம்.. மாமன் மகள் உறவுன்னு சொன்னாங்க..”

“ஐ டோன்ட் கேர்.. அங்கே என்ன நடந்ததுன்னு மட்டும் சொல்லு.. அவங்க யாராக இருந்தால் நமக்கென்ன..?”

“நீ கோபப்படுவதைப் போல எதுவும் நடக்கலை அண்ணா.. அவங்க அம்மாவிடம் அன்பாகவும் மரியாதையாகவும்தான் பேசினாங்க... கேரளாவில் இருந்து

வந்திருக்கிற ரிலேட்டிவ்ன்னு விருந்தெல்லாம் தயார் பண்ணிப் பரிமாறி சாப்பிட வைத்தாங்க.. எதிலும் குறை வைக்கவில்லை.. விருந்து முடிந்ததும் அம்மா அவங்க மகளைப் பெண் கேட்ட போதுதான் நாசுக்கா மறுத்திட்டாங்க..”

ரவிச்சந்திரனின் முகம் இறுகியது.. அவனுக்குப் பெண் கொடுக்க மறுத்திருக்கிறார்கள் என்ற விவரம் அவனைத் தாக்கியது.. அதே சமயம், அவனைப் போன்ற உலகமே கொண்டாடும் கோடிஸ்வரத் தொழிலதிபனுக்குப் பெண் கொடுக்க மறுத்தவர்களின் மன திடத்தின் மீதும் நேர்மையின் மீதும் மதிப்பு வந்தது..

“அவங்களுக்கு நான் யார்ன்னு தெரியாதா..?”

“நீ வேற.. நீ இன்னார்ன்னு அம்மா சொன்னதும் இவங்க அப்பா மேகநாதன் பிரமிச்சுப் போயிட்டார்.. அவருக்கா என் மகளைக் கேட்டு வந்திருக்கிங்கன்னு நம்ப முடியாமல் திரும்பத் திரும்பக் கேட்டார்..”

“ஆனாலும் பெண் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டார்..”

“யெஸ் அண்ணா..”

முகம் கூம்பச் சொன்னாள் ரம்ய மாலினி.. ஃபோட்டோவைப் பார்த்த ரவிச்சந்திரனின் கண்கள் இடுங்கின..

“இவள் பெயர் என்ன..?” என்று கேட்டான்.

“நந்தினி.. இவங்க தம்பி பெயர் நந்தகுமார்.. அம்மா பெயர் வெண்ணிலா.. இன்னும் அவங்க பாட்டி..”

“போதும் போதும்.. இவ பெயரைக் கேட்டால் இவளோட தாத்தா பாட்டி பெயர் வரைக்கும் லிஸ்ட்டை நீட்டாதே.. எனக்கு அவ்வளவு பொறுமையில்லை..”

“சும்மாயிரு அண்ணா.. நந்தினியின் வீட்டு மனிதர்கள் எல்லோருமே ஸ்வீட் பெர்சன்ஸ்.. அதிலும் அந்த நந்தகுமார் இருக்கானே.. அப்பப்பா.. செம வாய் அண்ணா.. அவனிடம் சொன்னால் அவனைவிட அவனுடைய அக்காவுக்குத்தான் வாய் அதிகம் என்கிறான்.”

‘அப்படியா..?’ படபடத்த நந்தினியின் ஃபோட்டோ மீது ரவிச்சந்திரனின் பார்வை படிந்தது..

‘இவ வாயாடியா..?’

அவள் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதை ஏற்றுக்கொள்ள அவன் மனம் மறுத்தது.. "அவங்க குடும்பம் ராஜ பாரம்பர்யக் குடும்பம் என்பதைப் படு கேசுவலாச் சொல்கிறான்.. அதைப் பற்றிச் சொன்னா வேறு என்ன செய்யனும்..? ராஜா காலத்து டிரஸ்ஸை மாட்டிக்கிட்டு குதிரை மேல கத்தியைச் சுற்றிக்கிட்டுப் பறக்கனுமான்னு அப்பாவி போலக் கேட்கிறான்.. படு இண்ட்ரெஸ்டிங் பெர்சனாலிட்டி.."

"ஓ.." சுவராஸ்யமில்லாமல் சொன்னான் ரவிச்சந்திரன்.

அவனுக்கு மைத்துனன் ஆக முடியாதவன் எப்படிப்பட்ட பெர்சனாலிட்டியாய் இருந்தால் அவனுக்கென்ன..?

"நந்தினியின் பேரண்ட்ஸ் தெளிவாச் சொல்லிட்டாங்க.."

"என்னன்னு..?"

"அவங்க பெண்ணை வேறு இடத்தில் மேரேஜ் பண்ணிக் கொடுக்கப் பேசி முடிவு செய்துட்டாங்களாம்.. மேரேஜுக்கு டேட் பிக்ஸ் பண்ணும் வேலை மட்டும்தான் பாக்கியாம்.. மற்ற பேச்சு வார்த்தைகள் எல்லாம் முடிந்து மேரேஜ் பிக்ஸ் ஆகியிருச்சாம்.. வாக்குக் கொடுத்ததில இருந்து மாற மாட்டாங்களாம்.."

“இந்தக் கதையை நான் கேட்டேனா..?”

“அம்மா கேட்டாங்களே.. கேட்டவுடனே வாடிப் போன முகம்தான்.. இன்னும் ஃபிரஷ் ஆகலை..”

“ம்ம்ம்..”

“பட் அண்ணா.. நந்தினியோட தம்பி ஒரு விஷயம் சொன்னான்..”

என்ன சொன்னான் என்று கேட்காமல் யோசனையாக இருந்தான் ரவிச்சந்திரன்.. அந்தப் ஃபோட்டோவில் அவனை வசீகரித்த நந்தினியென்ற யௌவன சுந்தரிக்கே வேறு ஒருவனுடன் விவாகம் ஆகப் போகிறது.. இதில் அவளுடைய தம்பி என்ன விவரத்தைச் சொல்லி என்ன ஆகப் போகிறது..?

“நந்தினிக்கு இந்த மேரேஜில் விருப்பமில்லையாம்..”

“என்ன சொன்ன..?”

“நந்தினிக்கு இந்த மேரேஜில் விருப்பமில்லையாம்ன்னு சொன்னேன்..”

“உனக்கு எப்படித் தெரியும்..?”

“அதுதான் நந்தகுமார் சொன்னான்னு சொன்னேனே அண்ணா..”

ரவிச்சந்திரனுக்கு நந்தகுமாரின் மீது திடிர் பிரியம் உண்டானது.. அவனைப் பற்றிய அசுவராஸ்யத்தைக் கைவிட்டு சுவராஸ்யத்துடன்..

“சொல்லு.. சொல்லு..” என்று தூண்டினான்..

“அம்மா நந்தினியின் பேரண்ட்ஸிடம் வாதாடிக்கிட்டு இருந்தப்ப நந்தகுமார்

இவங்களிடம் பேசறது வேஸ்ட்டுங்கன்னு என்னிடம் சொன்னான்.. ஏன் அப்படிச் சொல்கிறன்னு கேட்டேன்.. அக்காவுக்கு இந்தக் கல்யாணத்தில் சுத்தமா இஷ்டமில்லை.. அழுது, பட்டினி கிடந்ததுன்னு அத்தனை அறப் போராட்டங்களையும் பண்ணிப் பார்த்துத் தோத்துப் போய் ஃபிரண்டோட கல்யாண நிச்சயதார்த்தத்தில் கலந்துக்க செஞ்சிக்குப் போயிருக்கு.. பெத்த மகள் கதறுகிற கதறலுக்கே கரையாதவங்க உங்க அம்மா பேசியா மாறப் போகிறாங்கன்னு கேட்டான்..”

“நந்தினிக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலையா..?”

“யாருக்குத்தான் பிடிக்கும்..? மாப்பிள்ளையோட குணங்களைப் பத்தி நந்தகுமார் சொல்லச் சொல்ல எனக்கு ஐயோ பாவம்ன்னு ஆகிருச்சு அண்ணா.. எப்படித்தான்

இப்படியொரு மாப்பிள்ளையை செலக்ட் பண்ணினாங்களோ.. பாவம் நந்தினி..”

“அந்த மாப்பிள்ளை மோசமானவன்னு இவனுக்கு எப்படித் தெரியுமாம்..?”

“சொன்னால் ஆச்சரியப்படுவ.. அந்த மாப்பிள்ளையோட அம்மாவும், தங்கையும் சொன்ன விவரங்களில்தான் தெரிந்துக்கிட்டானாம்..”

“அது எப்படி ரம்யா.. அம்மாவும், தங்கையும் காட்டிக் கொடுப்பாங்களா என்ன..?”

“அம்மா காட்டிக் கொடுக்கிற நோக்கத்தில பேசலையாம்.. பட் தங்கை வேண்டுமென்றே அவளுடைய அண்ணனைப் பற்றிப் பெண் வீட்டார் தெரிந்துக்கனும்னு தான் சொன்னதைப் போல நந்தகுமாருக்குத் தோன்றுகிறதாம்.. அம்மா மகனின் முர்க்கத்தனத்தைப் பெருமையாகத்தான் பேசினாங்களாம்..”

“அப்படிப்பட்ட ஆளா அவன்..? தங்கையே காட்டிக் கொடுக்க நினைக்கிற அளவுக்கு மோசமானவனா..?”

“அவன் யார் என்று பெயர் சொன்னால் நீயே தெரிந்து கொள்வாய்.. யெஸ்.. உனக்கும் அவன் தெரிந்தவன்தான்

அண்ணா.. இன்னும் சொல்லப் போனால் உனது நண்பன்தான் அவன்..”

“எனக்கு ஃபிரண்டா..? யார் அவன்..?”

“கன்யாகுமரி மகேந்திர பூபதி..!” வெறுப்புடன் சொன்னாள் ரம்ய மாலினி..

அத்தியாயம் 244

மார்த்தாண்ட பூபதியின் மகன் மகேந்திர பூபதி..!

அவனுடைய பெயரைச் சொன்னாலே சுற்று வட்டாரத்தில் இருக்கும் இளம் பெண்கள் தத்தம் இல்லங்களில் பதுங்கிக் கொள்வார்கள்.. நல்லவர்கள் என்று பெயரெடுத்தவர்கள் அவன் போகும் பாதையை விட்டு விலகி வேறு வழியில் போய் விடுவார்கள்..

அப்படிப்பட்ட கிராதகன் அவன்.. ரவிச்சந்திரனுக்கு மகேந்திரன் என்று அழைக்கப்படும் மகேந்திர பூபதியைப் பற்றி நன்றாகவே தெரியும்.. குரூரமானவன்.. கொடூர குணம் படைத்தவன்.. அன்பு, பாசம், என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் கிராதகன்..

“எங்கப்பா மார்த்தாண்ட பூபதி கோடிஸ்வரன்.. ராஜ வம்சம்.. இது ரெண்டுக்காகவும்தான் அவனை என் அப்பான்னு சொல்லிக்கறேன்.. இந்த ஆள் மட்டும் இந்த அடையாளங்கள் இல்லாம சாமானியனா இருந்திருந்தா போய்யான்னு சொல்லிட்டு என் வழியில் போயிருப்பேன்..

ம்ஹூம்.. அப்படிச் செய்ய முடியாம இந்த ஆள் எடுக்கிற நீதி போதனை கிளாஸுக்கு ஊம், ஊம்ன்னு தலையாட்டிக்கிட்டே உட்கார்ந்திருக்க வேண்டியதா இருக்கு..'' இப்படி தலையில் அடித்துக் கொள்ளும் தவப் புதல்வன்தான் மகேந்திரபூபதி..

'அவனுக்கா நந்தினியை மேரேஜ் பண்ணிக் கொடுக்க நினைக்கிறார்கள்..?' ரவிச்சந்திரனால் தாங்க முடியவில்லை.. ஃபோட்டோவில் இருந்த நந்தினியின் விழிகளில் தெரிந்த உயிர்ப்பையும் ஒளிர்வையும் கண்டவனுக்கு மனம் வலித்தது.. மகேந்திர பூபதியின் மனைவியானால் இவையிரண்டும் தொலைந்து போய் விடுமே.. நந்தினி நடமாடும் நடைபிணம் போல ஆகி விடுவாளே..

''உனக்குக் கன்ஃபர்மா தெரியுமா ரம்யா..?''

''தெரியும் அண்ணா.. அம்மாவிடம் வேண்டுமானால் கேட்டுப் பாரேன்..''

ரவிச்சந்திரன் தாயைப் பார்த்தான்.. அவள் மௌனமாக தலையை அசைத்தாள்.. வீணாவின் மனத்துயரத்துக்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்பதை ரவிச்சந்திரனால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவளது

மனதுக்குப் பிடித்த பெண் அவளுக்கு மருமகளாக ஆகா விட்டாலும் பரவாயில்லை.. நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு நன்றாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்ற தாய் மனம்தான் அவள் மனது.. இங்கே அப்படியில்லையே.. மகேந்திரன் போன்ற மூர்க்கன் கையில் பூவைப் போன்ற பெண்ணைப் பிடித்துக் கொடுக்கப் போகிறார்களே என்று வீணாவின் தாயுள்ளம் பதறுகிறது.. மகேந்திரனைப் பற்றியும் அவனுடைய குடும்பத்தைப் பற்றியும் அவள் சொல்லவும் முடியாது.. தன் மகனுக்கு நந்தினியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக பொய் சொல்லுகிறாள் என்ற பழி ஏற்பட்டு விடலாம்..

“வாயிருந்தும் ஊமையாக வந்துட்டேன் ரவி..” வேதனையுடன் சொன்னாள் வீணா..

“உன்னால் நந்தினியைக் காப்பாற்ற முடியுமா அண்ணா..?” ரம்யாவின் குரலில் வேண்டுகோள் இருந்து.

பதில் சொல்லாமல் வெளியே போய் விட்டான் ரவிச்சந்திரன்.. மறுநாளே கன்யாகுமரிக்குச் செல்ல வேண்டிய வேலை வந்து விட்டது.. மகேந்திரனை அங்கு சந்தித்தான்.. இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது

ரவிச்சந்திரனின் மனம் ஒரு நிலையில் இல்லை.. திருமண பந்தத்தை மதிக்காத மகேந்திரன் எப்படித் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டான் என்று யோசித்துக் கொண்டிருந்த போது மகேந்திரனின் கோட் பாக்கெட்டிலிருந்து நந்தினியின் புகைப்படம் விழுந்தது.. ரவிச்சந்திரனின் விழிகள் மின்னின..

"யாருடா இது..?" படபடக்கும் மனதை அடக்கிக் கொண்டு மகேந்திரனின் மனதை அறிவதற்காக கேட்டான்.

"எங்கம்மா எனக்காக பார்த்திருக்கிற குரங்குடா.." அலட்சியமாக அந்த ஃபோட்டோவை காலில் மிதித்தான் மகேந்திரன்..

ரவிச்சந்திரனுக்குள் புயல் வீசியது..

மகேந்திரனை ரௌத்ரத்துடன் பார்த்தான்.. என்னவென்று காரணம் புரியாமல் திகைத்தான் மகேந்திரன்..

"பிடிக்கலைன்னா பிடிக்கலைன்னு சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே..? காலில் போட்டு ஏண்டா மிதிக்கிற..?"

குனிந்து ஃபோட்டோவை எடுத்துப் பார்த்தான்.. அதிலிருந்த நந்தினியின் கண்கள் என்னைக் காப்பாற்ற

மாட்டாயா என்று கேட்பதைப் போலிருந்ததில் வேதனை கொண்டான்..

‘இவள் குரங்கா..?’ நளினமும், லாவகமும், நாசுக்கும் இல்லாமல் கோணங்கிச் சேட்டையுடன் ஃபோட்டோவுக்கு போஸ் கொடுத்திருந்தவளிடம் உனக்கு இந்தப் பெயர் பொருத்தம்தான் என்று சொல்லி வம்பிழுத்தால் எப்படியிருக்கும் என்று தோன்றியது..

“காலில் போட்டு மிதிக்கத்தானே கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்..?” ரவிச்சந்திரனிடம் பட்டவர்த்தனமாகக் கூறி அவனை அதிர வைத்தான் மகேந்திரபூபதி..

அவன் அப்படித்தான்.. அவனுடைய கொடூர குணத்தை மறைக்க முயன்ற தில்லை.. நான் அப்படித்தான் என்ற குரூரம் அவனிடம் ஊறியிருந்தது..

அவனுடைய அந்த குணாதிசியத்துக்கு அவனுடைய அம்மாதான் அதி முக்கியமான காரணம் என்று ரவிச்சந்திரன் நினைப்பதுண்டு.. மகேந்திரனின் தாயான கயல்விழி அப்படிப்பட்டவள்தான்.. பணக்காரர்களைத் தவிர மற்றவர்களிடம் முகம் கொடுத்தும் பேச மாட்டாள்.. அவள்

சிறுமியாக இருந்தபோது அவளுடைய குடும்பம் வறுமையில் வாடியதாம்.. உற்றார், உறவினர் என்று எவரும் கை கொடுக்கவில்லையாம்.. அவளுடைய குடும்பத்தைக் குறைவாக நடத்தினார்களாம்.. உறவினர் இல்லத் திருமணங்கள் மற்றும் குடும்ப விழாக்களுக்கு அவளுடைய குடும்பத்திற்கு அழைப்புக் கொடுத்த தில்லையாம்.. பிழைக்க வழியில்லாமல் கன்யாகுமரிக்கு பஞ்சம் பிழைக்க வந்த மன ரணம் இன்னும் அவள் மனதில் அப்படியே இருக்கிறதாம்.. அது அவளை குரூரமானவளாக மாற்றி விட்டதாம்.

“பணம், பணம், பணம்.. மத்ததெல்லாம் அப்புறம்தாண்டா..” கண் சிவப்பான் மகேந்திரன்..

இந்தக் கோட்பாட்டில் ரவிச்சந்திரனுக்கும் சிறிதளவ உடன்பாடு உண்டென்பதால் நண்பனை மறுத்துப் பேச மாட்டான்.. அதற்காக பணம் மட்டுமே பிரதானம்.. பணத்துக்காக மனிதாபிமானத்தைக் கழட்டி வைத்து விட்டு மிருகத்தனமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது போன்ற மகேந்திரனின் செயல்பாடுகளில் ஒருபோதும் அவனுக்கு உடன்பாடு இருந்ததில்லை..

“சொந்த, பந்தம்ன்னு சொல்கிறதெல்லாம் சும்மாடா.. கண்ணதாசன் பாடி வைத்தார் பாரு.. பானையிலே காசிருந்தா பூனைகளும் சொந்தமடா.. சோதனையைப் பங்கு வைச்சா சொந்தமில்லை, பந்தமில்லைன்னு.. அதுதான் நிஜம்..” என்பான் மகேந்திரன்.. அவந்திகாவின் குடும்பம் படுத்துகிற பாட்டை நினைத்து வெறுத்துப் போயிருக்கும் ரவிச்சந்திரனால் அதை மறுக்க முடியாது.. தலையை ஆட்டி வைப்பான்..

அதைப் பற்றி ஓர்முறை வீணாவிடம் பகிர்ந்து கொண்ட போதுதான் அவள் அந்தக் கேள்வியைக் கேட்டாள்..

“ஏன் ரவி.. மகேந்திரனுக்கு தாத்தா, பாட்டி, அத்தைன்னு அப்பா வழி சொந்தங்கள் இருக்கிறாங்களா..?”

“இல்லையே அம்மா.. அம்மா வழித் தாத்தா, பாட்டிதான் இருக்கிறாங்க.. மகேந்திரனோட அப்பா வீட்டுக்கு ஒற்றைப் பிள்ளையாம்.. மகேந்திரனோட அம்மாவை அவர் மேரேஜ் பண்ணிக் கொண்ட கொஞ்ச நாளிலேயே அவங்க இறந்து போயிட்டாங்களாம்..” சொல்லிக் கொண்டிருக்கும் போதே ‘எப்பேற்பட்ட மருமகள்..’ என்ற எண்ணம் மனதில் தோன்றுவதை ரவிச்சந்திரனால் தடுக்க முடியவில்லை..

வீணா அது போல எல்லாம் கேட்கவில்லை.. அவள் பெருந்தன்மையே வடிவானவள்.. கயல்வழியைப் போன்ற பொடித்தனமான எண்ணங்களும் செயல்களும் அவளுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது.. அவள் கேட்டது வேறு ஒன்றை..

“மாமனார், மாமியார் ஆதிக்கமில்லை..

நாத்தனார் கொடுமையும் இல்லை.. கயல்வழியோட கணவர் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குபவர்.. இருந்தும் ஏன் அவள் சொந்த பந்தத்தைப் பற்றி நெகடிவ்வான எண்ணங்களை மகன் மனதில் உண்டாக்கறா..? சின்ன வயதில் இவளை சொந்த பந்தம் ஒதுக்கினதுக்காக மகனை ஒதுங்க வைப்பாளா..?”

ரவிச்சந்திரனின் மனதிலும் அதே எண்ணம்தான்.. உண்மையில் அவன்தான் சொந்த பந்தங்களை வெறுத்துப் பேச வேண்டும்.. ஒதுக்க வேண்டும்.. அவனுடைய அரண்மனையில் சட்டமாக உட்கார்ந்து கொண்டு அவனுடைய குடும்பத்தை அகதிகள் போல பாவித்து அவனைக் கூறாமல் சன்யாசம் வாங்கிக் கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலையின் ஆனை முடி சிகரத்தில் உட்கார்ந்து தவம் செய்யத் துரத்தியடிக்கும் தாத்தா, பாட்டி, அத்தை,

அத்தையின் குடும்பம் என்று எதுவும் மகேந்திரனுக்கு இல்லை.. படு நிம்மதியாக அவனுடைய அப்பாவின் சொத்தை ஒற்றை மனிதனாக ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.. உற்றார் உறவினரால் அல்லல் பட்டுக் கொண்டிருப்பது ரவிச்சந்திரன்தான்.. அவன் கண்டிப்பாக இருந்தாலும் எவரையும் வீட்டை விட்டுத் துரத்தியடிக்கவில்லை.. அரண்மனையில் கூட்டுக் குடும்பமாக வாழ அனுமதித்திருக்கிறான்..

கண்டிப்பும் கறாருமாக 'இரும்பு மனிதன்' என்று ரவிச்சந்திரன் பெயரெடுத்திருந்தாலும் அவன் ஆலமரம் போன்றவன்.. அப்பா, அம்மா, தங்கையென்று உறவுகளுக்கு நிழல் கொடுத்துப் போற்றிப் பாதுகாப்பவன்.. தாத்தா, பாட்டியை மிரட்டி அடக்கி வைத்திருந்தாலும் கூட வைத்திருப்பவன்.. அத்தையையும், அத்தையின் குடும்பத்தையும் வெறுத்தாலும் விரட்டியடிக்காதவன்.. அவங்களும் வாழட்டும் என்று வாழ்வதற்கான கல்வியையும், வசதிகளையும், வேலை வாய்ப்பையும் கொடுப்பவன்..

ரவிச்சந்திரன் இமயம்..! மகேந்திரன் பள்ளத்தாக்கு.. மலையும், மடுவும் நட்பாக இருத்தல் சாத்தியமில்லாத ஒன்று.. இருந்தாலும் இருவரும் நண்பர்களாக இருந்தார்கள்..

நெருங்கிய நண்பனாக இல்லாவிட்டாலும் பெயரளவிலாவது மகேந்திரன் ரவிச்சந்திரனுக்கு நண்பன்தான்.. அதற்குச் சில காரணங்கள் இருந்தன.. முதலாவது காரணம், தனபாலனைப் போல மகேந்திரனும் ரவிச்சந்திரனுடன் படித்த நண்பன் என்பது.. இரண்டாவது காரணம் மகேந்திரனின் தாய் கயல்விழி தமிழகத்தைச் சேர்ந்த ராஜ வம்சத்தில் பிறந்து வளர்ந்தவள் என்பது..

இரண்டாவது காரணம்தான் அதி முக்கியமான காரணமோ என்று பலமுறை ரவிச்சந்திரனுக்குத் தோன்றியதுண்டு.. ரவிச்சந்திரன் தாயை நேசிப்பவன்.. அன்னையின் உபாசகன்.. மகேந்திரனின் அம்மா இவனுடைய அம்மாவுக்கு தூரத்து வழியில் சொந்தம் என்பதினால்தான் மகேந்திரனைப் பிடிக்காத போதிலும் அவனது நட்பைத் துண்டிக்காமல் சகித்துக் கொண்டிருந்தான்..

மகேந்திரன் கன்யாகுமரியில் ஸ்டார் ஹோட்டல் ஒன்றுக்கு சொந்தக்காரன்... அது தொடர்பான ஆலோசனைகளை ரவிச்சந்திரனிடம்தான் கேட்பான்.. இவனும் சொல்லிக் கொடுப்பான்.. கன்யாக்குமரிக்குப் போகும் போது மகேந்திரனின் அழைப்பை ஏற்று அவனது ஹோட்டலுக்குச் சென்று அது எப்படி இயங்குகிறது என்று

நேரடியாகப் பார்த்து மாற்றங்கள் தேவையிருந்தால் மகேந்திரனின் மனம் கோணாமல் பக்குவமாக எடுத்துச் சொல்வான்..

அவை அத்தனையும் மகேந்திரனின் தாய் கயல்விழி.. வீணாவுக்கு உறவினர் என்பதற்காக..

இதை மகேந்திரனும் அறிவான்.. அவனே எத்தன்.. அவனுடைய அம்மாவோ ஓடுகிற தண்ணீரில் ஒன்பது சுளுக்கெடுக்கிறவள்.. புகழின் உச்சியில் இருக்கும் ரவிச்சந்திரன் எதற்காக மகேந்திரனை தள்ளி நிறுத்தாமல் நின்று பேசுகிறான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்களா என்ன..?

“உன் அம்மாவைப் போலவே மத்த சொந்த பந்தங்களும் இருந்திருந்தா எங்க குடும்பம் எதற்காக பஞ்சம் பிழைக்க கன்யாகுமரிக்கு வந்திருக்கப் போகிறது..?” என்று சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு தனது ஆங்காரத்திற்கான நியாயத்தைக் கர்ப்பிப்பாள் கயல்விழி..

அந்தக் கயல்விழி அவளை விரட்டியடித்த சொந்தத்திலிருந்து தன் மகனுக்கு மருமகளைத்

தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்பதில் ரவிச்சந்திரனுக்குள் சந்தோஷம் வந்தது..

“இவளைப் பிடித்திருந்தாலும் பிடிக்கலைன்னாலும் இவளைத்தான் நான் கல்யாணம் பண்ணியாகனும்.. தாலி கட்டி இவளை என் வீட்டில் கொண்டு வந்து நான் பண்ணுகிற சித்திரவதையில இவளோட அம்மாவோட திமிரும் ஆணவமும் அடங்கனும்.. ஐய்யோ கயல்விழி..! நான் உன்னை அவமானப் படுத்தியதெல்லாம் தப்புத்தான்.. என்னை மன்னிச்சிரு.. என் மகளை விட்டு விடுன்னு இவளோட அம்மா என் அம்மாவின் கால்களைப் பிடித்துக்கிட்டுக் கதறியழுகனும்.. அதை என் அம்மா காது குளிரக் கேட்கனும்.. அதுக்காகத்தான் இந்தக் கல்யாணம்..” என்று சொல்லி ரவிச்சந்திரனின் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தான் மகேந்திரன்..

“ஷட் அப் மகேந்திரன்..” சீறினான் ரவிச்சந்திரன்..

மகேந்திரன் குரூரமானவன்தான்.. அதற்காக ஒரு சின்னஞ்சிறு பெண்ணைத் திருமணம் என்ற பெயரில் சிறை பிடித்து சித்திரவதை செய்யும் அளவுக்கு குரூரமானவனா..?

“இந்த ஃபோட்டோவைப் பார்த்தாலே பிடிக்கலை.. இவளும் இவ மூஞ்சியும்..! சகிக்கலை..” மகேந்திரன் பல்லைக் கடித்தான்..

“இவளோட அம்மாவும் என் அம்மாவும் அத்தைமகள்.. மாமன் மகள் சொந்தமாம்.. இவளோட அம்மா பணக்காரி என்கிற திமிரில என் அம்மாவை அலட்சியப் படுத்துவாளாம்.. பழைய பட்டுப் பாவாடை சட்டை, நகைகள்ன்னு என் அம்மாவிடம் கொடுத்துப் போட்டுக்கச் சொல்லி அவளோட பணத்திமிரைக் காட்டுவாளாம்.. பழைய வைர நெக்லஸை கொடுத்து வைரம் கயல்விழி.. வைத்துக்கன்னு இளக்காரமா சொல்லுவாளாம்.. என் அம்மாவுக்கு வேகு வேகுன்னு இருக்குமாம்.. ஒருநாள் ஒரு பொழுதாவது இவளோட ஆணவத்தையும் பணத்திமிரையும் அடக்கிக் காட்டலைன்னா என் பெயர் கயல்விழி இல்லைன்னு அப்பவே சபதம் எடுத்தாங்களாம்.. அதுக்குத்தான் இந்த கல்யாண ஏற்பாடு..”

மங்கம்மா சபதம் போல மகேந்திரனின் அம்மா சபதத்தைப் பற்றி விவரித்தான் மகேந்திரன்.. கயல்விழியின் மாமன் மகளுக்குத்தான் எப்பேற்பட்ட பரந்த மனது என்ற மரியாதை ரவிச்சந்திரனுக்குள் ஏற்பட்டது.. வைரம், தங்கம், பட்டு என்று மாமன் மகளுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறாள்..

அதை வாங்கிக் கொண்டவளோ நன்றி பாராட்டாமல் இதெல்லாம் பணத்திமிர் என்று அவள் மீது பொறாமையும் அசூசையும் கொள்கிறாள் என்றால் இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்வது..?

அத்தியாயம் 245

சிலரது குணம் அப்படிப்பட்டதாக இருக்கும்.. ஆதரிப்பவரின் கருணையைப் பாராட்டாமல் எனக்கு அள்ளிக் கொடுக்கும் அளவிற்கு இவள் வசதியில் உயர்ந்தவளாக இருக்கிறாளே என்று வயிறெரிவார்கள்.. கயல்விழி அந்த வகையைச் சேர்ந்தவள்... அவள் கண்ணெதிரே வெண்ணிலா ஒரு நல்ல உடையை உடுத்தி நகை போட்டு விட முடியாது.. பொருமித் தள்ளி விடுவாள்..

“உனக்கும் எனக்கும் ஒரே வயதுதான்.. சொந்த பந்தம்தான்.. நீ மட்டும் தங்கம், வைரம், பட்டுன்னு மினுக்க நான் இப்படி இருக்கிறேன்..” என்று கண்ணீரும் கம்பலையுமாக புலம்புவாள்..

வெண்ணிலாவுக்கு மனது தாங்காது.. தோழியின் ஏக்கத்தைத் தீர்த்து விடத் துடிப்பாள்.. அவளால் என்ன செய்ய முடியும்..? அவள் கையில் பணப் பொறுப் பில்லையே.. ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்ற கொள்கையையுடைய வீட்டுப் பெரியவர்கள் கயல்விழியின் குடும்பத்தாரின் குணத்தை அறிந்து அவர்களை வைக்க

வேண்டிய இடத்தில் வைத்து ஒதுங்கி நின்றார்களே.. வெண்ணிலாவினால் முடிந்தது இதுதான்.. ஓரிரு முறை உடுத்திய புத்தம் புது பட்டுப் பாவாடை சட்டைகளை பழையதாகி விட்டது என்று சொல்லி கயல்விழிக்குத் தூக்கிக் கொடுத்து விடுவாள்.. திருகாணி சரியில்லை.. சங்கிலியின் மாடல் கழுத்தில் குத்துகிறது.. வளையலின் டிசைன் பிடிக்கவில்லை என்று உப்புச் சப்புப் பெறாதா பொய் காரணங்களை அடுக்கி தங்க நகைகளை தாரை வார்த்து விடுவாள்.. அவற்றை நகைக் கடையில் கொடுத்துப் புதிதாக மாற்றிக் கொள்ளலாமே என்று சொன்னால் செய்கூலி, சேதாரம், பழைய தங்கம் என்று கால்காசு கிடைக்குமா.. இதற்கா கணக்குப் பார்க்கிறீர்கள் என்று கேட்பாள்..

போகிறது விடு என்று வெண்ணிலாவின் குடும்பத்தார் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார்கள்.. மகளின் காருண்ய குணத்தில் வெருமை வேறு.. இளகிய மனம் என்பது வரமல்லவா..?

இப்படியெல்லாம் குடும்பத்தாருடன் மல்லுக்கு நின்று வெண்ணிலா செய்த உதவிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன.. அவள் செய்கிறாளே என்று நினைக்காமல் அவள் போட்டுக் கழித்தைக் கொடுக்கிறாளே என்று கரித்துக்

கொட்டினாள் கயல்விழி.. அனைத்திலும் மேலாக வெண்ணிலா தன்னிடமிருந்த வைர அட்டிகையை கயல்விழி ஆசைப்பட்டாளே என்று கழட்டிக் கொடுத்து விட்டு தொலைந்து போனதாக தன் வீட்டில் சொல்லி விட்டாள்.. கிடைப்பதற்கரிய வைர நகை கிடைத்து விட்டது என்று நினைக்காமல்..

“பாட்டி காலத்து அட்டிகையைத் தூக்கிக் கொடுத்திருக்கிறா.. இவ மட்டும் புது டிசைன் வைர நெக்லஸில் ஜொலிப்பாளாம்.. நான் மட்டும் இவ வேண்டாம்ன்னு விட்டெறிந்த பழைய வைர அட்டிகையை யாருக்கும் தெரியாம போட்டுப் பார்த்துக்கனுமாம்.. எல்லாம் இவளிடம் பணம் கொட்டிக் கிடக்குது என்கிற திமிர்..” என்று மனச்சாட்சி இல்லாமல் திட்டித் தீர்த்தாள் கயல்விழி..

வைர அட்டிகையை அவள் வைத்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியப் பட்டுப் போன கயல்விழியின் அப்பா மகளிடம் எப்படிக் கிடைத்தது என்று கேட்டபோது அவள் சொன்ன பதில் என்ன தெரியுமா..?

“அவளிடம்தான் வைரம் கொட்டிக் கிடக்கிறதுங்கிற பகுமானத்தைக் காட்டிக்க அந்த வெண்ணிலா தூக்கிப் போட்டிருக்கிற அரதப் பழசு அட்டிகைப்பா இது.. இவளுக்கு

இது போதும்ங்கிற எண்ணம்.. திமிர்.. அவளை கன்னம் கன்னமா அறைந்தால்தான் என் மனது ஆறும்ப்பா..”

இதுதான் கயல்விழி..! மகள் சொன்னதில் பரபரப்பான கயல்விழியின் அப்பா அந்த வைர அட்டிகையை வாங்கி உற்றுப் பார்த்து விட்டு..

“முட்டாள் மகளே..! வைரத்தோட மதிப்பே அதன் பழமையில்தான் இருக்கு.. இன்றைக்கு இது எத்தனை லட்சம் போகும் தெரியுமா..? பரம்பரை வைர அட்டிகை இது.. மற்ற நகை போல இதை வெண்ணிலாவின் வீட்டில் விட்டுக் கொடுத்து விட மாட்டாங்க.. தேட ஆரம்பிச்சிருவாங்க.. நம்மிடம் இது இருக்கிறதை அவங்க கண்டு பிடிக்கிறதுக்குள்ள ஊரை விட்டுக் கிளம்பியாகனும்..” என்று மனைவியையும் மகளையும் துரிதப்படுத்தி இரவோடு இரவாக ஊரைக் காலி செய்துக் கண் காணாமல் பறந்து விட்டார்..

கயல்விழி சொல்வதைப் போல அவளது குடும்பம் ஒன்றும் பஞ்சம் பிழைக்க கன்யாக்குமரிப் பக்கம் வரவில்லை.. வெண்ணிலாவின் வைர அட்டிகையை விற்றுப் பணமாக்க வந்து சேர்ந்தார்கள்..

கயல்விழியின் குடும்பம் கடன் தொல்லை தாங்காமல் தான் ஊரை விட்டு ஓடிப் போய் விட்டது என்றே ஊராரும் உற்றார் உறவினரும் நினைத்தார்கள்.. வெண்ணிலாவே தான் தானம் கொடுத்த வைர அட்டிகையை மறந்து விட்டாள்.. எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்து கிடைக்காததினால் நாளடைவில் அவளது குடும்பத்தாரும் அந்த வைர அட்டிகை தொலைந்து போய் விட்டதை ஜீரணித்துக் கொண்டார்கள்.. வெண்ணிலா கொடுத்த வைர அட்டிகையில்தான் கயல்விழியின் பணக்கார வாழ்க்கை ஆரம்பமானது என்பது

எவருக்குமே தெரியாமல் போனது.. வெண்ணிலாவின் வைர அட்டிகை மட்டும் நந்தினியின் வைர நகைகளில் ஒன்றாக சேர்ந்திருந்தால் பலகோடி ரூபாய் மதிப்புடைய நகையாக இருந்திருக்கும்.. அப்பேற்பட்ட உயர்தர வைரங்கள் பதிக்கப்பட்ட வைர அட்டிகை அது.. வெண்ணிலாவின் தாய்வழிச் சொத்து.. அதை கயல்விழிக்குத் தாரை வார்த்து விட்டாள்.. வைர அட்டிகையை விற்ற பணத்தில் கன்யாகுமரியில் பங்களாவும், காரும் வாங்கித் தன்னைப் பணக்காரராக அடையாளப் படுத்திக் கொண்ட கயல்விழியின் தந்தை மீதமிருந்த பணத்தில் ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்தார்.. வெண்ணிலாவின் நல்ல மனதால் கிடைத்த

பணம் என்பதால் அவர் தொட்டது துலங்கியது.. ஹோட்டல் வளர்ந்து ஸ்டார் ஹோட்டலாக விரிவு படுத்தப்பட்டது.. கயல்விழியும் வளர்ந்து திருமணப் பருவத்தில் நின்றாள்.. கோடிஸ்வரக் குடும்பம், ராஜ பாரம்பர்யம் என்று தேடி வந்து திருமணம் செய்து கொண்டார் மார்த்தாண்ட பூபதி..

மார்த்தாண்டத்தின் ராஜ பாரம்பர்யத்தில் பிறந்த மார்த்தாண்ட பூபதியின் குடும்பம் ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தின் பிரசித்தி பெற்றது.. பணம், பணத்தோடு என்ற கணக்கீடும், கயல்விழியின் அழகும் சேர்ந்து அவளின் பால்யகால ஏழ்மையை மறக்கடித்ததில் ஊர் மெச்ச அவளுக்கும் மார்த்தாண்ட பூபதிக்கும் திருமணம் நடந்து முடிந்தது.. கயல்விழி மார்த்தாண்ட பூபதியின் மகாராணியானாள்.. அள்ள அள்ளக் குறையாத பணம்.. அவள் ஆசைப்பட்ட ஆடம்பர கோடிஸ்வர வாழ்வு என்று அவளது உள்ளக் கிடக்கைகள் நிறைவேறியும் வெண்ணிலா மீதான அவளது பால்யகால வன்மம் சிறிதளவும் குறைய வில்லை.. பணம் சேரச்சேர வெண்ணிலாவை தேடிப் போய் துன்பப் படுத்த வேண்டுமென்ற வெறியும் சேர்ந்து வளர்ந்தது.. வெண்ணிலா கொடுத்த வைர அட்டிகையை விற்று தனக்கு இந்த ராஜ வாழ்க்கை கிடைத்தது என்பதை சற்றும் நினைத்துப்

பார்க்கவில்லை.. அவளும் சரி.. அவளைப் பெற்றவர்களும் சரி.. வார்த்தைக்கு வார்த்தை உழைத்துப் பிழைக்க இந்த ஊருக்கு வந்தோம்.. உழைத்த உழைப்பில் கோடிஸ்வரர்களாக ஆனோம் என்றுதான் சொல்வார்கள்.. வெண்ணிலாவின் வைர அட்டிகையைப் பற்றி மூச்சுக்கூட விட்டதில்லை..

மனிதமனம் விசித்திரமானது.. ஒருவேளை கயல்விழியின் அடியாழ மனதில் அந்த உறுத்தல் இருந்திருக்கலாம்.. அவள் வாழும் கோடிஸ்வர ராஜ வாழ்வு வெண்ணிலா தானமாக கொடுத்த வைர அட்டிகையால் கிடைத்தது என்று மனம் குன்றியிருக்கலாம்.. உழைத்து முன்னேறினோம் என்று சொல்லும் சொல்லில் உண்மை இல்லையென்று துயரப்பட்டிருக்கலாம்.. அந்தத் துயரம் வெண்ணிலாவின் மீதான வன்மமாக மாறி பழி வாங்கத் துடிக்கும் அளவிற்கு கொழுந்து விட்டு எரிந்திருக்கலாம்..

யார் மனதில் என்ன இருக்கிறது என்று யாரறிவார்..? என் மனதில் இந்த கசடு ஒளிந்திருக்கிறது என்று உண்மையை ஒப்புக் கொள்ளும் உத்தம சிகாமணிகள் இவ்வுலகில் வெகு அரிதாகத்தான் பிறக்கிறார்கள்..

கயல்விழி அழகானவள்தான்.. ராஜ பாரம்பர்யத்தில் பிறந்தவள்தான்.. இவையிரண்டை மட்டுமே பெரிதாக நினைத்து மார்த்தாண்ட பூபதி அவளுக்கு மாலையிட்டு விடுவாரா..?

கோடிஸ்வரத் தாய், தந்தைக்கு ஒற்றை மகள்.. ஹோட்டல் பிஸினெஸ், பங்களா, இதர சொத்துக்கள் என்று அனைத்திற்கும் அவள்தான் ஒரே வாரிசு என்பதினால்தானே அவளைத் தேடி வந்து பெண் கேட்டார்..? தான் வாழும் ராஜ வாழ்க்கை தன் தோழியின் தானத்தால் கிடைத்தது என்ற உண்மை கயல்விழியின் நிம்மதியைப் பறித்து வெண்ணிலாவை அடியோடு வெறுக்க வைத்தது.. அவளை நிம்மதியாக வாழ விடாமல் கதற வைக்க வேண்டுமென்ற பகையுணர்வை உண்டாக்கியது.. கயல்விழி திட்டம் போட்டு காய் நகர்த்தினாள்.. மகளுடன் தமிழகத்தைச் சுற்றிப் பார்க்கத் தனித்து அவள் கிளம்பிய போது மார்த்தாண்ட பூபதி ஆச்சரியப் பட்டு போனார்..

என்றுமே கயல்விழிக்கும் அவளுடைய மகளான மலர்விழிக்கும் ஒத்துப் போனதில்லை.. மகேந்திரன் தாயின் வார்ப்பாக இருந்தால் அவள் தந்தையின் வார்ப்பாக பெருந்தன்மையே உருவானவளாக இருந்தாள்.. மகேந்திரன்

தாயின் அரவணைப்பில் வளர்ந்த போது இவள் மட்டும் மார்த்தாண்ட பூபதியிடம் ஒட்டிக் கொண்டாள்.. இரக்கமும், பிரியமுமாக அவள் வளர, வளர கயல்விழி அவளிடமிருந்து விலகிப் போனாள்..

‘இவள் பிறந்திருக்கும் வம்சத்தோட காத்து அடிச்சிருச்சு போல..’ பல்லைக் கடிப்பாள்.. மகேந்திரன் மூர்க்கமானவன் என்றால் மலர்விழி பெயருக்கேற்றார்போல மலரினும் மெல்லிய இயல் புடையவள்.. எவரையும் கடிந்து ஒரு சொல் சொல்ல மாட்டாள்.. அவளைத் திருத்த (?) முயன்று தோற்றுப் போய் எக்கேடும் கெட்டுப் போ என்று தன் மகனுண்டு, தானுண்டு என்று ஒதுங்கிக் கொண்டாள் கயல்விழி..

அந்தக் கயல்விழி மகளை அழைத்துக் கொண்டு தமிழகத்தில் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டால் மார்த்தாண்ட பூபதி ஆச்சரியப்பட்டுப் போக மாட்டாரா..? தமிழ்நாட்டுக்குப் போன கயல்விழி வேறு எங்கும் போகாமல் தஞ்சாவூருக்குப் போய் தங்கினாள்.. தினமும் அவள் பிரகதீஸ்வரர் கோவிலை மட்டும் வலம் வந்து திரும்பியதில் மலர்விழி சந்தேகம் கொண்டாள்.. கயல்வழி அப்படியொன்றும் பக்தசிகோண்மணி இல்லையே..

‘இந்தம்மா எப்ப இப்படியொரு சிவபக்தையா மாறினாங்க..?’

மலர்விழியின் சந்தேகம் இரண்டே நாள்களில் தெளிவானது.. கோவிலில் பார்த்த வெண்ணிலாவை ‘தற்செயலாக’ சந்தித்ததைப் போலக் கட்டிப் பிடித்து உறவு கொண்டாடினாள் கயல்விழி..

“ஏம்மா.. இவங்க உங்க ரிலேட்டிவ்வா..?” மலர்விழி சன்னக்குரலில் வினவினாள்..

“ஆமாம்.. எனக்கு அத்தை மகள்..”

“இந்த உறவுமுறை வரைபடத்தையெல்லாம் கேட்கலை.. இவங்க இந்த ஊரில்தான் இருக்கிறாங்கன்னு உங்களுக்கு ஏற்கனெவே தெரியுமா..?”

“தெரியும்டி..”

“தெரிந்திருந்தா நாம் தஞ்சாவூருக்கு வந்த அன்றைக்கே இவங்க வீட்டுக்குப் போய் வந்திருக்கலாமே.. வெட்டியா ஒரு வாரம் இங்கே ஏன் தங்கனும்..? அதிலும் இவங்களிடம் இன்றைக்குதான் தஞ்சாவூருக்கு வந்தோம்ன்னு பொய் வேற சொல்கிறீங்க.. ஏன்ம்மா..? நாம் தமிழ்நாட்டில இருக்கிற

கோவில்களைக் கும்பிட்டுப் போக வந்திருக்கிறோம்ன்னு கதை விடறிங்க.. இந்தக் கதையைத்தான் அப்பாவிடமும் சொன்னீங்க.. தஞ்சாவூரைத் தவிர வேறு எந்த ஊர் கோவிலையும் நாம பார்க்கலை.. எதுக்கும்மா இந்த கப்ஸா..? உங்க பிளான்தான் என்ன..?"

"சும்மாயிரு.."

மகளை அடக்கி விட்டு அது இது என்று வெண்ணிலாவிடம் வாய் வளர்த்த கயல்விழி சின்ன வயதில் அவர்களிருவரும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டதாக நினைவுறுத்தினாள்.. அது என்ன உடன்படிக்கையென்று வெண்ணிலா திருதிருத்தாள்.. மலர்விழிக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.. பொய்யை மெய் போலப் பேசும் கலையை கைவரப் பெற்றிருப்பவள் கயல்விழியென்று அவளுடைய அத்தை மகளுக்கு எப்படித் தெரியாமல் போனது..?

"எப்படி மறந்தாய் வெண்ணிலா.."

"எதை மறந்தேன் கயல்விழி.."

"நீயும், நானும் வளர்ந்து கல்யாணமாகிப் பிரிந்து போய் விடுவோமேன்னு நான் அழுதேன்.. அப்ப நீ சொன்னாய்.."

“என்ன சொன்னேன்..?”

“நீயும், நானும் சம்பந்திகளாகி விடுவோம் கயல்.. அப்ப நம்ம சொந்தம் பிரியாதுன்னு சொன்ன வெண்ணிலா.. மறந்து விட்டாயா..?”

“அப்படியா சொன்னேன்..?”

எவ்வளவுதான் நெற்றிப் பொட்டில் ஒற்றை விரலால் அழுத்தி யோசித்தாலும் அப்படியொரு வாக்குறுதி கொடுத்த நினைவே வெண்ணிலாவுக்கு வரவில்லை..

“விடுங்கம்மா.. அவங்க மறந்துட்டாங்க போல.. சின்ன வயசில பேசினது இப்ப எப்படி ஞாபகத்தில இருக்கும்..? நாம கிளம்பலாம் வாங்க..”

மலர்விழி வெண்ணிலாவைக் காப்பாற்றித் தாயைக் கிளப்ப முயன்றாள். கயல்விழி கிளம்பவில்லை.. வெண்ணிலாவையும் கிளம்ப விடவில்லை..

அத்தியாயம் 246

பிடிவாதமாக வெண்ணிலாவுடன் ஒட்டிக் கொண்டு அவளுடைய வீட்டிற்கே போய் விட்டான் கயல்விழி.. மலர்விழிக்கு எதற்காக தாய் இப்படியொரு நாடகத்தைப் போடுகிறாள் என்று ஒரு மண்ணும் புரியவில்லை..

'அண்ணனுக்கு என்ன பெண்ணா கிடைக்க மாட்டாள்..?'

"கிடைப்பாள்.. இந்தப் பெண் கிடைக்க மாட்டாள்.." என்றாள் கயல்விழி..

"ம்மா.. உங்க அத்தை மகளும் பணக்காரங்களாகத் தான் இருக்கிறாங்க.. நான் ஒப்புக்கறேன் பட்.. நம்ம அளவுக்கு பணக்காரங்க இல்லை.."

"அதுதாண்டி எனக்கு வேணும்.."

தாயின் மர்மப் புன்முறுவலுக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் மலர்விழி தலைமுடியை பிய்த்துக் கொண்டாள்.. பணத்திமிர் பிடித்த கயல்விழி தன்னை விட வசதியில் சற்றுக் குறைவான வெண்ணிலாவின் மகளை மருமகளாக்கிக் கொள்ள ஏன் நினைக்கிறாள்..?

அந்த அளவுக்கு வெண்ணிலா மீது கயல்விழிக்கு பாசம் என்று நம்ப மலர்விழி தயாராக இல்லை.. அவளுக்குத் தாயைப் பற்றித் தெரியும்.. தமையனைப் பற்றி நன்றாகவே தெரியும்.. அவன் முரடன்.. மூர்க்கன்.. சிரித்த முகமாய் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் வெண்ணிலாவுக்கு அவன் மருமகன் ஆவதா..? கயல்விழியைப் போன்ற மாமியாரும், மகேந்திர பூபதியைப் போன்ற கணவனும் வாய்த்தால் வெண்ணிலாவின் மகளான அந்த நந்தினி என்ன ஆவாள்..? மகேந்திர பூபதியின் அரண்மனை மார்த்தாண்டத்தில் இருந்தது.. கன்யாகுமரிப் பகுதியிலும் கேரளாவிலும் மார்த்தாண்ட பூபதிக்கு உறவினர்கள் இருந்தார்கள்.. அவர்களில் சிலர் மார்த்தாண்ட பூபதிக்கு இணையாக பணம் படைத்தவர்கள்..

மகேந்திர பூபதிக்குப் பெண் கொடுக்கவும் விரும்பினார்கள்.. தூது விட்டுக் கொண்டிருந்தார்கள்.. அந்த இடங்களில் சம்பந்தம் பேசாமல் தமிழகக் கோவில்களைச் சுற்றிப் பார்த்து வணங்கி விட்டு வரப் போவதாக கதை பிணைந்து நேரே தஞ்சாவூருக்கு வந்து இறங்கி.. ஒரு வாரம் தங்கி பிரகதீஸ்வரரை மட்டும் வலம் வந்து வெண்ணிலாவை கண்டு பிடித்து பால்ய கால சிநேகிதத்தையும் ரத்த

சொந்தத்தையும் நினைவுபடுத்தி உறவைப் புதுப்பித்து சம்பந்திகளாக வேண்டும் என்று அன்றொரு நாள் சபதம் எடுத்தோம் என்று கதை பிணைந்து வெண்ணிலாவின் வீடு வரை வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்றால் கயல்விழியின் மனதில் பலமான திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறாள் என்றுதானே அர்த்தமாகிறது..?

‘அந்தத் திட்டம் என்னவாக இருக்கும்..?’ யோசித்து யோசித்து தலை வலித்ததுதான் மிச்சம்.. மலர்விழியால் எதையும் கண்டு பிடிக்கவில்லை.. கயல்விழியின் மனதில் என்ன இருக்கிறது என்று கண்டு பிடிப்பது சுலபமானதல்ல.. அத்தனை வருடங்களாக அவளுடன் குடும்பம் நடத்தும் மார்த்தாண்ட பூபதிக்கே மனைவியின் மனதில் என்ன இருக்கிறதென்று தெரியாது.. அழகே வடிவாக இதழ்களில் தவளும் புன்னகையோடு அறியாப் பெண்ணைப் போல இமைகளைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசிக் கணவரைக் கவிழ்த்து விடும் சாகசம் படைத்தவள் அவள்.. தன் மனைவி மென்மையே உருவானவள் என்று நம்பிக் கொண்டிருந்தார் மார்த்தாண்டம்..

மலர்விழி அப்படியல்ல.. தாயின் குணாதிசியத்தைத் தெள்ளத் தெளிவாக கணித்து வைத்திருந்தாள்.. வளரும் வரை

எதையும் சொல்ல முடியாது.. வளர்ந்த பின்னால் முடிந்தவரை தாய்க்கு அறிவுரை சொல்லித் திருத்தப் பார்த்தாள்.. முடியவில்லை.. தந்தையிடம் ஒட்டிக் கொண்டு விலகிக் கொண்டாள்..

"இந்தாங்க காபி.."

மாடி ஹாலில் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மலர்விழியிடம் காபிக் கோப்பையை நீட்டினான் நந்தகுமார்.. அவனுக்கு அவளிடம் பேச வேண்டியிருந்தது.. கீழே ஹாலில் கயல்விழி தன் மகன் கோபக்காரன் என்றும் கோபம் வந்து விட்டால் இன்னது செய்வான் என்று சொல்ல முடியாது என்றும் வெண்ணிலாவிடம் சொல்லிக் கொண்டிருந்ததைப் பற்றிக் கேட்க வேண்டியிருந்தது..

அவசரமாக காபியைப் பறித்து உறிஞ்ச ஆரம்பித்தவளை வேடிக்கை பார்த்தபடி பக்கத்திலிருந்த சோபாவில் அமர்ந்தவன்..

"கன்யாக்குமாரிக்காரங்க காபியைக் கண்ணால் கூட கண்டதில்லை போல.." என்று கேலி செய்தான்..

அவனது ஆர்வமான பார்வையும் விஷமமான பேச்சும் மலர்விழியைக் கவர்ந்தது..

“ஓ..” என்று உதடுகளைக் குவித்தாள்..

“கன்யாகுமரியும் கேரளாவும் பக்கம்.. பக்கம்.. தெரியுமோ..”

“தெரியும்ங்க.. தமிழ்நாட்டு மேப்பை ஜியாக்ரபியில் பார்த்திருக்கேங்க..”

“அறிந்தும் இப்படியொரு கொஸ்டின் கேட்குமோ..?”

“யார் கேட்டது..?”

நந்தகுமார் சுற்று முற்றும் பார்த்தான்.. யாரும் அங்கு இல்லை..

“யாரைத் தேடற..?”

“என்னையா கேட்கறிங்க..?”

“இங்கே நீயும், நானும் மட்டும்தானே இருக்கிறோம்..?”

“அப்படித்தான் தோணுது..”

“அப்படித்தான் தோணணும்.. எதுக்காக சுற்று முற்றும் பார்த்த..?”

“நீங்க கேட்குமோன்னு கேட்டிங்களே.. அது யாருன்னு பார்த்தேன்..”

“உன்னைத்தான் கேட்டேன்..”

“எதுக்கு கேட்பீங்களான்னில்ல கேட்கனும்..?”

“ஞான் கன்யாக்குமரிப் பெண்ணல்லோ..”

“ஓ..”

“நாங்க தமிழை மலையாளம் போல சம்சாரிச்சு..”

“என்னவோ செய்து தொலைங்க.. எதுக்காக அப்படிக் கேட்டிங்க..?”

“கேரளாவில காபி எஸ்டேட்டும், டீ எஸ்டேட்டும் அதிகமாக இருக்கும்.. கேரளாவுக்குப் பக்கத்தில இருக்கிற கன்யாகுமரியில பிறந்து வளர்ந்தவ காபியைக் காணாம இருப்பேனாக்கும்..? தஞ்சாவூரில வந்துதான் காபியை அடையாளம் பார்க்கனுமாக்கும்..? இது மண்டைக் கனம்தானே..”

“அப்படியெல்லாம் இல்லையாக்கும்.. எங்க தஞ்சாவூரும் கும்பகோணமும் பக்கத்திலே, பக்கத்திலேயாக்கும்..”

“அதுக்கு இப்ப என்னவாக்கும்..? நாங்க போகிறப்ப கும்பகோணம் கொழுந்து வெத்தலையை கூடை கூடையா குடுத்தனுப்ப எண்ணமாக்கும்..?”

“கும்பகோணம் டிகிரி காபி சும்மா கும்முன்னு தூக்குமாக்கும்.. தஞ்சாவூரு டிகிரி காபியோட மணமே ஆளை மயக்குமாக்கும்..”

“ஞான் மயங்கலையாக்கும்..”

“ஆனா ஞான் மயங்கிட்டேனாக்கும்..”

நந்தகுமாரின் சுவரஸ்யமான பார்வையிலும் பேச்சிலும் ஈர்க்கப்பட்டாள் மலர்விழி.. அவன் ஆழ்ந்த பெருமூச்சை விட்டான்..

“இது எதுக்கு..?” அவள் கிண்டலாக கேட்டாள்..

“ஏங்க.. நான் உங்களை வாங்க போங்கன்ன கூப்பிடறேனே.. அதை நினைத்தாவது என்னை வாங்க போங்கன்னு கூப்பிடலாமில்ல.. வா, போன்னு சின்னப் பையனிலும் சின்னப் பையனாக்கறிங்களே..”

“இதுக்குத்தான் அந்தப் பெருமூச்சா..? நீங்க என்னை விடச் சின்னப் பையன்தானே..?”

“காந்தியைப் பார்த்து கஸ்தூரிபாய் இப்படிச் சொன்னதில்லைங்க.. சச்சினைப் பார்த்து அவங்க வொய்ப் இப்படிச் சொன்னதில்லைங்க.. இன்னும்..”

“இதுவே போதும்.. தாங்கலை.. அதுக்காக பிளஸ் டூ படிக்கிற பையனைப் பார்த்து நீ சின்னப் பையன்தானேன்னு கேட்காம இருக்க முடியாது..”

“அநியாயமாய் பேசாதீங்க.. நான் பிளஸ் டூ முடித்து ரிசல்ட் வந்தாச்சு.. காலேஜில் சேரப் போகிறேன்..”

“இன்னும் சேரலையே.. சேர்ந்த பின்னால் பார்த்துக்கலாம்..”

மலர்விழி சொன்ன சொல்லில் நந்தகுமார் பிரகாசமானான்.. அதில் அயர்ந்து போன மலர்விழி அப்படியென்ன சொல்லி விட்டோம் என்று திகைத்துப் போனாள்..

“அப்பப் பார்த்துக்கலாமில்ல..?” என்று நந்தகுமார் குதூகலித்த போதுதான் அதற்கான காரணம் புரிந்தது..

“என்ன.. பார்த்துக்கலாம்..?” புரியாதவளைப் போலக் குறும்புப் புன்னகையுடன் கேட்டாள்..

“நீங்களும் நானும் பார்த்துக்கலாம்.. பழகிக் கலாமில்ல..?” நந்தகுமார் தயங்காமல் தேங்காயை உடைத்தான்..

அவனுடைய அச்சமில்லாத வெளிப்படையான பேச்சை ரசித்த மலர்விழி கலகலவென சிரித்து விட்டு.. நந்தகுமார் பக்கமாக சாய்ந்து அவனது முன்னுச்சி முடியைக் கோதி..

“நீ இருக்கியே.. சரியான கள்ளண்டா நீ..” என்றாள்..

“உங்களோட உள்ளங் கவர் கள்வன்தானே..”

“ஆமாம்ன்னு சொன்னா நீ சந்தோஷப்படுவியா..?”

“அதிலென்னங்க இத்தனை சந்தேகம்..?

டெபனிட்டா சந்தோஷப் படுவேன்..”

“அப்ப.. ஆமாம்.. ஓகே..?”

“டிரிபிள் ஓகே..”

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.. பலநாள்கள் பேசிப் பழகிய அன்யோன்யம் நந்தகுமாரின் மீது ஏற்படுவதை உணர்ந்த மலர்விழி..

“நீ ரொம்ப ஃபிரண்ட்லி டைப்புடா..” என்று சிலாகித்தாள்..

“காதலிக்கத்தான் வயது வேணும்.. ஃபிரண்ட்ஷிப்புக்கு வயது வித்தியாசம் எதுவும் இல்லையே..”

“இது மூலம் நீ சொல்ல விரும்புவது என்னவோ..?”

“நீங்களும் நானும் ஃபிரண்ட்ஸ்.. ஓகேவா..”

“டிரிபிள் ஓகேடா தம்பி..”

“தம்பியா..? என்னங்க நீங்க கதையையே மாத்தறீங்க.. உங்க அண்ணனுக்கு என் அக்காவைப் பெண் கேட்டு வந்துட்டு என்னை உங்களுக்கு தம்பியாக்கறீங்க.. எனக்குக் கொடுமை செய்கிற கில்ட்டி கான்ஷியஸே உங்களுக்கு வராதா..?”

“டேய்.. போதும்டா.. தாங்கலை..”

“வி ஆர் ஒன்லி ஃபிரண்ட்ஸ்.. நாட் அக்கா, தம்பி..”

“ஓகே.. ஓகே..”

மலர்விழி சோபாவில் போடப்பட்டிருந்த திண்டை இழுத்து மடிமீது வைத்துக் கைகளை அதன்மீது ஊன்றிக் கொண்டு நந்தகுமாரை உற்றுப் பார்த்தாள்..

“என் அக்காவை பெண் பார்க்க வந்திட்டு என்னை மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்கீங்களே..” கண் சிமிட்டினான் நந்தகுமார்..

மலர்விழி அவனுடைய விளையாட்டுப் பேச்சில் கலந்து கொள்ளாமல் தீவிரமான முகபாவத்துடன்..

“உன் அக்கா இப்போதுதானே படித்து முடித்திருக்காங்க.. மேரேஜுக்கு என்ன அவசரம்..” என்று கேட்டாள்..

நந்தகுமாரின் முகம் மாறியது.. மலர்விழியின் முகத்திலிருந்த தீவிரம் அவனை யோசிக்க வைத்தது..

“நாங்க அவசரப்படலையே.. உங்க அம்மாதான் அவசரப்படுகிறாங்க.. ஆக்ஷுவலா நானே இந்த கொஸ்டினை உங்களிடம் கேட்கனும்னு நினைத்தேன்.. நீங்க முந்திக்கிட்டிங்க..” என்றான்..

“எனக்கும் தெரியலை நந்தகுமார்.. என் அம்மா உங்க அம்மாவைப் பத்திப் பேசி நான் கேட்டதே இல்லை..”

“நானும்தான்.. திடீர்ன்னு இப்படியொரு பிளாஷ்பேக் ஸ்டோரியோட எண்ட்ரி கொடுக்கிறாங்க.. அப்படியே பிளாக் அண்ட் வொயிட் படம் பார்க்கிறதைப் போலவே இருக்கு..”

“எனக்குத் தலையைச் சுத்துது..”

மலர்விழி தலையைப் பிடித்துக் கொள்ள நந்தகுமார் அவள் பக்கமாக நகர்ந்து அமர்ந்து மெதுவான குரலில் கேட்டான்..

“உங்க அண்ணன் எப்படியாப்பட்ட கேரக்டர்ங்க.. உங்க அம்மா என்னவோ அவர் வீரன்.. துப்பாக்கி சுடும் தீரன்னு பில்ட் அப் கொடுக்கிறாங்க..”

“முரடன்..” மலர்விழி உண்மையைச் சொல்லி விட்டாள்..

வெண்ணிலாவின் கள்ளம், கபடமில்லாத சுபாவமும் நந்தகுமாரின் கலகலப்பும் அவளைக் கவர்ந்திருந்தன.. இந்த வீட்டில் பிறந்த பெண்ணால் கயல்விழியையும் மகேந்திரனையும் சமாளித்து வாழ்ந்து விட முடியுமா என்று அவளுக்கு மலைப்பாக இருந்தது..

மகேந்திரனுக்கு பெண் கொடுக்க வரிசை கட்டி நின்ற மார்த்தாண்ட பூபதியின் உறவினர் வீட்டுப் பெண்களின் கதையே வேறு.. அவர்கள் வினயத்தில் கடைந்தெடுத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.. சூழ்ச்சிகளையும் சூட்சுமங்களையும் அறிந்தவர்கள்.. கயல்விழியையும்

மகேந்திரனையும் வந்து பார் வட்டப்பறைக்கு என்று வாதுக்கு இருக்கும் திறமை கொண்டவர்கள்..

“முரடனா..? அவள் என்னவோ கோபக்காரர் ஆனா குணசாலின்னு உங்க அம்மா பெருமையாய் சொல்லிக் கிட்டாங்களே.. அது பொய்யா..?”

நந்தகுமாரின் முகம் அஷ்ட கோணலானதில் மலர்விழிக்கே என்னவோ போல ஆகிவிட்டது.. மகேந்திர பூபதி அவளுடைய அண்ணன்.. அவனைக் குறைவாகப் பேச மனம் வராததினால்..

“என் அண்ணன் எதிலும் நேர்த்தியை எதிர்பார்ப்பான்.. காலையில் கரெக்ட் டயத்துக்கு எழுந்து விடனும்.. எல்லாத்திலயும் மிலிடிரி டிஸிப்ளின்தான்.. சோம் பேறித்தனமா இருந்தா பெல்ட்டாலே விளாசித் தள்ளிருவான்..” என்று உண்மையையும் பொய்யையும் கலந்து சொல்லி பயமுறுத்தினாள்..

“ஹைய்யோ.. என்னங்க இப்படிச் சொல்கிறீங்க..? என் அக்கா சோம்பேறியிலும் சோம்பேறி.. கடைந்தெடுத்த சோம்பேறியாச்சே.. அவ எப்படி உங்க வீட்டில வந்து குப்பை கொட்டுவா..?”

“கஷ்டம்தான்.. என் அண்ணன் பெல்ட்டை உருவினா ரத்த களறியாக்காம விட மாட்டான்.. பெட்சீட்டை ஒழுங்காய் மடித்து வைக்கலைன்னாலே அடி பின்னிருவான்.. இதில உன் அக்கா அத்தச் சோம்பேறிங்கற.. என்ன ஆகப் போகுதோ..”

“மத்தவங்களை பெல்ட்டால் அடிக்கிறாரு.. ஓகே.. பெண்டாட்டியையுமா பெல்ட்டாலே விளாசுவாரு..?”

“மத்தவங்களையாவது ரத்தக் களரியாக்குவதோடு விட்டு விடுவான்.. பெண்டாட்டியை போட்டுத் தள்ளாம விடமாட்டான்..”

“இந்தப் பெருமையை பேசத்தான் கன்யாகுமரியில இருந்து தஞ்சாவூருக்குப் பெண் கேட்டு வந்தீங்களாக்கும்.. நீங்கப் போட்டுத் தள்ளவா எங்க அக்காவை வளர்த்து வைச்சிருக்கோம்..?”

“அதை என்னிடம் கேட்டா எப்படி..? உன் அப்பாம்மாவிடம் கேளு.. நாங்க பெண் கேட்டா நீங்க ஏன் கொடுக்கறிங்க..?” “கொடுத்தா..?”

“பெல்ட் அடிதான்.. துப்பாக்கிக் குண்டுதான்..”

“துப்பாக்கியா..?”

“ஆமா.. என் அண்ணனை யாருன்னு நினைத்த.. கன்யாகுமரியில நடக்கிற துப்பாக்கி சுடற போட்டியில என் அண்ணன்தான் எப்பவுமே ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்குவான்..”

“இந்தப் பெருமை வேறயா..? கிழிஞ்சது போங்க.. துப்பாக்கியை போட்டியில மட்டும்தான் சுடுவாரா..?”

“வீட்டிலேயும் சுடுவான்.. இவன் வர்றப்ப செக்யூரிட்டி கேட் கதவைத் திறக்காம பராக்குப் பார்த்தான்னு ஒரு புல்லட்டை வேஸ்ட் பண்ணிட்டான்..”

மலர்விழி ஏகத்துக்கும் வருத்தப்பட.. வேலையில்லை யென்றால் கன்யாகுமரிக் கடலில் போய் விழாமல் இவர்கள் வீட்டுக்குச் செக்யூரிட்டியாக வேலைக்குப் போகலாமா என்று அந்த செக்யூரிட்டியை நினைத்துக் கோபப்பட்டான் நந்தகுமார்..

“அந்த செக்யூரிட்டிக்கு என்னங்க ஆச்சு..?”

“ஒண்ணும் ஆகலை.. செக்யூரிட்டி தப்பிச்சு ஓடிட்டான்.. ராஸ்கல்..” மலர்விழி கைவிரல்களை நெரித்து சபித்தாள்..

அத்தியாயம் 247

என்னவோ செய்யக் கூடாத காரியத்தை செய்து விட்டதைப் போல செக்யூரிட்டியை மலர்விழி திட்டியதில் நொந்து போன நந்தகுமார்..

“ஓடாம அவன் என்ன பண்ணியிருக்கனும்னு நினைக்கறீங்க..? நின்று உங்க அண்ணன் சுட்ட புல்லட்டை நெஞ்சிலே வாங்கியிருக்கனுமா..?” என்று சிரிக்காமல் கேட்டான்..

“ஆர் யு ஜோக்கிங்..?”

“சத்தியமா இல்லைங்க.. இதுக்கெல்லாம் ஜோக்கடிச்சா நான் மனிதப் பிறவியா இருக்க முடியாதுங்க..”

“இனிமேல் இதுபோல புறமுதுகு காட்டற செக்யூரிட்டியை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாதுன்னு அம்மா ஸ்டிரிக்ட்டா ஆர்டர் போட்டுட்டாங்க.. அப்பாவும் ஓகே சொல்லிட்டார்..”

“குட் மதர்..! குட் ஃபாதர்..! குட் சன்..! அண்ட் வெரிகுட், குட், குட் டாட்டர்..! உங்க ஃபேமிலியே குட் ஃபேமிலி..

இப்படியாப்பட்ட ஃபேமிலியில மருமகளா வாழ என் அக்கா கொடுத்து வைத்திருக்கனும்..”

“வெல் செட்.. வெல் செட்..”

“இது வெல் செட்டா..? மனச்சாட்சியைக் கழட்டி வைத்து விட்டுத்தான் பேசுவீங்களா..? உங்களைச் சொல்லிக் குற்றமில்லைங்க.. உங்க ஃபேமிலியோட டிசைனே அப்படி.. ஏங்க உங்க அண்ணன் உங்களுக்கு உயர்த்தின்னா எல்லோருக்குமே அப்படியே இருக்கனுமா..?”

“என் அண்ணன் எனக்கு உயர்த்தின்னு யார் சொன்னது..?”

“யார் சொல்லனும்..?”

“நான் சொல்லனும்.. நான் சொன்னேனா..?”

“இதப் பாருடா..” ஆச்சரியமாகி விட்டான் நந்தகுமார்.

எல்லாவகையிலும் அவனைக் காந்தமென கவர்ந்து இழுத்தாள் அந்த மலர்விழி.. இவளை யார் நந்தகுமாருக்கு முதலில் வயதில் மூத்தவளாகப் பிறக்கச் சொன்னது என்று கோபம் கோபமாக வந்தது.. ஆளைப் பார்த்தால் அசப்பில்

அமலா பாலைப் போலவே இருந்து வைக்கிறாள்.. யூனிபார்ம் மாட்டி விட்டால் பத்தாம் வகுப்பு படிக்கும் மைனாவேதான்..

“உங்களை ஸ்கூலில் சேர்க்கிறப்ப வயதைக் கூட்டிச் சொல்லிட்டாங்களோ..” ஜொள்ளு விட்டான்..

“ஜொள்ளு..?” அவள் தெள்ளத் தெளிவாக கண்டு பிடித்து விட்டாள்..

“இல்லேன்னு ஜொள்ள மாட்டேங்க.. உங்களைப் பார்த்தா இப்பத்தான் டென்த் முடிச்சிட்டு பிளஸ் ஒன்ல சேர வருகிற பப்பா மாதிரியே இருக்குங்க..”

“உனக்குத் தோதா வயதை மாத்திருவியே.. கனவெல்லாம் காணாதே.. எனக்கு வயதை யாரும் கூட்டிச் சொல்லலை.. என் வயதே இதுதான்.. உனக்கு நான் அக்கா முறையாகனும்..”

“இல்லையே.. அத்தை மகள் முறையில்ல வருது..”

“இதிலெல்லாம் விவரமா இரு..”

“பெண்களுக்கு பொதுவா வயதைக் குறைத்துச் சொன்னால்தான் பிடிக்கும்ன்னு சொல்வாங்க..”

“யார் சொல்வாங்க..?”

“என்னங்க நீங்க.. எதுக்கெடுத்தாலும் யார், யார்ன்னு கேள்வி கேட்கறீங்க.. வுமன்ஸ் சைக்காலஜியே அப்படித்தாங்க..”

“மேன்ஸ் சைக்காலஜியை நான் பிட்டுப் பிட்டு வைத்தேன்னு வைச்சுக்க.. நீ தாங்க மாட்டாம ரத்தம் கக்க ஆரம்பிச்சுருவே.. பி கேர் ஃபுல்..”

‘என்ன கழுதைக்கு..?’ என்று தோன்றியது நந்தகுமாருக்கு..

அழகும் அறிவும் சேர்த்து அசத்தினாள் அவள்.. இவளிடம் கேர் புல்லாக இருக்க வேண்டிய அவசிய மில்லை.. இவளுடைய அண்ணனிடம்தான் படு கேர்புல்லா இருந்தாகனும் என்று நினைத்துக் கொண்டான் அவன்..

“உங்க மனதைத் தொட்டுச் சொல்லுங்க..”

“அதைத் தொடமலே நான் உண்மையைத்தான் பேசுவேன்.. பொய் பேச மாட்டேன்.. நீ கேட்க வந்ததைக் கேளு..”

“உங்க அண்ணனைப் போல ஒரு மாப்பிள்ளை உங்களுக்கு வாய்த்தா நீங்க என்னங்க பண்ணுவீங்க..?”

“தூக்குப் போட்டுத் தொங்கிருவேன்..”

சிரிக்காமல் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள் மலர்விழி.. அவளது அந்த வார்த்தைகள்தான் நந்தகுமாரைக் கிளப்பி விட்டு நந்தினியிடம் வரப் போகும் மாப்பிள்ளையைப் பற்றி அவன் அறிந்தவைகளைப் போட்டுக் கொடுக்க வைத்தன..

வெண்ணிலா சூது வாதில்லாத குணம் கொண்டவள்.. அவளைக் கரம் பிடித்த மேகநாதன் ‘களவும் கற்று மற’ என்ற கொள்கையைக் கரம் பிடிப்பவர்.. வியாபார உலகில் சாம, தான, பேத, தண்ட முறைகள் அனைத்தையும் கடை பிடித்தால்தான் வெற்றிவாகை சூட முடியும் என்ற விவரம் அறிந்தவர்..

வெண்ணிலாவின் சிறுவயதுத் தோழியும், மாமன் மகளுமான கயல்விழிக்கு வெண்ணிலா வாக்குக் கொடுத்து விட்ட கதையையெல்லாம் அவர் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை.. வந்து சென்ற கயல்விழி யார், எவர் என்று கன்யாகுமரியில் இருந்த அவளுடைய நண்பர் வட்டாரத்தில் விசாரித்தார்..

“மார்த்தாண்ட பூபதியின் மகனுக்கா உன் மகளைக் கேட்டு வந்தாங்க..? அவர் மகனுக்குப் பெண் கொடுக்க

கன்யாகுமரி வட்டாரத்திலும் கேரளாவிலும் இருக்கிற பெரிய, பெரிய கோடிஸ்வரர்கள் எல்லாம் போட்டா போட்டி போட்டுக்கிட்டு இருக்காங்கப்பா.. ஸ்டார் ஹோட்டல், இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி.. அது இதுன்னு அவருக்கு கோடிக்கணக்கில லாபம் வருகிற பிஸினெஸ்கள் இருக்குதுப்பா.. உன் வீட்டில் பெண்ணெடுக்க அவங்க நினைக்கிறாங்கன்னா நீ அதிர்ஷ்டக்காரனப்பா..”

மேகநாதன் விசாரித்த அத்தனை நண்பர்களும் ஒன்று சொன்னதைப் போல இதே வார்த்தைகளைத்தான் சொல்லி வைத்தார்கள்.. அவர்கள் மீது குற்றமில்லை.. மார்த்தாண்ட பூபதியின் பாரம்பர்யம் அப்பேற்பட்டது.. கோடிஸ்வரக் குடும்பம்.. ஒவ்வொரு தலைமுறையிலும் வளம் குறையாமல் பெருக்கிக் கொண்டே வந்ததில் கன்யாகுமரியின் முதன்மையான பணக்காரர் என்ற பெயரை மார்த்தாண்டபூபதி தட்டிப் பறித்திருந்தார்.. கயல்விழியின் தந்தை கன்யாகுமரிக்கு வந்தவுடனே கார், பங்களா, ஹோட்டல் பிஸினெஸ் என்று தன்னை பணக்காரராக அடையாளப் படுத்திக் கொண்டிருந்ததில் கயல்விழியைப் பற்றியும் உயர்ந்த அபிப்ராயம்தான் ஏற்பட்டிருந்தது.. மகேந்திரனோ வேடதாரி.. எங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வித்தை

தெரிந்தவன்.. அவனுடைய மறுபக்கத்தை அறிந்தவர்கள் வெகு சிலரே.. குடும்பத்தார், வேலையாள்கள், சில நண்பர்கள் என்று குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அவன் எப்படிப்பட்டவன் என்பது தெரியும்..

மற்றவர்கள் அவனது பொய் முகத்தைத்தான் நல்லவன், வல்லவன் என்று போற்றிப் புகழ்வார்கள்..

"மகேந்திர பூபதிக்கென்னப்பா.. பெத்தவங்க அவர் கையில் தந்த சொத்தை விருத்தி பண்ணுகிறார்.. சாதாரண ஹோட்டலை ஸ்டார் ஹோட்டலாக்கினது அவர்தான்.. கொஞ்சம் முன் கோபி.. கண்டிப்பானவர்.. பிஸினெஸ்களை கவனித்துக்க அடாவடியாகத்தானே இருந்தாகனும்.."

மகேந்திரனைப் பற்றிய மதிப்பீட்டில் மேகநாதன் திருப்தி அடைந்து விட்டார்.. கிடைப்பதற்கரிய சம்பந்தம் என்று அவர் மனதில் பதிந்து விட்டது.. நந்தினியின் மன்றாடல்களும் கெஞ்சல்களும் அவரது செவிகளில் ஏறவில்லை.. மகளுக்கு ஒன்றும் தெரியாது... சிறுபிள்ளைத்தனமான குணம் கொண்டவள்.. இன்னமும் விளையாட்டுப் புத்தியுடன்தான் இருக்கிறாள் என்ற நினைவு அவருக்கு.. நந்தினியும் அப்படித்தான் இருந்து தொலைத்தாள்.. அவளது அந்த

குழந்தைத்தனமான விளையாட்டு குணமே வினையாகி விட்டது.. அவள் மாப்பிள்ளையை நேரில் பார்க்க வேண்டும் என்று கேட்டது மறுக்கப்பட்டது.. திருமணத்திற்கு முன்பு மகேந்திரனையும், நந்தினியையும் நேரில் பார்த்துப் பேச விடக் கூடாது என்பதில் கயல்விழி கவனமாக இருந்தாள்.. ஏதேனும் ஒரு வகையில் நந்தினி மகேந்திரனின் குணம் இத்தகையது என்று கண்டு பிடித்து விட்டால் திருமணம் நின்று போய் விடும்.. அதற்கு இடம் தரக் கூடாது..

"நம்ம மலர்விழி வயதுதானே வெண்ணிலாவின் மகளுக்கும் இருக்கும்.. இவ என்ன பேச்சு பேசுகிறான்னு பார்த்தியில்ல.. சூட்சும புத்தி ஜாஸ்தி.. நீ என்னதான் ஒளித்து மறைத்தாலும் மலர் ஈஸியா கண்டு பிடிச்சுருவா.. அவளும் இவளைப் போலதானே இருப்பா..? நீ மாட்டிக்குவ மகேந்திரா.."

"மாட்டிக்கிட்டாத்தான் என்ன..? ஆப்டர் ஆல் ஒரு பெண்ணுக்கு பயந்து நாசுக்கானவனைப் போல நடிக்கனுமா..? நான் இப்படித்தான் இருப்பேன் ஒழுங்கா மரியாதையாய் கழுத்தை நீட்டறதுன்னா நீட்டு... இல்லேன்னா ஓடியே போயிருன்னு முகரையைப் பேர்த்திர மாட்டேனா..? கிரேட் இன்சல்ட்ம்மா.."

“இப்படி எதையாவது செய்து வைத்துகுவன்னுதான் நீ ஃபாரினுக்குப் போயிருக்கிறன்னு சொல்லியிருக்கிறேன்.. எதுக்கும் நீ ஃபாரின் பக்கம் கிளம்பு.. கல்யாணத் தேதியை அனுசரித்துக் கன்யாகுமரிக்கு வந்துக்கலாம்..”

“அவளுக்குப் பயந்து நான் ஃபாரினுக்குப் பறக்கனுமா..? இதுக்கே அவளை இரண்டு மாதத்துக்கு சோறு, தண்ணியக் கண்ணில காட்டாம சித்ரவதை செய்யனும்..”

“சிங்கக்குட்டிடா நீ.. இப்படியே கோபத்தைக் குறைய விடாம மெயின்டெயின் பண்ணிக்க.. அவளுக்குத் தாலியைக் கட்டின அடுத்த செகண்டிலேயே உன் கச்சேரியை ஆரம்பித்துக்க.. யாரு கேட்கப் போகிறதாம்..?”

“அப்பா கேட்க மாட்டாரா..?”

“அவர் சொல்கிற அட்வைஸை நீ கேட்டுக்குவியா..?”

“வேற வேலைக்கழுதை இல்லையா..? அவர் சொல்கிற அட்வைஸை நான் ஏன் கேட்கனும்..? உமர் கய்யாம் மாதிரி உல்லாசமாத் திரிகிறவன்கிட்ட வந்து புத்தராப் போயிருன்னு அட்வைஸ் பண்ணினா எவன் கேட்பான்..?”

“தெரியுதில்ல.. அப்புறம் அப்பா கேட்பாரா.. ஆட்டுக்குட்டி கேட்குமான்னு ஏன் கேட்கிற..? நீ நடந்து ராஜா..”

தாயின் ஆணையை சிரமேற்கொண்டு மகேந்திர பூபதி வெளிநாட்டுக்குப் பறந்து விட்டான்.. மகன் இந்தியாவில் இல்லை.. அவனால் பெண் பார்க்க வர முடியாது.. நந்தினியின் போட்டோவைப் பார்த்தே சம்மதம் சொல்லி விட்டான் என்று தஞ்சாவூருக்குத் தகவல் சொல்லி விட்டாள் கயல்விழி.. நந்தினியைப் பெற்ற புண்ணிய ஆத்மாக்கள்..

“அப்பாடி..” என்று ஆறுதல் அடைந்தார்கள்.. நந்தினிக்கு பெருத்த அதிர்ஷ்டம் வாய்த்திருக்கிறதாம்.. அது புரியாத கூமுட்டை(?)யான அவள் மாப்பிள்ளையை நேரில் சந்தித்தால் பேசத் தெரியாமல் பேசி ஓட வைத்து விடுவாளாம்.. அதனால் திருமணத்திற்கு முன்னால் மாப்பிள்ளை வந்து அவளைப் பார்த்து விடக் கூடாது என்பதில் கயல்விழிக்கு மேல் இவர்கள் முனைப்புக் காட்டினார்கள்..

வீட்டை விட்டு வெளியேற முடியாமல் நந்தினி சிறைபட்டாள்.. திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.. மகேந்திரனின் போட்டோவைக் கூட அவள் கண்ணில் காட்டாமல் இருட்டடிப்பு செய்தார்கள்..

“இவ சென்னையிலே படித்து வந்திருக்கா வெண்ணிலா.. கன்யாகுமரியிலயும் தோழிகள் இருக்கலாம்.. நாம போட்டோவைக் காட்டினா அதை வாட்ஸ்-அப்பில் அவங்களுக்கு அனுப்பி வைத்து நேரில் போய் பார்த்து இவளுக்கு கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னு சொல்லச் சொன்னாலும் சொல்லுவா..”

“ஆமாங்க.. கட்டாயம் செய்வா..”

“நாமதான் முன்ஜாக்கிரதையாய் இருக்கனும்..”

“சொல்லிட்டிங்கள்ல.. இவ கண்ணில போட்டோவைக் காட்டாம ஒளித்து வைச்சுடறேன்.. கவலையே படாதீங்க..”

வள்ளுவரின் வாசுகியாக மாறிப் போனாள் வெண்ணிலா.. என்னதான் செய்வது என்று தலைமீது கைவைத்து உட்கார்ந்து விட்ட நந்தினியின் மீது நந்தகுமார் மட்டுமே பரிதாபம் காட்டினான்..

“அந்தக் கயல்விழியத்தை நம்ம அம்மாவுக்கு செமத்தியா மந்திரிச்சு விட்டுப் போயிருக்காங்கக்கா.. புத்தி தெளியாது..”

“அப்பாவுக்கு யாருடா மந்திரிச்சு விட்டது..?”

“கன்யாகுமரியில இருக்கிற அவரோட ஒட்டு மொத்த நண்பர் பட்டாளமும் கூட்டுச் சேர்ந்து சதி நடத்தி மந்திரிச்சு விட்டிருக்காங்க.. உடம்பு பூரா தாயத்து மட்டும்தான் கட்டிவிடலை.. மத்தபடி மனுஷன் ஒரு மார்க்கமாவே அலையறார்கா..”

“டேய் நந்து.. எப்படியாவது என்னைக் காப்பாத்துடா..”

“எப்படிக் காப்பாத்தன்னுதான் தெரியலையேக்கா..”

நந்தகுமார் மூளையைக் கசக்கிப் பிழிந்து வழி தேடிக் கொண்டிருந்த போதுதான் உத்ரா தனக்குத் திருமணம் என்று வந்து நின்றாள்.. அவளது நிச்சயதார்த்தத்தில் கலந்து கொள்ளப் போகும் சாக்கில் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள் நந்தினி..

அவள் செஞ்சிக்குப் போயிருந்த சமயத்தில்தான் வீணாவும் ரம்ய மாலினியும் தஞ்சையில் இருந்த நந்தினியின் வீட்டிற்கு விருந்தினர்களாக வருகை தந்தார்கள்.. சென்னையில் படித்துக் கொண்டிருந்த நந்தினி பரிட்சைகள் முடிந்து தஞ்சைக்குக் கிளம்புவதற்கு முன்னால் ஹாஸ்டலில் இருந்த தோழிகளுடன் திருத்தணி முருகன் கோவிலுக்குச் சென்றிருந்தாள்.. அங்கே தோழிகளுடன் இவள் அடித்த லூட்டியைப் பார்த்து ஈர்க்கப் பட்ட வீணாவும், ரம்ய

மாலினியும் நந்தினியின் தோழிகளில் ஒருத்தியை மடக்கி நந்தினியைப் பற்றிய விவரங்களை கறந்து விட்டார்கள்..

“நம்பவே முடியலை ரம்யா.. இவ என் மாமன் மகளான வெண்ணிலாவோட பெண்ணாம்..”

“சும்மா சொல்லாதீங்க.. அது எப்படி கரெக்டா இவங்க நமக்குச் சொந்தக்காரங்களா இருக்காங்க..”

“இறைவன் சித்தம்டி..”

அப்படித்தான் இருக்குமென்று தோன்றியது ரம்ய மாலினிக்கு.. அவர்கள் காஞ்சியில் தங்கி அங்கிருந்த கோவில்களைச் சுற்றிப் பார்த்து விட்டு ஆற அமர தஞ்சைக்குக் கிளம்பிப் போய் மேகநாதனின் வீட்டில் நந்தினியை ரவிச்சந்திரனுக்காக பெண் கேட்டாள்.. அவர்கள் உடனடியாக பதில் சொல்லாமல் விருந்து சமைத்து அவர்களைச் சாப்பிட வைத்து விருந்தோம்பலைக் குறைவில்லாமல் செய்து விட்டு பெண் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்..

ம்ஹூம்.. இதைத்தான் எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்க வேண்டும் என்பார்களோ..

அத்தியாயம் 248

நந்தினியின் வீட்டு ஆல்பத்திலிருந்து அவர்களுக்குத் தெரியாமல் உருவிக் கொண்டு வந்த போட்டோவைத்தான் மகனிடம் காட்டினாள் வீணா.. கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும்தான்.. அப்படி மறக்க முடியாமல் வீணா நந்தினியின் புகைப்படத்தை உருவி எடுத்து மறைத்துப் பத்திரப் படுத்திக் கொண்டதற்கான காரணம் ஒன்றே ஒன்றுதான்.. அது நந்தினியைப் பெண் கேட்டு தன் மகன் மகேந்திர பூபதிக்காக நிச்சயம் செய்திருப்பது கயல்விழி என்பது..

“கயல்விழிக்கு நல்ல குணமில்லைடா ரவி.. உன்னைவிட எனக்கு அவளை நன்றாகவே தெரியும்.. வெண்ணிலாவுக்கு அவள் மாமன் மகள்.. நான் அத்தை மகள்.. நானும், வெண்ணிலாவும் பணக்காரங்களா இருக்க கயல்விழி மட்டும் ஏழையாய் இருந்ததில் நாங்க அவள்மீது இரக்கப் படுவோம்.. அவ அதையே குற்றம்ன்னு சொல்லி எங்களை எதிரிகளைப் பார்க்கிறதைப் போலப் பாப்பா.. அவளும் வெண்ணிலாவும் ஒரே ஊரில் இருந்தாங்க.. எங்க குடும்பம் இருந்தது வேறு ஊர்.. வருடத்தில் ஓர்முறை பார்த்துக்குவோம்.. கல்யாண வயது வந்தவுடன் அதுவும்

நின்று போய் விட்டது.. சின்ன வயதில் கயல்விழியின் குடும்பம் ஊரை விட்டுப் போய்விட்டதா எங்க சொந்த பந்தங்களில் பேசிக்கிட்டாங்க.. அப்பப் பார்த்தவளை கன்யாகுமரியில் மார்த்தாண்டபூபதியின் மனைவியாகப் பார்த்தப்ப எனக்கு ஆச்சரியமா இருந்தது ரவி.. உன்னிடம் சொல்வதுக்கென்ன.. மார்த்தாண்ட பூபதி அவருக்கு இணையான குடும்பத்தில்தான் சொந்தம் கொண்டாடுவார். வசதியில் கொஞ்சம் குறைந்திருந்தாலும் நின்று பேச மாட்டார்.. ராஜ பாரம்பர்யம் என்பதெல்லாம் அப்புறம்தான்.. முதலில் கோடிஸ்வரர்களாக இருக்க வேண்டும்.. அடுத்துத்தான் பாரம்பர்யப்பெருமை என்பார்.. அப்படிப் பட்டவர் தன்னுடைய கல்யாணம் என்று வரும் போது எவ்வளவு யோசித்திருப்பார்.. கயல் விழியை அவர் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார் என்றால் அவருக்கு இவருடைய சிறுவயது ஏழ்மையைப் பற்றித் தெரியாது என்றுதானே அர்த்தமாகிறது.. நான் விசாரித்தவரை கன்யாகுமரிக்கு குடிவந்த புதுப் பணக்காரங்கன்னுதான் கயல்விழியின் குடும்பத்தைப் பற்றிச் சொன்னாங்க.. அவங்க உழைத்து தொழில் செய்து முன்னுக்கு வந்தவங்க இல்லை.. என் கேள்வியெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.. கயல்விழியின் குடும்பத்திற்கு அத்தனை

பணம் எங்கிருந்து வந்தது..? கயல்விழியின் குடும்பம் கடன்காரங்களாகத்தான் ஊரை விட்டு வெளியேறியது..? பணம் இருந்திருந்தால் அவர்கள் கடன்களை அடைத்து விட்டு அந்த ஊரிலேயே பிழைத்துக் காண்பித்திருப்பார்களே.. எதற்காக ஊர் விட்டு ஊர் வந்து பணக்கார வாழ்க்கையை வாழ வேண்டும்..? சொந்த ஊரில் அப்படி வாழ்ந்தால்தானே மதிப்பும், மரியாதையும் கிடைக்கும்..?" என்று அடிக்கடி மகனிடம் சொல்வாள்..

கயல்விழியைப் பற்றிய வீணாவின் மதிப்பீட்டில் உண்மை இருப்பது ரவிச்சந்திரனுக்கும் தெரியும்..

"இதையெல்லாம் தோண்டித் துருவினா நிறையக் கிளம்பி விடும்மா.. நதிமூலம், ரிஷிமூலம் பார்க்கக் கூடாதுன்னு நீங்கதானே சொல்வீங்க.. தள்ளி நின்று பழகச் சொன்னால் தள்ளி நின்று பழகிட்டுப் போறேன்.. அதற்காக நீங்க இந்த அளவுக்கு யோசிக்கனுமா..?" என்பான் ரவிச்சந்திரன்..

"ஊஹூம்.. அப்படி எதுவும் செய்து விடாதே ரவி.. கயல்விழியின் குணம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவள் எனக்கு உறவுக்காரி.. சின்னவயதில் பார்த்தது.. எனக்குக் கல்யாணமாகி வயநாட்டுக்கு வந்த பின்னால் கன்யாகுமரியில்

உன் அப்பாவழி உறவுக்காரங்க வீட்டு விசேஷம் ஒன்றுக்குப் போனபோது அங்கே இவளும் உன் அப்பா பக்கத்து சொந்தக்காரங்களில ஒருத்தியா நின்றுக்கிட்டு இருக்கிறா.. கயலா இங்கே இருக்கிறான்னு ஆச்சரியமாகிருச்சு.. பக்கத்தில் போய் பேசினா எங்கே நான் அவளோட ஏழ்மையான பழைய கதையைச் சொல்லிருவேனோன்னு நழுவிப் போயிட்டா.. போகப் போக நான் பழைய வாழ்க்கையை கிளற மாட்டேன் என்கிற நம்பிக்கை வந்ததும் சகஜமா பேச ஆரம்பிச்சா.. உன் அப்பா பக்கத்து உறவுகளில என் உறவுக்காரியா இருக்கிறது இவள் மட்டும்தான்.. அவளை நாம் தள்ளி நிறுத்தி விடக் கூடாது..”

இதற்காகத்தான்.. வீணாவின் இந்த வார்த்தைகள் வெளிப்படுத்திய அவளது தனிமை உணர்வுக்காகத்தான் ரவிச்சந்திரன் விட்டுக் கொடுக்காமல் மகேந்திர பூபதியுடன் நட்புப் பயிரை வளர்த்தான்.. வீணா தமிழகத்தில் பிறந்தவள் என்பதை ஒரு குறையாக சுட்டிக் காட்டும் அவந்திகாவின் குடும்பத்தாரின் வாயை அடைப்பதற்காக அடிக்கடி மகேந்திர பூபதியின் பெயரைச் சொல்வான்..

“அம்மா.. உங்க பெயரிப்பா மகள்ன்னு சொல்வீங்கள்ல கயல்விழி பெரியம்மா.. அதுதான் அம்மா.. கன்யாகுமரி

மார்த்தாண்டபூபதி பெரியப்பாவோட வொய்ஃப்.. அவங்களை இன்றைக்குப் பார்த்தேன்ம்மா.. டயமாண்ட் ஜ்வல்ஸ் வாங்க வந்திருந்தாங்க.. அவங்களோட வெட்டிங் அன்னிவர்சரிக்கு பெரியப்பா பெரியம்மாவுக்கு ஜ்வல் வாங்கிக் கொடுக்கிறாராம்.. கயல்விழிப் பெரியம்மாவோட பேரண்ட்ஸ் நல்ல வெல்த்தான ஃபேமிலி போல.. த்ரீஸ்டார் ஹோட்டலை ஃபைவ் ஸ்டார் ஹோட்டலா மாத்தறதுக்கு என்னோட ஹெல்ப்பைக் கேட்டாங்க..”

அவந்திகாவின் முகம் சுருங்கி விடும்.. கயல்விழியை இளப்பமாக பேசவும் முடியாது.. மார்த்தாண்டபூபதி கன்யாகுமரி வட்டாரத்தில் பெயர் சொல்லக் கூடிய அளவுக்கு பெரும் பணக்காரர்.. கயல்விழியைப் பெற்றவர்களும் பணக்காரர்களாக இருந்ததில் மனதுக்குள் புழுங்கிப் போவாள்.. கயல்விழி சிறுமியாக இருக்கும் போதே அவளுயை பெற்றோர் கன்யாகுமரிக்கு வந்து விட்டதால் அவளைக் கன்யாகுமரியைச் சேர்ந்தவள் என்றே அவந்திகாவும் அவளுடைய குடும்பத்தாரும் நினைத்து விட்டார்கள்.. அவளுடைய அப்பா தரமான ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்து அதை த்ரி ஸ்டார் ஹோட்டலாக ஆக்கி

விட்டதில் அவளுடைய பூர்விகம் என்னவாக இருக்கக் கூடும் என்ற கேள்வியே யாருக்கும் தோன்றவில்லை..

வீணாவின் உறவுக்காரி.. அருள்மொழிவர்மனின் உறவுக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த மார்த்தாண்ட பூபதியின் மனைவியாக இருப்பதில் வீணாவுக்கான தார்மிகப் பலம் சற்றுக் கூடுவதைப் போலத் தெரிந்ததில் ரவிச்சந்திரன் மகேந்திர பூபதியுடன் இணக்கமான தோழமையைக் கொண்டிருந்தான்.. சதா சர்வ காலமும் வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டிருப்பதினாலேயோ என்னவோ அவரவர் வாழ்க்கை அவர்களுக்கு... அதில் மற்றவர்கள் அபிப்ராயம் சொல்ல உரிமையில்லை என்ற எண்ணமும் ரவிச்சந்திரனின் மனதில் ஊறிப் போயிருந்தது..

மகேந்திரன் நல்லவனோ, கெட்டவனோ... அவனுடைய அம்மா ரவிச்சந்திரனின் அம்மாவுக்கு பிறந்த வீட்டுச் சொந்தமாக இருக்கிறாள்.. மகேந்திரனோ ரவிச்சந்திரனுடன் படித்த நண்பன்... அவனுடைய அப்பாவும் ரவிச்சந்திரனின் அப்பாவும் உறவினர்கள் வேறு..

ஆதலினால் வேறு வழியின்றி தனது நண்பர்களின் பட்டியலில் மகேந்திரனின் பெயரையும் சேர்த்திருந்தான்

அவன்.. மகேந்திரனுக்கு இது பற்றித் தெரிந்திருக்கலாம்.. அதை அவன் காட்டிக் கொண்டதில்லை.. அரிதாக கன்யாகுமரிப் பக்கம் வரும் தருணங்களில் மகேந்திரனைச் சந்திப்பான்.. நட்பாக பேசிப் பழகுவான்.. மற்றபடி இறுக்கமான நட்புப் பிணைப்பு இருவரிடமும் இருந்த தில்லை..

அப்படிப்பட்ட மகேந்திரனுக்கு நந்தினி நிச்சயிக்கப் பட்டிருக்கிறாள் என்பதில் வீணாவுக்குள் சஞ்சலம் வந்தது.. மனது தாங்காமல் நந்தினியின் புகைப்படத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டாள்.. அதுவும் நந்தினிக்கு மகேந்திரனைத் திருமணம் செய்து கொள்வதில் துளியும் விருப்பமில்லை என்பதை ரம்ய மாலினி சொன்ன போது அவளால் நந்தனியின் புகைப்படத்தை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு வர முடியவில்லை..

“என்ன நினைப்பில இந்தப் ஃபோட்டோவைக் கொண்டு வந்தேன்னு எனக்கே தெரியலை ரவி.. வெண்ணிலாவோட பொண்ணுடா இவ.. துருதுருன்னு அப்படியொரு சுட்டித்தனம்.. சின்ன வயதில் உன்னைப் பார்க்கிறப்ப எனக்குள்ள ஒரு சந்தோஷமும் குதூகலமும் வருமே.. அது இவளைப் பார்த்தப்ப எனக்குள்ள வந்தது ரவி.. ரம்யாவைத்தான் பிறந்ததில் இருந்து உன் பாட்டி அடக்கி அடக்கியே அமைதியா உட்கார

வைச்சிட்டாங்களே.. இவளிடம் இல்லாத உற்சாகமும் சிரிப்பும் நந்தினியிடம் இருக்கு ரவி.. அவ நம்ம வீட்டுக்கு மருமகளா வரலைன்னாலும் பரவாயில்லை.. கயல்விழிக்கு மருமகளாகி விடக் கூடாதுன்னு மனது கிடந்து அடிச்சுக்குது ரவி.. அவ நந்தினியோட சிறகுகளை வெட்டி மூலையில் தூக்கிப் போட்டு விடுவா.. இப்பச் சிறகடிக்கிற உற்சாகத்தோட இருக்கிற நந்தினி காணாமல் போயிருவா..”

வீணாவின் மனது அலை பாய்ந்தது பரிதவித்ததை நினைத்துப் பார்த்த ரவிச்சந்திரனுக்கு தாயின் கணிப்பு சரியானதுதான் என்ற வியப்புத்தோன்றியது.. வீணாவும், ரம்யாவும் உயர்வாகப் பேசிய நந்தினியின் போட்டோவைத் தூக்கிக் காலில் போட்டு மிதிக்கிறான் மகேந்திரன்.. போட்டோவையே இப்படிச் செய்பவன் நேரில் அவள் மாட்டிக் கொண்டால் என்னவெல்லாம் செய்யக் காத்திருக்கிறானோ..

வருங்கால மனைவியின் புகைப்படம் நண்பனின் கையில் இருக்கிறது என்ற உரிமை உணர்வு துளியளவும் இல்லாமல் சிவந்த கண்களும், கலைந்த தலையுமாக மதுபானத்தை உறிஞ்சியபடி அக்கம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்களைப் பார்வையாலேயே துகிலுரித்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்..

‘அரக்கன் கையில் பூமாலை..’

நந்தினியைப் பற்றி இப்படித்தான் நினைக்க முடிந்தது.. கையிலிருந்த நந்தினியின் போட்டோவை ஊன்றிப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. எந்தவிதமான ஒப்பனையும் செய்யாமல், தன் தோற்றம் எப்படியிருக்கிறது என்ற சிந்தனையில்லாமல் கோணங்கித்தனமான சேஷ்டையுடன் முகத்தைக் கோணிக் கொண்டே போட்டோவுக்கு அவள் போஸ் கொடுத்திருப்பதில் இளநகை வந்தது..

‘அம்மா எடுத்து வந்திருக்கும் போட்டோவிலும் இப்படித்தான் போஸ் கொடுத்து நின்றுக்கிட்டு இருந்தா.. ஒரு இடத்தில அடங்கி இருக்க மாட்டா போல..’ கட்டுக்கடங்காத காட்டருவி போன்றவளைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்ற உத்வேகம் அவனுக்குள் எழுந்தது..

‘சீச்சீ.. இப்படி நினைக்கக் கூடாது.. இவளை மகேந்திரனுக்கு ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க..’ அலைபாயும் மனதை அடக்கப் பிரயத்தனப் பட்டபடி..

“ஃபார்மலா இருக்கிற போட்டோவை அனுப்பச் சொல்லியிருக்கலாமேடா..” என்றான்..

“நீ வேற.. இருக்கிறதிலேயே ஃபார்மலா இருந்த போட்டோ இது ஒண்ணுதானாம்.. மத்ததில இதைவிட மட்டக் கேவலமாய் இருக்கிறாளாம்.. என் தலையெழுத்தைப் பாரு..” வெறுப்புடன் முகத்தைச் சுளித்தான் மகேந்திரன்..

‘இவள் மட்டக் கேவலமாய் இருக்கிறாளா..’ மட்டக் கேவலமான குணங்களுடன் இருந்த மகேந்திர பூபதியை வெறுப்புடன் பார்த்தான் ரவிச்சந்திரன்.. வரப்போகும் மனைவியின் மீது சிறிதளவாவது மையல் இருக்க வேண்டாமா..? பிடிக்காத ஒருத்தியின் கழுத்தில் பழிவாங்க தாலி கட்ட நினைப்பவன் எவ்வளவு கேவலமானவனாக இருக்க வேண்டும்.. இவன் சொல்கிறான் நந்தினியைப் போன்ற உற்சாக தேவதை மட்டக் கேவலமாகத் தெரிகிறாள் என்று..

‘இவனுக்கெல்லாம் பெண் கொடுக்க நினைத்தால் இப்படித்தான்..’

நந்தினியைப் பெற்றவர்களின்மீது அவனுக்கு கோபம் கோபமாக வந்தது.. கிளியை வளர்த்துப் பூனையின் கையில் பிடித்துக் கொடுப்பதை விடக் கொடுமையாக இரக்க குணமில்லாத ராட்சசனின் கையில் கொடுக்கப்

போகிறார்களே.. பூனையாவது ஒரே மூச்சில் கிளியைக் கொன்று தின்று விடும்.. இவன் ஒவ்வொரு இறகாய் பிய்த்துக் குதறிக் குற்றுயிரும் குலையுயிருமாக ஆக்கி விடுவானே..

போட்டோவை ஆழ்ந்து பார்த்தான்.. காட்டுப் பூக்களின் பெயளவனமும் வனப்பும் அப்பெண்ணிடம் கொட்டிக் கிடந்தன.. ஆர்ப்பரிக்கும் அலைகடலாய் அவன் மனதை ஈர்த்தாள் அவள்.. அவளது முகத்தில் விரவியிருந்த துறுதுறுப்பும், விழிகளில் படிந்திருந்த குறும்புப் பார்வையும் அ வன் மனதைக் கொள்ளையடித்தன..

‘வாழ்ந்தால் இப்படியொருத்தியுடன் வாழ வேண்டும்..’

அவளுடன் வாழும் வாழ்க்கையானது எப்படிப் பட்டதொரு உற்சாகம் நிறைந்த வாழ்வாக இருக்கும் என்ற கற்பனையில் அவன் திடுக்கிட்டான்..

அவன் அப்படிக் கற்பனை செய்து பார்க்கலாமா..? அவளை இப்படி ஆசை கொள்வது..? அந்தப் ஃபோட்டோவில் இருக்கும் பெண் எவளோ ஒருத்தியல்ல..

வேறு ஒருவனுக்கு நிச்சயிக்கப் பட்டவள்.. மனதாலும் அவளை நினைக்கக் கூடாது.. ஃபோட்டோவை கனத்த மனதுடன் மகேந்திரனிடம் நீட்டினான்.. அதை அலட்சியமாக

வாங்கிய மகேந்திரனின் முகத்தில் தெரிந்த குரூரத்தில் புருவங்களைச் சுருக்கினான்..

'இவன் பார்வையே சரியில்லையே.. ஒரு மார்க்கமா பார்த்து வைக்கிறானே..' ரவிச்சந்திரன் நினைத்து முடிப்பதற்குள் கையிலிருந்த சிகரெட்டின் தீக்கங்கு முனையை போட்டோவின் மையத்தில் வைத்து அழுத்தினான் மகேந்திரன்.. போட்டோ பொசுங்கிக் கருகியது..

"வாட் இஸ் திஸ் மகேந்திரன்.."

பதறிப் போய் எழுந்து விட்டான் ரவிச்சந்திரன்.. மகேந்திரனின் காலடியில் நந்தினியின் போட்டோ கரித்துகள்களாகச் சிதறிக் கிடந்தன..

அத்தியாயம் 249

ரவிச்சந்திரனுக்குள் மிச்சம் மீதியிருந்த தயக்கங்கள் அனைத்தும் துடைத்து விட்டதைப் போலக் காணாமல் போய் விட்டான.. அவன் மனதைக் கவர்ந்த நந்தினி அவனைக் காதலிக்கா விட்டாலும் பரவாயில்லை.. மகேந்திர பூபதி எனும் கயவனின் கரம் பிடித்து வாழ்நாள் முழுவதும் அவமானப்பட்டு வாழக் கூடாது என்பதில் மட்டும் அவனது மனம் உறுதியாக இருந்தது.. வீணாவிடம் அவனது முடிவைச் சொன்ன போது..

“அவள் உனக்காகப் பிறந்தவள்ன்னு என் மனதுக்குள்ளே ஒரு பட்ஷி கூவுது ரவி.. இறைவனின் விருப்பம் இதுதான் என்று இதிலிருந்தே உனக்குத் தெரியலையா..?” என்று பரபரத்தாள்..

“உங்க மனதுக்குள்ளே கூவும் பட்ஷியை பேசாமல் இருக்கச் சொல்லுங்கள் அம்மா.. இறைவனின் விருப்பம் இதுவாக இருந்தால் தானாக எல்லாமும் நடக்கும்.. நாம் செய்ய வேண்டியது அவளைக் காப்பாற்றி அடைக்கலம் கொடுப்பது மட்டும்தான்..”

ரவிச்சந்திரன் அழுத்தமாக மறுத்தான்.. "அவளை நீ கல்யாணம் செய்து கொள்வதும் அடைக்கலம் கொடுப்பதைப் போலதான் ரவி.. உன் மனைவியை மகேந்திர பூபதியால் நெருங்கி விட முடியுமா..?"

"என் பாதுகாவலில் இருப்பவளையும் அவனால் நெருங்கி விட முடியாது அம்மா.. ஒரு காதலனாய் அவளை நான் மேரேஜ் பண்ணிக்கனும்.. காவலனாய் இல்லை.. அவளைக் காப்பாற்றி உங்களிடம் அழைத்து வருகிறேன்.. அதற்கு மேல் அவளது விருப்பம்.."

"உன்னை விரும்பாத பெண்ணும் இருப்பாளா..?"

"ஈஸிட்..?"

விளையாட்டாகப் கேட்பதைப் போல கேட்டபடி நந்தினியின் போட்டோவைக் கையிலெடுத்துப் பார்த்தான் ரவிச்சந்திரன்..

மூக்கைச் சுருக்கி, இமைகள் குடை போல விரிய தலையை ஒரு பக்கமாக சாய்த்து அவனை அவள் மையலுடன் பார்ப்பதைப் போல இருந்தது..

‘இவள் என்னை விரும்புவாளா..? இவள் மனம் நான்தான் வேண்டுமென்று எனை மட்டும் தேடுமா..?’

ஏக்கப் பெருமூச்சுடன் கண்டாடி ஜன்னல்களின் வழியாகத் தெரிந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வரிசையைப் பார்த்தான்.. இனம் புரியாத தேடல் அவனுக்குள் எழுந்தது..

அவள் மனம் அவனைத் தேட வேண்டும் என்ற ஆவல் அவனுக்குள் வந்தது..

“தாழம் பூவில் காணும்

பொன் வண்ணம்..

நாளும் வாழும்

தோகைப் பூங்கன்னம்..

எங்கே.. நானென்று

தேடட்டும் என்னை..

சிந்தாத முத்தங்கள் சிந்த..”

மனதுக்குள் ஒலித்த பாடலை வாய் விட்டு அவன் பாடியதில் இமைகள் சுருங்கத் தாயைப் பார்த்துத் தலையாட்டி ரசித்த ரம்ய மாலினி..

“வாவ்..! அண்ணா.. பிரமாதம்.. இந்த அளவுக்கு அவங்கமேல ‘மெர்சல்’ ஆகிட்டயா.. நம்பவே முடியலையே..” என்று கைதட்டிச் சிரித்தாள்..

தங்கையின் சிரிப்பில் தன்னுணர்வுக்கு வந்தவன் இதழ்களை வளைத்துத் தானும் சிரித்தபடி தங்கையின் தலையில் உள்ளங்கையை வைத்து லேசாக அசைத்து விளையாடினான்..

“உன்னைத் தேடாத பெண்ணும் இருப்பாங்களா அண்ணா..?”

“அம்மா சொல்வதையே சொல்லும் தத்தையா நீ..?”

“ரெண்டு மனசும் ஒண்ணு போல நினைக்கறதில இருந்தே இது சக்சஸ் ஆகும்ன்னு நீ தெரிந்துக்க வேண்டாமோ..” “அவள் என்னைத் தேடுகிறது இருக்கட்டும்.. எங்கே அவள்ன்னு நான் இப்ப அவளைத் தேடியாகனுமே..”

“அவங்க செஞ்சிக்கு ஃபிரண்டோட எங்கேஜ் மெண்டுக்குப் போயிருக்கிறதா நந்தகுமார் சொன்னான் அண்ணா.. இப்பத் திரும்பி வந்திருக்கலாம்..”

“தஞ்சாவூரில் அவங்க வீடு எங்கேயிருக்குன்னு அட்ரஸ் தெரியுமில்ல.. சொல்லு.. நோட் பண்ணிக்கறேன்.. இன்றைக்கே நான் சென்னைக்குக் கிளம்பியாகனும்..”

“சூப்பர் அண்ணா.. வேலைன்னு வந்துட்டா நீ ஃபாரின் ஆளுதான் போ..”

“இந்தியாவில இருக்கிறவனெல்லாம் ஊஞ்சலாடிக் கிட்டு இருக்கிறான்.. ஃபாரின்காரன்தான் பறந்து பறந்து வேலை செய்யறான்னு கதை அளப்பியே.. பேசாம போயிரு..”

“எங்கே போகச் சொல்கிற..?”

“உன் ரூமுக்குத்தான்.. வேற எங்கே போவ..?”

“நான் போயிட்டா உனக்கு யார் அட்ரஸைச் சொல்கிறதாம்..?”

“ஏன்..? அம்மா சொல்வாங்க..”

“அவங்க அட்ரஸை மட்டும்தான் சொல்லுவாங்க.. நான் நந்தகுமாரோட ஃபோன் நம்பரையும் சேர்த்துச் சொல்வேனே..”

“ஃபெண்டாஸ்டிக்.. எப்போ வாங்கின..? எப்படி வாங்கின..?”

“நான் யாரு..? தி கிரேட் ‘கில்லி’ ரவிச்சந்திரனோட தங்கையாக்கும்.. புகுந்து விளையாடி விட மாட்டேனா..? அவன் தனியாப் பேச வந்தப்பவே ஃபோன் நம்பரைக் கைப்பற்றிட்டேன்.. ஹௌ இஸ் இட்..?” ரம்ய மாலினி அடித்துக் கொண்ட பெருமைக்கு போட்டிக்கு வந்த வீணா..

“என்னிடம் கூடத்தான் வெண்ணிலாவின் ஃபோன் நம்பரும் அவளோட வீட்டுக்காரர் ஃபோன் நம்பரும் இருக்கு.. நானும் ஒன்றும் சும்மா வரலை.. நீ ரவிச்சந்திரனோட தங்கைன்னா நான் அவனைப் பெற்று வளர்த்த அம்மாவாக்கும்..” என்று சிலிர்த்துக் கொண்டாள்..

“உங்க வெண்ணிலாவின் ஃபோன் நம்பரை வைத்து என்ன பண்ண..? அவங்களுக்குப் ஃபோன் பண்ணினா அவங்க மகளோட மேரேஜ் இன்விடேஷனை அனுப்ப அட்ரஸ் கேட்பாங்க.. வேண்டும்ன்னா ஃபோன் பண்ணலாமா..?” தாயை வாரி வம்புக்கு இழுத்துக் கலாய்த்தாள் ரம்ய மாலினி.

“ஆமாமில்ல..” வீணாவின் முகத்தில் குடம் குடமாக அசடு வழிந்தது.. ரவிச்சந்திரன் உரக்கச் சிரித்தான்..

நந்தினியைக் காப்பாற்றிக் கையோடு அழைத்துக் கொண்டு வரும் திட்டத்தோடு அவன் தமிழகம் கிளம்பி

விட்டான் என்பதில் வீணாவுக்குள் உற்சாகம் கரை புரண்டோடியது.. அவளது பிரியத்துக்குரிய நந்தினியை கயல்விழியின் கரங்களில் சிக்க விடாமல் காப்பாற்றிப் போவதில் அவளுக்கான பங்களிப்பை அளித்து விட வீணா துடித்தாள்.. அதைப் புரிந்து கொண்ட ரவிச்சந்திரன் அன்னையின் கைபிடித்து ஆறுதலாக தட்டிக் கொடுத்து..

“அவளைப் பத்திரமாக அழைத்து வந்து உங்க கையில் ஒப்படைத்து விடுகிறேன் அம்மா.. அதற்குப் பின்னால் அவளுக்கு நீங்கதானே அடைக்கலம் கொடுத்து ஆதரித்தாகனும்..?” என்று ஆற்றுப் படுத்தி அமர வைத்தான்.. நந்தகுமாரின் ஃபோன் நம்பரைக் கொடுத்தாள் ரம்ய மாலினி.. அதைத் தன் ஃபோனில் பதிந்து கொண்ட ரவிச்சந்திரன் ஏதோ நினைத்துக் கொண்டவனாக..

“நந்தகுமாரிடம் நீ ஏற்கனெவே இன்ட்ரொடியூஸ் ஆகியிருக்கிற ரம்யா.. அவ தஞ்சாவூருக்குத் திரும்பி வந்துட்டாளான்னு நான் கேட்கிறதை விட நீ கேட்கிறது பெட்டரா இருக்கும்ன்னு ஃபீல் பண்றேன்.. வாட் இஸ் யுவர் ஒபினியன்..?” என்று கேட்டான்..

“அதுதான்.. ‘கரெக்ட் வே’யாக இருக்கும் அண்ணா.. இரு நான் பேசறேன்..” ரம்ய மாலினி ரவிச்சந்திரனின் ஃபோனை வாங்கி நந்தகுமாரை அழைத்துப் பேசினாள்.. அப்போதுதான் உத்ராவிடம் பேசி விட்டுக் கலங்கிப் போய் அமர்ந்திருந்த நந்தகுமார் ரம்ய மாலினியிடம் குமுறி விட்டான்.. “பொறுத்தது போதும் நந்தகுமாரா... பொங்கி யெழுன்னு டயலாக் பேசி உசுப்பி விடாமலே நான் பொங்கியெழுகிறதா முடிவு பண்ணிட்டேங்க.. அப்பாம்மா கோவிச்சுக்கிட்டா கோவிச்சுக்கட்டும்.. அவங்களிடம் நல்ல பெயர் வாங்கற மகனாய் இருக்கிறதை விட என் அக்காவைக் காப்பாத்தற தம்பியாக இருந்தால் போதும்ங்க.. என் அக்கா மட்டும் இல்லாமப் போயிருச்சுன்னா நானும் ஏதாவது செய்துக்குவேங்க..”

திடுக்கிட்டுப் போன ரம்ய மாலினி ஃபோனை ரவிச்சந்திரனிடம் கொடுத்து விட்டாள்.. தங்கையின் பதட்டமான முகத்திலிருந்தே நிலைமை சரியாக இல்லை என்பதை யூகித்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

“ஐ ஆம் ரவிச்சந்திரன்.. ரம்ய மாலினியின் அண்ணன்.. வாட் ஹேப்பன் நந்தகுமார்..?” என்று கம்பீரமான குரலில் நந்தகுமாருக்கு நம்பிக்கையூட்டும் தொனியில் கேட்டான்..

புதிதாக ஒருவனிடம் பேசுவதைப் போல இல்லாமல் இனம் புரியாத சொந்தத்தை உணர்த்தும் தொனியில் ரவிச்சந்திரனின் கேள்வி இருந்ததில் அறிமுகமில்லாத வனிடம் பேசும் உணர்வின்றி நந்தகுமார் நடந்த நிகழ்வுகளைச் சொல்ல ஆரம்பித்தான்..

“இந்த பேக்கு செஞ்சிக்குப் போகிறேன்னு உத்ராக்காவுடன் போச்சில்ல சார்..”

“எந்த பேக்கு..?”

“அதுதான் சார்.. நந்தினின்னு ஒரு கிராக்கு என் கூடப் பிறந்திருக்குதே.. அந்த பேக்கைத்தான் சொல்கிறேன்..”

‘ஓ..! பேக்கு மீன்ஸ் கிராக்கா..?’

தான் காதலிக்கும் பெண்ணிற்கான இடுகுறிப் பெயர்களைக் கேட்ட ரவிச்சந்திரனுக்கு சிரிப்பதா இல்லை அழுவதா என்று ஒன்றும் புரியவில்லை..

“ஏன்..? அவங்க என்ன செய்தாங்க..?”

“என்னத்தைன்னு சொல்ல சார்..? செஞ்சிக் கோட்டைக்குச் சுற்றிப் பார்க்கலாம் வான்னு உத்ரா அக்காவை அனத்தி அழைத்துக் கொண்டு போக வைச்சிருக்கா..”

“குட் ஹேபிட்தானே.. செஞ்சிக் கோட்டை ஒரு சரித்திர கால நினைவுச் சின்னம்.. அதைப் பார்க்க உங்க சிஸ்டர் ஆசைப் பட்டதில என்ன தப்பு..?”

“நீங்க வேற சார்.. இவ கோட்டையைப் பார்க்கப் போகலை சார்.. மலையுச்சியில ஏறிக் குதிச்சுத் தற்கொலை பண்ணிக்கப் போயிருக்கிறா..”

“வாட்..?”

அதிர்ச்சியில் ஸ்தம்பித்து விட்டான் ரவிச்சந்திரன்.. அவளை அந்த முடிவெடுக்கத் தூண்டி விட்ட கயல்விழியையும் மகேந்திர பூபதியையும் துவம்சம் பண்ணித் தொலைத்துக் கட்டி விட வேண்டும் என்ற வெறி அவனுக்குள் எழுந்தது..

“நல்ல வேளையாய் உத்ராக்கா இவளைக் கண்காணிச்சுக்கிட்டே இருந்து கடைசி செகண்டில கையைப் பிடிச்சு இழுத்து நிறுத்திக் காப்பாத்திருச்சு.. இல்லேன்னா இந்நேரம் அவளையும் என்னையும் புதைச்ச இடங்களில புல் முளைச்சிருக்கும் சார் ..”

“அவங்கதானே சூசைட் பண்ணிக்க டிரை பண்ணினாங்க..? நீங்க ஏன் உங்களையும் ஜாயின் பண்ணிக்கறிங்க..?”

“அவ இல்லேன்னா நானும் இருக்க மாட்டேன் சார்.. சும்மா அவளை வெறுப்பேத்த வம்பிழுப்பேன்.. மத்தபடி என் அக்கான்னா எனக்கு உயிர் சார்.. அவளுக்குப் பிடிக்காத கல்யாணத்தை நிறுத்த நான் முயற்சி பண்ணலைன்னு அவ நினைத்துக்கிட்டு இருக்கிறா.. இல்லை சார்.. ஆன மட்டும் போராடிப் பார்த்தேன்.. அந்தக் கயல்விழிப் பொம்பளை சாகசமாப் பேசிக் கட்டம் கட்டினதில எங்க அப்பாம்மா வகையாய் சிக்கிக்கிட்டாங்க.. என்னைச் சின்னப்பையன்னு சொல்லித் தள்ளி நிறுத்தறாங்க.. உன் அக்காவுக்கு மாப்பிள்ளை தேட முடியலைன்னாலும் பரவாயில்லை.. அமைந்திருக்கிற நல்ல சம்பந்தத்தைக் கெடுக்க நினைக்காதேன்னு சொல்லிட்ட பின்னாலே என்னால எதுவும் செய்ய முடியாம போயிருச்சு சார்..” நந்தகுமாரின் கண்ணீரில் மனம் கரைந்து போனான் ரவிச்சந்திரன்..

“போனதை விடுங்க நந்தகுமார்.. இப்போது உங்க அக்காவைக் காப்பாற்ற உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதை ஏத்துக்குவீங்களா..?”

“ஹண்ட்ரெண்ட் பெர்ஸெண்ட் ஏத்துக்குவேன் சார்.. என் உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் கொடுப்பேன்..”

“உங்க உயிரையும் உங்க அக்காவின் உயிரையும் காப்பாற்றத்தான் நாங்க இருக்கோம்.. நீங்க உங்க அக்காவைக் கொடுங்க போதும்..”

“புரியலை சார்..”

“நந்தினி இப்ப எங்கே இருக்காங்க..?”

“உத்ராக்கா வீட்டிலே.. உத்ராக்காதான் எனக்குப் ஃபோன் பண்ணி விஷயத்தைச் சொன்னாங்க.. அவங்க வீட்டுக்கும் எங்க வீட்டுக்கும் எதுவும் தெரியாது.. தெரிந்தா பெரிய பிரச்னையாகிரும்ங்கிறதினால மறைச்சு வைச்சிருக்கோம்.. உத்ராக்கா கல்யாணப்பெண்.. அவங்கதான் சாஃப்ட்..! அவங்கம்மா சரியான லங்கிணி..!”

“லங்கிணியா..?”

இவன்தான் எப்படியெப்படியெல்லாம் பெயர் வைக்கிறான் என்று ஆச்சரியப்பட்டுப் போனான் ரவிச்சந்திரன்.. இவனே இப்படியென்றால் இவனுடைய அக்கா எப்படிப்பட்ட பெயர் சூட்டும் வல்லுனியாக இருப்பாள் என்று சிந்தனை ஓடியது.. அதை அறியும் சுவராஸ்யம் உண்டானது.. அந்தச் சூழல் அதை அறிவதற்கான சூழல் அல்ல என்பதால் விட்டு வைத்தான்..

“லங்கிணிதான் சார்.. கல்யாண வீட்டில நிச்சயதார்த்தத்தில கலந்துக்க வர்றேன் பேர்வழின்னு வந்த பொண்ணு சூசைட் பண்ண டிரை பண்ணினா சாதுவான அம்மாவே கட்டையைக் கையில தூக்கிருவாங்க.. இவங்க ஏற்கனெவே லங்கிணி.. சாது மிரண்டாலே காடு கொள்ளாதபோது இவங்க மிரண்டா என்ன ஆகும்ன்னு நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை சார்.. கதி கலங்குது..”

நந்தகுமாரின் பேச்சில் ஈர்க்கப்பட்டான் ரவிச்சந்திரன்.. அவனைப் பற்றி ரம்ய மாலினி வியந்து பேசியதில் மிகையேதும் இல்லையென்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.. அந்த நிலையிலும் அப்படிப் பேச அவனால்தான் முடியும் என்பதில் அவன் மீது ரவிச்சந்திரனுக்குப் பிரியம் வந்தது..

“எங்க அப்பாம்மாவுக்கு அவங்க ஃபோன் போட்டுக் காடு காக்க ஆரம்பிச்சுட்டாங்கன்னா வீடு தாங்கா து சார்.. நந்தினியைப் பார்சல் பண்ணித் தஞ்சாவூருக்குக் கொண்டு வந்து வீட்டுக் காவலிலே வைச்சுட்டு நாளைக்கே கல்யாணம்ன்னு பெல்ட் மன்னனுக்கு ஃபோனைப் போட்டு விடுவாங்க..”

“பெல்ட் மன்னனா..? யார் அவன்..?”

இப்படித்தான் மகேந்திர பூபதிக்கான பட்டப் பெயரை ரவிச்சந்திரன் அறிந்து கொண்டான்..

அத்தியாயம் 250

“பெல்ட் மன்னன்னா யாருன்னு கேட்கறிங்க.. என் அக்காவிடம் இதை நீங்க கேட்டிருக்கனும்... கை விரல்களை நெறித்து ஆயிரத்தைந்து சாபங்களை அள்ளி விட்டிருப்பா..”

“அந்த அளவுக்கு அந்த பெல்ட் மன்னன் மேல வெறுப்பா..?”

“இருக்காதா சார்..? அவன்தான் எங்கக்காவுக்காக எங்க அப்பாம்மா நிச்சயம் பண்ணியிருக்கிற மாப்பிள்ளை.. அந்த ஆளோட பெயர் என்னன்னு கூட என் அக்காவுக்குத் தெரியாது..”

“உங்களுக்குத் தெரியுமா..?”

“அந்தக் கழுதையைத் தெரிஞ்சுக்கிட்டு எனக்கென்ன சார் ஆகப் போகுது..? அது எந்தக் கழுதையாய் இருந்தாத்தான் எனக்கு என்ன..?”

‘நீதான்டா என் மச்சினான்..’ கற்பனையில் நந்தகுமாரைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்தான் ரவிச்சந்திரன்..

“இப்ப என்ன செய்கிறதா இருக்கீங்க..?”

“அதுதான் சார் ஒன்றும் புரிய மாட்டேங்குது.. ஒண்ணு மட்டும் நிச்சயம் சார்.. என்ன நடந்தாலும் எங்க அப்பாம்மாவை எதிர்த்து நின்னு நந்தினியை ஸேவ் பண்ணுவேனே தவிர ஒரு நாளும் அந்த பெல்ட் மன்னனுக்கு என் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க விட மாட்டேன்..”

“ஓ..!”

“உத்ராக்காதான் வினித் சாரிடம் பேசி ஏதாவது ஒரு வேலையை வாங்கிக் கொடத்து கொஞ்ச நாளுக்கு நந்தினியக்காவை தலைமறைவாய் இருக்க வைக்கலாம்ன்னு பிளான் பண்ணியிருக்காங்க..”

“தட்’ஸ் குட்..”

ரவிச்சந்திரனுக்கு வழி கிடைத்து விட்டது.. அவன் வினித்தின் முகவரியை உத்ராவிடம் கேட்டுச் சொல்லும்படி சொன்னான்..

“எதுக்கு சார்..?”

நந்தினிக்கு தம்பியாக படு உஷாராக கேள்வி கேட்டான் நந்தகுமார்..

“உங்க அக்காவுக்கு அடைக்கலம் கொடுக்கத்தான்..”

“புரிகிறதைப் போலப் பேசக் கூடாதுன்னு சபதம் கிபதம் பண்ணியிருக்கீங்களா சார்.. ஏற்கனெவே நான் நொந்து நூடுல்ஸாகி இருக்கேன் சார்.. நீங்களும் ஆர்ட் பிலிம் கணக்காக் குழப்பியடிச்சீங்கன்னா தாங்காது சார்..”

“இப்ப யாருங்க ஆர்ட் பிலிம் எடுக்கிறாங்க..?” “அதைப் பத்தி டிஸ்கஸ் பண்ணவா சார் வேலை மெனக்கெட்டு எனக்குப் ஃபோன் போட்டிருக்கீங்க..?”

“ஹா.. ஹா..”

“ம்ஹூம்.. உங்களால் சிரிக்க முடியுது..”

“உங்களாலும் சிரிக்க முடியும் நந்தகுமார்.. நீங்க உத்ராவோட வுட்-பியோட நேம் அண்ட் அட்ரெஸை வித் ஃபோன் நம்பரோட கேதர் பண்ணித்தாங்க..”

“கேதர் பண்ணித் தந்தா..?”

“அவர் எனக்குப் ஃபோன் பண்ணி நந்தினிக்கு வேலையும் பாதுகாப்பும் கொடுக்கனும்னு ரிகஸ்ட் பண்ணிக் கேட்டுக்குவார்..”

“அவரோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டு என் ஃபிரண்டுக்கு ஃபிரண்டா இருந்தா என்னிடம் ஹெல்ப் கேட்க மாட்டாரா..?”

“ஆஹா.. எம்புட்டுத் தெளிவா பேசறிங்க சார்.. புல்லரிக்குது போங்க.. இவனோட அக்காவுக்கு பிரச்னைங்கிறதினால நாம இடியாப்பச் சிக்கல் நட்புமுறை வரைபடத்தைப் போட்டுத்தள்ளினா வாயே திறக்காம ஊம் கொட்டிக் கேட்டுக்குவான்ங்கிற நினைப்புத்தானே உங்களுக்கு..”

“ஹா.. ஹா.. நந்தகுமார்..”

“மறுபடியும் நினைவு படுத்தறேன் சார்.. படு சுத்தமா எனக்குச் சிரிப்பு வரலை.. மண்டை காயுது..”

“குழப்பிக்கவே வேண்டாம்.. நான் சொல்கிறதை மட்டும் கேளுங்க..”

ரவிச்சந்திரன் நிதானமாக வீணாவும், ரம்ய மாலினியும் தமிழகம் வந்து திரும்பிய பின்னால் அவனிடம் நந்தினியின் போட்டோவைக் காட்டிச் சொன்னதைச் சொன்னான்..

“மார்த்தாண்ட பூபதி எங்க ஃபேமிலிக்கு ரிலேட்டிவ்.. மகேந்திர பூபதியோ என் ஃபிரண்ட்ஸ் சர்க்கிள்ல இருந்து தொலைக்கிறான்.. அவனுக்கு பிக்ஸ் பண்ணின பெண்ணை நான் நினைத்துப் பார்ப்பது கூடத் தப்புங்கிற டிசிஷனோடுதான் மகேந்திரனைப் பார்க்கக் கன்யாகுமரிக்குப் போனேன்.. அங்கே போனால் அவனோட டிசிஷன் வேறு மாதிரி இருக்கு..”

“அந்தக் காட்டெருமைக்கு என்னவாம் சார்..”

“அவங்க அம்மாவுக்கு உங்க அம்மாமேல ஏதோ கோபம் போல நந்தகுமார்.. வென்ஜன்ஸ் வைத்துப் பிளான் பண்ணி நந்தினியைப் பெண் கேட்டு வந்திருக்காங்க.. மேரேஜ் பண்ணி நந்தினியை டார்ச்சர் செய்கிறது மூலம் உங்க ஃபேமிலியைப் பழி வாங்கப் போகிறதா என்னிடமே சொன்னான்..”

“அயோக்கிய ராஸ்கல்.. இப்படி ஏதாவது இருக்கனும்னு நானும் நினைத்தேன் சார்.. அவனோட தங்கையே

இப்படியொரு மாப்பிள்ளை கிடைத்தா நான் தூக்குப் போட்டுத் தொங்கிருவேன்னு சொல்லிட்டுப் போனாங்க..”

“குட் கேர்ள்.. அவளோட அப்பாவின் வளர்ப்பு அப்படி..”

“அந்த மனுஷனை யார் சார் வளர்த்தா..?”

“அவங்க அம்மா..”

“அதுதான் ராட்சசனா இருக்கான்..”

“லீவ் தெம் நந்தகுமார்.. நாம் நமது வேலைகளைப் பார்ப்போம்.. இன்றைக்குள் வினித்துக்கு என்னைப் பற்றின இன்பர்மேஷன் போய்ச் சேர்ந்துரும்.. நான் நந்தினிக்கு வேலை கொடுத்து வயநாட்டுக்கு அழைத்துப் போய் விடுகிறேன்.. உங்க பேரண்ட்ஸ் மனம் மாறி நந்தினியைத் தேடி வரும்வரைக்கும் அவங்க பத்திரமா என் அம்மா, தங்கையின் பாதுகாப்பில் இருப்பாங்க..”

“உத்ராவுக்கு உங்களைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாமா சார்..?”

“வேண்டாம்.. இப்போதைக்கு உத்ரா சொல்வதன் மூலமாகவே என்னைப் பற்றித் தெரிந்துக்கிறதைப் போலவே ரியாக்ட் பண்ணுங்க..”

ஓர் நொடி அமைதியாக இருந்த நந்தகுமார் மெதுவான ஆனால் அழுத்தமான குரலில் கேட்டான்..

“எல்லாம் சரிதான் சார்.. இத்தனை உதவிகளையும் வாலண்டியரா வந்து நீங்க எதுக்காக பண்றீங்க..? அதுதான் இடிக்குது.. உங்க அம்மாவும், தங்கையும் உங்களுக்காக நந்தினியைப் பெண் கேட்டிருக்காங்க.. இந்த நெருக்கடியான நிலைமையிலே நீங்க உதவிக்கரம் நீட்டறிங்க..? ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு நான் ஏன் கணக்குப் போடக் கூடாது..?”

“போடலாமே.. ஏன் நந்தகுமார்.. உங்க அக்காவை எனக்கு மேரேஜ் பண்ணித் தர மாட்டிங்களா..?”

“அவளோட விருப்பமில்லாம எந்த விதமான வாக்குறுதியையும் தரமாட்டேன் சார்..” பளிச்சென்று பதில் சொல்லி ரவிச்சந்திரனை அயர வைத்தான் நந்தகுமார்..

“என்னங்க இப்படிச் சொல்லிட்டிங்க..?”

“நீங்க படா பிக்மேனாவே இருக்கலாம் சார்.. எனக்கு நந்தினியோட விருப்பம் மட்டும்தான் பெரிது.. சில விஷயங்களில அவ பிடிவாதக்காரி சார்.. ஒன்றை வேணாம்ன்னு நினைத்துட்டா வேணாம்தான்.. உங்களை

அவ வேணும்ன்னு நினைப்பாளா இல்லை வேணாம்ன்னு நினைப்பாளான்னு தெரியாம எப்படி சார் கமிட் ஆகிறது..? அவ விருப்பத்தைக் கேட்காம எங்க அப்பாம்மா கல்யாணத்தை நிச்சயம் பண்ணினதால என்ன ஆகியிருச்சுன்னு பார்த்தீங்களா.. அப்படிப்பட்ட தப்பை நான் செய்ய மாட்டேன் சார்.. எனக்கு என் அக்காவின் சந்தோஷம் மட்டுமே முக்கியம்.. ரிஸ்க் எடுக்க நான் தயாரா இல்லை..''

''ஊஹூம்.. உங்க அக்காவே என்மீது ஆசைப்பட்டா..''

''அவ ஒரு கிராக்கு சார்.. அவளுக்குன்னு சில எண்ணங்கள், கொள்கைகள்ன்னு வைச்சிருப்பா.. உங்களுக்கும் அதுக்கும் ஷீட் ஆகுமான்னு தெரியலை.. எது எப்படியிருந்தாலும் என் அக்காவை நீங்க ஃபோர்ஸ் பண்ணக் கூடாது..''

''பிராமிஸ் நந்தகுமார்.. எந்த வகையிலும் உங்க அக்காவை நான் டிஸ்டர்ப் பண்ணமாட்டேன்.. ஃபோர்ஸ் பண்ண மாட்டேன்.. அவங்களைப் பத்திரமா உங்க கையில் ஒப்படைப்பேன்.. போதுமா..?''

''போதும் சார்.. தேங்க்ஸ்..''

மறுபடியும் நந்தகுமார் மௌனமாக... அவன் பேசும் வரை இடைவெளி கொடுத்துப் பொறுமையாக காத்திருந்தான் ரவிச்சந்திரன்.. நந்தகுமாரும் பேசினான்..

“ஹானஸ்ட்டாச் சொல்கிறேன் சார்.. உங்களைப் போல ஒரு மாப்பிள்ளை கிடைக்க நந்தினி கொடுத்து வைத்திருக்கனும்.. அவ மனசில என்ன இருக்குன்னுதான் தெரியலையே.. இப்போதைக்கு நான் அவளைத் தேடிப் போகவும் முடியாது.. பேசவும் கூடாது..” “டோன்ட் வொர்ரி நந்தகுமார்.. இப்படியே மெயின் டெயின் பண்ணுங்க.. என்மீது நம்பிக்கை வையுங்க.. நந்தினி இனி என் பொறுப்பு..”

“ஒன் ரிகவஸ்ட் சார்..”

“என்ன..?”

“நானே பொடிப்பையன்.. என்னைப் போய் வாங்க, போங்கன்னு நீங்க கூப்பிட்டா வயசாகிட்ட மாதிரி ஃபீலிங் வருது சார்..”

“ஹா.. ஹா..”

“இப்படிச் சிரிச்சுப் பயமுறுத்துகிறதுக்குப் பதில் ‘வா, போ’ன்னு பேசலாமே சார்..”

“தேங்க் யு நந்து.. நீயும் என்னை சார்ன்னு கூப்பிடறதை அவாய்டு பண்ணினால் பெட்டரா இருக்கும்..”

“வேறு எப்படிக் கூப்பிடுவது..?”

“அத்தான்னு கூப்பிடேன்.. உன் அக்காவை மேரேஜ் பண்ணிக்கிட்டாத்தான் அத்தான்னு கூப்பிடனும்னு இல்லையே.. எங்க அம்மா உனக்கு அத்தை முறை சொந்தம்தானே.. அத்தையின் மகனையும் அத்தான்னு கூப்பிடலாமே..” ரவிச்சந்திரன் எளிதாக வழி சொல்லிக் கொடுக்க..

“தேங்க் யு அத்தான்..” என்று விடுதலையுணர்வுடன் உற்சாகமாய் உறவு கொண்டாடினான் நந்தகுமார்..

அவன் உத்ராவிடம் வினித்தைப் பற்றிய விவரங்களையும் ஃபோன் நம்பரையும் கறந்து ரவிச்சந்திரனுக்கு அனுப்பி வைத்த சில மணி நேரங்களில் உத்ராவிடமிருந்து நந்தகுமாருக்கு ஃபோன் வந்து விட்டது..

“நந்தினிக்கு வேலை கிடைத்து விட்டது நந்து.. கேரளாவில் வயநாடுங்கிற டிஸ்ரிக்ட்டில சேரளம் எஸ்டேட்டில வேலையாம்.. அதோட முதலாளி பெரிய கோடிஸ்வரராம்.. உலகம் முழுவதும் தெரிகிற ஸ்டார் இமேஜ் பிஸினெஸ் மேனாம்.. ‘யாழ்’ ஹோட்டல்ஸ்ன்னு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் குருப்ஸ் இந்தியா முழுவதும் மெயின் சிட்டிகளில் இருக்காம்.. இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் அது, இதுன்னு ஏகப்பட்ட பிஸினெஸ்ஸாம்.. அவரோட ஃபிரண்டுக்கு ஃபிரண்ட் நம்ம வினித்தோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டாம்.. அந்த ஃபிரண்ட் மூலமா வினித் அந்த முதலாளியிடமே ஃபோனில் பேசிட்டாராம்.. ஃபிரண்ட்ஷிப்புக்காக இந்த உதவியைச் செய்கிறேன்னு அவர் ஒப்புக்கிட்டாராம்..”

மூச்சு விடாமல் உத்ரா ஒப்பித்ததில் நந்தகுமாருக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது... நந்தினி பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பித்து வயநாடு போகப் போகிறாள் என்பதில் அவனுக்குள் நிம்மதியாக இருந்தது.. இவையனைத்தும் அவனுக்குத் தெரிந்தேதான் நடக்கின்றன என்பதை அறியாமல் அவனிடம் விவரங்களை ஒப்பித்துக் கொண்டிருக்கும் உத்ராவின் மீது பாசம் கொண்டான்.. நடப்பவை அனைத்தும் நன்மையில் ஏதும் அறியாதவனைப் போல..

“ஆஹா..! என்னவொரு நெருக்கமான ஃபிரண்ட்ஷிப்..! புல்லரிக்குதுக்கா... மூழ்காத ஷிப்பே ஃபிரண்ட்ஷிப் தான்ங்கிறதை வயநாட்டு பிஸினெஸ் ஸ்டார் ஃபுரூவ் பண்ணிட்டார் போங்க..” என்றான்..

“அடிதான் வாங்கப் போற.. எவ்வளவு கஷ்டப்பட்டு வினித் இந்த வேலையை வாங்கிக் கொடுத்திருக்கிறார் தெரியுமா..? யு நோ.. ஹி இஸ் எ சூப்பர் மேன்..!”

“எதை வைத்து இப்படியொரு முடிவுக்கு வந்தீங்க..? அசாத்திய மன தைரியத்தோட உங்க கழுத்தில தாலி கட்டப் போகிறாரே.. அதை வைத்து அவர் சூப்பர் மேனாத்தான் இருக்கணுங்கிற முடிவுக்கு வந்துட்டிங்களா..”

“ஏண்டா பேச மாட்ட..? கல்யாணப் பொண்ணு நானு.. கலர், கலராக் கல்யாணக் கனவுகளைக் கண்டுக்கிட்டு ‘நெஞ்சினிலே, நெஞ்சினிலே..’ன்னு பாட்டு பாடிக்கிட்டு இருக்கிறதை விட்டுட்டு, உன் அக்கா எப்போ எதைச் செய்து வைப்பாளோன்னு உயிரைக் கையில பிடித்துக்கிட்டு அவ பின்னால ராப்பகலா ரோந்து சுத்திக்கிட்டு இருக்கிறேனில்ல.. நீ வாய் கிழிய வக்கணையா பேசத்தான் செய்வ..”

“கூல் அக்கா கூல்..”

“உன்னைப் போல கொடுத்து வைத்த பிறவிகள் தாண்டா கூலா இருக்க முடியும்..? நான்தான் அந்த வரம் வாங்கி வைக்கலையே.. என்னடா.. நம்ம கூறுகெட்ட அக்கா இல்லாத இழுவையையெல்லாம் இழுத்து விட்டுக்கிட்டு இருக்காளே.. அவளுக்கு என்னாச்சோ, ஏதாச்சோன்னு கவலைப்படாம காலை ஆட்டிக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டு பேச்சா பேசற பேச்சு..? உன் அக்காவைத் தப்பிக்க வைக்க ஒரு துரும்பையாவது கிள்ளிப் போட்டிருப்பியாடா..?”

“துரும்பைக் கிள்ளிப் போட்டாக் கல்யாணம் நின்னுருமா..? என்ன லாஜிக் அக்கா இது..?”

“இப்படி வாயடிச்சுக்கிட்டே இரு.. வாயடிக்கிறதைத் தவிர உருப்படியா ஒரு காரியம் பண்ணியிருக்கியாடா..? இதுவே என் வினித்தைப் பார்.. என் ஒரு வார்த்தைக்காக யார், யாரையோ பிடித்து கேரளாவிலேயே பெரிய பிஸினெஸ் மேனைக் கண்டுபிடித்து அவரிடம் நந்தினிக்கு ஓர் வேலையையும் பிடித்து விட்டாரே..”

‘அவராக்கா அந்த பிஸினெஸ் ஸ்டாரைப் பிடித்தார்..? அந்த பிஸினெஸ் ஸ்டார்தான் உங்க வினித்தைத் தேடிக் கண்டு பிடித்து நந்தினிக்கு வேலை போட்டுக்

கொடுக்கிறேன்ங்கிற பெயரில வயநாட்டக்கு அழைத்துக் கிட்டுப் போகிறார்.. இதில உங்க வினித் சூப்பர் மேனாம்.. ம்ஹூம்.. தஞ்சாவூருக்கு தவிலிலதான் முட்டிக்கனும் போங்க..'

"என் வினித்தைப் போல யாரிருப்பா..?"

'அவருக்கும் பெட்டரா, பெஸ்ட்டா அந்த வயநாட்டு பிஸினெஸ் மேக்னெட் இருக்கார் அக்கா.. கண்கட்டி வித்தை காண்பித்துக்கிட்டு இருக்கார்..'

"ஏதோ நானும் வினித்தும் இருக்கப் போயி நந்தினியை பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்கிறோம்.."

'நீங்க ஒப்படைக்கலைன்னாலும் அவர் தேடி வந்து நந்தினியின் பொறுப்பை எடுத்துக்குவார்.. உங்களுக்குத்தான் அது தெரியலை..'

இப்படித்தான் நந்தினி ரவிச்சந்திரன் யார் என்று தெரியாமலே மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் அவனை முதன் முதலாக சந்தித்தாள்..

அத்தியாயம் 251

‘அது ஒரு காவியம்..!’

மங்களூர் எக்ஸ்பிரஸில் அவனும் நந்தினியும் பயணித்த அந்த ரயில் பயண நினைவுகளில் சிலிர்த்தான் ரவிச்சந்திரன்... நந்தினிதான் எத்துனை உயிர்ப்பான வாயாடியாக இருந்தாள்... அவன் எதிர்பார்த்ததை விட அதிகமான பரிணாமங்களில் அவள் பரிமளித்தாள்... அவனை வசீகரித்தாள்... அந்த ரயில் பயணத்தின் ஒவ்வொரு நொடியையும் அவன் ரசித்து அனுபவித்தான்..

அவனுக்காக அவன் தாய் தேடிக் காண்பித்த பெண்.. அழகான சிரிப்பு என்று அவனது தங்கை அடையாளம் காட்டிய கலகலத்த அருவிச் சிரிப்பைத் தன்னிடத்தில் தக்க வைத்திருக்கும் துடுக்குக்காரி... அவளை அவன் அறிவான் என்பதை அறியாமல் அவனுடன் சண்டையிட்டாள்.. சமாதானம் பேசினாள்.. வாயடித்தாள்.. வம்பிழுத்தாள்.. மொத்தத்தில் அவளைப் போன்ற ஒருத்தியை அதுவரை அவன் சந்தித்ததில்லை என்பதை அவனுக்கு உணர்த்தி விட்டாள்..

கை கழுவிப் போய் விட்டாள் என்று வீணா விசனம் கொண்டிருந்த மருமகளை அவளிடம் சேர்ப்பித்து விடும் துடிப்புடன் இருந்தான் ரவிச்சந்திரன்.. நீ விரும்பிய சிரிப்புக்கு சொந்தக்காரியை உன் முன்னால் நிறுத்தி விட்டேன் என்று தங்கையிடம் சொல்ல விரும்பினான்..

அந்தத் துடிப்பும் விருப்பமும் தாயும், தங்கையும் சந்தோஷம் கொள்வதற்காக மட்டும்தானா என்ற ரகசியக் கேள்வியின் கிளுகிளுப்பில் அவன் மனம் நனைந்தது.. அதுபோன்ற உணர்வுகள் அவனுக்குள் துளிர்த்ததில்லை.. ஒரு பெண்ணின் காதல் வயப்பட்டக் கடைக்கண் பார்வைக்காக அவன் மனமும் ஏங்கக்கூடும் என்பதை அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான்.. நந்தினியைக் காப்பாற்றித் தன் பாதுகாப்பில் அழைத்துக் கொண்டு வயநாட்டுக்கு அவன் வந்து கொண்டிருக்கும் தகவலை வீணாவும், ரம்ய மாலினியும் அறிந்து கொள்வதற்கு முன்னதாகவே அவந்திகாவும், அஜந்தாவும் அதை அறிந்து வைத்திருந்தார்கள்.. அரண்மனையின் சுவர்களுக்கும் காது உண்டு.. ரகசியங்களை உள்ளடக்கிய பெட்டகம்தான் அரண்மனை.. சதா சர்வகாலமும் வீணாவும் ரவிச்சந்திரனும் என்ன பேசிக் கொள்கிறார்கள்.. எந்தெந்த திட்டங்களை வகுக்கிறார்கள்

என்று ஒட்டுக் கேட்பதையே பிழைப்பாக வைத்திருக்கும் அஜந்தா நந்தினியைப் பற்றி வீணாவும், ரம்ய மாலினியும் ரவிச்சந்திரனிடம் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டு விட்டாள்.. மகேந்திர பூபதிக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் பெண்ணைத் தன் மகனுக்காக மணம் முடிக்க வீணா துடிக்கிறாள்.. பெண் கேட்டதில் பெண் வீட்டார் இவளது விருப்பத்தை மறுத்து விட்டார்கள் என்பதையெல்லாம் அறிந்ததும்..

'யார் அந்தப் பெண்..?' என்று அறிந்து கொள்ளும் ஆவல் வந்து விட்டது.. அபராஜிதனை ரகசியமாக வயநாட்டுக்கு வரவழைத்த அவந்திகாவும் அஜந்தாவும் அவனுடன் ரகசியமாக சதியாலோசனை செய்தார்கள்..

"கேட்டே மோனே.. ஆ மகேந்திர பூபதி வல்லிய திட்டம் ஒற்றைத் தீட்டியல்லோ.. ஈ வீணா தன்னோட மோனுக்கு விவாகம் கழிக்க ஆக்ரஹம் (ஆசை) கொண்ட பெண்குட்டிய ஆ மகேந்திர பூபதி விவாகம் கழிச்சு சிஷா (தண்டனை) அளிக்க விஜாரம் (நினைப்பு) கொண்டு.. எனிக்கு இதில வல்லிய சந்தோஷம் உண்டாயி.."

"எனக்கும்தான் அம்மே.."

ரம்ய மாலினியைத் திருமணம் செய்து அவளைக் கதற வைத்து ரவிச்சந்திரனையும் அவனது குடும்பத்தையும் காலில் வீழ வைக்கும் திட்டத்தோடு இருந்த அபராஜிதனுக்கு அதே பழிவாங்கும் எண்ணத்துடன் நந்தினியை மணம் முடிக்க திட்டம் தீட்டியிருக்கும் மகேந்திர பூபதியின் மீது திடீர் பிரேமம் உண்டானது..

'என் இனமடா நீ..'

மனதுக்குள் மகேந்திர பூபதியைக் கட்டித் தழுவிக் கொண்டான்..

"இன்னொருத்தனுக்கு நிச்சயம் பண்ணியாச்சுன்னு தெரிந்த பின்னாலும் அந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு வர நினைக்கிறாங்களே.. அந்த அளவுக்கு அவள் என்ன கட்டழகியா..?" ஜொள்ளு விட்டான் அபராஜிதன்.

"நீ திருந்தவே மாட்டியா..?" எரிச்சலுடன் தன் செல்ஃபோனில் பதிந்து வைத்திருந்த நந்தினியின் புகைப் படத்தைக் காட்டினாள் அஜந்தா.

"எப்படிச் சுட்ட...?" நந்தினியின் படத்தை சுட்டெரிப்பதைப் போல வெறித்துப் பார்த்தான் அபராஜிதன்..

“அந்த வீணா அசந்திருந்த சமயத்தில அவ ஷெல்பில பதுக்கி வைத்திருந்த போட்டோவைக் கைப்பற்றி படம் பிடித்து வைத்துக்கிட்டேன்..” தோளைக் குலுக்கினாள் அஜந்தா..

வீணா இல்லாத சமயங்களில் அவளைப் பற்றிப் புறம் பேசும் போது பெயரைச் சொல்லித்தான் புறம் பேசுவாள் அஜந்தா..

‘அத்தை’யென்று சொல்லவே மாட்டாள்.. அவள், இவள் என்று பேசுவாள்.. மரியாதையுள்ள மனிதர்களால்தான் மரியாதை கொடுக்க முடியும்.. அது இல்லாத மனிதர்களால் எப்படி மற்றவர்களுக்கு மரியாதையை அள்ளிக் கொடுக்க முடியும்..? அவந்திகாவும், அவளது குடும்பத்தாரும் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்..

“இவளோட ஊர் தஞ்சாவூர்.. அப்பா பெயர் மேகநாதன்.. அம்மா பெயர் வெண்ணிலா. . அப்பா நம் அளவுக்குப் பெரிய கோடிஸ்வரர் இல்லைதான்.. பட்.. பணக்காரர்.. தஞ்சாவூரில் ஜவுளிக்கடை வைத்திருக்கிறார்..”

“நம் அளவுக்கு கோடிஸ்வரங்களா இல்லையா..? நம்மிடம் என்ன கோடிக் கணக்கில் பணம் கொட்டியா

கிடக்கிறது..?" அபராஜிதனின் கேலியில் அஜந்தாவின் கண்கள் சிவந்தன..

"இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை..?" என்று சீறினாள்..

"இல்லை.." வெட்கமேயில்லாமல் சொன்னான் அபராஜிதன்..

"வழக்கு வேணாம் மோளே.." அவந்திகா தன் மகளைச் சமாதானப் படுத்தினாள்..

"இப்போதைய பிராப்ளம் இதுவல்ல.. கேட்டே.."

"அதனால்தான் பொறுமையாகப் போகிறேன்.. கேட்டுக்க சேட்டா.. உட்கார்ந்த இடத்திலிருந்து ஒரு பெண்குட்டி இத்தனை இன்பர்மேஷன்களைக் கேதர் பண்ணிக் கொடுத்திருக்கிறேன்.. ஆண்பிள்ளையா லட்சணமா எதையாவது நீ கிழித்தியா..?"

"கிழிக்க வேண்டிய சமயத்தில் கிழிப்பேன்.. உட்கார்ந்த இடத்தில் ஒட்டுக் கேட்டு இன்பர்மேஷன் கேதர் பண்றது ஒண்ணும் பெரிய விஷயமில்லை.. களத்தில் இறங்கி வேலை செய்யனும்.. உன்னால அது முடியுமா..?"

“களத்தில் இறங்கி என்னத்தைக் கிழிக்கப் போகிற..?”

“ஆ ரவிச்சந்திரனோட பிரேமத்தைக் கிழிக்கப் போகிறேன்..”

“எந்தா..?”

“இருந்திருந்து ரவிச்சந்திரன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான்.. அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு விரலைக் சுவைத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கச் சொல்கிறயா..? அவன் அந்தப் பெண்ணைப் பார்க்கிறதுக்கு முன்னால் நான் அந்தப் பெண்ணைப் பார்த்துக் காதல் சொல்லிக் கவிழ்க்கிறேன்னா இல்லையான்னு பாரு..”

“அவளைக் கவிழ்த்து நமக்கு ஆகப் போகிறதென்ன சேட்டா..? ரம்யாவைக் கவிழ்த்தால்தானே நாம ஈ வயநாட்டுக் கொட்டாரத்தில ஜீவிதம் பண்ண முடியும்..?”

“அவளைக் கவிழ்த்தால் ரவிச்சந்திரனைக் கவிழ்த்து விடலாமே.. வேறு எந்த வகையில் அவனை நான் ஜெயிக்க முடியும்..?”

“ஓ..! அப்படியொன்னும் இருக்கல்லோ..”

அஜந்தா மகிழ்ந்து போனாள்.. அபராஜிதனின் நடிப்புத் திறமையில் அவளுக்கு நம்பிக்கையிருந்தது.. பல இடங்களில் அவன்தான் ரவிச்சந்திரன் என்று சொல்லிக் கொண்டு ரவிச்சந்திரனுக்கான மரியாதையைப் பெற்றுக் கொள்ளும் ஏமாற்றுப் பேர்வழி அவன்.. கண்ணியவான் வேசம் போடுவதில் அவனுக்கு நிகர் அவன்தான்.. கவர்ச்சிகரமான அழகு.. உயர் குடும்பத்திற்கே உரிய நேர்த்தியான தோற்றம்.. ரவிச்சந்திரனின் கம்பெனியில் வசிக்கும் பதவி கொடுத்திரக்கும் மிடுக்கு.. இவை அனைத்தும் கை கொடுக்க அவன் நினைத்ததை சாதித்து விடுவான் என்றே அஜந்தா நம்பினாள்..“”

“பெஸ்ட் ஆஃப் லக்..”

அண்ணன் செய்யப் போகும் ஏமாற்று வேலைக்கு வாழ்த்துச் சொல்லி வழி அனுப்பி வைத்தாள் அஜந்தா.. அபராஜிதனும் வெற்றித் திலகத்தை நெற்றியில் இட்டுக் கொள்ளாத குறையாக ஃபிலிம் காட்டி விட்டுத் தஞ்சாவூருக்குக் கிளம்பினான்.. அங்கே போனால் நந்தினி செஞ்சிக்குப் போயிருந்தாள்.. அஜந்தாவுக்குப் ஃபோன் போட்டு நந்தினியின் தோழியைப் போல வெண்ணிலாவிடம் ஃபோனில் பேசி உத்ராவின் செஞ்சி வீட்டு முகரியை கேட்டுச் சொல்லச்

சொன்னான்.. பித்தலாட்டம் செய்ய அஜந்தாவுக்கு என்ன சொல்லியா தர வேண்டும்..? அண்ணன் அறுபது அடி பாய்ந்தால் இவள் அறநூறு அடிகளுக்குப் பாய்வாளே..

"கவலையே படாதே.." என்று அபராஜிதனுக்கு அபயக்கரம் காட்டி விட்டு வெண்ணிலாவுக்கு ஃபோன் செய்தாள்..

"ஹலோ..!"

"நான் நந்தினியோட ஃபிரண்ட் தேவிகாம்மா.."

"என்னது.. கோபிகாவா..?"

'இந்தப் பெயரை விட அந்தப் பெயர் நல்லா இருக்கே..' பேசாமல் கோபிகா என்றே சொல்லி விடுவது உத்தமம் என்ற முடிவுக்கு வந்தாள் அஜந்தா..

'சொல்கிறதே பொய் பெயர்.. அதில் எந்தப் பெயரைச் சொன்னால் என்ன..? வாய்க்கு வந்ததைச் சொல்லி வைக்க வேண்டியதுதானே..'

"ஆமாம் அம்மா.. கோபிகாதான்.."

"தேவிகான்னு காதில விழுந்தது.."

‘அப்புறம் என்ன அலுவலுக்கு கோபிகாவான்னு கேட்ட..?’ பல்லைக் கடித்தாள் அஜந்தா..

‘ஒண்ணும் தெரியாதவளைப் போல இந்த லேடி டென்ஷனை கிளப்பி விடறாளே..’ பொறுமையை இழுத்துப் பிடித்தபடி..

“இல்லைங்கம்மா.. நான் கோபிகான்னுதான் சொன்னேன்..” என்று தேனினும் இனிய குரலில் சொன்னாள்..

“என்னவோ போ.. இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு பெயரைக் கூட ஒழுங்காச் சொல்லத் தெரியலை..” வெண்ணிலா அலுத்துக் கொண்டாள்..

‘இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்..’

“உனக்கு என்னம்மா வேணும்..?”

‘நிச்சயமா நீ வேணாம்.. உன் அழகு மகள் எங்கே போயிருக்கிறாள்ங்கிற தகவல்தான் வேணும்..’

“நந்தினியோட ஃபிரண்டுங்கற.. அவ செல்ஃபோனுக்கு கூப்பிடாம என் நம்பருக்குக் கூப்பிடற.. இந்த நம்பர் உனக்கு எப்படி கிடைச்சது..?”

‘ஓ.. ஈ கிழவி கில்லியல்லோ..’

அஜந்தா சுதாரித்துக் கொண்டாள்.. வெண்ணிலா நம்பும் வண்ணம் கோர்வையாக பேசினாள்..

“அவ நம்பருக்குப் ஃபோன் பண்ணினா நாட் ரீச்சபிள்ன்னே வருதுங்கம்மா.. உங்க நம்பர் எனக்குத் தெரியும்மா.. ஒருமுறை என் செல்ஃபோனில இருந்து அவ உங்க நம்பருக்குக் கால் பண்ணிப் பேசினா.. எதற்கும் இருக்கட்டும்ன்னு ஸேவ் பண்ணி வைத்திருந்தேன்.. அது இப்ப உதவுது..”

“கெட்டிக்காரப் பெண்..”

‘ஓ.. உன்னோட பாராட்டுக்காகத்தான் ஞான் காத்துக் கொண்டிருக்கிறேனாக்கும்..’

“நந்தினிக்கு இது போல புத்திசாலித்தனமெல்லாம் வராது..”

“அப்படியில்லைம்மா.. அவ என்னைவிட ஸ்மார்ட்.. பக்கத்திலே இருக்காளாம்மா..? அவளிடம் ஃபோனைக் கொடுக்கறிங்களா.. பேசனும்..”

“அவ இங்கே இல்லையேம்மா.. அவ ஃபிரண்டு உத்ராவோட கல்யாண நிச்சயதார்த்தத்திற்குப் போயிருக்காளே.. ஆமாம்.. நந்தினிக்கும் ஃபிரண்டுன்னா உனக்கும் உத்ரா ஃபிரண்டுதானே.. அவ நிச்சயதார்த்தத்திற்கு நீ போகலையா..?”

‘ஓ.. ஈ கிழவி கிடுக்கிப்பிடி போடறாளே..’

“என்னம்மா.. ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிற..”

“எனக்கு உத்ரா ஃபிரண்டுதான்.. பட்.. மேரேஜ் எங்கேஜ்மெண்டுக்குப் போகிற அளவுக்குப் ஃபிரண்டு இல்லைம்மா..”

“ஏம்மா..? உத்ரா நல்ல பெண்ணாச்சே.. ஒவ்வொரு செமஸ்டர் லீவுக்கும் தஞ்சாவூருக்கு வந்து எங்க வீட்டில தங்கியிருந்துட்டுத்தான் போவா.. அவ எங்க வீட்டுப் பெண் போல..”

‘தத்து எடுத்து மடியில போட்டுக் கொஞ்சிக்க.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது..? இப்படி ரம்பம் போட்டு என் உயிரை ஏன் குறைக்கிற..?’

பேச்சு நழுவி வேறு திசையில் பயணிப்பதைப் போல களைப்படைந்தாள் அஜந்தா.. தஞ்சாவூரில் இருக்கும் பெண்மணிதானே என்று எளிதாக எடை போட்டுப் பேசினால் இந்த வெண்ணிலா அஜந்தாவைத் தலையாலே தண்ணீர் குடிக்க வைத்துக் கொண்டிருக்கிறாளே..

“அவ நல்ல பெண்தான் அம்மா.. இல்லேன்னு யாரும் சொல்ல மாட்டாங்க.. அதில பாருங்க.. அவளும் நந்தினியும் ஹாஸ்டலில் தங்கியிருந்ததினால திக் ஃபிரண்டா ஆகிட்டாங்க.. நான் டே-ஸ்காலர்.. நந்தினியுடன்தான் நல்ல பழக்கம்.. உத்ராவுடன் அவ்வளவாப் பழக்கமில்லை..”

“அப்படியாம்மா.. அதுவும் சரிதான்..”

‘ஸ்ஸ்ஸ்.. அப்பாடி.. கிழவி ஒருவழியா கன்வின்ஸ் ஆகிருச்சு..’

“நந்தினி நம்பர் நாட் ரீச்சபிள்ன்னு வந்தா உத்ராவோட ஃபோன் நம்பருக்குக் கூப்பிடேன்..”

“என்னிடம் அவ நம்பர் இல்லையேம்மா..”

“நான் சொல்கிறேன்.. குறித்துக்க..”

வெண்ணிலா கொடுத்த உத்ராவின் ஃபோன் நம்பருக்கு திருமணத்திற்கு வருகை தரும் உறவுக்காரியைப் போல ஃபோன் செய்தாள் அஜந்தா..

“ஹலோ.. யாரு.. உத்ராவா.. நான்தான் பகவதி.. உன் அத்தை..! என்ன..? தெரிலையா..? எப்படித் தெரியும்..? சொந்த பந்தங்க ஒருத்தர் வீட்டுக்கு ஒருத்தர் வந்து போய்க்கிட்டு இருந்தாத் தெரியும்.. இப்பத்தான் அப்படியில்லையே.. உன்னைக் கைக்குழந்தையாய் பார்த்தது.. இப்பக் கல்யாணப் பொண்ணாப் பார்க்கப் போறேன்.. இப்படியிருந்தா இப்படித்தான்.. என்னைப் பத்திக் கேள்விப்பட்டதில்லையா..? அடி ஆத்தி.. உன் அப்பாவுக்கு நான் தங்கை முறை.. என் அப்பாவோட சித்தப்பாவுக்கு பெரியப்பா மகனுக்கு... என்ன... கையெழுத்துக் கும்பிடுகிறாயா..? எதுக்கு..? உறவுமுறை வேண்டாமா..? இரு.. வீட்டுக்கு வந்து உன்னைப் பேசிக்கறேன்.. பஸ் ஸ்டாண்டிலதான் இருக்கேன்.. அட்ரஸைச் சொல்லு.. ஆட்டோ டிரைவருக்குச் சொல்லனும்..”

உத்ரா சொன்ன முகவரியை ஆட்டோ டிரைவருக்குச் சொல்லாமல் அபராஜிதனுக்குச் சொன்னாள் அஜந்தா.. திருமண நிச்சயதார்த்த பரபரப்பு வீடு முழுவதும் பரவியிருக்க..

கல்யாணப் பெண்ணின் பரவசம் கலந்த ரகசிய சந்தோஷத்தின் பரபரப்பில் எவளோ ஒரு பெண் ஃபோனில் வீட்டு முகவரியைக் கேட்டதை மறந்தே போனாள் உத்ரா.. அவளது வீட்டைக் கண்டு பிடித்து விட்ட அபராஜிதன் செஞ்சியிலேயே தங்கி அவள் வீட்டை வட்டமிட ஆரம்பித்தான்..

அத்தியாயம் 252

ரவிச்சந்திரன் மகேந்திர பூபதியை கன்யாகுமரியில் சந்தித்துக் கொண்டிருந்த போது அபராஜிதன் நந்தினியையும், உத்ராவையும் செஞ்சிக் கோட்டையில் சந்தித்தான்.. உயர்ரக ஜீன்ஸும், சட்டையும், கண்களில் கூலிங்கிளாஸுமாக இந்திப் பட ஹீரோவைப் போல படு ஸ்டைலாக நந்தினியுடன் பழக முயன்றான்.. கன்னிப் பருவத்துக்கேயுரிய சலனம் நந்தினியின் மனதில் ஏற்பட்டதுதான்.. அவளுக்குள் சன்னமான தடுமாற்றம் வந்ததுதான்.. அவள் இருந்த நிலைமையில் கன்னிப் பருவத்தின் சலனங்களில் மூழ்க முடியாமல் மலை போல மனதில் பாரம் ஏறி அழுத்திக் கொண்டிருந்ததே.. ஆதலினால் அபராஜிதன் எய்த மன்மத அம்புகள் புஸ்வாணமாகி பொசுக்கென அவனது கால்களில் விழுந்து சோதித்தன..

அவனும் ஆன மட்டும் முயற்சி செய்து பார்த்தான்.. நந்தினியைப் பார்த்தபடி ஜொள்ளு விட்டான்.. வரிசைப் பற்கள் தெரிய சிரித்து வைத்தான்.. சிரிக்கும் போது அவனது அழகு கூடுவதை அவன் உணர்ந்திருந்தான்.. அது ஒரு வலைவீச்சு.. பெண் மனதில் சலனத்தை ஏற்படுத்தும் தூண்டில்..

அந்தத் தூண்டிலில் பலர் சிக்கியதுண்டு.. நந்தினி சிக்கவில்லை.. சிரித்து மயக்க முயன்றவனை சினத்துடன் பார்த்தாள்.. அவளது பார்வையின் உக்கிரத்தில் அவன் திகைத்துப் போனான்.. அதுவரை அவன் வீசிய தூண்டில் தோற்றுப் போய் அறுந்து விழுந்ததே இல்லை..

நந்தினி அவனுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தாள்.. அவளது அழகைவிட அவளை மணக்க மகேந்திரனும், ரவிச்சந்திரனும் போட்டி போட்டுக் கொண்டிருந்ததுதான் அபராஜிதனை பாதித்தது.. மகேந்திரன் ரவிச்சந்திரனுக்கு இணையானவன் அல்ல.. ரவிச்சந்திரனின் நிழலுக்குப் பக்கத்தில் கூட அவனால் நிற்க முடியாது.. ரவிச்சந்திரன் புகழேணியின் உச்சத்தில் இருந்தான்.. மகேந்திரனோ எங்கோ தொலைதூர தொடுவானின் புள்ளியாக தள்ளி இருந்தான்.. ரவிச்சந்திரன் உலகம் முழுவதும் கிளைகளைக் கொண்ட தொழில்களுக்குச் சொந்தக்காரன்.. மகேந்திரன் கன்யாகுமரியின் பெயர் பெற்ற தொழிலதிபன்.. அவ்வளவுதான்..

என்ன ஒன்று.. மகேந்திரனுக்கு கன்யாகுமரியில் சொந்த பங்களாக்கள், அரண்மனை, சொத்துக்கள், தொழில்கள், நட்சத்திர ஹோட்டல் என்று இருந்தன.. அபராஜிதன்

அடையாளமில்லாதவன்.. தாய்மாமன் மகனின் நிழலில் அண்டிப் பிழைப்பவன்.. இந்த வகையில் மகேந்திரன் மேலோங்கியிருந்தான்..

நந்தினியைக் கவர்வதின் மூலம் கன்யாகுமரியின் மகேந்திரனையும் கேரளத்தின் நாயகனான ரவிச்சந்திரனையும் ஒருசேரத் தோற்கடித்து விடலாம் என்ற துடிப்பு அபராஜிதனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது..

அவளை மடக்க யாது செய்யலாம் என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த போதுதான் அது நிகழ்ந்தது.. அவன் கண் முன்னால் நந்தினி செஞ்சிக் கோட்டையிலிருந்து குதிக்கப் போனாள்..

‘இதப் பாருடா... மகேந்திரனைக் கல்யாணம் பண்ணிக்கிறதை விட மலையுச்சியில இருந்து குதிச்சுத் தற்கொலை பண்ணிக்கிறது பெட்டர்ன்னு இவ டிசைட் பண்ணியிருக்கா.. இதை மகேந்திரனிடம் சொல்லி அவன் மூஞ்சி போகிற போக்கைப் பார்த்தாகனுமே..’ உடனடியாக அந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல் மகேந்திரன் வெளி நாடுகளுக்குப் பறந்து போயிருந்தான்.. அவனது செல்ஃபோன் நம்பர் அபராஜிதனுக்குக் கிட்டவில்லை..

அபராஜிதனை மகேந்திரன் அணுக விட்டதில்லை.. தள்ளி நிறுத்தி விடுவான்.. அவனுடைய வீட்டிலிருந்து அவனது ஃபோன் நம்பரைக் கைப்பற்றி விட முடியாது.. அவனைப் பெற்றவர்கள் அவனை விட கெட்டிக்காரர்கள்..

'எங்கே போய் தொலைந்திருப்பான்..?'

அவன் எங்கேயோ போய் தொலைகிறான் என்று அவன் அஜந்தாவுக்கு ஃபோன் பண்ணி விவரத்தைச் சொன்னான்..

"அந்த மகேந்திரனைக் கல்யாணம் பண்ணிக்கன்னு சொன்னா எந்தப் பெண்ணா இருந்தாலும் இதைத்தான் செய்வா.." என்றாள் அஜந்தா..

"இப்ப என்ன செய்ய..?"

"கிளம்பி வந்து விடாதே.. அங்கேயே இருந்து அடுத்து அவ மூவ் என்னன்னு வாட்ச் பண்ணிக்கிட்டு இரு.. இப்பத்தான் நாம் ஜாக்கிரதையாய் இருக்கனும்.. அவளுக்குப் பிடிக்காத கல்யாணம்ன்னு மட்டும்தான் ரவியத்தானுக்கும் வீணா, ரம்யாவுக்கும் தெரியும்.. அவ சூசைட் அட்டெம்ட் வரைக்கும் போயிட்டாங்கிறது யாருக்கும் தெரியாது.. வெறுமனே பிடிக்காத கல்யாணம் என்கிறதுக்கே பெண்ணைத் தூக்கிட்டு வந்திருடான்னு மகனை உசுப்பேத்தி விட்டுக்

கொண்டிருக்கிறா இந்த வீணா.. சூசைட் பண்ணிக்கப் போயிட்டான்னு தெரிந்தே இவளே கிளம்பிப் போய் நந்தினியை கைபிடியாய் பிடித்துக் கூப்பிட்டுக்கிட்டு வந்தாலும் வந்திருவா.. இனி என்ன நடக்கிறதுன்னு கவனித்துட்டு அதற்குத் தகுந்தாற்போல நாம் காய் நகர்த்தியாகனும்..'' அஜந்தா அபராஜிதனுக்கு மட்டுமல்ல, அவளைப் பெற்ற தாய், தந்தைக்கே குரவாய் இருக்கும் அளவிற்கு வில்லத்தனம் கொண்டவள்.. தங்கையின் சாகசங்களின் எல்லைகளை அறிந்திருந்த அபராஜிதன் அதற்கென்ன என்று கேட்டுக் கொண்டு செஞ்சியிலேயே தங்கியிருந்தான்.. இரண்டே நாள்களில் அஜந்தாவிடமிருந்து ஃபோன் வந்து விட்டது..

''நான் நினைத்ததுதான் நடந்திருக்கு சேட்டா.. ரவியத்தானுக்கு எந்த நந்தினி சூசைட் அட்டெம்ட் பண்ணப் போயிட்டாங்கிற விவரம் தெரிஞ்சுருச்சு..''

''எப்படி..?''

''எப்படியோ.. நமக்கே இவ்வளவு விவரம் தெரியறப்ப அத்தானுக்கு எவ்வளவு விவரம் தெரிந்திருக்கும்..?''

''அவனை அட்மைர் பண்ணலைன்னா உனக்குத் தூக்கம் வராதே.. இதுக்கு அவன் வொர்த்தா..?''

“அத்தான் கையில இருக்கிற பவர் வொர்த் சேட்டா.. அதைக் கைப்பற்றுகிற வரைக்கும் எனக்குத் தூக்கம் வராது..”

“அவன் என்ன செய்யப் போகிறானாம்..?”

“தெரியலை.. பட்.. எதையோ செய்யப் போகிறான்.. அதுக்கு முன்னாடி நீ நந்தினியைக் கடத்தி விடு..”

அபராஜிதன் என்ன மாட்டேன் என்றா மறுக்கப் போகிறான்..? அவன் இஞ்சி தின்ற குரங்காக ‘ஈ’ என பல்லைக் காட்டியபடி தலையாட்டிவிட்டு உத்ராவின் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான்.. அடுத்த இரண்டு தினங்களில் உத்ராவின் வீட்டிலிருந்தவர்கள் கார்களில் ஏறி எங்கோ பறந்துவிட இவன் வீடு புகுந்து விடலாமா என்று யோசித்தான்.. அவன் யோசித்து முடிப்பதற்குள் நந்தினியும் உத்ராவும் வீட்டை விட்டு வெளிப்பட்டு ஆட்டோவில் ஏறி விட்டார்கள்..

‘எங்கே போகிறாங்க..?’

பின் தொடர்ந்தான்.. அவர்கள் சென்னை செல்லும் பஸ்ஸில் ஏறினார்கள்.. அபராஜிதனின் கார் பஸ்ஸை பின்பற்றியது.. சென்னையில் இறங்கியவர்களை வினித் எதிர் கொண்டழைத்ததில் இவனுக்கு என்ன செய்வது என்றே

தெரியவில்லை.. உத்ரா சொல்லியிருந்ததைப் போல அவன் ஜிம் பாடியுடன் ஓங்கி அடித்தால் ஒன்றரை டன் வெயிட்டை உணர்த்தி விடும் ஓங்கு தாங்கான ஆளாக இருந்ததில் இவன் பம்மிக் கொண்டான்.. நேருக்கு நேர் சண்டை போடும் ஸ்டைலெல்லாம் அபராஜிதனுக்கு சரிப்பட்டு வராது.. முதுகில் குத்த வேண்டுமா.. மொள்ள மாரித்தனம் பண்ண வேண்டுமா.. ஏமாற்ற வேண்டுமா.. அபராஜிதன் மாட்டேன் என்றே சொல்ல மாட்டான்.. அதில் எல்லாம் அவன் எக்ஸ்பர்ட்..

சென்னையைச் சுற்றி விட்டு அவர்கள் வீடு திரும்பி விடுவார்கள் என்று பார்த்தால் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள்.. வினித்தும், உத்ராவும் அங்கிருந்த பெஞ்சில் உட்கார்ந்து காதல் ரசத்தைப் பிழிய ஆரம்பிக்க நந்தினி புத்தகக் கடையின் பக்கம் ஒதுங்கினாள்.. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அருகில் போன அபராஜிதன் கடலை சாகுபடி செய்ய ஆரம்பிக்க வினித்தும், உத்ராவும் எழுந்து வந்து அவனை விரட்டியடித்து நந்தினியை மீட்டுக் கொண்டு போய் விட்டார்கள்..

மறைந்திருந்தே அவர்களை மர்மமாக கண்காணித்துக் கொண்டிருந்தவன்.. நந்தினியை அவர்கள் மங்களூர்

எக்ஸ்பிரஸ்ஸில் ஏற்றி விட்டு நகர்ந்ததும் இவன் ஓடிப்போய் ரயிலில் ஏறி நந்தினியின் சீட்டிற்கு எதிர்வீட்டில் உட்கார்ந்து கொண்டான்.. ஓடும் ரயிலில் இருந்து அவளை எப்படியாவது கடத்திவிட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தவனிடம் நீங்கள்தான் ரவிச்சந்திரனா என்று அவள் கேட்ட போது அந்த ரவிச்சந்திரன் அவனுடைய 'அத்தான் ரவிச்சந்திரன்..' என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை.. மனதின் திட்டத்தில் மூழ்கியிருந்தவன் 'நான்தான் அவன்' என்று பீலா விட்டு விட்டான்.. அடுத்து என்ன செய்யலாம் என்ற சிந்தனையுடன் வெளியே பார்த்தால் அங்கே ரவிச்சந்திரன் வந்து கொண்டிருந்தான்..

'எண்ட குருவாயூரப்பா.. இவ இவன் பெயரைத்தான் சொல்லியிருக்கான்னு எனக்குத் தெரியாம போயிருச்சே..' அலறியடித்துக் கொண்டு ரயிலை விட்டு இறங்கி ஓடியவன் அஜந்தாவுக்குப் ஃபோன் பண்ணி ரவிச்சந்திரன் நந்தினியுடன் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் வந்து கொண்டிருப்பதை சொல்லி விட்டான்.. அஜந்தா இடிந்து போய் விட்டாள்.. இந்த அளவுக்கு கோட்டை விட்டு விட்டானே என்று தமையனைத் திட்டித் தீர்த்தாள்..

“செஞ்சிக்குப் போன்னு சொன்னா செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்த்துட்டு வந்து நிற்கிற... நீ எதுக்குத்தான் லாயக்கு சேட்டா.. இத்தனை இன்பர்மேஷனைக் கேதர் பண்ணிக் கொடுத்து தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்தா நீ அவளை ரவியத்தானுடன் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் அனுப்பி வைத்து விட்டு நிற்கிற.. இதுக்காகவா செஞ்சிக்குப் போன..?”

“இனி என்ன செய்கிறது..?”

“எதுவும் செய்ய முடியாது... அத்தான் கேரளாவுக்குள்ள எண்டராகிட்டா நாம அவனைக் கண்காணிக்கவே முடியாது.. நம்மைக் கண்காணிக்க அவன் ஆயிரம் பேரை வேலைக்கு வைத்திருக்கான்..”

“ஞான் எந்து செய்யும்..?”

“பேசாதே.. நான் செம காண்டில இருக்கேன்.. எவளும் எனக்குப் போட்டியா இல்லாத போதே என்னால் அத்தானை நெருங்க முடியலை... இப்ப இவளை கைபிடியாய் அழைத்துக்கிட்டு வருகிறான்... என் நிலைமையை கொஞ்சமாவது ஆலோசிச்சயா..?”

“நாம் தோற்றுப் போய் விட்டோமா..?”

“இல்லை.. இன்னமும் விளையாடிப் பார்க்க நமக்கு சம் சான்ஸஸ் இருக்கு.. முடிந்த வரைக்கும் குட்டையைக் குழப்புவோம்.. எதுக்கும் நீ வயநாட்டுக்கு கிளம்பி வா..”

“அங்கே நான் வரக் கூடாதுன்னு ரவி சொல்லியிருக்கிறானே..”

“அவன் சொன்ன எதை நாம கேட்டோம்..? இதைக் கேட்பதற்கு..”

“அப்படிங்கிற..?”

உற்சாகமாகிப் போன அபராஜிதன் வயநாட்டு அரண்மனைக்கு வந்து நந்தினியிடம் வாய் கொடுத்து ரவிச்சந்திரனிடம் மாத்து வாங்கினான்.. மும்பைக்கு ஓடிவிடு என்று ரவிச்சந்திரன் விரட்டி விட்டான்..

கன்யாகுமரிக்குப் போய்விடு, அங்கே மகேந்திரன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கிறான் என்று அஜந்தா வழிகாட்டினாள்.. அபராஜிதன் கன்யாகுமரிக்குப் போய் மகேந்திரனைச் சந்திக்க அஜந்தா வயநாட்டின் அரண்மனையில் இருந்தபடி நந்தினியின் மனதில் சஞ்சலத்தை விதைக்க ஆரம்பித்தாள்.. நந்தினி யார் என்று தெரியாமலே அடைக்கலம் கொடுத்து காதல் செய்த ‘பாஸ்’ அல்ல

ரவிச்சந்திரன்.. அவன் திட்டம் போட்டு நந்தினியை அழைத்து வந்தவன் என்பதை நந்தினி அறிந்து கொள்வதை ரவிச்சந்திரன் விரும்பவில்லை.. அதைக் கண்டு கொண்ட அஜந்தா அடுத்த காயை நகர்த்த ஆரம்பித்தாள்.. ரவிச்சந்திரனுக்கு 'பெல்ட் மன்னன்' யார் என்று தெரியும் என்பதை நந்தினியிடம் சொல்வதைப் போல பாவனை காட்டி ரவிச்சந்திரனுக்கு எரிச்சலையும் நந்தினிக்கு சந்தேகத்தையும் கிளப்ப ஆரம்பித்தாள்.. நந்தினியிடம் அஜந்தா தனித்துப் பேச ஆரம்பித்தாலே ரவிச்சந்திரன் அங்கே பிரசன்னமாகி அஜந்தாவிடம் சப்தம் போட ஆரம்பித்ததில் நந்தினியின் சந்தேகம் அதிகரித்தது.. ரவிச்சந்திரன்தான் பெல்ட் மன்னன் என்று அபராஜிதன் நந்தினியிடம் உண்மையைப் போல பல சம்பவங்களை எடுத்துச் சொல்லி நம்ப வைத்து விட்டான்.. ரம்ய மாலினியின் மனதில் தனபாலனின் மீது ஓர் எண்ணம் இருக்கிறது என்று தரங்கிணி வேறு நந்தினியின் மனதில் உணர்வை விதைத்து விட்டாள்.. ரவிச்சந்திரன்தான் பெல்ட் மன்னனோ என்ற சந்தேகமும் ரம்ய மாலினியின் நல்வாழ்விற்குத் தன் காதல் தடையாயிருக்கிறதோ என்ற குற்ற உணர்வும் சேர்ந்து தவித்துக் கொண்டிருந்த நந்தினி, அபராஜிதனின் பேச்சைக் கேட்டதும் தளர்ந்து விட்டாள்..

ரவிச்சந்திரனை விட்டுத் தொலைதூரமாக ஓடிவிட வேண்டுமென்ற விரக்தி அவள் மனதை ஆக்ரமித்து விட்டது.. ரவிச்சந்திரனின் முகம் பார்த்து விலகலைச் சொல்யலும் சக்தி அவளுக்கில்லை.. அவனிடம் சொல்லாமல் 'யாழ்' ஹோட்டலை விட்டு விலகி சென்னைக்குச் செல்ல ரயிலேறிவிட்டாள்..

இதுதான் நடக்கும் என்று தெளிவாகத் திட்டமிட்டுக் காய் நகர்த்தி நந்தினியை உண்மையான பெல்ட் மன்னனான மகேந்திர பூபதியிடம் ஒப்படைத்து விட்ட அபராஜிதனுக்கும், அஜந்தாவுக்கும் ஒன்று தெரியாது..

எப்போது அஜந்தாவுக்கு நந்தினியைப் பற்றிய முழு விவரமும் தெரியும்.. அவள்தான் அபராஜிதனை செஞ்சிக்கு அனுப்பி வைத்தாள் என்பதை ரவிச்சந்திரன் தெரிந்து கொண்டானோ... அப்போதிருந்தே நந்தினியையும் அவளைச் சுற்றிக் காய் நகர்த்திய அனைவரையும் தன் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வந்து விட்டான்.. எதுவும் அவனுக்குத் தெரியாது என்று அவர்கள் நினைத்திருக்க எல்லாமும் அவனுக்குத் தெரிந்தே நடந்தன..

அத்தியாயம் 253

கன்யாகுமரியின் பெரிய பணக்காரர்களில் ஒருவனாக மகேந்திரபூபதி இருக்கலாம்.. ஆனால் செல்வாக்கான பணக்காரனாக அவனில்லை.. அது ரவிச்சந்திரனிடம்தான் இருந்தது.. கேரளத்தை மையமாகக் கொண்ட அவனது வர்த்தகம் உலகம் முழுவதும் பல கிளைகளுடன் பரந்து விரிந்திருந்தது.. தமிழகத்தின் கிளைகளில் கன்யாகுமரியின் கிளையில் அவன் அதிக கவனம் செழுத்துவான்.. ஏனெனில் கன்யாகுமரி கேரளத்துக்கு வெகு அருகிலிருந்த முக்கிய நகரம்.. அங்கே மகேந்திர பூபதியின் நட்சத்திர ஹோட்டல் இருந்ததினால் ரவிச்சந்திரன் 'யாழ்' ஹோட்டலை அங்கே நிறுவாமல் விட்டு வைத்திருந்தான்.. அதில் மார்த்தாண்ட பூபதிக்கு மகிழ்வும், நன்றியுணர்வும் உண்டு.. மகேந்திரனிடம் அது போன்ற நற்குணங்களையெல்லாம் எதிர்பார்க்க முடியாது..

மகேந்திரனிடம் வேலை பார்க்கும் வேலையாள்கள் யாரும் அவனிடம் நிலைத்து நின்றதில்லை.. மாதத்திற்கு ஒரு வேலையாள் என்று மல்லுக்கட்டிக் கொண்டிருப்பான்.. சட்டெனக் கை நீட்டி விடுபவனின் காரை ஓட்டுவதற்குப் பதில்

காவி வேட்டியைக் கட்டிக் கொண்டு காசி யாத்திரைக்குக் கிளம்பி விடலாம் என்று வெறுத்துப் போய் ஓடிவிடும் டிரைவர்களை துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி விட்டால்தான் என்ன என்று ரவிச்சந்திரனிடம் பொருமுவான் அவன்..

“மாசத்திற்கு ஒரு டிரைவர்ன்னு இருந்தது போய் இப்ப வாரத்துக்கு ஒரு டிரைவர்ன்னு மாறித் தொலைக் கிறாங்கப்பா..”

“ஏண்டா.. ஒரு மாதம் இழுத்துப் பிடித்து வேலை பார்த்தால் ஃபுல் மன்த் சேலரியும் உடையாம கிடைக்குமே..”

“நீ வேற.. ஒரு வாரச் சம்பத்தை வாங்கக் கூட என் வீட்டுப் பக்கம் வரக்கூடாதுன்னு வன்மம் வைத்து ஓடி விடறாங்கப்பா..”

அப்படி உன் சம்பளமே வேண்டாமென்று டிரைவர்களைத் தலை தெறிக்க ஓட வைக்கும் மகேந்திர பூபதியிடம் சமீபத்தில் சேர்ந்த டிரைவர் மட்டும் எத்தனை மாத்து பெற்றாலும் ஓடி விடாமல் நிலைத்து நின்று மகேந்திர பூபதியிடம் முழு மாதச் சம்பளத்தை முள்ளங்கிப் பத்தை போல வாங்கி விட்டான்.. அதில் கயல்விழியே அயர்ந்து போனாள்..

“என்னடா மகேந்திரா இது.. ஆச்சரியமா இருக்கு.. நீ

குடிச்சுட்டுப் பெல்ட்டைக் கழட்டி விளாசுகிற விளாசலுக்குப் பயந்து ஒரு பய உன்கிட்ட டிரைவர் வேலை பார்க்க வர மாட்டான்.. இவன் ஒருத்தன் மட்டும் அடி வாங்கினாலும் பரவாயில்லைன்னு வந்திருக்கானே.. அம்புட்டுக் கஷ்டமாமா இவனுக்கு..?''

''ஆமாம்மா.. சாப்பாட்டுக்கே வழியில்லைன்னு கால்ல விழுந்தான்.. கழுதை, காரோட்டிக்கிட்டுக் கிடக்கட்டும்ன்னு வேலை போட்டுக் கொடுத்தேன்.''

''உன்னோட பெல்ட் அடியை எப்புடிடா மகனே தாங்கிக்கிட்டுத் தாக்குப் பிடிக்கிறான்..''

''அவன் எங்கேம்மா அடிவாங்கறான்..? பெல்ட்டை உறுவி வீசினா சர்க்கஸ்காரனைப் போல நாலா பக்கமும் உடம்பை வளைச்சு நெளிச்சு ஒரு அடி உடம்பில படாமத் தப்பிச்சுடறான்ம்மா..''

''அடப்பாவி சண்டாளா..! அப்படியாடா பண்றான்..?''

என்னவோ செய்யக்கூடாத தவறை அந்த டிரைவர் செய்து விட்டதைப் போல ஆதங்கப்பட்டுப் போனாள் கயல்விழி.. ஓர்முறை மகேந்திர பூபதியின் கண்மண் தெரியாத

பெல்ட் வீச்சுக்குள் அகப்படாமல் ரப்பரைப் போல உடலை வளைத்துத் தப்பித்த டிரைவரின் சாகத்தைப் பார்த்து விட்டு..

“என்னடா மகேந்திரா.. இவன் உடம்பு என்ன ரப்பரா..?” என்று கன்னத்தில் கை வைத்து பிரமித்தாள்..

அந்த டிரைவர் ரவிச்சந்திரனால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு ஜிம்னாஸ்ட்டிக் என்று எவருக்கும் தெரியாது.. மககேந்திரனிடம் டிரைவராக வேலை பார்க்க அவனுக்கு ரவிச்சந்திரன் மாதம் ஒரு லட்சம் சம்பளம் கொடுத்தான்.. மகேந்திரனோ போனால் போகிறது என்று பத்தாயிரம் ரூபாயை கொடுத்துக் கொண்டிருந்தான்.. ஜிம்னாஸ்டிக் கலையில் தேர்ச்சி பெற்றவனின் மீது பெல்ட் அடி விழுந்து விடுமா..? மகேந்திரனின் பெல்ட் அடியிலிருந்தும் மற்ற அடிகளிலிருந்தும் சாதுர்யமாகத் தப்பித்தபடி அந்த டிரைவர் உளவு வேலை பார்த்து அவன் சேகரித்த தகவல்களை உடனுக்குடன் ரவிச்சந்திரனுக்கு செல்ஃபோனில் தெரிவித்துக் கொண்டிருந்தான்.. அப்படி வந்த தகவல்களில் ஒன்று அபராஜிதன் மகேந்திரனைச் சந்தித்ததைச் சொல்லியது..

“சார்.. மிஸ்டர் அபராஜிதன் மகேந்திரன் சாரை மீட் பண்ணினார் சார்.. மிஸ் நந்தினி இருக்கும் இடம் அவருக்குத் தெரியும் என்று சொன்னார் சார்..”

“ஐ ஸீ...”

தஞ்சையிலிருந்து ஃபோன் பண்ணிய நந்தகுமார் நந்தினியின் வீட்டில் மகேந்திர பூபதியுடனான திருமண சம்பந்தத்தை முறித்து விட்டதாக தெரிவித்தான்..

“பெண் கொடுக்க முடியாதுன்னு கன்யாகுமரிக்கு அப்பா தகவல் சொல்லிட்டார் அத்தான்..”

“கன்யாகுமரிக்குத் தகவல் சொன்னாரா..?”

“ஜோக்..? லைன் கிளியராகுதில்ல.. ஜோக் வரத்தான் செய்யும்.. கன்யாகுமரிக்குன்னா கன்யாகுமரிங்கிற ஊருக்குத் தகவல் சொல்லலை.. அந்த ஊரில இருக்கிற மார்த்தாண்ட பூபதிக்கும் கல்யவிழி அம்மையாருக்கும் தகவல் சொல்லிட்டார்..”

“வெரி, வெரி, வெரிகுட் நியூஸ்..”

“உங்களுக்கு குட் நியூஸ்.. பட் அந்த மகேந்திரனுக்கு பேட் நியூஸாச்சே.. அவனும் அவங்கம்மாவும் மாறி மாறி

ஃபோன் போட்டு அப்பாவையும் அம்மாவையும் பிடி பிடின்னு பிடிச்சுட்டாங்க.. அதிலும் அந்த கயல்விழி லேடி இருக்கே.. அப்பப்பா.. லேடியா அத்தான் அது.. சரியான கேடி.. பேச்சுவாக்கில் அம்மாவும் அதுவும் சின்ன வயசில சம்பந்தம் பண்ணிக்கனும்னு சத்தியம் பண்ணிக்கிட்டதாச் சொன்னது பொய்யுன்னு அதுவே போட்டு உடைச்சிருச்சு.. நீயெல்லாம் எனக்கு இணையா.. பொய் சொல்லி உன் வீட்டில் சம்பந்தம் பண்ணனும்னு நினைத்தேனேன்னு அது சொல்ல அம்மா 'ஙே..'ன்னு முழித்தாங்க பாருங்க.. சூப்பர் போஸ் அத்தான்..''

''பாவம்.. அவங்க டூ இன்னொஸெண்ட் நந்தகுமார்..''

''மாமியாருக்கு சப்போர்ட்டா.. பிழைத்துக்குவீங்க அத்தான்.. படா கெட்டிக்காரர்தான் போங்க.. அப்புறம் இன்னொன்று அத்தான்.. அந்த மகேந்திரன் எனக்கு நிச்சயம் பண்ணிய பெண்ணைக் கொடுக்க மாட்டேன்னு சொல்ல நீ யாருன்னு அப்பாவிடம் சண்டை போட்டான்.. அப்பா சும்மாவே கோபக்காரர்.. அக்காவைக் காணோம் என்கிறதில இவனுக்குப் பெண் கொடுக்கனும்னு நினைத்ததினாலேதானே நந்தினி வீட்டை விட்டுப் போயிட்டாங்கிற ஆத்திரத்தோட இருந்தார்.. இதில் இவன் இந்தச் சிலும்பு சிலும்பவவும் பெல்ட் அண்ட் ரைட் கொடுத்துக் கட்டிட்டார்.. உன் கையில்தான்

பெல்ட் சுத்துமா..? உனக்குத்தான் துப்பாக்கி பிடிக்கத் தெரியுமான்னு எக்கச்சக்க டயலாக்கை எடுத்து விட்டுக் கர்ஜித்தார் பாருங்க.. அந்த மகேந்திர பூபதி கப்சிப்புன்னு ஃபோனை கட் பண்ணிட்டான்.. எப்புடி..?"

"சூப்பர்.."

"உத்ராக்கா ஃபோன் பண்ணி உங்களுக்கும் நந்தினியக்காவுக்கும் லவ் ஸ்டார்ட் ஆகிருச்சுன்னு சொன்னாங்க.. அறியாதவங்கன்னு நினைக்காதே நந்து.. சார் அப்படி.. சார் இப்படின்னு கதை சொல்ல ஆரம்பிச்சாங்களா..? இதுக்கு திரைக்கதை வசனம் எழுதினதே நானும் அத்தானும்தான்க்கா.. நீங்கள்ளாம் உங்களையறியாமல் எங்க ஃபிலிமில கேரக்டர் ரோல் பண்ணினவங்கன்னு சொன்னேனா..? அக்கா மயக்கம் போடாத குறைதான்.. இவ்வளவு நடந்திருக்கான்னு ஆற்றாற்றுப் போயிட்டாங்க.."

"ஹா.. ஹா.."

"அத்தான்.."

"சொல்லு நந்து.."

“இனித்தான் நீங்க ஜாக்கிரதையா இருக்கனும்.. அந்த மகேந்திர பூபதி பேசினதை நினைத்தா எனக்கு பயமா இருக்கு.. நந்தினியைப் பத்திரமாப் பார்த்துக்கங்க..”

“டோன்ட் வொர்ரி.. நான் பார்த்துக்கறேன்..”

ரவிச்சந்திரன் கட்டுக் காவலை அதிகப் படுத்தினான்.. தரங்கிணி நந்தினியைப் பார்த்து பேசியது முதல் அரண்மனைக்குள் அஜந்தா நந்தினியைக் குழப்பியது வரை அனைத்தையும் அறிந்தும் அறியாதவனைப் போல நந்தினியை அடை காத்தான்.. தரங்கிணியைப் பற்றிப் பிரியமாக பேசக்கூடாது என்று ரம்ய மாலினியைக் கண்டித்தான்.. நந்தினியின் மனதைக் குழப்புவதைப் போலப் பேசக்கூடாது என்று அஜந்தாவை எச்சரித்தான்.. வீணா வெண்ணிலாவுக்கும், மேகநாதனுக்கும் ஃபோன் பண்ணி நந்தினி வயநாட்டு அரண்மனையில் பாதுகாப்பாக இருக்கும் விவரத்தைச் சொல்லி ரவிச்சந்திரனுக்காக நந்தினியை மறுபடியும் பெண் கேட்டாள்..

“தமிழ் நாட்டில பிறந்து கேரளாவுக்கு வாழ்க்கைப் பட்டு வந்திருக்கிறேன் வெண்ணிலா.. அன்னியத்தில் வாழ்க்கைப் பட்டுப் போனா உறவுகள் மத்தியில ஒட்டாமல் வாழ

வேண்டியிருக்கும்.. என் கணவர் என் மீது உயிராய் இருந்தாலும் அவரைப் பெத்தவங்களும் மத்த சொந்தங்களும் தமிழ்நாட்டில நான் எங்கள் மகனுக்குப் பெண்ணெடுக்க நினைத்ததிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத்தான் செய்வாங்க.. அதையெல்லாம் ஃபேஸ் பண்ணி ரவிக்கும் நந்தினிக்கும் கல்யாணம் பண்ணி வைக்கனும்னா முதலில் நீங்க ரெண்டு பேரும் முழு மனதாச் சம்மதம் சொல்லனும்.. அதற்கப்புறம்தான் நான் என் கணவருக்கு விஷயத்தைத் தெரியப் படுத்தனும்..”

“நந்தினிக்கு எது விருப்பமோ அதுதான் எங்க விருப்பம்..”

தஞ்சாவூரிலிருந்து சம்மதம் கிடைத்து விட்டது.. மகளைப் பார்த்துப் பேசி உடன் அழைத்துச் செல்ல மேகநாதனும், வெண்ணிலாவும் நந்தகுமாருடன் தஞ்சாவூரை விட்டுக் கிளப்பி விட்ட தகவல் பறந்து வந்தது.. வயநாட்டு அரண்மனையில் இரண்டு குடும்பங்களும் ஒன்றாக உட்கார்ந்து பேசி ரவிச்சந்திரன் - நந்தினியின் திருமணத்தை உறுதி செய்து விடலாம் என்று இரு குடும்பத்தாரும் முடிவு செய்திருந்தார்கள்.. நந்தினியின் குடும்பத்தார் வரும்வரை அவளுக்கு எந்த விவரத்தையும் சொல்லக் கூடாது என்று

ரவிச்சந்திரன் நினைத்திருந்தான்.. சொன்னால் அவனும் அவளை ஏமாற்றி விட்டதாக அவள் நினைப்பாள்.. அவளைத் திட்டம் போட்டுக் காதலித்தான் என்று குற்றம் சாட்டுவாள்.. அவளது போட்டோவைக் கண்டதும் அவன் காதல் கொண்டான் என்பதை ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டாள்.. தவிரவும் நண்பனுக்காக நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணைத் தான் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில் ரவிச்சந்திரனுக்குள் ஓர் குற்றவுணர்வும் இருந்தது.. அவனுக்கு பெல்ட் மன்னனைத் தெரியும் என்பதை நந்தினி அறிந்து விடக் கூடாது என்பதில் அவன் கவனமாக இருந்தான்.. ஒரு நொடி, ஒரேயொரு நொடி 'நீ இவ்வளவுதானா..?' என்பதைப் போல ஓர் பார்வை அவள் பார்த்து விட்டால் என்ன ஆவது என்ற பதட்டம் அவனுக்கு.. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது..

நந்தினியின் பெற்றோரும் நந்த குமாரும் வந்து விட்டால் போதும்.. அவர்கள் பெல்ட் மன்னனுடனான அவளுடைய திருமணத்தை நிறுத்தி விட்டார்கள்.. நந்தினியின் விருப்பம்தான் பெரிது.. அவள்தான் முக்கியம் என்று தேடி வந்து விட்டார்கள் என்பதிலேயே நந்தினி ரவிச்சந்திரனின் அனைத்துத் தவறுகளையும் மன்னித்து விடுவாள்.. இந்த

சந்தோஷத்திற்கு அவன்தான் காரணம் என்று சொல்லி அவனிடம் சரணடைந்து விடுவாள்.. அதுவரை வயநாட்டிலிருந்து அவளைப் பிரித்துத் தன் ஒருவனின் பாதுகாவலில் மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் ரவிச்சந்திரன் அவளைத் திருவனந்தபுரத்திற்கு அழைத்துக் கொண்டு போனான்.. அங்கும் அபராஜிதன் வந்து விட்டான்... அவன் நந்தினியைச் சந்தித்தது ரவிச்சந்தினுக்குத் தாமதாக தெரியவந்தது.. அவன் நந்தினியைப் பார்த்து விளக்கம் சொல்ல முனைவதற்குள் அவள் ஹோட்டலை விட்டு வெளியேறி விட்டாள்..

ரவிச்சந்திரன் பறந்து கொண்டு பின் தொடர்ந்தும் சென்னைக்குச் செல்லும் ரயில் கிளம்பி விட்டது..

ரவிச்சந்திரன் தளரவில்லை.. ரயில்வே பாதையை ஒட்டிக் காரை விரட்டினான்.. ரயிலை முந்திக் கொண்டு அடுத்த ஸ்டேஷனை அவன் அடைந்தால் அங்கே மகேந்திர பூபதியின் கார் நின்று கொண்டிருந்தது..

“திருவனந்தபுரத்தில இருந்து டிரெயினில் வருகிறோம்.. வெயிட் பண்ணுன்னு மகேந்திரன்சார் ஃபோன் பண்ணினார்..” என்றான் டிரைவர்..

“க்விக்.. நீயும் நானும் டிரஸ் சேன்ஜ் பண்ணியாகனும்..” காருக்குள் புகுந்தான் ரவிச்சந்திரன்..

அடுத்த சில நிமிடங்களில் ரவிச்சந்திரனின் உடைக்கு மாறியிருந்த டிரைவர் ரவிச்சந்திரனின் காருட்ன் திருவனந்தபுரத்திற்கு பறக்க.. டிரைவரின் சீருடையுடன் தலையை மறைத்த தொப்பியுடன் மகேந்திரனின் டிரைவராக மாறிக் காத்திருந்தான் ரவிச்சந்திரன்..

மயங்கிக் கிடந்த நந்தினியுடன் மகேந்திரனும் அபராஜிதனும் ரயிலை விட்டு இறங்கினார்கள்.. எதிர்பட்டுக் கேள்வி கேட்டவர்களிடம் அவளுக்கு உடல் நலம் சரியில்லை என்பதால் அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் கதை சொல்லியபடி காரை நெருங்கி அவளை பின் பக்க சீட்டில் தூக்கிக் கடாசினார்கள்.. அவர்கள் இருந்த பரபரப்பில் கார் டிரைவரைக் கவனிக்கவில்லை.. காரில் ஏறிய மகேந்திரன் அதிகாரமாக..

“கன்யாகுமரி ஃபார்ம் ஹவுஸுக்கு காரை ஓட்டு..” என்றான்..

ரவிச்சந்திரன் திருவந்தபுரத்தை நோக்கிக் காரை ஓட்ட ஆரம்பித்தான்..

அத்தியாயம் 254

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள்.. மகேந்திரனோ ஆத்திரக்காரன் மட்டுமல்ல.. முரடன், மூர்க்கன், ரௌடி, பொறுக்கி, இத்யாதி, இத்யாதி.. இவனுக்கு மட்டுப்பட்ட புத்தி கூட இல்லை.. என்னடா கன்யாகுமரிக்கு காரை ஓட்டச் சொன்னால் கார் பாதை மாறித் திருவனந்தபுரத்துக்குப் போகும் பாதையில் ஓடுகிறதே என்று கவனிக்காமல் அபராஜிதனிடம் வாய் வளர்ப்பதிலேயே குறியாக இருந்து விட்டான்..

மகேந்திரனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அபராஜிதன் படு புத்திசாலி.. ஆணவம் தலைக்கேறும் போது எப்பேற்பட்ட புத்திசாலியாக இருந்தாலும் மண்ணைக் கவ்வி விடுவான் எனும் போது அபராஜிதன் எம்மாத்திரம்..?

அவன் ஆனானப்பட்ட ரவிச்சந்திரனின் காதலியையே கடத்தி விட்டோம் என்ற இறுமாப்புடன் இருந்தான்.. எப்பாடு பட்டாவது நந்தினியின் மனதைக் கவர்ந்து ரவிச்சந்திரனை வென்று விட வேண்டும் என்று வன்பாடு பட்டான்.. அந்தவகையில் நந்தின கெட்டிக்காரியாக இருந்தாள்..

உயிருக்குயிராய் காதலித்த ரவிச்சந்திரனுக்கே பதில் சொல்லாமல் தண்ணீர் காட்டியவள் அபராஜிதனைத் திரும்பிக் கூடப் பார்க்க வில்லை.. அபராஜிதனின் வன்மம் அதிகரித்தது.. அவனுக்குக் கிடைக்காத நந்தினி ரவிச்சந்திரனுக்கும் கிடைத்து விடக் கூடாது என்று மகேந்திர பூபதியிடம் காட்டிக் கொடுத்து விட்டான்..

காட்டிக் கொடுத்தவன் சும்மாவும் காட்டிக் கொடுக்கவில்லை.. பெரும்தொகையைக் கொடுக்க வேண்டும் என்று பேரம் பேசிவிட்டுத்தான் காட்டிக் கொடுத்தான்.. இலவசமாய் தகவல் சொல்ல அவன் என்ன ஏமாளியா..? மகேந்திரன் என்ன நந்தினியின் மீது உள்ள காதலினாலா அவளை அடையத் துடிக்கிறான்..? இல்லையே.. அவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் அவனை மறுத்து விட்டாள் என்பதை கன்யாகுமரி வாழ் மக்கள் அறிந்து விட்டால் அவனது கௌரவம் என்னாவது என்ற கொதிப்பினால்தானே அவளை அடையத் துடிக்கிறான்.. தாலிகட்டி மனைவியாக்கிக் கொண்டதும் அவளுக்குப் பூப்போட்டு ஊஞ்சலில் உட்கார வைத்து ஆட்டி விடப் போகிறானா என்ன..? பெல்ட்டைக் கழட்டி விட்டு விளாசப் போகிறான்.. துப்பாக்கிக் குண்டுகளால் பொத்தல் போடப் போகிறான்.. கன்யாகுமரியில் நந்தினி

அலறித் துடிக்கும் குரல் வயநாட்டிலிருக்கும் ரவிச்சந்திரனின் உயிரைத் துடிக்க வைக்க வேண்டும்.. அவன் விடும் ரத்த கண்ணீரைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகும் அவந்திகா குடும்பத்தார் ஆனந்தக் கண்ணீர் விட வேண்டும்.. அபராஜிதனுக்கு அதுதான் வேண்டும்.. ரவிச்சந்திரனை ஆட்டி வைக்கப் போகும் மமதையில் இருந்த அபராஜிதனும் கார் பாதை மாறிப் பறந்ததைக் கவனிக்கவில்லை.. அவன் ரவிச்சந்திரனை வெற்றி கொண்டு விட்ட பெருமையைப் பேசிக் கொண்டிருந்தான்.. அவன் காட்டிக் கொடுக்கா விட்டால் நந்தினி மகேந்திரன் கையில் சிக்கியிருக்க மாட்டாள் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி மகேந்திரனின் கோபத்தையும் ரவிச்சந்திரனின் கோபத்தையும் கிளறி விட்டுக் கொண்டிருந்தான்.. நந்தினி கண் விழித்து விட்டதை அறிந்ததும் அவளிடமும் வம்பிழுத்துக் கிளம்பியவனை எங்கிருந்தாலும் கம்மாண்டர் என்னைக் காக்க வருவான் என்ற ரீதியில் வசனம் பேசிக் கடுப்பைக் கிளப்பி விட்டாள் நந்தினி.. இப்போது மகேந்திரனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு வரச்சொல் உன் கம்மாண்டரை என்று தோள் தட்டியதும்.. வந்தேன், வந்தேன் என்று அபயக் கரம் நீட்டி நந்தினியை

ரட்சிக்க டிரைவர் வேடத்தைக் கலைத்து வெளிப்பட்டு விட்டான் ரவிச்சந்திரன்..

“அத்.. அத்.. அத்.. அத்..”

ஊஹூம்.. அந்த இரண்டு எழுத்துக்களை தாண்டவே மாட்டேன் என்று அடம் பிடித்தது அபராஜிதனின் நாக்கு.. இவ்வளவு நேரமும் வீர வசனம் பேசிய சூராதி சூரன் இவன்தானா என்று தலையிலடித்துக் கொள்ளலாம் போல இருந்தது நந்தினிக்கு.. அவனும் அத்தான் என்று சொல்லி விடுவான் என்று ஆனமட்டும் உற்றுக் கேட்டாள்.. அபராஜிதனால் அத்தான் என்ற நான்கு எழுத்துக்களை ஒன்று கூட்டி ஒரே வார்த்தையாய் உச்சரிக்கவே முடியவில்லை..

“டேய்.. சிநேகிதத் துரோகி.. இங்கேயும் வந்து விட்டாயா..?”

மகேந்திரன்தான் சவுண்டு விட்டான்... அவன் நந்தினி இருக்கும் சீட்டின் பக்கம் பாய்ந்து அவளது கூந்தலைப் பிடிக்க முயற்சி செய்வதற்குள் அவனது பின்னந்தலை பிடறி முடியைக் கொத்தாகப் பிடித்துக் காரை விட்டு இழுத்துக் கீழே தள்ளி விட்டான் ரவிச்சந்திரன்.. அவன் திரும்பிப் பார்ப்பதற்குள் தானாகவே காரை விட்டு இறங்கி ஓடிப் போய் விட்டான்

அபராஜிதன்.. மணலில் உருண்டு கிடந்த மகேந்திரனுக்கும்.. ரவிச்சந்திரனுக்கும் இடையே கை கலப்பு ஏற்பட்டது.. பார்க்கத்தான் வாட்ட சாட்டமாக இருந்தான் மகேந்திரன்.. ரவிச்சந்திரனின் ஒரு அடியைக் கூட எதிர் கொள்ள முடியாமல் சுருண்டு விட்டான்..

'இல்லாத மனுஷங்களைத்தான் பெல்ட், துப்பாக்கின்னு கொடுத்துக் கட்டி மிரட்டுவான் போல..' நந்தினிக்கு வெறுப்பாக இருந்தது..

"நான் சிநேகித துரோகியில்லைடா மகேந்திரா.. உனக்காக உன் அம்மா நந்தினியைப் பெண் கேட்டதைப் போல எனக்காக அவளை என் அம்மா பெண் கேட்டாங்க.. இதிலே துரோகம் எங்கேயிருந்து வந்தது..?"

"அவ வீட்டில யாருக்குடா பெண் கொடுக்க ஒப்புக்கிட்டாங்க..?"

"உனக்குத்தான் பெண் கொடுக்கப் போகிறதா என் அம்மாவிடம் மறுப்புச் சொல்லிட்டாங்க.. இல்லைன்னு சொல்லலை.. என் அம்மாவும் விட்டுக் கொடுத்து விட்டு ஊமையாய் வந்துட்டாங்க.. நானும் எதையும் நினைக்காமல் உன்னிடம் பேச வந்தேன்.. நீ என்னடா பேசினாய்..? உன்

அம்மா பழி வாங்கத்தான் நந்தினியைப் பெண் கேட்டதாகச் சொன்னாய்.. உனக்கு அவள்மீது விருப்பமில்லை என்றாய்.. உன் அம்மாவுக்காக நந்தினியை மேரேஜ் பண்ணிக் கொடுமை படுத்தப் போவதாக என்னிடமே சபதம் செய்தாய்.. அதற்கு மேலும் அவளை உன் கையில் ஒப்படைப்பேனா..?"

"நீ யார் அவளை என்னிடம் ஒப்படைக்க..?"

"அவளைக் காதலித்தவன், காதலிக்கிறவன், என் வாழ்நாள் முழுவதும் காதலிக்கப் போகிறவன்.. அவள் மீது குண்டூசி படக்கூட அனுமதிக்க மாட்டேன்.. நீயோ கொலைவெறியுடன் காத்திருந்தாய்... அவளது நிழலைக்கூட உன்னை நெருங்க விட்டு விடுவேன் என்றா நினைத்தாய்..? நான் ரவிச்சந்திரன்டா.. நந்தினி என் காதலி..!"

நந்தினிக்கு பிரமிப்பாக இருந்தது.. ரவிச்சந்திரனின் மீது அவளது மனதில் இருந்த அனைத்து சந்தேகங்களும் விலகி ஓடிவிட அங்கே காட்டாற்று வெள்ளமாக காதல் பெருக்கெடுத்தது.. அவனைக் கட்டியணைத்து முத்தமிடத் துடித்தாள்.. அவளைக் காத்து நின்ற அவனது ஆண்மையின் காவலில் கர்வம் கொண்டாள்..

“இதையெல்லாம் நேருக்கு நேர் நின்று நீ பேசி ஜெயித்திருக்கனும்.. நான் இந்தியாவில் இல்லாத நேரமாகப் பார்த்து எனக்கு நிச்சயம் செய்த பெண்ணை வயநாட்டுக்குக் கடத்திக் கொண்டு போய் உன் கட்டுப் பாட்டுக்குள் வைத்து உன்னைக் காதலிக்க வைத்தவன்தானேடா நீ..! இதுவாடா ஹீரோத்தனம்.. இது வில்லன் செய்கிற வேலைடா..”

“யாரைடா நான் கடத்திக் கொண்டு போனேன்..? உன்மீது ஆசைப்பட்டு உனக்காக காத்திருந்தவளையா கடத்திக் கொண்டு போனேன்..? உன்னை மேரேஜ் பண்ணிக்கிறதுக்குப் பதில் செஞ்சிக் கோட்டை உச்சியிலிருந்து குதித்து செத்து விடலாம்ன்னு சூசைட் அட்டெம்ட் பண்ணப் போனவளைக் காப்பாற்றி என்னுடன் அழைத்துக் கொண்டு போனேன் மகேந்திரா.. நந்தினியை உனக்காக நிச்சயிக்கப்பட்ட பெண் என்று இன்னொரு முறை சொல்லாதே.. தயவு தாட்சண்யம் பார்க்காமல் உன்னைக் கொன்று விடுவேன்.. இப்போது அவள் எனக்காக பிக்ஸ் செய்யப்பட்ட எனது வுட்-பி.. அவளுடைய பேரண்ட்ஸ் உனக்கு பெண் கொடுக்க முடியாது என்று தகவல் சொல்லி விட்டு எனக்குப் பெண் கொடுக்க என் பேரண்ஸிடம் சம்மதம் சொல்லிட்டாங்க.. எங்க மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியாச்சு..

நெக்ஸ்ட் மன்த்ல வயநாட்டையே கலக்கி நந்தினியை மேரேஜ் பண்ணிக்கப் போகிறேன்.. மறந்தும் அவள் பெயரைக் கூடச் சொல்லி விடாதே.. இந்த ரவிச்சந்திரனின் கோபம் எப்படிப்பட்டதுன்னு உனக்குத் தெரியுமோ என்னவோ.. உன் அப்பாவுக்கு நன்றாகவே தெரியும்.. என் அம்மாவுக்கு உன் அம்மா ரிலேடிவ்ங்கிற ஒரே ரீசனுக்காக கன்யாகுமரியில் என் பிஸினெஸ்ஸை எக்ஸ்டெண்ட் பண்ணாம விட்டு வைத்திருக்கிறேன்.. நான் நினைத்தேன்னா ஒன் செகண்ட் போதும்.. உன்னையும் உன் பிஸினெஸ்ஸையும் இருக்கும் இடம் தெரியாம ஆக்கி விடுவேன்.. செய்து காட்டவா..? கன்யாகுமரியில் 'யாழ்' ஹோட்டலை திறந்து காட்டவா..? என் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனியின் பிரான்ச் ஒன்றை அங்கே நிறுவிக் காட்டவா..? எப்படி உத்தேசம்..?"

பேச்சு மூச்சில்லாமல் அடங்கி விட்டான் மகேந்திரன்..

"ச்சீ.." என்ற ஒற்றைச் சொல்லுடன் அவனை விட்டு விலகி நடந்து நந்தினியின் அருகே வந்தவன் அவளை உறுத்துப் பார்த்த பார்வையில் நந்தினி அடங்கி விட்டாள்..

"பாஸ்.."

“பேசாதே.. என்னை பாஸ்ன்னு கூப்பிடாதே.. காதலிக்கிறவன் யாராய் இருந்தாலும் உன் மனது மாறாம இருந்தாத்தான் அது காதல்.. எதுக்குடி ‘யாழ்’ ஹோட்டலை விட்டு ஓடி வந்த..? ஏன் சென்னைக்குப் போகிற டிரெயினில ஏறின..?”

“எனக்குத் தெரியாது பாஸ்..”

“நான் உனக்கு வில்லன்..! இதோ இந்த மணலில் விழுந்து கிடக்கிறான் பார்.. இவன் உனக்கு ஹீரோ..! அப்படித்தானே..?”

“ச்ச்சீ.. இவன் ஹீரோவா..?”

“இல்லையா..? வேற யாருடி உனக்கு ஹீரோ..”

“நீங்கதான்..”

துக்கம் நெஞ்சில் புரள குரல் கம்மக் கெஞ்சினாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் மனம் இளக வில்லை.. அவன் விழிகளில் தெரிந்த கடுமையும் குறையவில்லை..

“நானா..?” கோபத்துடன் உரக்க நகைத்தான்..

நந்தினி நடுங்கிப் போனாள்... அவருக்கு அன்னியனாகிவிட்ட காதலனை அச்சத்துடன் பார்த்தாள்.. அவன் அவளை வெறுத்து விடுவானோ.. விலகிப் போய் விடுவானோ.. அவளை மன்னிக்கவே மாட்டானோ..

"நான் பெல்ட் மன்னன்னு நினைத்து ஓடி வந்து பெல்ட் மன்னனிடமே சிக்கியிருக்கிறயே.. இதுதானா என்மீது உனக்கிருந்த நம்பிக்கை..? நான் அவனில்லைன்னு உன்னிடம் தோப்புக்கரணம் போட்டுச் சொல்லிக் கொண்டேயிருக்கனுமா..? அப்படிச் சொன்னால்தான் நம்புவியா..?"

"அஜந்தா ஏதோ சொல்ல வந்தாள் பாஸ்.. அவளை என்னிடம் பேச விடாம நீங்க தடுத்துக்கிட்டே இருந்தீங்க.. மோகன் வேறு பெல்ட், துப்பாக்கி அது இதுன்னு சொன்னான்.."

"அவன் சொன்னா நான் பெல்ட் மன்னனாகி விடுவேனா..?"

"அவனோட அப்பா ஆனந்தன் சாரும் சொன்னார் பாஸ்.. உங்களுக்கே தெரியும்.. அவர் பொய் சொல்ல மாட்டார்.."

"அவர் சொன்ன மெய் என்னன்னு முழுதாக் கேட்டியா..?"

துளைத்த அவனது பார்வையில் மண்டியிட்டு அவன் காலடியில் சரிந்தாள் நந்தினி.. மனமிளகாமல் அவளை விட்டு விலகி நடக்க யத்தனித்த கால்களை பதட்டத்துடன் முகம் பதித்துக் கதறினாள்..

"நான்தான் பேக்கு.. நந்து சொன்னதைப் போல யோசிச்சுப் பார்க்காம உங்களை விட்டு வந்துட்டேன்.. நீங்க அப்படியில்லையே பாஸ்.. உங்களை விட்டு விலகி நான் நடப்பதை அலோவ் பண்ண மாட்டிங்களே பாஸ்.. உங்க பாதுகாவலில் என்னை வைத்திருப்பீங்களே பாஸ்.. இப்ப விலகப் பார்க்கறிங்களே.. இது நியாயமா..?" நந்தினியின் கதறலில் அசையாமல் நின்றவன் குனிந்து அவளது தோள்களை முரட்டுத்தனமாகப் பற்றி எழுப்பி நிறுத்தினான்.. கலங்கி அழுத அவளது விழிகளைத் தீர்க்கமாகப் பார்த்தான்... தீட்சண்யமான அவனது பார்வையை எதிர் கொள்ள முடியாமல் தடுமாறினாலும் அசையாமல் அவன் முகம் பார்த்தபடி அவள் நின்றாள்.. அவளது பார்வை என்னை மன்னிப்பாயா என்று இறைஞ்சியது.. அவளது தோள்களை விட்டுக் கைகளை விலக்கியவன் இரு கைகளையும் விரித்து

இமைகளை மூடித்திறந்து பார்வையால் அவளை அழைத்தான்.. கடலில் கலந்த நதியாய் படு வேகத்துடன் அவனது கைகளுக்குள் புகுந்து அவனது இறுக்கமான அணைப்பிற்குள் அடைக்கலமானாள் அவள்..

“மை பாஸ்..”

“என் நந்தினி..”

இருவரின் இறுக்கமான அணைப்பைத் தடை செய்ய முடியாமல் மணலில் வீழ்ந்து கிடந்தான் அபராஜிதன்.. சாலையில் ஒரு கார் விரைந்து வந்து ரவிச்சந்திரனின் பக்கத்தில் நின்றது.. காரிலிருந்து இறங்கி வந்த டிரைவரிடம் அபராஜிதனைக் காட்டிய ரவிச்சந்தின்..

“அவனை அள்ளிப் போட்டுக் கொண்டு போய் கன்யாகுமரியில் அவன் வீட்டில் விட்டு விடு.. கார் சாவியை அவன் வீட்டில் ஒப்படைத்து விட்டு நைட் ஃபிளைட் பிடித்து பெங்களூர் போய் விடு.. அங்கே உனது யூசுவல் வொர்க்கை கண்டினியு பண்ணலாம்.. உனக்கு நான் கொடுத்த அசைன்மெண்ட் இன்றுடன் முடிவடைகிறது.. என் கம்பெனியில் நீ சேர்வதற்கான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் இந்த வீக் எண்டில் உன் ஈ மெயிலுக்கு அனுப்பப் படும்..

பெஸ்ட் ஆஃப் லக்.. பை..” என்று சொல்லி விட்டு நந்தினியின் தோளைச் சுற்றிக் கை போட்டு அனைத்தபடி சாலையில் நின்றிருந்த அவனது காரை நோக்கி நடந்தான்..

அத்தியாயம் 255

“**ஹௌ** இஸ் இட் பாஸிபிள்..?”

வெறி பிடித்தவளைப் போலக் கத்தினாள் தரங்கிணி.. அவள் முன்னால் ரவிச்சந்திரன் - நந்தினியின் திருமண அழைப்பிதழ் கிடந்தது.. அதைப் பார்க்கப் பார்க்க அவளுடைய ஆங்காரம் அதிகரித்தது..

“ஈஸி தரங்கிணி.. இந்தக் கோபத்தினால் எந்த விதக் கெயினும் ஏற்படப் போவதில்லை..” என்றபடி உள்ளே வந்த தனபாலன் குனிந்து தரையில் கிடந்த திருமண அழைப்பிதழை எடுத்து அழகு பார்த்தான்..

தங்க முலாம் பூசப்பட்ட எழுத்துக்களைக் கொண்ட திருமண அழைப்பிதழை விரிக்கும் போதே நாதஸ்வர இசை வெளிப்பட்டது.. கூடவே வந்த சுகந்த நறுமணத்தை சுவாசித்து ரசித்தவன்..

“ஒவ்வொரு இன்விடேஷனும் ஒவ்வொரு டைப்பாம்.. இதை டெக்கரேட் பண்ண நியுஜெர்ஸியிலிருந்து டிசைனர்ஸ் வந்து போனாங்களாம்.. பின்னே.. தி கிரேட் பிஸினெஸ்

ஸ்டார் ரவிச்சந்திரனோட மேரேஜ் இன்விடேஷன்னா சும்மாவா..? தூள் கிளம்புமில்ல..” என்று சிலாகித்தான்..

“கொஞ்சமாவது உனக்கு கோபம் வருகிறதா அண்ணா..? உன் தங்கையை வேண்டாம் என்று சொல்லி விட்டு எவளோ ஒரு தமிழ்நாட்டுப் பெண்ணை அவன் மேரேஜ் பண்ணிக்கப் போகிறேன்னு இன்விடேஷன் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான்.. நீ என்னடான்னா ரோஷமில்லாம அவன் பொருமையைப் பத்திப் புகழ்ந்து பேசிக்கிட்டு இருக்கிறயே..”

“இல்லாததை சொல்லி விட்டேனா..?”

“என்னைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா..?”

“உன்னைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது..? உன்னை ரவிச்சந்திரன் மேரேஜ் பண்ணிக்குவான்னு நான் எக்ஸ்பெக்ட் பண்ணினதே இல்லை.. எனக்கு அவனைத் தெரியும்.. உன்னையெல்லாம் அவன் செலக்ட் பண்ணவே மாட்டான்..”

“நான் உன் தங்கை அண்ணா..”

“ஸோ வாட்..? அதற்காக இல்லாத ஒன்றை இருப்பதாக இமாஜின் பண்ணிக் கொள்ள முடியுமா..? இல்லை உனக்காக

அவன் ஃபிரண்ட்ஷிப்பை கட் பண்ணிக்கத்தான் முடியுமா..? லுக் தரங்கிணி.. உன் அண்ணன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு என்ன கிடைத்து விடப் போகிறது..? அதுவே ரவிச்சந்திரனின் ஃபிரண்ட் என்றால் அதற்கான மதிப்பே வேறு.. இன்றைக்கு பிஸினெஸ்ஸில் நான் இந்த பொஸிஷனுக்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்கு ரவிச்சந்திரனும் நானும் காலேஜ் மேட்ஸ், ஃபிரண்ட்ஸ் என்ற ஐடெண்டியை யூஸ் பண்ண வேண்டிய இடங்களில் நான் யூஸ் பண்ணியது தான் முக்கிய காரணம்.. அண்டர்ஸ்டாண்ட்.. எனக்கு உன்னைவிட என் பிஸினெஸ்ஸில் எனக்கிருக்கும் பொஸிஷனைக் காப்பாற்றிக் கொள்வது மட்டும்தான் முக்கியம்..” தனபாலன் டையை சரி செய்தபடி வெளியே சென்று விட்டான்.. கோபம் குறையாத தரங்கிணி பெற்றவர்களிடம் முறையிட்டாள்..

கழுத்திலிருந்த வைர நெக்லெஸை நாசுக்காய் துடைத்தபடி கணவரை ஏறிட்டாள் தரங்கிணியின் தாய்..

“ரவியிண்ட விவாகத்துக்கும் ரிசப்ஷனுக்கும் அணிந்துக்கிட்டுப் போக புதுசா டயமண்ட் ஜ்வல்ஸ் வாங்கனுமல்லோ.. வெர்ல்டு லெவல்ல மனுஷங்க வருவாங்கல்லோ.. ஆ மனுஷங்க மத்தியில நம்மட பிரஜ்டிஜ்

குறையாம இருக்கனுமெண்டா புது ஜ்வல்ஜ் வாங்கியே ஆகனுமல்லோ.. எனிக்கு அதி வேணும்.. கேட்டே..''

''ஈ திவசத்திலேயே நாம மலபார் போயி.. நினக்குப் பிடித்தமான டயமண்ட் ஜ்வல்ஜ் வாங்கி.. சந்தோஷம்தானே..''

''வளர சந்தோஷம்..''

மகளின் மனத்தாங்கலை கண்டு கொள்ளாமல் அவர்கள் இருவரும் கொஞ்சிக் கொண்டதில் ஆத்திரம் மிகுதியான தரங்கிணி அங்கிருந்த சோபாவை எட்டி உதைத்து தனது சினத்தை வெளிப்படுத்தினாள்..

''தெற்று (தவறு) மோளே..'' தரங்கிணியின் தந்தை கண்டித்தார்..

''ஆ ஆளுக்கும் ஆ பெண்குட்டி நந்தினிக்கும்தான் விவாகம் அச்சா.. நிங்கட மோளுக்கும் ஆ ஆளுக்குமல்ல.. ஆ விவாகத்த அட்டெண்ட் பண்ணனுமெண்டு விஜாரம் (நினைப்பு) கொள்வதே தெற்று.. இதில அம்மைக்கு டயமண்ட் ஜ்வல்ஜ் போதாது எண்டு புதிதா ஜ்வல்ஸ் வாங்க மலபார் போகனுமோ..?''

“ஆம் மோளே..! எங்களிக்கு ரவியிண்ட விவாகத்தில நாங்களும் கலந்து கொண்டோமெண்ட பெயர் முக்கியமல்லோ.. ஆ ரவியோட ரிலேட்டிவ் எண்டு வெர்ல்டு லெவல் பிஸினெஸ் மேகசின்களில் கவர் ஸ்டோரி வருமல்லோ.. ஆ கவர் ஸ்டோரியில தனபாலனிண்ட பேரண்ட்ஸ் தி கிரேட் பிஸினெஸ் ஸ்டார் ரவிச்சந்திரனிண்ட ரிலேட்டிவ்ன்னு எழுதியாகனும் மோளே.. அதி நிண்ட சேட்டனுக்கு வளர முக்கியம்.. மனசிலாயி.. எந்தினா கரையூந்தே மோளே..?”

“அம்மை அச்சனுக்கு சேட்டன் மட்டும்தான் புத்திரனோ.. ஞான் ஆரானு..?”

“நீ எங்கட மோள்.. அதிக்கு எந்து செய்யனும்..? ரவியிண்ட விவாகத்த புறக்கணிக்கனுமோ..? அதால ஆருக்கு நஷ்டம்..? அவனுக்கோ..? அல்ல மோளே.. நிண்ட சேட்டனுக்கு பிஸினெஸ் வெர்ல்டில நஷ்டம்.. எங்களுக்கு ஈ கேரளத்து பந்துக்கள் மத்தியில பெகுமானம் நஷ்டம்.. நினக்கு அதிதான் இஷ்டமோ..?”

“அச்சா..”

“நோக்கு மோளே.. ரவியிட மனசில நினக்கு ஸ்தலம் உண்டுன்னு நீ பறஞ்.. ஞானும் நிண்ட அம்மையும் அதில சம்சயம் கொண்டு.. ஓரப்பான (நிச்சயமாக) அங்ஙன இருக்காதெண்டே விஜாரம் கொண்டு.. ஆ ரவிச்சந்தினாவது நின்னை விவாகம் கழிப்பதாவது.. நீ காண்பது சொப்பனமெண்டு நாங்கள் அறியும்..”

அது எப்படி தனபாலனும் அவளைப் பெற்றவர்களும் ஓர் மனதாக ஒருமித்த கருத்தையே சொல்கிறார்கள்.. ஏன்..? தரங்கிணிக்கு ரவிச்சந்திரனை மணப்பதற்கான தகுதி இல்லையோ..

“ஈ வினாவுக்கு ஞான் எந்து பதிலைப் பறயும் மோளே.. ரவிச்சந்திரனுக்குப் பிரியமான பெண்குட்டியை அவன் விவாகம் கழிச்சு.. இதில மத்தவங்க பறய வல்லதும் இல்லையல்லோ..”

“என்னை விட ஆ நந்தினிக்குட்டி அதிரூப சுந்தரியோ..?”

“ரவிச்சந்திரனிட கண்களுக்கு ஆ பெண்குட்டி அதிரூப சுந்தரியாக தோணி..”

“அச்சா.. நிங்களுக்கு ஞான்தான் மோள்.. ஆ நந்தினிக் குட்டியல்ல..”

“அறியும் மோளே.. எங்களிக்கு உன்னை விட ரவிச்சந்தினிட பந்தம்தான் அதி முக்கியம்.. கேட்டே.. எங்களிடம் சம்சாரிச்சதைப் போல ஈ வயநாட்டில மத்த பெந்துக்கள் மத்தியில சம்சாரிக்காண்டாம் மோளே.. நீ சம்சரிக்கறத ரவிச்சந்திரன் அறிஞ்ஞால் எங்கட பந்தமே வேண்டாமெண்டு விலகிப் போயி.. எனிக்கு அதில இஷ்டமில்லையல்லோ.. நீயா, ரவிச்சந்திரனிட பந்தமா எண்ட கேள்வி வந்தா ரவிச்சந்தினிட பந்தம்தான் முக்கியமெண்டு நிண்ட சேட்டன் பறயும்.. அம்மையும் ஞானும் அதிதான் பறயும்.. அதினால நீ வல்லதும் சம்சாரிக்காம அமைதியா இருக்கனும் மோளே.. கேட்டே..”

இதைவிட வலி உண்டோ..? பெற்றவர்களுக்கும் அவளுடன் பிறந்தவனுக்கும் அவளைவிட ரவிச்சந்திரனின் உறவும், நட்புமே முக்கியமாய் இருக்கின்றன... தரங்கிணியின் கோபத்தை எவரும் லட்சியம் செய்யவில்லை.. அதைவிட அவள் ரவிச்சந்திரனுக்கு எதிராக பேசினால் அவளையே அவளது வீடு விலக்கி வைத்து விடுமென்று சொல்லாமல் சொல்லி எச்சரிக்கை செய்து விட்டார்கள்..

தரங்கிணி வாய் மூடிக் கொண்டாள்.. அந்த ஊரில் இருந்தால் அவள் மனது ஒருநிலையில் இருக்காது என்று

காரணம் சொல்லி அவளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டான் தனபாலன்.. அந்த முடிவை அவன் தனித்து எடுத்தானா இல்லை பெற்றவர்களின் சொல்படி எடுத்தானா என்ற சந்தேகத்துடன் மனம் கனக்க வெளிநாட்டுக்கு பறந்து விட்டாள் தரங்கிணி..

ஒன்று விட்ட அத்தை மகளே இந்த அளவுக்கு அட்டூழியம் பண்ணும் போது பிறந்ததில் இருந்து வயநாட்டு அரண்மனையிலேயே வாசம் செய்து வரும் சொந்த அத்தை மகள் அஜந்தா எந்த அளவுக்கு ஆட மாட்டாள்..?

“அம்மே.. இது அநியாயம்..” அவள் அலறிய அலறலில்..

“ஞான் எந்து செய்யும் அம்மே..” என்று யாழினியிடம் சரணடைந்து கண்ணீர் விட்டாள் அவந்திகா..

“ஞானும் எந்து செய்யும் அவந்திகா..? ஈ நந்தினிக்குட்டி ஆரானு எண்டு ஞான் வினவினா எண்ட பந்தமானு எண்டு வீணா பறஞ்.. ஈ நந்தினிக் குட்டியும் ராஜ பாரம்பர்யத்தில ஜனிச்சவளெண்டு பறஞ்.. எனிக்கு இதி தெரியாதல்லோ..”

அங்கலாய்த்த யாழினிக்கு நந்தினிக்கே இது தெரியாது என்று தெரியாது.. திருவனந்தபுரத்தில் மகேந்திர பூபதியிடமிருந்து அவளை மீட்டுக் குண்டுக்கட்டாகத் தூக்கிக்

காரில் போட்டுக் கொண்டு புயல் வேகத்தில் வயநாட்டுக்கு திரும்பி விட்டான் ரவிச்சந்திரன்..

வீணாவிடம் நந்தினியை ஒப்படைத்தவன்.. "இவ நம்ம அரண்மனையை விட்டு வெளியே கால் வைக்கக் கூடாது அம்மா.. ரூமில போட்டு பூட்டி வையுங்க.." என்று உறுமினான்..

"ஏண்டா இப்படிப் பேசற..? என்னதான் நடந்தது..?"

"என்னென்னவோ நடந்து விட்டதும்மா.. இவ இருக்குமிடத்தை அபராஜிதன் காட்டிக் கொடுத்து விட்டான்.."

"யாருக்கு..?"

"மகேந்திர பூபதிக்கு.."

"கடவுளே..! அவன் எப்போது இந்தியாவுக்கு வந்தான்..?"

"லாஸ்ட் வீக் வந்திருக்கான்ம்மா.."

"இவளை கண்டு பிடித்து விட்டானா..?"

"கடத்தியே விட்டான்.."

"என்னது..?"

அதிர்ந்து போன வீணா தன்னிச்சையாக நந்தினியை இழுத்து அணைத்துக் கொண்டாள்.. பருந்திடமிருந்து குஞ்சைக் காப்பாற்ற சிறகுகளுக்கடியில் பொத்திப் பாதுகாக்க முயலும் தாய்ப் பறவையின் அணைப்பாக அந்த அணைப்பு இருந்ததில்..

"அத்தை.." என்று நெகிழ்ச்சியுடன் விம்மினாள் நந்தினி..

தேவதையின் காருண்யமும் வனப்பும் கொண்ட அந்த மகாராணியின் மனதில் நந்தினி மீது இப்படியொரு ஆழ்ந்த பற்றுதலும் பாசமும் இருக்கின்றனவா..?

'இந்த அன்புக்கும் பாசத்திற்கும் நான் தகுதியானவளா..?' அவளுக்குள் தாழ்வுணர்வு வந்தது..

"என் கண்ணம்மா... உனக்கு எதுவும் ஆக வில்லையே.."

"இல்லை அத்தை.. உங்க மகன் சரியான சமயத்தில எண்ட்ரி கொடுத்து என்னைக் காப்பாற்றி விட்டார்.."

"அந்த மகேந்திரன் படுபாவி நந்தினி.. உனக்கு அவனைப் பற்றித் தெரியாது.."

“உண்மைதான் அத்தை.. எனக்கு யாரைப் பற்றியும் தெரியாமல் போய் விட்டது..” குற்ற உணர்வு குறுகுறுக்க ரவிச்சந்திரனைப் பார்த்தபடி சொன்னாள் நந்தினி..

அவன் ஊன்றிப் பார்த்த பார்வையில் அவளது கண்களும் கன்னமும் கண்ணீரிலும் வெட்கத்திலும் சிவந்தன..

“நீ என்னடா செய்வ..? பச்சை மண்ணு.. மனுஷங்க குணத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்..?” வீணா நந்தினியை தோளில் சாய்த்து சமாதானப் படுத்தினாள்..

“இவளா பச்சை மண்ணு..? போங்கம்மா.. நீங்க வேற.. இவ என்னைக் கேட்ட கேள்விகளை நீங்க காது கொடுத்துக் கேட்டிருக்கனும்.. அசந்து போயிருப்பீங்க.. அவ்வளவு தெளிவான பொண்ணும்மா இவ.. பச்சை மண்ணாம்.. பச்சை மண்ணு..” கோபத்துடன் முறைத்தான் ரவிச்சந்திரன்..

இது போல அவனுக்கும் அவளுக்கும் சண்டை வந்தால் ‘பாருங்க அத்தை..’ என்று சிணுங்கியபடி வீணாவிடம் அடைக்கல் புகுந்து விடும் நந்தினி அன்று மலங்க மலங்க விழித்தபடி நின்றதில் வீணாவுக்கு பாவமாகி விட்டது..

“சும்மாயிருடா..” மகனை கடிந்து கொண்டவள் பாசத்துடன் நந்தினியின் முகத்தைக் கைகளில் ஏந்தி..

“பாருடா இவ முகத்தை..” என்று மகனிடம் சொன்னாள்..

“எல்லாம் பார்த்த வரைக்கும் போதும்..” தோள்களைக் குலுக்கினான் அவள் மகன்..

“குழந்தை முகம்டா இவ முகம்.. யாராவது ஏதாவது சொல்லியிருப்பாங்க.. அதை நம்பிக்கிட்டு உன்னைக் கேள்வி கேட்டிருப்பா.. அதுக்காக நீ கோபப்படுவியா..?” உள்ளதை உள்ளபடி அவள் கண்டுபிடித்து சொன்னதில்..

“அத்தை..” என்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் நந்தினி..

“இப்படிச் செல்லம் கொஞ்சியே என் அம்மாவை கைக்குள் போட்டுக் கொண்டாச்சு.. கெட்டிக்காரிதாண்டி நீ..”

“டேய்.. என்ன்ன்..ன..? என் மருமகளை என் முன்னாடியே வாடி, போடிங்கிற..? பிச்சுப் புடுவேன் பிச்சு..”

“அடேங்கப்பா.. இதுக்கு நான் பயப்படுவேனாக்கும்.. உங்களை அப்பா வாங்க, போங்கன்னுதான் கூப்பிடுகிறாரா..?”

“அது.. அது..”

“அதுதான் இது.. உங்களுக்கு ஒரு நியாயம்.. உங்க மகனுக்கு ஒரு நியாயமா.. வெல்டன் அம்மா..”

அங்கே சந்தோஷ ஊற்று பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது..

அத்தியாயம் 256

இளங்காலையின் இளம் வெயிலும் மலை நாட்டின் குளிர்ச்சியும் சேர்ந்த அதி அற்புதமான தட்ப வெப்பத்தை கேரளத்தில் மட்டுமே அனுபவித்து உணர முடியும் என்று சிலிர்த்துக் கொண்டாள் நந்தினி.. சுற்றிலும் இருந்த செடிகளின் அடர்த்தி வேரூன்றியிருந்த அகன்ற பெரும் தொட்டிகளை மறைத்ததில் அவை தொட்டிச் செடிகளைப் போல இல்லாமல் அழகிய தோட்டத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த பூச்செடிகளைப் போலவே இருந்ததில் மயங்கினாள்.. வளைவான கொடி வளைவுகளும் கொடி வீடுகளும் என வயநாட்டு அரண்மனையின் மொட்டை மாடித் தோட்டம் அவளுக்கு சொக்குப் பொடி போட்டு வசீகரித்து மனதை மயக்கியது..

‘ஆ சுந்தரன் ஜீவிக்கும் அரண்மனையின் மொட்டை மாடித் தோட்டமும் மயக்கிக் கைக்குள் போட்டுக் கொள்கிறதல்லோ..’

ரவிச்சந்திரனின் நினைவில் செல்லமாக இதழ்களை மடித்து வளைத்து அழகு காட்டினாள்..

தன்னந்தனிமையில் அவனைப் பற்றி நினைத்து அவனும், அவளும் மட்டுமே இருக்கும் மலரும் நினைவுகளை அசை போடத்தானே அவள் எவருக்கும் தெரியாமல் மறைந்து ஒளிந்து மொட்டை மாடியை நாடி வந்திருக்கிறாள்..

அவள் தேடும் தனிமை தோட்டத்தில் கிடைப்பதில்லை.. நிஷ்டூரப் பார்வையுடன் யாழினி வந்து விடுவாள்.. அவளது பார்வையையும் ஜாடைப் பேச்சுக்களையும் நந்தினியால் சகித்துக் கொள்ள முடியாது.. அருள்மொழிவர்மன் மனைவிக்கும் மேலே பன்மடங்கு கோபத்துடன் இருந்தார்... அவரது பார்வையின் தீட்சண்யத்தில் நந்தினியின் முதுகுத்தண்டு ஜில்லிட்டு விடும்.. அவள்தான் ரவிச்சந்திரனை மணக்கப் போகிறாள் என்பதை அவர் அறிந்து கொள்ளும் வரை அவர் அவளைப் பார்த்த பார்வையே வேறு.. பாசத்துடன் பார்க்காவிட்டாலும் குரோதத்துடன் பார்க்க மாட்டார்.. இப்போதோ அவருடைய அனைத்துச் சொத்தையும் கொள்ளையடிக்க வந்த கொள்ளைக்காரியைப் பார்ப்பதைப் போல அவளை கோபத்துடன் பார்த்துப் பயமுறுத்திக் கொண்டிருந்தார்.. யோகானந்தனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. சும்மாவே அவளுக்கு செவ்வரி ஓடும் சிவந்த கண்கள்.. இதில் நந்தினிதான் ரவிச்சந்திரனின் கரம் பற்றப்

போகும் மணவாட்டி என்பதை அவர் அறிந்து கொண்ட நாளிலிருந்து நந்தினியைக் கண்டாலே அவரது விழிகளில் ரத்தம் பாய்ந்து விடும்.. செக்கச் செவேனெ சிவந்த கண்களுடன் அவர் மீசையை முறுக்கிப் பார்க்கும் கொலை வெறிப் பார்வையில் அரண்டு போய் விடுவாள் நந்தினி.. அவந்திகாவின் தாக்குதல் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தது.. அவளது வாழ்வையே நந்தினி அழித்து விட்டாள் என்று நேரடியாகப் புகார் கூறி ஒப்பாரி வைத்தாள்... அதில் நந்தினிக்குள் குற்ற உணர்வு பெருக்கெடுத்தது.. அதை கண்டு பிடித்து விட்ட வீணா நந்தினியின் தலையில் கொட்டு வைத்து அந்த குற்ற உணர்வை விரட்டி விட்டு அவளை அவந்திகாவின் கண் பார்வையில் படாமல் மறைந்து இருக்கும்படி அறிவுறுத்தியிருந்தாள்... அபராஜிதனை அன்று பார்த்ததுதான்.. ரவிச்சந்திரனுக்கு பயந்து ஓடியவன் எங்கிருக்கிறான் என்ற தகவலே தெரியவில்லை..

அஜந்தாவின் ஆட்டம் அளவு கடந்ததாக இருந்தது.. அரண்மனையில் இருக்கும் பொருள்களை இழுத்துப் போட்டு உடைப்பதும் அதை ஏனென்று கேட்க வரும் ரவிவர்மனிடமும், வீணாவிடமும் வம்பு வளர்ப்பதுமாக அவள் இல்லத்தை யுத்தகளமாக்கிக் கொண்டிருந்தாள்..

ரவிச்சந்திரனை அஜந்தா இருக்கும் திசைப்பக்கம்கூட விடாமல் அடைகாத்து திசை திருப்பிக் கொண்டிருந்தாள் வீணா.. பெற்றவர்களைப் போல ரவிச்சந்திரன் பொறுமையாக இருக்க மாட்டான்.. கண், மண் தெரியாத கோபத்துடன் அடித்து நொறுக்கி விடுவான்.. அதுவரை அவன் அஜந்தாவின் மீது கை வைத்ததில்லை.. அதையே காரணமாகச் சொல்லி அவள் வழக்கு வைத்துத் திருமணம் வரை கொண்டு போய் விடுவாள் என்பதை தெளிவாக தெரிந்து வைத்திருந்தினால் மிரட்டலோடு நிறுத்திக் கொள்வான்.. இதுவரை பொறுமை காத்தவன் இப்போது பொறுமையைக் காற்றில் பறக்க விட்டு விட்டால் என்ன செய்வது..? அவன் அப்படிச் செய்ய வேண்டும் என்பது தானே அஜந்தாவின் திட்டம்.. அப்போதுதானே உடைகளைக் கிழித்து விட்டுக் கொண்டு, கை, கால் முகங்களில் ரத்த காயங்களுடன் தலைவிரி கோலமாக உறவினர்களின் முன்னால் நின்று அவளுக்கும், ரவிச்சந்திரனுக்கும் காதல் இருந்தது.. அவன் அவளைக் கைவிட்டு விட்டு எங்கிருந்தோ வந்த நந்தினியின் கரம் பிடிக்க நினைக்கிறான்.. தட்டிக் கேட்ட அஜந்தாவை தட்டி வைக்கிறான் என்று பழிபோட முடியும்..

அதற்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள் வீணா.. ரவிச்சந்திரனுக்கும்

நந்தினிக்கும் திருமணம் நடக்கப் போகும் நிலையில் அஜந்தாவின் குடும்பத்தை அரண்மனையை விட்டு வெளியேற்றவும் முடியாது.. ரவிவர்மனின் சொந்த பந்தங்கள் ஒன்று கூடி புறம் பேச ஆரம்பித்து விடுவார்கள்.. வீணா தான் பிறந்த தமிழ்நாட்டிலிருந்து மகனுக்குப் பெண் கட்ட வேண்டும் என்பதற்காக நாத்தனார் குடும்பத்தை அரண்மனையை விட்டுத் துரத்தி விட்டாள் என்று சொல்லி விடுவார்கள்.. தாய் மாநிலத்தின் பாசம் தமிழகத்திற்கு மட்டும் சொந்தமல்ல.. கேரள மக்களுக்கும் சொந்தமானதுதான்.. அத்தனை வருடங்களாக அவந்திகாவும் அவளுடைய குடும்பத்தினரும் செய்து வந்த அநியாயங்களும் அராஜகங்களும் மறக்கப் பட்டு விடும்.. இருக்க இடமில்லாமல் இருந்தவர்களுக்கு வீணா பெருந்தன்மையாக வயநாட்டு அரண்மனையில் இடம் கொடுத்து வாழ வைத்தாள்.. அவந்திகாவின் பிள்ளைகளை படிக்க வைத்தாள் என்பதையெல்லாம் நினைத்தும் பார்க்க மாட்டார்கள்.. அவந்திகா பிறந்து வளர்ந்த அரண்மனையை விட்டு விரட்டியடிக்கப் பட்டாள் என்ற பரிதாபம் மட்டுமே முதன்மையில் நிற்கும்.. வீணா அவந்திகாவை அரண்மனையை விட்டுத் துரத்தியடித்து விட்டாள் என்ற செய்தி கேரளம் முழுவதும் பரவி விடும்.. அது ரவிச்சந்திரனின்

பெருமையை பாதித்து விடும்... உலகளாவிய வியாபார வார, மாத, நாளிதழ்களிலும், உலக மொத்தத்தில் உள்ள டி.வி சேனல்களிலும் அவை செய்திகளாக பரவி விடக் கூடும்..

இந்தக் காரணங்களினால் அவந்திகாவின் குடும்பத்தை அந்தத் தருணத்தில் ரவிச்சந்திரன் வெளியேற்றி விடக் கூடாது என்று எச்சரித்து வைத்திருந்தாள் வீணா.. இப்பேற்பட்ட சூழலில் உள்ள வயநாட்டு அரண்மனைத் தோட்டத்தில் நந்தினி உலகி ரவிச்சந்திரனுடனான காதல் மலரும் நினைவுகளை அசை போட்டுவிட முடியுமா..?

ஆதலினால் தனிமை வேண்டிப் பதுங்கிப் பதுங்கி மொட்டை மாடித் தோட்ட த்திற்கு வந்து விட்டாள் நந்தினி.. ஏதோ ஒரு காரணத்தினால் அஜந்தாவும், அவந்திகாவின் குடும்பத்தாரும் மொட்டை மாடிப் பக்கம் வருவதில்லை.. ரம்ய மாலினியிடம் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது..

“வேறு ஒன்றுமில்லை நந்தினி.. ஓர்முறை அண்ணன் அத்தையையும் அவங்க குடும்பத்தையும் திட்டி வார்ன் பண்ணினப்போ உங்களையெல்லாம் சாட்சியே இல்லாம குளோஸ் பண்ண எனக்குத் தெரியாதுன்னு நினைத்துக்கிட்டு இருக்காதீங்க.. போகிற போக்கில் குளோஸ் பண்ணிக்கிட்டுப்

போய்க்கிட்டே இருப்பேன்னு கத்தி விட்டிருச்சு.. அதிலிருந்து இவங்க யாரும் மொட்டை மாடிப் பக்கம் போகவே மாட்டாங்க.. அங்கேயிருந்து தள்ளி விட்டு விட்டு கால் தடுமாறிக் கீழே விழுந்து விட்டதாச் சொல்லி விடுவாங்கங்கிற பயம்.. இவ்வளவுதான் இவங்க வீரம்..” என்று அவள் சொல்லிச் சிரித்தாள்.

வயநாட்டு அரண்மனையிலே அவந்திகாவின் குடும்பம் பாதம் பதிக்காத ஒரே இடம் என்பதினாலேயே நந்தினிக்கு மொட்டை மாடியை அதிகமாக பிடித்து விட்டது..

மலர் வளைவுகளிலும் கொடி வீடுகளிலும் அமர்ந்திருந்த பறவைகளின் பல்வேறு கலவையொலிகள் இனிமை நிரம்பிய பாடல் போல நந்தினியை ஈர்த்தது..

‘இது சொர்க்கம்..’ என்று மகிழ்ந்து போனாள்.. அற்புதமான அமைதி நிரம்பிய ஏகாந்தப் பொழுது.. பறவைகளின் சப்தங்கள் அளிக்கும் இன்னிசை.. சில்லென்ற பனிக்காற்று உடலைத் தொட்டு குளிர்ச்சியைக் கொடுக்க எவருமற்ற தனிமையில் மலர் செடிகளின் பத்தியில் உலாவும் உலாவல்.. நகரத்தின் இரைச்சல்கள் அற்ற அமைதி நிரம்பிய அற்புதமானதொரு உலகம்..

இந்த உலகத்தில் அவளும் ஓர் அங்கமாகப் போகிறாள்.. வயநாட்டு அரண்மனையில் வசீக்கப் போகிறாள்.. அதன் தம்புரானான ரவிச்சந்திரனின் தாலியைக் கழுத்தில் வாங்கி தம்புராட்டியாகப் போகிறாள்..

'நினைத்தாலே இனிக்குதே..'

நினைவுகளின் சுகமான சுமை தாங்காமல் தவித்துப் போனாள் நந்தினி.. இளைப்பாற இடம் வேண்டி அவள் கொடி வீட்டில் தலை சாய்த்த போது வலிமையான இரும்புக்கரம் அவளை இழுத்துத் தோள் சாய்த்துக் கொண்டது.. ரோமங்கள் அடர்ந்த சிவந்த நிறம் கொண்ட கரத்தின் வனப்பில் அவள் கண்மூடி கிறங்கினாள்.. அவளுக்குப் பழக்கமான ஸ்பரிசம்.. நெருக்கமான தொடுகை.. நந்தினியின் ரவிச்சந்திரன்..

"பாஸ்.." கிறக்கத்துடன் முணுமுணுத்தாள்..

"அத்தான்னு சொல்லேண்டி.." அவளை விடப் பன்மடங்க கிறக்கத்துடன் முணுமுணுத்தவன் அவளது உச்சந்தலையில் முத்தம் பதித்தான்.

சூடான அவனது இதழ்களின் வெப்பத்தை உச்சந்தலையில் உணர்ந்த நந்தினி உணர்ச்சி மிகுதியில் நடுங்கினாள்.. படற இடம் தேடும் தளிர் கொடியாய்

தவித்தவளை தன்மீது சாய்த்து படற இடம் கொடுத்து அவள் மீது படர்ந்து பரவினான் ரவிச்சந்திரன்.. அவனது விரல்கள் வீணையை மீட்டும் லாவகத்துடன் அவளது உடலைக் கையாண்டு மீட்ட ஆரம்பித்தது..

ஸ்வரங்களை எழுப்பிய அவனது ஸ்பரிசத்தில் சலனம் கொண்ட நந்தினி உணர்வுக் குவியலுக்குள் ஆழப் புதைந்து மூச்சுத் திணறினாள்.. அவனது உடல் அவள் மீது அழுந்தி குளிருக்கு இதமான வெப்பத்தை இடம் மாற்றிக் கொண்டிருந்தது.. கதகதப்பு நிரம்பிய சுகமான அவனது அணைப்பில் அவள் தொலைந்து கொண்டிருந்தாள்.. குளிர் காயும் கணப்பாக அவனது ஆகிருதி நிரம்பிய மார்பு இருந்தது.. அலைபாயும் அவளது மனது அவனது இறுக்கமான அணைப்பில் சமனப்பட்டு சரணடைந்தது.. நீயே எனக்கு சகலமும் என்ற ஒற்றைவரி உணர்த்திய எல்லையற்ற பிரேமத்தின் பிரபஞ்ச வெளியை அவள் மனதார உணர்ந்து கொண்டிருந்தாள்..

அவனது விரல் பட்ட இடங்களில் கிளம்பிய உணர்ச்சிப் பிரவாகம் அவளை மூழ்கடிக்க யத்தனித்தது.. வெப்பம் கொண்ட அவன் மார்பில் புதைந்திருந்தவளின் உடல் இன்னமும் ஆழமாக அவனுக்குள் புதைய வேண்டும் என்று

அடம் பிடித்தது.. அதை உணர்ந்ததைப் போல அவளது எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கி அணைத்தான் அவன்.. அந்த இறுக்கம் அவளுக்குத் தேவையாக இருந்ததில் அவளது கரங்கள் அவனது பரந்த முதுகில் பரவிப் படர்ந்து அழுந்தின..

அவன் மீதான மயக்கம் ஆழ்ந்த மயக்கமாக நந்தினியை ஆழத்தில், ஆழத்தில், அடியாழத்தில் என்று அமிழ்த்திக் கொண்டே இருந்தது.. அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவளின் முகத்தை நிமிர்த்தி குனிந்தான் அவன்.. அடுத்து நடக்கப் போகும் ஆலிங்கனம் எப்பேற்பட்டதாக இருக்கும் என்பதை அறிந்திருந்தவளின் மனம் படபடவென அடித்துக் கொண்டது.. அவனது உதடுகள் அவளது உதடுகளை நெருங்க, நெருங்க அவளது படபடப்பு அதிகரித்தது.. எத்தனை முறை சுவைத்தாலும் இனிமை குன்றாத சுவை இந்தக் கூடலில் மட்டும்தான் சாத்தியம் என்று அவளது செவியோரம் இதழ் புதைத்து ரவிச்சந்திரன் முணுமுணுத்தான்.. சுவைப்பவனுக்குத்தான் அந்தச் சுவையின் இனிமை தெரியும் என்று செல்லமாக அவள் சிணுங்கினாள்.. உரத்த நகைப்புடன் அவளது இதழ்களை அவனது இதழ்கள் கவ்விக் கொண்டன.. ஆழ்ந்த முத்தத்தை அவன் சுவைக்க ஆரம்பிக்க அவனது

இறுக்கமான ஆலினங்கனத்தில் அவள் மூச்சுத் திணறினாள்.. அவளது நாசியில் குத்திய அவனது மீசை கற்றையின் உராய்வில் அவள் சிக்குண்டு அவனிடம் சிறைபட்டாள்..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“என்னைப் பிடிச்சிருக்கா..?”

இதைக் கேட்பவன் ஆணழகன்.. அதிரூப சுந்தரன்.. பெண்களின் மனதை அழைக்கழிக்கும் பேரெழில் கொண்டவன் என்பதில் நந்தினிக்குச் சிரிப்பு வந்தது..

காதல் வயப்பட்டு விட்டால் அபத்தமான அனைத்துக் கேள்விகளும் அறிவார்ந்த கேள்விகள் போல் கேட்கப் படுவது எப்படி..?

“ஆள் மயக்கி..!” அவன் மார்பில் அவள் குத்தினாள்..

“யாரைடி மயக்கினேன்..?” தெரியாதவனைப் போல அவன் உல்லாசமாக நகைத்தான்..

“ஒண்ணும் தெரியாத பெண்ணுக்கு வேலை கொடுத்துப் பாதுகாப்பாய் தங்க வைக்கிறேன் பேர்வழின்னு நீலிமலை

வுட்ஹவுஸுக்கு கடத்திக் கொண்டு போய் காதல் சொன்ன ஆள் மயக்கிதானே நீங்க..”

“அப்புறம்..?”

“ஆலப்புழா படகுவீட்டில் கல்யாணத்துக்கு முன்னாடியே ஃபர்ஸ்ட் நைட் கொண்டாடத் துடிச்ச ஆள் மயக்கிதானே நீங்க..”

“ஹா.. ஹா.. துடிச்சேண்டி.. நடத்தினேனா..? இப்ப வேண்டுமானால் இங்கே அதை நடத்திக் காட்டவா..?”

“ஏய்ய்ய்..”

நந்தினியின் உடல் கூடானது.. அவனை ஏகவசனத்தில் விளித்தவள் அதையும் தாண்டி..

“போடா..” என்றாள்..

“ஹேய்.. ஹௌ ஸ்வீட்..” அவன் அதை ரசித்தான்..

அவனைக் கட்டியணைத்து முகமெங்கும் ஆவேச முத்தங்களைப் பதித்த நந்தினிக்கு அவன் அவளுக்கு மட்டும் சொந்தமானவன் என்பதை நம்பவே முடியவில்லை.. நடப்பவை அனைத்தும் கனவு போல இருந்தது.. அவனைப் போன்ற பேரழகனுக்கு அவள் பொருத்தமானவளா..?

“ரவி..” அவளது குரல் தழுதழுத்தது..

“ஆரம்பிச்சுட்டியா..? இப்ப என்னாச்சு..? ரவின்னு பெயர் சொல்லிக் கூப்பிடுகிறாயேன்னு சந்தோஷப்பட முடியாம ஊடே ஒரு ட்விஸ்ட் வைக்க உன்னால்தாண்டி முடியும்..”

“நீங்க கோடிஸ்வரர்.. எங்க அப்பாம்மா பணக்காரங்க.. அவ்வளவுதான்.. இது கூடப் பரவாயில்லை.. நீங்க ராஜ பாரம்பர்யம்.. நான் அப்படியில்லை.. காதல்ன்னு நீங்க சொல்லலாம்.. அத்தை எப்படி உங்களுக்காக என்னைப் பெண் கேட்டாங்க..? ராஜ பாரம்பர்யத்திலதானே உங்களுக்கு அவங்க பெண் தேடியிருக்கனும்..?”

விழி விரித்து மருகியவளின் அப்பாவித்தனத்தில் அவள் மீதான காதல் அவனுக்குள் பன்மடங்காக பெருகியது..

அத்தியாயம் 257

“பனி விழும் மலர் வனம் - உன்

பார்வை ஒரு வரம்..”

மெல்லிய குரலில் பாடினான் ரவிச்சந்திரன்.. மனத்தாங்கலுடன் விலகி கொடி வீட்டின் ஊஞ்சலில் உட்கார்ந்தாள் நந்தினி.. பக்கத்தில் உட்கார்ந்து அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. கண்மூடி அவன் தோளில் சாய்ந்திருந்த காதலியின் நெற்றியில் முத்தமிட்டவன் கால்களைத் தரையினில் லேசாக விந்த ஊஞ்சல் இங்கும் அங்குமாக கொடி வீட்டின் இருபக்கத்தையும் தொட்டுத் தொட்டு ஆட ஆரம்பித்தது..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“உன்னை ஃபோட்டோவில்தான் முதன் முதலாய் பார்த்தேன்.. பார்த்தவுடனே பச்சக்குன்னு மனசில ஒட்டிக்கிட்டடி.. உன் பெயர்கூட எனக்குத் தெரியாது.. பெயரே தெரியாதப்ப உன் பாரம்பர்யம் மட்டும் தெரிந்திருக்குமா..? சொல்லு.. ஊர், பெயர், சொந்த பந்தம், வசதி வாய்ப்பு, படிப்பு,

பணம், பாரம்பர்யம்ன்னு அத்தனையையும் பார்த்து வருகிறதுக்குப் பெயர் காதலில்லைடி..”

“அது எப்படி ஊர் பேர் தெரியாத பெண்ணைக் காதலிப்பீங்க..?”

“நான் காதலிச்சேனே..”

“நீங்கதான் பைத்தியம்.. அத்தையும் எப்படி உங்ககூடக் கூட்டுச் சேர்ந்தாங்கன்னுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கு..”

மோவாயில் கை வைத்துக் சொன்னவளின் காதைப் பிடித்துத் திருகிய ரவிச்சந்திரன்..

“சான்ஸ் கிடைத்ததுன்னு எனக்கும் பைத்தியம் பட்டம் கொடுக்கிறயா..? உதை வாங்கப் போறடி.. பைத்தியம் நீதான்.. நாங்க இல்லை.. என்னைப் பொறுத்தவரை உன் போட்டோவைப் பார்த்த செகண்டிலேயே எனக்கு நீதான்னு முடிவு பண்ணிட்டேன்.. நீ யாராய் இருந்தாலும் உன்னைத்தான் காதலித் திருப்பேன்.. இதில் எந்தவித மாற்றமோ, சந்தேகமோ இல்லை.. எனக்குப் பிடித்தவள்ன்னு யாரை நான் கை காட்டினாலும் யாரும் தடுக்கப் போவதில்லை.. ராஜ பாரம்பர்யத்திலேயே பெண் எடுக்க வேண்டும் என்பதெல்லாம் மற்றவர்களுக்கு.. எனக்கு

இல்லை.. எந்தப் பாரம்பர்யப் பெருமையும் என்னைக் கட்டுப் படுத்த முடியாது..”

“உங்களைக் கட்டுப்படுத்தாதுதான்.. அது உலகத்துக்கே தெரிந்த விஷயமாச்சே.. அத்தையைக் கட்டுப்படுத்துமே.. அதுதானே இடிக்குது.. வயநாட்டு அரண்மனையோட மருமகள் தன்னோட மருமகளா ராஜ பாரம்பர்யத்தில பிறந்த பெண்ணைத்தானே செலக்ட் பண்ணுவாங்க..? அவங்கதான் என் ஃபோட்டோவை உங்களுக்குக் காட்டியிருக்காங்க.. எப்படி அப்படிச் செய்தாங்க..?”

“அடி முட்டாள் காதலியே..! எங்க அம்மா தமிழ்நாட்டில பிறந்தவங்க.. ராஜ பாரம்பர்யத்தைச் சேர்ந்தவங்க..”

“அதுதான் எனக்குத் தெரியுமே..”

“உன் அம்மாவும் என் அம்மாவும் ரிலேட்டிவ்டி.. அதுவும் உனக்குத் தெரிந்திருக்கனுமே..” ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தி இறக்கி வினவிய விதத்தில்..

“ஆமாமில்ல..” என்று மயக்கத்துடன் சொன்னாள் நந்தினி..

அழகான அந்த வசீகரனின் சிறு கண்வீச்சில் சிக்கித் தட்டுத் தடுமாறியது அவள் நெஞ்சம்.. அதை உணர்ந்து கொண்டவனாக அவன் அவளை நெருங்க.. அவளது இமைகள் தானாக மூடி அவனை அருகில் அழைத்தன.. தாபத்துடன் அவளது முகத்தோடு முகம் வைத்துத் தேய்த்தவனுக்குள் உடனடியாக அவளை ஆட் கொள்ள முடியாத கோபம் எழுந்தது.. அதை அவள் மீது காட்டி..

"ஏண்டி தள்ளி உட்கார்ந்திருக்கிற..? யாருக்காக உன் கற்பைக் காப்பாற்றிக்கற..?" என்று எரிந்து விழுந்தான்..

"உங்களுக்காகத்தான்.."

கொஞ்சலான அவளது ஒற்றை வார்த்தையில் கள்ளூரும் போதை கொண்டான் அவளின் காதலன்..

"பேசியே ஆளைக் கவிழ்த்திரு.. இந்த வித்தாரமெல்லாம் தெரிந்திருக்கு.. என் அம்மாவைப் போல உன் அம்மாவும் ராஜ பாரம்பர்யத்தில் பிறந்தவங்கதான் என்ழுத தெரியலையே.. என் அம்மா ராஜ பாரம்பர்யம்ன்னா அவங்களுக்கு நெருங்கிய சொந்தமான உன் அம்மாவும் ராஜ பாரம்பர்யமாகத்தானே இருந்தாகனும்.."

“ஹை.. அப்படியா.. அம்மா ராஜபாரம்பர்யமா.. ஒருநாள் கூட என்னிடம் இதைச் சொன்னதே இல்லை தெரியுமா..?”

“சொன்னால் நீ இளவரசின்னு எல்லோரிடமும் உளறிக்கிட்டே இருப்பேன்னு நினைத்திருக்கலாம்.. சும்மாவே நீ ஆடுவ.. சலங்கை கட்டி விட்டால் வீடும், நாடும் தாங்குமான்னு பயந்து போயிருக்கலாம்..”

“நீங்க ஒருத்தர் போதும்.. என் காலை வாரிக்கிட்டே இருக்க..”

“இன்னொருவனை வர விட்டிருவேனாடி..”

“ராஜ பாரம்பர்யத்தில பிறந்ததும் எங்க அம்மா, அப்பா நில்லுன்னு சொன்னா நிப்பாங்க.. உட்காருன்னு சொன்னா கைகட்டி வாய் பொத்தி உக்காருவாங்க.. நான் ராஜ பரம்பரையாக்கும்ன்னு தெனாவெட்டு காட்டியிருக்க வேண்டாமோ..?”

“உன் அறிவு இருக்கே.. எங்கேயோ போயிட்டடி நீ.. அம்மாவிடம் சொல்லி உனக்குத் திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லனும்..”

‘இது பாராட்டு போல இல்லையே..’ தலையைச் சரித்து அவனைக் காக்காய் பார்வை பார்த்தாள் நந்தினி.. இதுபோன்ற பாராட்டுக்களை அவளைப் பார்த்து அவன் சொல்லிவிடுவான் என்று நம்ப அவளொன்றும் குச்சி மிட்டாய் சாப்பிடும் குழந்தையல்லவே..

“என்னடி இப்படிப் பார்க்கிற..? ஹா.. ஹா..”

அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது..

‘இவனுக்கும் இவன் தங்கைக்கும் நான் எதைப் பேசினாலும் சிரிப்புத்தான்.. என்னை ஜோக்கர் கேட்டகிரியில் வைத்துக்கிட்டேக் காவியக் காதலும் பண்றான்.. இவனை எந்த கேட்டகிரியில் வைக்கிறது..?’

நாக்கைக் கடித்தபடி யோசித்த நந்தினிக்கு சமீப காலத்தில் ரம்ய மாலினி அவ்வளவாக சிரிப்பதில்லை என்ற நினைவு வந்தது.. சதா சர்வகாலமும் ஏதோ ஓர் யோசனையுடன் அவள் இருந்தாள்.. முகத்தில் ஓர் சோகம் படிய வளைய வந்தாள்..

‘ரம்யாவைப் பத்தி இவனிடம் பேசினா கண்டுக்க மாட்டான்.. இவன் நியாயம் இவனுக்கு..’

ரம்ய மாலினிக்காக எதுவும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவள் மனதை அழுத்தியது.. அதை மறைக்க முயன்றபடி..

“எதுக்கு இந்த சிப்பு..?” என்று சிடுசிடுத்தாள்..

“சிப்பு..?” அவனது சிரிப்பு அதிகரித்தது..

“போதும் பாஸ்.. பல் சுளுக்கிக்கப் போகுது..?” அவள் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்..

“பல் சுளுக்கிக்குமா..? எப்படிடீ இப்படிப் பேசற..?” அதற்கும் அவன் சிரித்து வைத்தான்..

“இப்ப சிரிப்பை நிறுத்தறிங்களா இல்லை நான் எழுந்து போகட்டுமா..?” அவள் எழுந்து கொள்வதைப் போலப் பாவனை செய்ததில்..

“இருடி..” என்று அவளை இறுக்கிக் கொண்டான்.

“சும்மா சும்மா கேலி பண்ணிச் சிரிச்சா நான் உங்ககூட ‘டூ’ விட்டிருவேன்..” நந்தினி பயமுறுத்தினாள்.

“இப்படிப் பேசினா சிரிப்பு வராதா..?” அவளை வாசம் பிடித்தவன் அவளது கன்னத்தில் தன் மூக்கை உரசியபடி..

“உன் அப்பாவும் ராஜ பாரம்பர்யம்தான்.. இல்லேன்னா மார்த்தாண்ட பூபதி தன் மகனுக்கு உன்னை மேரேஜ் பண்ணி வைக்கச் சம்மதம் சொல்லியிருப்பாரா..?” என்று கேட்டான்..

“மார்த்தாண்ட பூபதியா..? அவர் யாரு..?” நந்தினி திருதிருத்தாள்..

அந்தக் கேள்வியை விரும்பி ரசித்தான் ரவிச்சந்திரன்.. மகேந்திரனின் பெயரைக் கூடத் தெரிந்து கொள்ளாதவள் அவனுடைய அப்பாவின் பெயரை மட்டும் அறிந்து வைத்திருப்பாளா என்ற நினைவில் அவள் மீதான அவனது காதல் அதிகரித்தது.. அவளுடன் விளையாடிப் பார்க்க விருப்பம் கொண்டான்..

“மார்த்தாண்ட பூபதிதான் கயல்விழியோட ஹஸ்பெண்ட்..”

“கயல்விழியா..? அது யாரு..?”

“அவங்க மார்த்தாண்ட பூபதியோட வொய்ஃப்..”

“என்ன்ன்...ன..?”

“என்ன, என்ன்ன்...ன..?”

“விளையாடறிங்களா..?”

“ஆமாண்டி.. அதற்கு என்ன என்கிற..? அது என்னவோ தெரியலைடி நந்தினி.. உன்னைப் பார்த்தால் ‘பப்பா..’ மாதிரியே இருக்குடி.. விளையாடத்தான் தோணுது.. நானும் சீரியஸா பேசி விடனும்னுதான் டிரை பண்றேன்.. வர மாட்டேங்குதே.. நான் என்ன செய்வேன்..? நான் என்ன செய்வேன்..?”

“டயலாக்கா..?”

“அடி போடி..! மகேந்திர பூபதியோட அப்பாதான் மார்த்தாண்ட பூபதி.. அம்மா கயல்விழி.. உன் அம்மாவை சின்ன வயதிலே என் மகனுக்கு பெண் கொடுக்கிறேன்னு நீ சொன்னேன்னு குழப்பி உன்னைப் பெண் கேட்டவங்க இவங்கதான்..”

“அந்த அம்மாவைப் பார்த்தாக் கழுத்தை நெரிச்சுக் கொள்ளனும்..”

“யு நோ நந்தினி.. அவங்க உனக்கு அத்தை முறையாகனும்.. அம்மா முறை வராது..”

திருத்தம் சொன்னவனை என்ன செய்தால் தேவலாம் என்று கொலைவெறி பார்வை பார்த்தாள் நந்தினி..

“பயம்மாவே இல்லை.. உனக்கெல்லாம் போராளி வேசம் ஸூட் ஆகாதுடி..” அவன் கலாய்த்தான்..

“அந்தம்மா எனக்கு எந்த முறையாய் இருந்தா என்ன..? விளக்கம் சொல்லச் சொல்லி நான் உங்களைக் கேட்டேனா..?”

“நீ கேட்கலைன்னாலும் விளக்கம் சொல்ல வேண்டியது என் டியூட்டியாச்சே.. உன்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னு தெரியாம சென்னையில் படித்துக்கிட்டு இருந்த.. படிப்பை முடித்து விட்டுத் தஞ்சாவூருக்குப் போனா பிடிக்காத கல்யாணம் காத்திருக்க.. எவன் அவன் என்கிற பெயர் கூடத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறிட்ட.. இப்பத்தான் உன் போராட்டம் முடிந்து என்னை மேரேஜ் பண்ணிக்கப் போகிற இல்ல.. இனியும் உன்னைச் சுற்றி என்ன நடந்ததுன்னு தெரியாமல் இருக்கக்கூடாது..

உனக்கு நீ ராஜ பாரம்பர்யத்தில் பிறந்தவள், என்கிற விவரமே தெரியவில்லை.. மத்த விவவரம் எங்கே தெரியப் போகிறது..? உன்னை மேரேஜ் பண்ணிக்கிட்டு என்னத்தை வாழ்ந்து.. என்னத்தை என்ஜாய் பண்ணி.. ம்ஹூம்..”

‘மத்த விவரம்..’ என்ற வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து அவன் விட்ட அனல் பெருமூச்சில் கன்னம் சிவந்து விட்டாள் நந்தினி..

‘கள்ளன்..’ அந்தக் கள்வனின் கள்ளத்தனமான சில்மிஷ சிருங்காரப் பேச்சில் சிக்கித் திளைத்தது அவள் மனம்...

“இவ்வளவு அலுப்பு சலிப்போடு ஐயா என் கழுத்தில தாலியைக் கட்ட வேணாம் சாரே.. உங்களுக்கேத்தபடி கடைஞ்செடுத்த விவரத்தோட அஜந்தாவும், தரங்கிணியும் காத்திருக்கிறாங்க.. நீங்க எதிர்பார்க்கிற விவரங்களை விட அதிக விவரங்களை அவங்க அள்ளிக் கொட்டுவாங்க.. அந்த ரெண்டில ஒண்ணைக் கட்டிக்கிட்டாலும் சரி.. இல்லை ரெண்டையுமே கட்டிக்கிட்டாலும் சரி.. உங்க பாடு, அவங்க பாடு.. என்னை ஆளை விடுங்க சாமி..”

“ஆமாண்டி.. விட்டு விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பேன்.. யாருன்னு நினைச்ச..?”

“என் கம்மாண்டர்ன்னு நினைச்சேன்..”

“பேசியே ஆளை மயக்கிற பாரு.. இந்த விவரம் போதும்டி.. மத்த விவரங்களையெல்லாம் நான் உனக்குக்

கற்றுக் கொடுக்கிறேன்.. நான் சொல்லிக் கொடுத்து நீ கற்றுக் கொள்வதில்தான் சுகம் இருக்குடி..”

நந்தினியை வெட்கம் பிடுங்கித் தின்றது.. அவனுக்கும் அவளுக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது.. திருமண நாளைக் குறித்து மற்ற விவரங்களைப் பேசி முடிக்க நந்தினியின் வீட்டிலிருந்து கிளம்பி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஆனபின்பு ரவிச்சந்திரன் அவளிடம் தடையற்ற பேச்சுக்களைப் பேச ஆரம்பித்து விட்டான்.. அதைத் தடுக்க முடியாமல் ரகசியமாக ரசித்தபடி தடுமாறிக் கொண்டிருந்தாள் நந்தினி..

“டிராக் மாற வேண்டாம் சாரே.. இப்படிப் பேச விட்டா விடிய விடியப் பேசுவீங்களே..”

“இப்ப பேச்சு மட்டும்தான்.. ஆஃப்டர் மேரேஜ்.. ஒன்லி ஆக்ஷன் மட்டும்தான்.. நோ பேச்சு..”

“போதுமே..” நந்தினியின் முகம் குங்குமமானது..

‘சின்னதாய் பேசினாக் கூட வெட்கப்படுகிறா..’ ரவிச்சந்திரனுக்கு அவளின் அந்த வெட்கத்தைப் பிடித்திருந்தது.. அவளது முகச் சிகப்பை ரசிப்பதற்காகவே அவளிடம் சில்மிஷப் பேச்சுக்களை அவன் அள்ளி விடுவான்..

அவள் சிணுங்கி முகம் சிவப்பதைப் பார்க்க அவனுக்கு ஆனந்தமாக இருக்கும்.. அஜந்தா, தரங்கிணியிடம் இந்த முகச் சிகப்பையும், நாணத்தையும் பார்த்து விட முடியாது.. நந்தினியே சொல்வதைப் போல அவர்கள் 'கடைந்தெடுத்த' விவரமானவர்கள்..

"வெறும் பேச்சுக்கே போதும்ன்னு சொன்னால் ஆக்ஷனுக்கு என்னவெல்லாம் சொல்லப் போகிறாயோ.."

"நான் எழுந்து போய் விடுவேன்.."

"ஏண்டி..? மகேந்திர பூபதி யார்ன்னு உனக்குத் தெரிய வேண்டாமா..?"

"வேண்டாம்.. என் கம்மாண்டர் யார்ன்னு நான் தெரிந்துக்கிட்டாப் போதும்.."

இன்னும் அவன் அந்த பெல்ட் அடிக்கும், துப்பாக்கிக்குமான விளக்கத்தைச் சொல்லவில்லையே என்ற நெருடலோடு சிணுங்கியது அவள் மனம்.. அதை உணராத ரவிச்சந்திரன் அவனுடைய காதலி அவனை மட்டுமே நினைக்கிறாள் என்பதில் பெருமிதம் கொண்டவனாக அவளைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து மகிழ்ந்து போனான்..

“உன் கம்மாண்டர் உன்னுடையவன்டி.. அவனை மேரேஜ் பண்ணிக்கப் போகிற நீ அவனைப் போலவே ராஜபாரம்பர்யத்தில் பிறந்தவள்தான்.. உன் பேரண்ட்ஸ் ராஜபாரம்பரையைச் சேர்ந்தவங்க.. தஞ்சாவூர் ராஜ பரம்பரை.. கேரளத்து ராஜா ரவிவர்மனோட தஞ்சாவூர் மனைவி வழி வந்த பாரம்பர்யம்.. கேரளத்து ராஜ குடும்பங்கள் பெண் கொடுத்து பெண் எடுக்கும் சொந்தம் கொண்ட ராஜ பாரம்பர்யம்.. அதனால்தான் என் அப்பா என் அம்மாவை மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. கன்யாகுமரியின் மார்த்தாண்ட பூபதி கயல்விழியம்மாவை மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. உன் பேரண்ட்ஸ் ராஜ பரம்பரை என்பதினால்தான் மார்த்தாண்ட பூபதியோட மகன் மகேந்திர பூபதிக்கு உன்னைப் பெண் கேட்டு ஃபிக்ஸ் பண்ணினாங்க.. இப்ப இந்த வயநாட்டு ராஜ பாரம்பர்யத்தில் பிறந்த ரவிச்சந்திரனை தஞ்சாவூர் ராஜ பாரம்பர்யத்தில் பிறந்த நீ மேரேஜ் பண்ணிக்கப் போகிற.. இது தெரியாம என்னிடம் ‘நீ ராஜபரம்பரையில் பிறந்தவன்.. ராஜ பாரம்பர்யத்தில் பிறந்த பெண்ணைத்தான் மேரேஜ் பண்ணிக்குவன்னு’ புலம்புவ பாரு.. நீ மட்டும் யாருடின்னு உன்னை முறைத்துப் பார்ப்பேன்.. உன் மரமண்டைக்கு அது புரியாது..”

அவளது புலம்பல்களுக்கெல்லாம் பதில் சொல்லாமல் அவளை ஓர் மௌனப் பார்வை பார்த்து வைப்பானே.. அந்தப் பார்வைகளுக்கு இதுதான் அர்த்தமா..? புதுப்புது அர்த்தங்கள் என்பது இதுதானோ..

அத்தியாயம் 258

நந்தினியின் வீட்டிலிருந்து வந்து விட்டார்கள்.. 'எங்கே என் மகள்..' என்ற பரிதவிப்போடு விழிகளால் மகளைத் தேடியபடி காரை விட்டு இறங்கிய வெண்ணிலா..

"அம்மா.." என்று பாய்ந்து கட்டிக் கொண்ட மகளின் கன்னத்தில் முத்தமிட்டுக் கட்டியணைக்காமல்..

"பாவி.. இத்தனை நாளா எங்கேயிருக்கிற.. என்ன செய்கிறன்னு தெரியாம நாங்க பட்ட பாட்டைப் பற்றி உனக்கு என்னடி தெரியும்..? வெளிநாட்டுக்குப் போயிட்டதா லெட்டர் போட்டு உன் குரலிலே ஒருத்தியைப் பேச வைச்சு நம்ப வைச்சுட்டு இப்படித் தலைமறைவா வந்து வேலை பார்க்கிறயே.. தலையெழுத்தாடி உனக்கு..?" என்று கன்னம் கன்னமாக அறைந்து விட்டுத்தான் ஓய்ந்தாள்..

'மகளை அனுப்பி வைத்து கோடிஸ்வர ராஜ குடும்பத்தில் மாப்பிள்ளையை வளைத்துப் போட்டுக்கிட்ட குடும்பம்தானே இவங்க..' என்ற இகழ்ச்சிப் பார்வையோடு அங்கே நின்றிருந்த யாழினி அயர்ந்து போய் விட்டாள்..

மகளை அடித்த அடியில் தன் வளர்ப்பு எப்படிப்பட்டது என்பதை அங்கிருந்த அனைவருக்கும் நிரூபித்து விட்டாள் வெண்ணிலா..

‘ம்ஹூம்.. இந்த அவந்தா ஒருநாள் ஒரு பொழுதாவது அஜந்தாவை இப்படிக் கண்டித்து அடித்திருப்பாளா..? அடிக்கக் கூட வேண்டாம்.. கண்டித்திருப்பாளா..? அவதான் இவளை கண்டிப்பா..’

அருகில் நின்றிருந்த அவந்திகாவையும், அஜந்தாவையும் ஓர் பார்வை பார்த்து விட்டு அர்த்த புஷ்டியுடன் பெருமூச்சு விட்டுத் தன் ஆதங்கத்தை யாழினி வெளிப்படுத்தியதில் அவர்கள் இருவரும் பற்களை நறநறத்தார்கள்..

நந்தினியின் குடும்பம் வரப் போகிறது என்ற செய்தியை அறிந்தவுடன் எப்படியெல்லாம் அவர்களை உதாசீனப் படுத்தி ஓட வைக்க வேண்டுமென்று அந்த மூவர் கூட்டணி கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தது.. அதன் முதற் கட்டமாக காரிலிருந்து

நந்தினியின் குடும்பம் இறங்கும் போதே அவர்களை இகழ்ச்சிப் பார்வை பார்த்து அவமானப் படுத்த வேண்டும் என்று அனைவருக்கும் முதலில் அந்த மூவரும்

போர்டிகோவின் அருகிலிருந்த தோட்டத்தில் காத்திருந்தார்கள்... காரிலிருந்து இறங்கியதும் வெண்ணிலா மகளைக் கட்டியணைத்து சந்தோஷம் கொண்டாடமல் அவள் கன்னத்தில் சராமாரியாக அடிகளைக் கொடுத்ததில் அரண்டு போனவர்கள் இகழ்ச்சிப் பார்வையை மறந்து 'ஆ'வென வாய் பிளந்து நின்று விட்டார்கள்.. அதிலும் யாழினி சும்மா இருக்காமல் மகளையும், பேத்தியையும் மௌனப் பார்வை பார்த்து வைத்ததில் அங்கே இருப்பது தங்களுக்கு நல்லதல்ல என்ற முணுமுணுப்புடன் அவந்திகாவும் அஜந்தாவும் அரண்மனைக்குள் விரைந்து விட்டார்கள்.. "அம்மா.." கன்னத்தைப் பிடித்தபடி விம்மினாள் நந்தினி..

கோபத்துடன் வெண்ணிலாவை கடிந்து பேச அடியெழுத்து வைத்த ரவிச்சந்திரனை வீணாவின் பார்வை தடுத்து நிறுத்தியது..

"நந்தினி அவங்க வீட்டுப் பெண்ணுடா.. நம்ம ரம்ய மாலினி வீட்டை விட்டு வெளியேறியிருந்தா நம்ம மனசு என்ன பாடுபட்டிருக்கும்..? அவங்களோட மனக்குமுறலை அவங்க கொட்டட்டும்.. பெத்தவங் களுக்கும் மகளுக்கும் நடுவே நீ போகாதே.. அது நியாயமில்லை.."

பல்லைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தேங்கி நின்று விட்டான் ரவிச்சந்திரன்.. நந்தினி வலியால் அழுகவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.. அவள் தாயின் கைகளால் வாங்கிய அடிகளை மிகவும் விரும்பினாள்..

“அடிங்கம்மா.. உங்க கோபம் தீர எத்தனை அடி வேண்டுமானாலும் அடிங்க.. நம்ம வீட்டு வாசப்படியை நான் தாண்டியதுக்கு என்ன பனிஷ்மெண்ட் வேணும்னாலும் கொடுங்க.. உங்களைப் பார்த்துட்டேனில்ல.. அது எனக்குப் போதும்மா.. எனக்கு வேற வழி தெரியலைம்மா.. இஷ்டமில்லாத கல்யாணத்தைப் பண்ணிக்கிறதை விட செத்துடலாம்ன்னு தோணிருச்சும்மா..”

“நான் பெத்த மகளே..!” வெண்ணிலா துடித்துப் போய் மகளைக் கட்டிக் கொண்டாள்..

“அதுக்காடி உன்னைப் பெற்று வளர்த்தோம்.. நீ சிறுபிள்ளைத்தனமாய் பிடிவாதம் பிடிக்கறேன்னுதான் நாங்க நினைத்தோம் நந்தினி.. இம்புட்டுத் தீவிரமா அவனைப் பிடிக்கலைன்னு சொல்லியிருந்தா கல்யாணத்தை நிறுத்தியிருப்போம்.. எங்களுக்கு உன் விருப்பம்தான் முக்கியம் நந்தினி.. நீ வெளிநாட்டுக்குப் போயிட்டேன்னு

லெட்டர் வந்ததும் கதறிக்கிட்டு கன்யாகுமரிக்குப் ஃபோன் பண்ணி உன் சம்பந்தமே வேண்டாம்ன்னு சொல்லிட்டோம்மா.. உன் மனசுப் பிரகாரம்தான் உன் கல்யாணம் நடக்கும்.. கவலைப் படாதே..”

“அப்பா..” தயக்கத்துடன் தந்தையிடம் போனாள் நந்தினி..

மேகநாதன் வெண்ணிலாவைப் போல கை நீட்டவில்லை.. வளர்ந்த பிள்ளைகளிடம் கை நீட்டக் கூடாது என்ற கோட்பாட்டைக் கொண்டவர் அவர்.. தீர்க்கமாக மகளைப் பார்த்தாள்.. அந்த ஓர் பார்வையில் துடித்துப் போன நந்தினி..

“என்னை மன்னிச்சுருங்கப்பா..” என்று அவரின் கால்களில் விழுந்து கதறி அழுதாள்.. மேகநாதனின் கண்களில் இருந்து உதிர்ந்த கண்ணீர்துளிகள் மகளின் உச்சந்தலையில் விழுந்து தெறித்தன.. நந்தினியின் தோள் தொட்டு எழுப்பி நிறுத்தியவர் அவளின் கண்ணீரைத் துடைத்து விட்டார்..

“மன்னிப்புக் கேட்க வேண்டியது நீயில்லைம்மா.. நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்..

உனக்கு எதுவும் தெரியாது.. உனக்காக நல்லது.. கெட்டது எனக்குத்தான் தெரியும்ன்னு தலைக்கனம் பிடித்து உன் வாழ்வை நானே தீர்மானித்தேனே.. அது எவ்வளவு பெரிய தப்பு..”

“இல்லைப்பா.. எனக்காக முடிவெடுக்க உங்களுக்கு உரிமை இருக்குப்பா.. ஏனோ தெரியலை.. நீங்க முடிவு பண்ணிருந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க எனக்குப் பிடிக்கலைப்பா.. பயமாய் இருந்தது..”

“சின்னப் பெண்ணாய் இருந்தாலும் உன் முடிவில் நீ தீர்மானமா இருந்த பாரு.. அதுக்காக அப்பா உன்னைப் பாராட்டறேண்டா.. உன் உள் மனசுக்கு அவன் கெட்டவன்ங்கிறது தெரிந்திருக்கிறது.. எல்லாம் எனக்குத் தெரியும்ன்னு நினைச்சேனே.. எனக்குத்தான் அவன் குணம் தெரியாமல் போய் விட்டது.. நீ வீட்டை விட்டு வெளியேறாம எங்க விருப்பப்படி அவனைக் கல்யாணம் பண்ணியிருந்தா என்ன ஆகியிருக்கும்..? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குதுடா.. நான் பெற்ற பிள்ளைகளுக்கு சின்னக் கெடுதல் நடந்தாலும் இந்த அப்பனாலே தாங்கிக்க முடியாதுடா தங்கம்.. அந்த மகேந்திர பூபதி ஒரு அயோக்கியனாம்.. அவன் பணக்காரன், கோடிஸ்வரன், வெளிநாட்டில் படிச்சவன், அவனுடைய அப்பா

மார்த்தாண்ட பூபதி கண்ணியமான மனிதர் என்பதையெல்லாம் வைத்து நான் விசாரித்த என் நண்பர்கள் மாப்பிள்ளை தங்கக் கம்பின்னு சொல்லிட்டாங்கடா.. அதை நம்பி மோசம் போக இருந்தேன்.. நல்லவேளையா கடவுள் நம்மைக் காப்பாற்றிட்டார்..''

மேகநாதன் மகளின் தலையைப் பாசத்துடன் கோதிவிட்டார்..

'இந்தக் கம்மாண்டர்தான் காப்பாத்தினான்ப்பா..'

தகப்பனாரின் தோளில் பாசத்துடன் தலை சாய்த்தபடி ரவிச்சந்திரனைப் பார்த்தாள் நந்தினி.. அவளுடைய குடும்பத்தாரிடம் சேர்ந்து விட்ட அந்த நிலையிலும் அவனை அவளது பார்வை தேடியதில் அவனுக்குள் இருந்த 'காதலன்' திருப்தி அடைந்தான்..

''சோகரசம் பிழிஞ்ச அப்பாம்மாவை கரெகட் பண்ணிடுவன்னு அப்பவே எனக்குத் தெரியும் அக்கா.. அதான்.. இந்த எமோஷனல் சீனில இண்டர்ஃபியர் ஆக வேண்டாம்ன்னு தள்ளியே நின்னிருந்தேன்.. இந்த டச்சிங் சீனுக்கும் நமக்கும் ரொம்ப தூரம் பாரு.. எனக்கும் ரெண்டு இருமல இருமி.. அக்கா, நீ மருதாணி கேட்டப்ப பறிச்சுக்

கொடுக்காம மெஹந்தி கோன் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேனே அக்கா.. ஏண்டா படவா இப்படிப் பண்ணினேன்னு நீ கத்தினப்ப மருதாணிய அரைச்சா உன் கை வலிக்கும்.. மெஹந்தி கோன அப்படியே கையில படம் வரையலான்னு பாசத்தைப் பிழிஞ்சேனேக்கா.. மெஹந்தி போட்ட ரெண்டாவது நாளே அது அழிஞ்சு போக பக்கத்து வீட்டுப் பார்வதியோட மருதாணி பூசின கைவிரல்கள் செக்கச் செவேல்ன்னு உன்னைப் பார்த்துச் சிரிச்சதேக்கா.. உனக்குப் பறிச்சுட்டு வந்த மருதாணிய அங்கே கொடுத்துட்டு உன் கையில மெஹந்தி கோனைக் கொடுத்தது நான்தான்னு அவ காட்டிக் கொடுத்தப்ப மொத்து மொத்துன்னு மொத்தினயே ஒரு மொத்து.. அந்த மொத்து உனக்கு ஞாபகமில்லாம போனாலும் வலி எனக்கு ஞாபகமிருக்கேக்கா.. நான் என்ன செய்வேன்..? நான் என்ன செய்வேன்னு தொண்டை கமறப் பேசனும்னு ஆசையாத்தான் இருக்கு.. அதைக் கேட்டு நீயும் சிரிச்சு இங்கே இருக்கிறவங்களையும் சிரிக்க வைச்சிட்டா என்ன செய்கிறதுன்னுதான் என் பாசத்தை வெளிப்படுத்தாம உள்ளுக்குள்ள வைச்சுப் பூட்டியிருக்கேன் அக்கா..”

நந்தகுமார் மூக்கை மூக்கை உறிஞ்சியபடி தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டுப் பேசப் பேச.. "டேய்.. நந்து.." என்று தம்பியைக் கட்டிக் கொண்டாள் நந்தினி..

அவன்தான் ரவிச்சந்திரனுக்குத் தேவைப்பட்ட தகவல்களைச் சொல்லித் தமக்கையை வயநாட்டுக்கு வழி அனுப்பி வைத்தான் என்று தெரியாத மேகநாதனும் வெண்ணிலாவும் அக்கா, தம்பியின் பாசத்தில் கண்கள் பனிக்க இமை கொட்டி அதை அடக்கிக் கொண்டார்கள்..

"தேங்க்ஸ்டா நந்து..."

தாய், தகப்பனுக்கும் மற்றவர்களுக்கும் கேட்காத தொனியில் முணுமுணுத்தாள் நந்தினி..

"உன் தேங்க்ஸை மூட்டை கட்டி வயநாட்டு மலையுச்சியில இருந்து உருட்டி விட்டுட்டு வாயை மூடிக்கிட்டு இரு.. இல்லேன்னா நீ இருக்கிற இடம் தெரிந்தும் சொல்லாம இருந்தேன் என்கிறதுக்காக அப்பாவும் அம்மாவும் வயநாட்டு மலையுச்சியில இருந்து என்னை உருட்டி விட்டிருவாங்க.. செஞ்சி மலையில இருந்து குதிக்க விடாமக் காப்பாத்தினதுக்கு உன்னாலான நன்றிக் கடனை செய்து என்னை

உபத்திரவத்தில மாட்டி வைத்து விடாம வாயை மூடிக்கிட்டு இரு அக்கா..” சன்னக்குரலில் எச்சரித்தான் நந்தகுமார்..

‘இவன் கிட்ட பாசப்பயிரை வளர்த்துட்டாலும்.. கழுதையில..’ வாயை இறுக மூடிக் கொண்டாள் நந்தினி.. ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவன் உதட்டைத் துடைப்பதைப் போல நமட்டுச் சிரிப்பை மறைக்க முயற்ச்சித்ததில் அக்கா, தம்பியின் ரகசிய பாச உரையாடலை அவன் ஒட்டு கேட்டு விட்டான் என்று தெளிபுபடப் புரிந்தது.. நந்தினியின் முகத்தில் அசடு வழியவா என்று கேட்டு நின்றது.. ரவிச்சந்திரன் அவளருகில் வந்து படு அக்கறையுடன்..

“கர்சீஃப் இருக்கா.. இல்லை டிஷ்யூ பேப்பர் கொண்டு வரச் சொல்லவா..?” என்று கேட்டான்..

“எதுக்கு..?” நந்தினி திருதிருத்தாள்..

“உன் முகத்தில் குடம் குடமாய் அசடு வழியுதே.. அதைத் துடைத்துக் கொள்ளத்தான்..” முகத்தில் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் அவன் சொல்ல அவள் பல்லைக் கடித்தாள்..

“மச்சினனைக் கண்டவுடனே கூட்டணி ஃபார்ம் ஆகுதா..? இருங்க.. தனியா என்னிடம் சிக்குவீங்கள்ல.. அப்ப இருக்கு உங்களுக்கு.. அசடு வழியுதோ அசடு..”

“என்னக்கா... அசடைக் கூவிக் கூவி விற்கி.. மொத்தமாய் கொள்முதல் பண்ணிட்டியா..?” நந்தகுமார் ரகசியக் குரலில் கலாய்த்தான்..

“நீ வேற நந்தகுமார்.. டீலர்ஷீப் எதுக்காக எடுக்கனும்..? மொத்த புரடக்ஷனே இவகிட்டத்தான இருக்கு..” ரவிச்சந்திரன் கிசுகிசுத்தான்..

“ப்ப்பா.. என்னமா கால்குலேட் பண்ணி வைத்திருக்கீங்க.. சும்மாவா உங்களை பிஸினெஸ் வெர்ல்டில் ஸ்டார்ன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறாங்க.. கலக்கறிங்க மச்சான்..”

“மச்சானா..?”

“அத்தானை மச்சான்னும் சொல்லலாம் அத்தான்..”

“மாமான்னும் சொல்லலாம் நந்து..” நந்தினி ஊடே புகுந்தாள்..

“அத்தான்.. உங்களை வயசானவராக் காட்டப் பார்க்கிறா.. மாட்டிக்காதீங்க.. இப்பவே இப்படியொரு காண்டுன்னா கல்யாணத்துக்குப் பின்னாலே என்னவெல்லாம் செய்யக் காத்திரக்கிறாளோ.. பாவம் அத்தான் நீங்க..” நந்தகுமார் போலியாக பரிதாபப் பட்டான்..

“அவர் பாவமில்லைடா தம்பி.. உன்னைப் போல ஒரு தம்பிக்கு அக்காவாய் பிறப்பெடுத்திருக்கிறேன் பாரு.. நான்தான் பாவமோ பாவம்.. என்னமாய் சொல்லிக் கொடுக்கறேடா நீ.. நல்லா வருவேடா..”

அங்கே கல்யாணக் கலகலப்பு உருவானது... வெண்ணிலாவையும் மேகநாதனையும் சகல மரியாதைகளுடன் அரண்மனைக்குள் அழைத்துக் கொண்டு போனார்கள்.. நந்தினியின் குடும்பத்தினர் என்பதில் அரண்மனையின் வேலையாள்கள் ஓடி ஓடி அவர்களுக்கான வேலைகளை செய்து கொடுத்தார்கள்.. வேலையாள்களுக்கு நந்தினியின் மீது இருக்கும் அன்பையும், பரிவையும் அது உணர்த்தியதில் மேகநாதனுக்கும் வெண்ணிலாவுக்கும் சந்தோஷமாக இருந்தது.. ஓமனா நந்தினியின் குடும்பத்தாரை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகரவில்லை.. அவர்களுடன் பேசிப் பழக ஆர்வம் காட்டினாள்..

“எவரானு..? எண்ட நந்தினி அம்மையின் அம்மையச்சனோ..?” பாசத்துடன் அவள் கேட்க..

“என்னப்பா இது..? நம்ம ஊர் பக்கம் அம்மையப்பன் அப்படின்னுதானே சொல்லுவாங்க.. இவங்க என்னவோ வேற மாதிரி சொல்லுறாங்க..” என்று நந்தகுமார் வேண்டுமென்றே சந்தேகம் கேட்டான்..

“ஓ..! ஈ மலையாள தேசத்தில அம்மையச்சனெண்டு தானே பறயும்..?” ஓமனா முகத்தை வெட்டினாள்..

“ஹப்பா.. முகத்தில கதகளி.. மோகினியாட்டம்ன்னு அத்தனை டான்ஸ் அபிநயமும் வந்து போகுது..” என்றான் நந்தகுமார்..

“சும்மாயிருடா..” மகனை செல்லமாக கடிந்து கொண்ட மேகநாதன்..

“இவன் இப்படித்தான்ம்மா.. விளையாட்டாய் பேசுவான்..” என்று ஓமனாவிடம் சிரித்தார்..

“எங்கட நந்தினியம்மையோட அணியனல்லோ.. இங்ஙனதான் பறயும்..” சிலாகித்தாள் ஓமனா..

“என்னது..? அணியனா..? நானா..? அணில்ங்கிறதைப் போலவே காதில விழுகுது.. வேண்டாம்ப்பா.. இவங்க தமிழில கொஞ்சினா கொஞ்சட்டும்.. மலையாளத்தில கொஞ்சறதா இருந்தா இவங்க கொஞ்சலே எனக்கு வேண்டாம்..”

நந்தகுமார் புறங்கையால் கண்களை மூடி முகத்தைத் திருப்பிக் கொண்டு மறு கையால் ஓமனாவை வேண்டாம் என்பது போல சைகை செய்ததில் ஓமனா குழம்பிப் போனாலும் மகிழ்ந்து போனாள்..

அத்தியாயம் 259

“நா”ங்க தஞ்சாவூருக்குக் கிளம்பறோம்..” என்றார் மேகநாதன்..

‘ஆஹா..’ என்ற ஆனந்தம் அவந்திகா & Co வின் முகங்களில் அப்ப நந்தினி ஏக்கத்துடன் ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. இறுக்கமான முகத்துடன் இருந்தவன் இமைகளை மூடித் திறந்து அவளை அமைதிப் படுத்தினான்.. திருமணத்தேதி அருகில் இருந்த நிலையில் வயநாட்டை விட்டுக் கிளம்ப ஏதோ ஓர் வகையில் பயந்தாள் நந்தினி.. வயநாட்டை விட்டு அவள் கிளம்புவதாக இருந்தால் ரவிச்சந்திரனின் மனைவியாக அவனுடன் மறுவீட்டு விருந்துக்கு தஞ்சைக்குக் கிளம்பிச் செல்ல வேண்டும்.. அதை விடுத்துத் தனியாகச் சென்றால் ரவிச்சந்திரனின் மனைவியாக முடியுமோ, முடியாதோ.. எவர் அறிவார்..?

ரவிச்சந்திரனின் மீது அவளுக்குக் கடுகளவும் சந்தேகமில்லை.. அவளே மறுத்தாலும் அவன் அவளைச் சிறையெடுத்துக் கரம் பிடிப்பான்.. அவனைச் சுற்றியுள்ள சூழல்..?

எது வேண்டுமானாலும் நடக்கலாம் அல்லவா..

ரவிச்சந்திரனின் திருமணத்தை நிச்சயிக்கும் பேச்சு வார்த்தையில் அரண்மனையில் இருக்கும் உறவினர்களைத் தள்ளி வைக்க முடியாதே.. இரு தரப்பு பெற்றோரும் ஒரு மனதாக இருக்கும் போது எவர் இருந்தால் என்ன என்ற அலட்சியத்துடன் ரவிச்சந்திரன் எவரையும் புறக்கணிக்க வில்லை.. அவனை மீறி அவந்திகா குடும்பத்தினரால் என்ன செய்து விடமுடியும்..?

‘ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது..’

மாடி ஹாலில் அரண்மனையிலிருந்த உறவினர்கள் ஒரு புறமும்.. மத்தியில் ரவிச்சந்திரனும் அவன் குடும்பமும் அமர்ந்திருக்க மறுபுறம் நந்தினியும் அவளுடைய குடும்பத்தாரும் அமர்ந்திருந்தார்கள்.. அருள்மொழிவர் மனின் கண்கள் மருமகன் யோகானந்தனின் விழிகளுக்கு ஈடாகச் சிவந்திருந்தன.. நந்தினியைக் கொலை வெறியோடு அவர் பார்த்து வைத்ததில் நடுங்கிப் போன நந்தினி அவர் இருக்கும் திசைப்பக்கமே திரும்பாமல் திரும்பி அமர்ந்து கொண்டாள்.. அவருக்கு நேர் மாறாக நந்தகுமார் அடிக்கடி அவரைப் பார்த்து சிரித்து வைத்தான்..

“எதுக்குடா அவரைப் பார்த்துச் சிரிக்கிற..? சும்மாயிருடா..” நந்தினி தம்பியின் கையைக் கிள்ளினாள்..

“நீ சும்மாயிருக்கா.. நடிகர் திலகத்துக்கு அப்புறம் சிவந்த கண்களுடன் யாரையும் பார்க்க முடியலன்னு நம்ம அப்பா அடிக்கடி குறை பட்டுக்குவாரில்ல.. இங்கே பார்த்தியா.. ஒன்றுக்கு இரண்டாய் மாமனாரும், மருமகனும் செக்கச் செவேல்ன்னு சிவந்த கண்களுடன் இருக்கிறாங்க.. இதை ரசிக்கலைன்னா எப்படிக்கா..?” நந்தகுமார் அடம் பிடித்தான்..

‘இவன் இருக்கிறானே..’

அனைவரின் முன்னாலும் தலையில் அடித்துக் கொள்ள முடியாமல் பல்லைக் கடித்துத் தன்னைச் சமனப் படுத்திக் கொண்டாள் நந்தினி.. இப்பேற்பட்ட தம்பியை வைத்துக் கொண்டு எப்படி வயநாட்டு அரண்மனையில் தங்கியிருப்பது..?

‘இவன் வில்லங்கத்தை வலை போட்டு இழுத்து வைப்பானே..’

நந்தினியின் இதயத்துடிப்பு அதிகரித்தது.. ‘தடக், தடக்’ என்று தண்டவாளத்தில் ரயில் ஓடும் ஓசையைத் தன் நெஞ்சத்தில் கேட்டாள் அவள்..

யாழினி அசூசையுடன் பார்த்த பார்வையில் உமிழப் பட்ட வெறுப்பு எனும் நெருப்பு நந்தினியைச் சுட்டெரித்தது.. அதன் சூடு தாங்காமல் அவள் கண் கலங்கினாள்.. யாழினியின் வெறுப்பு மிக்க பார்வைக்கு மட்டும் சக்தியிருந்திருந்தால் அங்கேயே நந்தினியை பஸ்பமாக்கியிருப்பாள்.. அவளது உதடுகள் அசைந்து கொண்டேயிருந்ததைக் கவனித்த நந்தகுமார்..

“அக்கோவ்.. இந்தப் பாட்டி உன்னையும் நம்ம ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் மொண மொணன்னு வாய்க்குள்ளேயே திட்டிக்கிட்டு இருக்குக்கா..” என்றான்..

“தெரியும்டா.. பேசாமல் இரு..”

“தெரிந்துமா பேசாமல் இருக்கிற..? ஒண்ணு மில்லாததுக்கே உன் வாய் ஊரளவுக்கு கிழியுமே.. இப்ப இந்தப் பாட்டி இம்புட்டுப் பேச்சு பேசுது.. காதில விழுகாததைப் போல பாவ்லா காட்டிக்கிட்டு இருக்கிற... நீதானா இது..?”

“டேய்ய்..”

நந்தினிக்கு இம்சையாக இருந்தது.. யாழினியென்ன புதிதாகவா நந்தினியைக் கரித்துக் கொட்டுகிறாள்..? அவள் நந்தினியைக் கரித்துக் கொட்ட ஆரம்பித்து விட்டால்

மணிக்கணக்கில் கரித்துக் கொட்டுவாள் என்பதை பெற்றவர்களிடமும் உடன் பிறந்தவனிடமும் சொல்லிவிட முடியுமா..? இப்படிப்பட்டவர்களின் மத்தியில் என் மகள் எப்படி நிம்மதியாக வாழ்வாள் என்று சண்டை போட்டுத் திருமணத்தையே நிறுத்தி விட மாட்டாள்களா..?

அவந்திகாவின் நிஷ்டூரப் பார்வை நந்தினியை விட்டுவிட்டு வெண்ணிலாவையே வலம் வந்ததில் வீணா சங்கடம் கொண்டாள்.. அவந்திகாவை வெண்ணிலா கவனித்து விடாதவாறு நகர்ந்து அவந்திகாவை மறைத்து அமர்ந்து கொண்டாள்..

யோகானந்தனின் பார்வையில் இருந்த ரத்தச் சிகப்பு இன்னும் அதிகரித்திருந்ததில் நந்தகுமார் ஈர்க்கப்பட்டான்..

“அப்படியே அந்தக் காலத்து வில்லன் நடிகர் மனோகர் சாரைப் பார்க்கிறதைப் போலவே இருக்குக்கா..” என்று ரசித்தான்..

யோகானந்தனின் முகத்தை அச்சமின்றி பார்ப்பதோடு மட்டுமல்லாமல் ரசிக்கவும் செய்யும் தம்பியின் மீது பொறாமைப் பட்டுப் போனாள் நந்தினி.. அவனுக்கு மட்டும் அனைத்தும் இலகுவாக இருப்பது எப்படி..? அஜந்தா

பெரியவர்கள் இருக்கும் சபையில் அமர்ந்திருக்குற தன்னடக்கம் இன்றிக் கால் மேல் கால் போட்டுத் தோரணையாக அமர்ந்திருந்தாள்.. அவளுடைய அரண்மனைக்கு வழி தப்பி வந்து விட்ட வழிப் போக்கர்களைப் பார்ப்பதைப் போல அவள் நந்தினியின் குடும்பத்தாரைப் பார்த்த பார்வையில்..

“இருந்தாலும் இதுக்கு இத்தனை திமிர் ஆகாதுடா..” என்று முகம் சுளித்தான் நந்தகுமார்..

ஆனானப்பட்ட, எதற்கும் அசைந்து கொடுக்காத, ஆணவக்கார நந்தகுமாரையே அஜந்தாவின் அகம்பாவம் நிரம்பிய பார்வை பாதிக்கிறதென்றால் மற்றவர்கள் எம்மாத்திரம்..?

வீணாவால் அவந்திகாவை மட்டும்தான் மறைத்து உட்கார முடிந்தது.. மற்றவர்களின் அட்டூழிய முகபாவங்களால் நந்தினியின் குடும்பத்தார் கோபமடைந்து இந்தச் சம்பந்தமே வேண்டாம் என்று கிளம்பி விட்டால் என்ன செய்வது என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.. நல்ல வேளையாய் மேகநாதன் மற்றவர்களைப் பொருட் படுத்தாமல்

ரவிவர்மனிடமும் வீணாவிடமும் மட்டுமே பேசித் திருமண தேதிக்கு ஒப்புதல் தந்து விட்டார்..

திருமணம் முடிவாகி விட்ட நிலையில் எதைச் சொல்லித் திருமணத்தை நிறுத்துவது என்று பரபரத்தாள் அவந்திகா..

"அச்சா.." என்ற அவளது ரகசியக் கண்ணீரில் 'அச்சா' எனக் களம் குதித்தார் அருள்மொழிவர்மன்..

"எந்தா சம்ஸ்காரம் (கலாச்சாரம்) இது மோனே..? விவாகம் கழிக்க வேணுமெண்டா மாப்பிள்ளை குடும்பத்தாரல்லோ பெண் வீட்டுக்குச் சென்று பெண் கேட்க வேணும்..? நம்மட பெகுமானம் எந்தா..? நம்மட கொட்டாரத்தோட பழக்க வழக்கம் எந்தா..? அனைத்தையும் மறந்து பெண் வீட்டாரை நம்மட கொட்டாரத்தில இருத்தி விவாகத்தை முடிவு செய்வது சரியில்ல மோனே.. ஈ வயநாட்டில இதி சம்சாரிச்சா நம்மட குடும்பத்துக்கு பெகுமானக் குறைவல்லோ..? எந்தா யாழினி..?" மனைவியை அவர் கூட்டுச் சேர்க்க அவள்..

"அதிதான நியாயம்.." என்று ஜால்ராத் தட்டினாள்..

"எதியும் வளர ஆலோசிச்சுட்டுப் பறயாம்.. கேட்டே.. எண்ட கொச்சு மோனோட பார்யாளா வரப் போகிற

பெண்குட்டி எவுகுந்து வருந்நூ..? ஆ பெண் குட்டியோட பெந்துக்கள் ஆரானு..? அவளிட நாடு எதா..? அத்தினியும் எனிக்கும் நிண்ட அம்மைக்கும் தெரிய வேணாம்.. கேட்டே.. பட்ஷே.. ஈ மலையாள தேசத்துக்குத் தெரியாண்டாமா..?

எவுடுந்தோ ஆ பெண்குட்டி வந்துன்னு ஈ மலையாள தேசத்திட மக்கள் பறஞ்ஞா ஆருக்குப் பெகுமானக் குறைவு..? ஆ பெண்குட்டியோட அம்மையச்சனுக்கல்லோ பெகுமானக் குறைவு..? கேட்டே..”

கேட்டே, கேட்டே என்று நன்றாக கேட்டு வீட்டார் அருள்மொழிவர்மன்.. ஊர் எதுவென்று தெரியாத பெண்ணை அவருடைய பேரன் மணம் முடித்திருக்கிறான் என்று மலையாள தேசத்தின் மக்கள் சொல்லி விடுவார்கள் என்று மறைமுகமாக மேகநாதனை பயமுறுத்தினார்.. மேகநாதன் உடனே..

“நாங்க தஞ்சாவூருக்குக் கிளம்பறோம்..” என்று சொல்லி விட்டார்..

“கல்யாண நாள் பக்கத்தில இரக்கு அண்ணா.. இப்போ நீங்க கிளம்பினா போய் வரக்கூட நாள் பத்தாது..” வீணா பதறினாள்..

“அதி எந்தா வீணா இங்ஙன பறஞ் ..? விவாக நாளை வேறு ஒரு நாளுக்கு மாற்றிக் கொண்டால் சரியாகி விடுமல்லோ.. எதியும் முறையாய் நடத்த வேணும் மோளே.. நம்மட கொட்டாரத்தில நடக்கப் போகிற விவாகம்.. ஈ மலையாள தேசமே அறிஞ்ஞ வயநாட்டுக் கொட்டாரத்தில ராஜா அருள்மொழிவர்ம தம்புரானோட கொச்சு மோன், ராணி யாழினி தேவி தம்புராட்டியோட செல்லக் கொச்சு மோன் விவாகம் கழிக்கப் போகிறான்.. அதி வளர நன்னாயிட்டுண்டுன்னு ஈ கேரளமே பறயாண்டாமோ..?” யாழினி மருமகளை அதட்டினாள்..

“சந்தடி சாக்கில இந்தக் கிழவி ஞான் தம்புராட்டி ஞான் தம்புராட்டின்னு தம்பட்டம் அடிச்சுக்கிறதைக் கேட்டிங்களா அம்மே..” அருவெறுப்புடன் முகம் சுளித்தாள் அஜந்தா..

“பொறு மோளே.. எண்ட அம்மையும், அப்பனும் ரவிச்சந்திரனிட விவாகத்த தடை செய்யப் பறஞ் .. நீ வல்லதும் பறயாண்டாம்.. கேட்டே..” அவந்திகா மகளை அடக்கினாள்..

“பெரியவங்க சொல்கிறதிலயும் ஓர் அர்த்தமிருக்கு தங்கச்சி.. நான் என்ன ஊர், பேர் தெரியாதவனா..? இல்லை பணம் காசுதான் இல்லாதவனா..? உங்க அளவு க்கு

இல்லைன்னாலும் தஞ்சாவூரில நான் கோடிஸ்வரன்.. உங்களைப் போலவே நாங்களும் ராஜ பாரம்பர்யத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்தவங்கதான்.. என்ன ஒண்ணு.. நீங்கள்ளால் அதை மண்டையில ஏத்திக்குவிங்க.. நாங்க ஏத்திக்க மாட்டோம்.. வீடான வீட்டில குடும்பம் நடத்தனும்.. ராஜா, ராணின்னு ஆட்சி நடத்தக் கூடாது.. அப்படி நடந்தா அது குடும்பமா இருக்காது..”

அருள்மொழிவர்மனும், யாழினியும் தம்புரான், தம்புராட்டி என்று அடித்துக் கொண்ட பெருமையை மறைமுகமாகத் தாக்கினார் மேகநாதன்..

“எனக்கும் இவருக்கும் உங்க கருத்துத்தான்.. இதை நான் வாழ வந்த அரண்மனைன்னு ஓர் நாளும் நினைச்சதில்லை.. என் வீடு, என் குடும்பம்ன்னுதான் நினைச்சிருக்கேன்.. தம்புரான், தம்புராட்டி பட்டத்தை வைத்து என்ன செய்ய அண்ணா..? பெத்த பிள்ளைகளுக்கு நல்லதைச் சொல்லிக் கொடுத்து வளர்க்கனும்.. நாமளும் நல்லதையே நினைக்கனும்.. அப்படி இருந்தாத்தான் நாம பெரிய மனுஷங்க.. என்ன நான் சொல்கிறது..?” தன் பங்குக்கு வீணாவும் கொடுத்துக் கட்டினாள்..

“சரியாச் சொன்னம்மா.. அதனால நாங்க இன்னைக்கே தஞ்சாவூர் கிளம்பறோம்.. நீங்க நல்லநாள் பார்த்துப் பெண் கேட்டு வாங்க.. கல்யாணத் தேதியை மாத்திக் குறிச்சுக்கிட்டாப் போச்சு..” மேகநாதன் பிடிவாதமாக இருந்தார்..

வீணா கையைப் பிசைய.. ரவிவர்மன் நிதானமாகக் குறுக்கிட்டு..

“இல்லைங்க.. ஃபிக்ஸ் பண்ணின மேரேஜ் டேட்டை மாற்ற வேண்டாம்.. அது சரின்னு எனக்குப் படலை..” என்று கூறினார்..

“மோனே..” அருள்மொழிவர்மன் அலறினார்..

“ஆலோசிக்காது எதியும் பறயாண்டாம் ரவிவர்மா.. நிண்ட அச்சன் பறயறாரல்லோ.. நினிக்கு எந்து தெரியும்..?” யாழினி மகனை கடிந்து கொண்டாள்..

“எனிக்கு அனைத்தும் தெரியும் அம்மே.. ஆரோட மனசில எந்தா விஜாரம் உண்டுன்னு ஞான் அறியும்.. கேட்டே.. ரவியிட தலைமுறையில இது முதல் விவாக மல்லோ.. ஆ விவாகத்தை தேதி மாத்தி நடத்தாண்டாம்.. கேட்டே.. குறிச்ச தேதியில விவாகம் கழிக்கிறதுதான்

நல்லதுண்டு ஞானும் ரவியும் விஜாரம் கொண்டு.. அதில எந்தவிதமான மாற்றமும் இல்லையல்லோ..”

ரவிவர்மனின் தீர்மானத்தில் மேகநாதன் சங்கடம் கொண்டார்.. வயதில் பெரியவர்களின் வார்த்தைகள் அவர் மனதில் கூரிய அம்புகளாகத் தைத்திருந்தன.. பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பவர் அவர்.. வசதி வாய்ப்பில் குறைந்தவரல்ல.. வயநாட்டு அரண்மனையைப் போல இல்லாவிடினும் பெரிய பங்களாவைக் கட்டி வாழ்பவர்.. அவரது பூர்விக கிராமத்தில் ஊர்ப் பண்ணையார் வீடு என்ற முதன்மை அந்தஸ்த்தைப் பெற்றவர்.. மகளுக்கு ஏகப்பட்டச் சொத்துக்களையும் பரம்பரையாய் வரும் வைர நகைகளையும் சீதனமாக அளிக்கப் போகிறவர்.. அப்படியிருக்க... எங்கிருந்தோ வந்தவள் என்ற அடை மொழியுடன் ஏதும் இல்லாதவனைப் போல அவருடைய மகளின் திருமணம் நடைபெற வேண்டுமா என்ன..?

நந்தினியை ரவிச்சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க சம்மதம் தெரிவித்துத்தான் கிளம்பி வந்திருந்தார்.. மகளுக்குக் கொடுக்க வேண்டிய சொத்துப் பத்திரங்களையும் வைர நகைகளையும் கையோடு கொண்டு வந்திருந்தார்.. இருந்தாலும் அது எத்தனை பேருக்குத் தெரியும் என்ற

எண்ணம் அவருக்கு.. அதுவே ரவிச்சந்திரனின் குடும்பத்தார் தஞ்சாவூருக்குப் பெண் கேட்டு வந்தால் ஊரறிய சபையில் என் மகளுக்கு இந்தா இந்த சீர்வரிசைகளைச் செய்யப் போகிறேன் என்று சாட்சியம் வைக்கலாமல்லவா..?

பெண்ணைப் பெற்ற பணக்காரத்தந்தை இப்படித்தான் நினைப்பார் என்பதைத் தெளிவாக கணித்து வைத்திருந்த அருள்மொழிவர்மன்..

"நம்மட சௌகர்யத்துக்காக பெண் வீட்டாரை சல்லியம் (தொந்தரவு) செய்ய வைய்யானல்லோ (முடியாது) ஆ மனுஷனுக்கும் தன்னோட மோளுக்கு அளிக்கிற சீர்வரிசைக்கு தெளிவு (சாட்சி) வேண்டு மெண்ட விஜாரம் இருக்குமல்லோ.. ஆ மனுஷன் மனசில எந்த உண்டெண்டு அன்வஷிக்கனும் (விசாரிக்கனும்) ரவிவர்மா.. ஈ விவாகம் இரு வீட்டிருக்கும் சம்மதமாக இருக்கனுமல்லோ.. விவாகம் வைகும் (தாமதம்) ஆனாத்தான் எந்தா..? ஒரப்பு (நிச்சயம்) விவாகம் கழிக்கும்.. இப்ப நந்தினியும் அவளிட குடும்பமும் தஞ்சாவூருக்குப் போயி.."

அருள்மொழிவர்மன் பேசப் பேச அதை ஆதரிப்பதைப் போல தலையை ஆட்டினார் மேகநாதன்..

அத்தியாயம் 260

ஓரப்பு விவாகம் கழிக்கும் என்று அருள்மொழிவர்மன் சொல்லி விட்டார்.. நிச்சயமாக திருமணம் நடக்கும் தான்.. யாருக்கு எவருடன் திருமணம் நடக்குமென்று அவர் சொல்லவில்லையே.. நந்தினி கலவரமானாள்.. அவளது விழிகளில் வழிந்த அச்சத்தில் நந்தகுமார் நொந்தகுமராக ஆனான்..

"என்ன நேரத்திலே அக்கா பிறந்து தொலைச்ச.. கிட்டி முட்டி வந்த கல்யாணம் சடன் பிரேக் போட்டு நிக்குதே.."

"அதுதான் எனக்கும் புரியலைடா நந்து.." என்ன தவறு செய்தேன், அதுதான் எனக்கும் புரியவில்லை.. வந்து பிறந்து விட்டேன்.. ஆனால் வாழ முடியவில்லை என்று சோகப் பாட்டைப் பாடாத குறையாக புலம்பித் தள்ளினாள் நந்தினி..

"உன்னோட ஹீரோ எதுவும் பேசாம தாடையைத் தடவிக்கிட்டே உட்கார்ந்திருக்காரே அக்கா.. தாடைதான் தேயுது.. ஆக்ஷன் ஹீரோவா இருப்பாருன்னு பார்த்தா அமைதியின் சிகரமா இருக்காரே.. ஆக்ஷன் எதையும்

காணோமே.. இந்நேரம் அடிச்சுத் தூள் கிளப்பியிருக்க வேணாமா..? என்னத்தை காதலிச்ச நீ..?”

“அடேய்ய்..”

அழ மாட்டாத குறையாக ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவனோ கித்தனைப் போலவும் புத்தனைப் போலவும் பார்த்து அவளை சோதித்து வைத்தான்.. சற்று முன்பாவது இமைகளை மூடித்திறந்து எதற்கும் கவலைப் படாதே.. நானிருக்கிறேன் என்ற ரீதியில் ஆறுதலாக ஜாடை காட்டினான்.. இப்போது அதுவும் இல்லை..

‘தஞ்சாவூருக்குக் கிளம்பித்தான் ஆகனும் போல..’

தஞ்சைக்குப் போகும் நாள் என்று வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்தவள்தான் நந்தினி.. பிடிக்காத திருமணத்திலிருந்து விடுதலை கிட்ட வேண்டும்.. எங்களுக்கு நீதான் முக்கியம் மகளே என்று பெற்றவர்கள் அவளைத் தேடி வர வேண்டும்.. அவள் சந்தோஷமாக வயநாட்டுக்கு டாட்டா சொல்லி விட்டு அவர்களுடன் தமிழகத்துக்குச் செல்ல வேண்டும்..

சென்னையை விட்டுக் கிளம்பி வந்த புதிதில் இதுதான் அவளது கனவாகவும் ஏக்கமாகவும் இருந்தது.. அவர்களது

பூர்விக கிராமத்தில் சுற்றி வர ஆசைப் பட்டிருக்கிறாள்.. காவிரியில் குதித்து இக்கரையிலிருந்து நீந்திச் சென்று அக்கரையைத் தொட்டுத் திரும்ப ஆசைப் பட்டிருக்கிறாள்.. தென்னந்தோப்பில் பாட்டுப் பாட.. மாந்தோப்பில் ஊஞ்சலாட என்று அவளது நெஞ்சத்தில் ததும்பிய ஆசைகள் பல..

கேரளநாடு மலைவளம் மிகுந்த இயற்கை எழில் கொஞ்சும் மலையாள நாடாக இருக்கலாம்.. ஆனால் அது அவளது தங்கத் தமிழ் நாட்டிற்கு ஈடாகுமா..?

இதோ அனைத்தும் சரியாகி அவளது தாய் மண்ணாம் தமிழகத்தின் தஞ்சை மண்ணுக்குக் கிளம்பும் நேரம் வாய்த்திருக்கிறது.. கிளம்புவதற்கு ஏன் மனம் மறுக்கிறது..?

அவளுடைய எதிராளிகளின் பலம் பற்றி அவள் அறிவாள்.. சூழ்ச்சிகளின் குடியிருப்பாய் இருப்பவர்கள்.. குறுக்கு வழிகளைத் தவிர நேர்வழியை அறியாதவர்கள்.. நினைத்தது நடக்க எந்த எல்லைக்கும் செல்லத் தயங்காதவர்கள்.. அவர்களுக்கு சிறு இடைவெளி கிடைத்தால் கூடப் போதும்.. ரவிச்சந்திரனை கரம் பிடிப்பது என்பது நந்தினிக்கு கனவாக ஆகிவிடும்..

‘இவன் ஏன் சும்மா இருக்கான்..? நந்து சொன்னதைப் போல ஆக்ஷன் ஹீரோவாய் தூள் கிளப்பாமல் அசையா மரமாய் உட்கார்ந்திருக்கிறானே.. இவனுடைய தாத்தா சொல்வதுதான் சரின்னு இவனும் நினைக்கிறானோ..’

ரவிச்சந்திரனின் சலனமற்ற முகத்திலிருந்து எதையும் கண்டு கொள்ள முடியவில்லை.. அவன் அருள்மொழிவர்மனை ஆதரிக்கிறானா இல்லை எதிர்க்கிறானா என்று புரியாமல் மண்டை காய்ந்து போனாள் நந்தினி.. நந்தகுமார் வேறு அவளது காதோரமாக சரிந்து..

“அத்தான் சுத்த வேஸ்ட்டுக்கா... நான் என்னென்னவோ நினைச்சுக்கிட்டு வந்தேன்.. இவர் முதல் பந்திலேயே கிளீன் போல்டாகிட்டு இருக்காரு.. டூ பேட்..” என்றெல்லாம் சொல்லி வெறுப்பேற்றிக் கொண்டிருந்தான்.

எப்படி என் ஆளை நீ குறை சொல்லலாம் என்று தம்பியிடம் சண்டையிட முடியாமல் சுணங்கிப் போனவளாக முகம் கன்ற நிலம் பார்த்தாள் நந்தினி.. எதிரே உட்கார்ந்திருக்கும் ரவிச்சந்திரனின் முகம் பார்த்து என்ன ஆகப் போகிறது..? இருந்திருந்து அவளை விட எட்டுக் குருத்து (?) இளையவனிடம் பேச்சு வாங்க வைத்து விட்டானே..

எட்டுக் குருத்து என்பதற்கு என்ன மீனிங் என்று அவருக்குத் தெரியாது.. அவ்வபோது வெண்ணிலா அவளைப் பார்த்து..

“உன்னை விட எட்டுக் குருத்து இளையவன்.. எம்புட்டு விவரமா இருக்கிறான் பாரு.. நீயேண்டி இப்படி அரைகுறையாய் இருந்து என் உயிரை வாங்கற..” என்று தலையில் அடித்துக் கொள்வாள்..

அதை வைத்துத்தான் அவள் மனதுக்குள் எட்டுக் குருத்தைக் குறிப்பிட்டு அலுத்துக் கொண்டாள்..

“பெரியவங்க சொன்னா சரியாகத்தான் இருக்கும்..”

மேகநாதன் கிளம்புவதற்கான ஆயத்தங்களைச் செய்ய எழுந்து கொள்ள முயல.. தாடையைத் தேய்த்து தேய்த்து ஓய்ந்து போன ரவிச்சந்திரன் போனால் போகட்டும்.. தாடை பிழைத்துக் கிடக்கட்டும் என்ற காருண்ய மனத்தோடு தாடையிலிருந்து கையை எடுத்து நிமிர்ந்து உட்கார்ந்து மேகநாதனைப் பார்த்தான்..

“அக்வோவ்.. அசையா மரம் அசையுதுக்கோவ்..” நந்குமார் முணுமுணுப்பாய் கூவினான்..

“பெரியவங்க சொன்னா சரியாகத்தான் இருக்கும் மாமா..”

மேகநாதன் சொன்னதையே அவன் திருப்பிச் சொல்ல அவன்.. ‘மாமா..’ என்று அழைத்ததில் அவர் புளகாங்கிதப் பட்டுப் போனவராக..

“ஆமாம் மாப்பிள்ளை..” என்று மகிழ்ந்து போனார்..

“பட்ஷே.. யாருக்குச் சரியாக இருக்கும் என்கிறதை திங்க் பண்ண வேண்டாமோ..?” ரவிச்சந்திரனின் கிடுக்கிப்பிடி கேள்வியில்..

“ஆக்ஷன் ஹீரோ அடிச்சாருக்கா சிக்சர்..” என்று நந்தினியின் கையைக் கிள்ளினான் நந்தகுமார்..

“மாப்பிள்ளை..?” மேகநாதன் விழித்தார்..

“அவர் சொல்கிறது அவருக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம் மாமா.. எனக்கு அப்படியில்லை.. இதுதான் மேரேஜ் டே என்று இன்விடேஷன் பிரிண்ட் பண்ணக் கொடுத்தாகி விட்டது.. எப்படி உங்களைக் கலந்து பேசாமல் கொடுக்கலாம் என்று நீங்கள் கேட்கலாம்.. அப்பாவும், அம்மாவும் உங்களிடம் ஃபோனில் பேசும் போதே இந்த

நாளில் மேரேஜ் பண்ணிடலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கிறோம்.. உங்களுக்கு அப்ஜெக்ஷன் இருக்கிறதா என்று கேட்டாங்க.. நீங்க 'நோ அப்ஜெக்ஷன்' அப்படின்னு சொல்லிட்டிங்க... அதனால் நீங்க வயநாட்டுக்கு வந்து சேர்வதற்கு முன்னாடியே இங்கே மேரேஜுக்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்து விட்டோம்..." நிதானமாக விளக்க ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்..

மருமகனின் நீளமான பேச்சில் கட்டுண்டு உட்கார்ந்திருந்த மேகநாதன் வாய் திறக்காமல் ரவிச்சந்திரன் சொல்வதைக் கேட்டுக் கொண்டதில் அருள்மொழிவர்மனுக்குத் திகில் பிடித்துக் கொண்டது..

"இன்விடேஷன்தானே கொச்சு மோனே.. மறுக்கா அடித்துக் கொள்ளலாமல்லோ.." என்று குறுக்கிட்டாள்..

"இன்விடேஷன்தானேன்னு சாதாரணமாச் சொல்லிட்டிங்க.. உலகம் முழுவதும் கொடுக்கப் போகிற இன்விடேஷன்.. கிராண்டா டிசைன் பண்ணப் பட்ட இன்விடேஷன்.. கோடிக் கணக்கில் அட்வான்ஸ் பே பண்ணியாச்சு.. இன்விடேஷன் மட்டுமில்லை உலகம் முழுவதும் இருக்கிற என் பிஸினெஸ் பார்ட்னர்ஸ்,

கிளையண்ட்ஸ், ஃபிரண்ட்ஸ்ன்னு அத்தனை பேரும் வந்து போக ஃபிளைட்ஸ், கார்ஸ்ன்னு புக் பண்ணியிருக்கோம்.. அதுக்கான அட்வான்ஸ் பல கோடிகள் ஆகுது.. இன்னும் ஃபுட், கெஸ்ட் தங்குவதற்கான அக்காம்டேஷன்னு எத்தனை அரேன்ஜ்மெண்ட்ஸ் இருக்கு தெரியுமா..? அத்தனைக்குமான அட்வான்ஸ் அறுநூறு கோடியைத் தாண்டுது.. மேரேஜைத் தள்ளிப் போடறதா இருந்தா இந்த அறுநூறு கோடியை எண்ணி என் முன்னால் வைத்து விட்டுத் தள்ளிப் போடுங்க தாத்தா.. நான் பக்கா பிஸினெஸ் மேன்.. என்னிடம் இருக்கும் ஒவ்வொரு ரூபாயும் நான் உழைத்துச் சம்பாதித்த பணம்.. பரம்பரையாய் என் கைக்கு வந்த பணமில்லை.. ஸோ.. என் உழைப்பில் வந்த ஒவ்வொரு ரூபாயும் எனக்கு முக்கியம்.. அது வேஸ்ட்டாக என்னால் அனுமதிக்க முடியாது..”

அந்த அறுநூறு கோடியை நீ கொடுப்பதாக இருந்தால் திருமணத்தை தள்ளி வைக்கலாம் என்று பேரன் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் அருள்மொழிவர்மன் வாயை இறுக மூடிக் கொண்டார்.. யாழினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. திருமண நாளைத் தள்ளி வைக்கத்தான் முடியாது.. தடைகளை உருவாக்கலாம் அல்லவா..? அவளது பேத்தியை மறுத்து வேறு ஒருத்தியைத்

திருமணம் செய்து கொள்ளப் போகும் அவளது மகன் வழிப் பேரன் தடைகளைத் தாண்டி ஓடித் திருமணம் செய்து கொள்ளட்டுமே.. எதுவும் செய்யாமல் கைகளைக் கட்டிக் கொண்டு கல்யாணத்தில் அட்சதை தூவ அவளொன்றும் சாதாரணப் பெண்ணல்ல.. வயநாட்டு அரண்மனையின் தம்புராட்டியாக்கும்..

அருள்மொழிவர்மனின் செவியோரம் அவள் ஓத ஆரம்பிக்க..

“பாட்டி தாத்தாவோட காதைக் கடிக்குதுக்கா..

அடுத்த அஸ்திரம் என்னவா இருக்கும்..?” என்று கிசுகிசுத்தான்..

“பிரம்மாஸ்திரத்தையே என் கம்மாண்டர் புஸ்வாணமாக்கிட்டான்.. மத்ததெல்லாம் அவனுக்கு ஜுஜுபிடா..” கெத்து காட்டினாள் நந்தினி..

“அட..! சைக்கிள் கேப்பில அத்தானை அவன் இவன்ங்கிற..?”

“அப்படித்தான் சொல்லுவேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?”

“புத்தரைப் போல தாடையைத் தடவிக்கிட்டு இருந்தவர் அடிச்சுத் தூள் கிளப்பிட்டாருல்ல.. நீ சிலும்பத்தான் செய்வ.. அவன் இவன்னு என்ன.. வாடா, போடான்னு கூட சொல்லிக்க.. உன்பாடு, அத்தான் பாடு.. எனக்கென்ன போச்சு..?”

“அப்புறம் எதுக்குடா இந்தப் பேச்சு..?”

“அருள்மொழிவர்ம தாத்தா அப்ப விட்டது பிரம்மாஸ்திரமா..? இல்ல அடுத்து விடப் போவதுதான் பிரம்மாஸ்திரமா..? ஏன் கேட்கிறேன்னா தாத்தாவும், பாட்டியும் ஒருத்தரையொருத்தர் மிஞ்சின வில்லன், வில்லியா இருக்கிறாங்க.. இவங்க தனிச்சு அஸ்திரத்தை ஏவினாலே தாங்க முடியாது.. இதில பாட்டி டைரக்ஷன் கொடக்க, தாத்தா ஏவி விடற ஏவுகணை சாதாரண அஸ்திரமா இருக்கும்ன்னா நீ நினைக்கிற..?”

நந்தகுமார் புளியைக் கரைத்து ஊற்றியதில் நந்தினி கலங்கிப் போய் விட்டாள்.. அவளது உற்சாகம் வடிந்த நிலையில்..

“என்னடா இப்படி பயமுறுத்தற..?” என்றாள் பரிதாபமாக..

“என்னத்தைச் சொல்ல..? நாட்டு நடப்பில வர்ற அரசியல் திருப்பங்களை விட இந்த வீட்டு நடப்பில வர்ற அரசியல் திருப்பங்கள் திடுக்கிடும் திருப்பங்களா இருக்குதே.. பேசாம இந்த ஓல்டு தம்புரானும், ஓல்டு தம்புராட்டியும் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிச்சு அதுக்கு ‘த.த.மு.க’ன்னு பெயர் வைச்சிரலாம்..”

“என்னது..? ‘த.த.மு.க.’வா.. அப்படின்னா..?”

“இதுகூடத் தெரியலை.. நீ இந்த வயநாட்டுக் கொட்டாரத்தில குப்பை கொட்டப் போற.. இவங்க பண்ற பாலிடிக்ஸை உன்னால ஃபேஸ் பண்ண முடியும்ங்கிற..?”

“பயமுறுத்தாதேடா நந்து..”

“சரி.. சரி.. நானே விளக்கம் சொல்றேன் கேட்டுக்க.. உன்னை மாதிரி ஒரு டியுப் லைட்டுக்குத் தம்பியாப் பிறந்து தொலைச்சதில விளக்கம் சொல்லிச் சொல்லியே என் தொண்டைத் தண்ணியெல்லாம் வத்திப் போகுது..”

“டேய்ய்.. பேசிப் பேசியே விளக்கம் சொல்லாமத் தப்பிக்கப் பார்க்காதே.. உன் டெக்னிக் எனக்குத் தெரியும்டி..”

“அதென்ன ஆம்பளைப் பையனை வாடி, போடின்னு கொஞ்சற..? ஆனாலும் அக்கா.. உன் கல்யாணத்தில ஆயிரம் இடைஞ்சல்கள் ஊஞ்சல் கட்டி ஆடிக்கிட்டு இருக்குதுக.. அதைப் பத்தியெல்லாம் யோசிச்சுக் கவலைப்பட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்காம கட்சிப் பெயருக்கான விளக்கத்தைக் கேட்டு ஆளாப் பறக்கற பாரு.. அங்கே நிற்கிற நீ..”

“அந்தக் கவலை எனக்கு எதுக்குடா தம்பி.. அதையெல்லாம் என்னைக் கட்டிக்கப் போகிற கம்மாண்டர் பார்த்துக்குவான்.. நீ பெயரைச் சொல்லுடா.. ஹ..”

“அடேங்கப்பா.. அத்தான் பெரிய ஹீரோதான் போ.. உனக்கே இவ்வளவு தைரியமிருந்தா எனக்கு எவ்வளவு இருக்கும்..? கட்சிப் பெயரைச் சொல்றேன்.. கேளு.. ‘தம்புரான் தம்புராட்டி முன்னேற்ற கழகம்..’ அதைச் சுருக்கி ‘த.த.மு.க’ன்னு சொன்னேன்..” சிரிக்காமல் நந்தகுமார் விளக்கம் சொல்ல நந்தினிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது..

“ஏய், ஏய்..” என்று நந்தகுமார் எச்சரித்துத் தடுப்பதற்குள் அவள் பொங்கிச் சிரித்து விட்டாள்.. கடும் ஆலோசனையில் இருந்த அருள்மொழிவர்மனின் கண்களிலும் யாழினியின்

கண்களிலும் தீப்பொறி பறந்தது.. ரவிச்சந்திரன் திரும்பி ஆழ்ந்த பார்வை பார்த்து வைத்தான்.. அந்தப் பார்வையில் மின்னிய மின்னலில் அவளது சிரிப்பில் அவனுக்கு யாதொரு ஆட்சேபமுமில்லையென கண்டு தெளிந்தாள் நந்தினி.. ரம்ய மாலினியின் முகத்திலும் சிரிப்பு எட்டிப் பார்த்ததில் ரவிவர்மன் நந்தினியை வாத்சல்யத்துடன் பார்த்து வைத்தார்.. மேகநாதன் மகளின் தலையை வாஞ்சையுடன் கோதி விட்டதில் வெண்ணிலா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. எவரும் நந்தினியின் சிரிப்பை கண்டித்துப் பேசாததில் யாழினியின் முகத்தில் கடுகு பொரிந்தது..

“ஈ வயநாட்டக் கொட்டாரத்துக்கு பெகுமானம் உனக்கு.. ஆ பெகுமானத்தப் பத்தி ஆரோ ஒரு தமிழ்நாட்டுப் பெண்குட்டி அறியுமோ...? ஈ கொட்டாரத்தோட பெகுமானத்த அறிஞ் ஜீவிதம் பண்ற பெண்குட்டிய விவாகம் கழிக்கனுமெண்டு எண்ட கொச்சு மோன் ஆலோசிக்காது போயி..”

நேரடித் தாக்குதலில் மேகநாதனின் முகம் கருத்து விட்டது.. வீணா பதறிப் போனாள்.. அவளுக்கு யாழினியைப் பற்றி நன்றாகவே தெரியும்.. அஜந்தாவைத் தவிர வேறு எந்தப் பெண் ரவிச்சந்திரனுக்கு மனைவியாக வந்தாலும் அவள் தாழ்வாகத்தான் பேசுவாள்.. அந்தப் பெண்

மலையாளத்து ராஜகுடும்பத்தில் பிறந்த கோடிஸ்வரியாக இருந்தாலும் சரி.. யாழினியின் நாக்கு அவளைச் சுட்டெரிக்காமல் விடாது.. யாழினி மலையாளம், தமிழ் என்ற பேதமெல்லாம் இல்லை.. அவளுடைய பேத்தி, வேறு ஒருத்தி என்ற பேதம் மட்டும்தான் இருக்கிறது..

இதை மேகநாதனுக்கு எப்படி புரிய வைப்பது..? அந்தக் கவலை உனக்கு வேண்டாம் என்பதைப் போல ரவிச்சந்திரன் நிமிர்ந்து யாழினிப் பாட்டியைப் பார்த்தான்..

“ஒரு குடும்பத்தின் மரியாதைக் காப்பாத்தற பெண் எப்படியிருக்கனும் தெரியுமா பாட்டி..?

தமிழ்நாட்டில அதுக்கு ஹைக்கூ கவிதையே இருக்கு.. அவங்க அதைத் திருக்குறள்ன்னு சொல்வாங்க..

‘தற்காத்து தற் கொண்டான் காத்து

சொற்காத்து சோர்விலாள் பெண்..’

அப்படியாப்பட்ட பெண்ணா எங்கம்மா இருந்திருக்காங்க.. இருக்கிறாங்க.. இனியும் இருப்பாங்க.. வேற சிலரும் இருக்காங்க.. அவங்கள்ளாம் எப்படி அரண்மனைகளோட

பெருமைகளைக் கட்டிக் காப்பாற்றினாங்க என்கிற கதைகளைச் சொல்லவா..?”

ஒரே கேள்வி, ஒரே கேள்வி, எந்தன் நெஞ்சிலே என்று கேட்டு விட்டான் ரவிச்சந்திரன்.. யாழினியின் முகம் பேயறைந்ததைப் போல ஆகிவிட்டது..

அத்தியாயம் 261

செய்தார்க்கு செய்த வினை என்பார்கள்.. அது இதுதான் போல.. ரவிச்சந்திரனுக்குப் பெண் கொடுக்கும் பெண் வீட்டாரை அவமானப் படுத்த நினைத்தாள் யாழினி.. அது அவளுக்கே திரும்பி விட்டது.. ஒரேயொரு கேள்வியில் பெண் வீட்டாரின் முன்னிலையில் அவள் அவமானப் பட்டு விட்டாள்..

"குறளுக்கு விளக்கம் சொல்லவா பாட்டி..? தன்னைக் காத்து தன்னை மேரேஜ் பண்ணிக் கொண்டவனையும் காத்து.. வாக்குத் தவறாமல் கொடுத்த வாக்கை நிறைவேற்றி சொன்ன வார்த்தையையும் காத்து சோர்வு இல்லாமல் குடும்பத்தைத் தாங்கி நிற்பவள் பெண்ணாம்.. அப்படியில்லாமல் தானும் ஊதாரியாக இருந்து கோடி கோடியாய் தாய் வீட்டுச் சீதனமாய் கிடைத்த சொத்துக்களையும், தொழில்களையும் விற்றுத் தின்று, தன்னை மேரேஜ் பண்ணிக் கொண்டவனின் ஊதாரித்தனத்துக்குத் துணை போய் ஹஸ்பெண்ட் வீட்டுப் புராப்பர்ட்டியையும் கரைப்பாய் கரைத்து, உலகம் பூராவும் கடன் வாங்கி, தாய், தகப்பனின் சொத்துக்களை அழித்து விட்டு அண்ணன் மகனின் தயவில் குடும்பத்தோடு உட்கார்ந்து

சாப்பிடும் பெண்களும் இருக்கிறாங்க.. அவர்கள்ளாம் இந்த வயநாட்டு அரண்மனையோட மதிப்பு மரியாதையைக் காப்பாற்றி விட்டாங்க.. என் மனைவி அதைக் காப்பாற்ற மாட்டாளா..?" பேசாமல் நான்கு முழக் கயிறில் தொங்கி விடுவது சாலச்சிறந்தது என்று துக்கம் கொண்டாள் யாழினி.. ரவிச்சந்திரனிடம் மோதினால் என்ன ஆகும் என்று தெரிந்திருந்தும் மோதி நந்தினியின் குடும்பத்தாரின் முன்னிலையில் தன்மதிப்பைக் குறைத்துக் கொண்டு விட்டாளே..

மேகநாதனுக்கு அவர்களின் குடும்ப வரலாறு தெரியாது.. அதனால் ஆச்சரியப்பட்டுப் போனவர்..

"அப்படிக்கூட இருப்பாங்களா..? யாருங்க அவங்க..?" என்று கேட்டு வைத்தார்..

ரவிச்சந்திரனின் பார்வை சொல்லி விடவா என்று கேட்டது.. யாழினி அடங்கிப் போனாள்.. சின்னச் சிரிப்புடன்..

"எங்க ரிலேட்டிவ்ஸ்ல அப்படி ஒரு லேடி இருக்காங்க மாமா.." என்று உண்மையை மறைக்காமல் அதே சமயம் அது அவந்திகாதான் என்று அடையாளம் காட்டாமல் இதமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்..

அவனும்தான் என்ன செய்வான்..? அடைக்கலமாய் வந்தவர்களைச் சொல்லிக் காட்ட வேண்டுமென்று அவனுக்கு மட்டும் ஆசையா என்ன..? அத்தையின் குடும்பம் என்று அவர்களை அரண்மனையில் இருந்து கொள்ள அனுமதித்தான்.. அத்தையின் பிள்ளைகளைப் படிக்க வைத்தான்.. அத்தை மகளின் அட்டூழியத்தைத் தட்டிக் கேட்டுத் தண்டித்தாலும் அவனுக்கென்று பதவி கொடுத்து மும்பைக்கு அனுப்பி வைத்தான்.. அஜந்தாவைக் கண்டித்தாலும் வீட்டை விட்டு வெளியேற்றவில்லை.. அவர்களின் திருமணம், வாழ்க்கை நடத்துவதற்கான தொழில் என்று அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறான்..

பாதிக்கப்பட்ட யாரும் இது போன்ற உதவிகளைச் செய்ய மாட்டார்கள்.. அவந்திகாவால் அதிக அளவில் பாதிப்பை அடைந்தவன் உதவிகளை கடமையாக ஏற்றுச் செய்து கொண்டிருக்கிறான்.. அந்த நன்றி விசுவாசம் துளியளவு கூட அவந்திகாவிடமும் அவளுடைய குடும்பத்தாரிடமும் இருந்ததில்லை.. அவர்கள்தான் அப்படியென்றால் அருள்மொழிவர்மனும் யாழினியும் அதற்கு மேல் இருந்தார்கள்.. ரவிச்சந்திரன் தன் உழைப்பில் சம்பாதித்த

அனைத்துச் சொத்துக்களிலும் உரிமை கொண்டாடினார்கள்.. அதைத் தங்களின் மகள்வழிப் பேரனும், பேத்தியும் தான் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்தார்கள்.. அதற்காக ரவிச்சந்திரன் அஜந்தாவையும், ரம்ய மாலினி அபராஜிதனையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்..

ரவிச்சந்திரன் வீரன்.. மாவீரன்.. தன்னைக் காத்து, தன் குடும்பத்தையும் காத்து அத்தையின் குடும்பத்தைத் தள்ளி நிறுத்தி அவர்களுடன் தாத்தா பாட்டியையும் கோர்த்து விட்டு விலகி நின்று விட்டான்.. இதைச் சற்றும் எதிர்பார்க்காத அருள்மொழிவர்மனும் யாழினியும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் குடைச்சல் கொடுக்க ஆரம்பித்தால் இப்படித்தானே அவமானப் பட நேரும்..?

“உங்க சொந்தக்காரங்களில இப்படியும் பெண்கள் இருக்கிறாங்களா..? நாங்கள்ளாம் எங்க பிள்ளைகளுக்குச் சொல்லிச் சொல்லி வளர்த்திருக்கோம் மாப்பிள்ளை.. தான் அப்படிங்கிற மண்டைக்கனம் வந்து விடக் கூடாதுன்னு ராஜ குடும்பம் அப்படிங்கிற பரம்பரைப் பெருமையைக் கூடச் சொல்லாம மறைச்சு வளர்த்திருக்கோம்.. உழைத்துச் சம்பாதிக்கிற ஒவ்வொரு ரூபாயின் அருமையும் தெரியனும்

என்கிறதுக்காக எங்க பூர்விக கிராமத்தை விட்டு தஞ்சாவூருக்கு வந்து ஜவுளிக் கடையை ஆரம்பித்தேன்.. கிராமத்தில இருந்தா ஊர்ப் பண்ணையார் வீடுன்னு உச்சாணிக் கொம்பிலேயே வைச்சிருப்பாங்க.. பிள்ளைகளுக்கு தற்பெருமை தானா வந்திரும்.. அப்படியெல்லாம் இருக்கக் கூடாதுன்னு டவுன் பள்ளிக் கூடத்தில சேர்த்து விட்டுப் படிக்க வைச்சேன்.. படிப்பு பண்பைச் சொல்லிக் கொடுக்கும் மாப்பிள்ளை..”

“அதெல்லாம் பண்பானவர்களுக்குத்தான் மாமா.. சில ஜென்மங்கள் இருக்கிறாங்க.. எங்கே படிக்க வைத்தாலும்.. எத்தனை டிகிரியை வாங்கினாலும் உருப்படவே கூடாது என்கிற முடிவோட இருப்பாங்க.. அவங்களையெல்லாம் திருத்தவே முடியாது..”

அஜந்தாவை உறுத்துப் பார்த்தபடி சொன்னான் ரவிச்சந்திரன்.. அவள் முகம் கன்றி விட்டது.. கோபத்துடன் தாயிடம் முணுமுணுத்தாள்.. அது வாயைத் திறக்கும் நேரமல்ல.. இருக்கும் இடம் தெரியாமல் இருக்க வேண்டிய நேரம் என்று அவந்திகா மகளுக்கு அறிவுறுத்தினாள்..

“நாம சம்சாரிச்சா ரவி எவரைப் பறயறானெண்டு அனைவரும் அறிஞ் மோளே.. அதி வேணாம்.. கேட்டே..” என்று சொல்லி விட்டாள்..

“அதைச் சொல்லுங்க.. அதெல்லாம் வளர்ப்பில இருக்குது மாப்பிள்ளை.. எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே.. பின் அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலேன்னு பாட்டே இருக்குதில்ல..” என்று கலந்துரையாடியதில் அவந்திகா சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறதென்று புரிந்து கொண்ட அஜந்தா ‘கப்சிப்’ என்று பம்மி விட்டாள்..

“அப்படியெல்லாம் பெற்ற பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்கத் தெரியாத பெண்குட்டிகளைப் பற்றி என் பாட்டிக்கு நன்றாகவே தெரியும்.. ஆ பெண்குட்டி பெற்ற பெண் குட்டியை விட என் நந்தினிக் குட்டி கோடி மடங்கு அதிகமாக இந்த வயநாட்டு அரண்மனையோட மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றுவா.. ஏனென்றால்.. அவள்தானே இந்த வயநாட்டு அரண்மனையோட தம்புராட்டியான என் அம்மாவுக்கு மருமகள்.. தம்புராட்டியின் மருமகள் வயநாட்டு அரண்மனையோட பெகுமானத்தைக் காப்பாற்றுகிற வளாகத்தான் இருப்பாள்.. அதைப்பத்தி பாட்டிக்கு கவலை

வேண்டாம்.. இந்த அரண்மனையின் பெகுமானத்தைப் பாதுகாக்க தம்புரான், தம்புராட்டியா என் அப்பாம்மா இருக்கிறாங்க.. வருங்கால தம்புரான் தம்புராட்டியா நானும் நந்தினியும் இருக்கிறோம்.. பாட்டியும் தாத்தாவும் எந்தவிதக் கவலையுமில்லாம எஸ்டேட் பங்களாவில நிம்மதியா ரெஸ்ட் எடுத்துக்கலாம்.. வயதான காலத்தில அவங்களுக்கு அமைதியான சூழல் தேவை.. அரண்மனையோட பரபரப்பு அவங்களுக்கு ஒத்துக்காது.. துணைக்கு அத்தையின் குடும்பத்தை அவங்களோடு இருக்க வைக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்.. அரண்மனையைப் பார்த்துக்கத்தான் எங்க குடும்பம் இருக்குதே.. எங்க அரண்மனையை நானும், நந்தினியும் நன்றாகவே பார்த்துக்குவோம்.. இந்த மேரேஜ் முடிகிற வரைக்கும் அரண்மனையிலே அவங்க தங்கியிருக்கனும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை.. இன்றைக்கே அவங்க கிளம்பறதுக்கான அரேன்ஜ்மெண்ட் ஆரம்பமாகி விடும்.. அங்கிருந்து மேரேஜில் கலந்துக்க வந்து போகலாம்.. ஆர் யு ஹேப்பி தாத்தா..?”

அருள்மொழிவர்மனுக்கு இந்த முடிவு சந்தோஷத்தை அள்ளித் தந்து விடுமா என்ன..? ஆஹா எனக்கு பரம சந்தோஷம் கொச்சு மோனே என்று சொல்ல முடியாமல்

திகிலடித்து அவர் அமர்ந்து விட்டார்.. யாழினியோ வயநாட்டு அரண்மனைக்கு தம்புராட்டி அவளில்லை என்ற அறிவிப்பில் இடிந்து போயிருந்தாள்.. வீணாதான் தம்புராட்டி என்பதில் அவளுக்கு நெஞ்சுவலி வந்திருந்தது.. அவந்திகா ஒருவகையில் இந்த முடிவை எதிர்பார்த்திருந்தாள்.. உத்ரா விருந்தினராக வந்திருந்த போது எ ழுந்த சச்சரவில் இப்போதே என் விருந்தினருக்கு இடர் விளைவிப்பதைப் போல பேசுகிறீர்கள்.. நானை எனது வருங்கால மனைவியின் குடும்பத்தினரும், உறவினர்களும் இந்த அரண்மனையில் நிம்மதியாக வந்து போக விட மாட்டீர்கள்.. அதனால் அரண்மனையை விட்டு வெளியேறி வேறு ஒரு பங்களாவுக்கு குடி பெயர்ந்து விடுங்கள் என்று சொல்லியிருந்தான்.. அதுபோன்ற சூழல் தற்போது உருவாகி விட்ட நிலையில் ஏற்கனெவே எடுத்திருந்த முடிவை செயல்படுத்தி விடுவான் என்று நினைத்தாள்.. அவள் நினைத்தது நடந்து விட்டது..

‘ம்ஹூம்.. இதெல்லாம் நடக்குது.. எனக்குன்னு நான் நினைக்கிறது மட்டும் நடக்க மாட்டேன் என்கிறது..’ அவந்திகா துயரப் பெருமூச்சு விட்டாள்..

“அம்மை அச்சனோட பொருள்களை பேக் செய்யனுமல்லோ..”

ஓமனா உற்சாகமாக ஓடிய ஓட்டத்தில் அவள் கொட்டிக் கொள்ளும் சோற்றில் விஷத்தைக் கலந்து விட வேண்டும் என்ற வெறி கொண்டாள் யாழினி..

அரண்மனையை விட்டு வெளியேறி விடு என்று ரவிச்சந்திரன் தனித்துச் சொல்லியிருந்தால் அருள்மொழிவர்மன் அதை கண்டு கொள்ளாமல் சட்டமாக அங்கேயே உட்கார்ந்திருக்கலாம்..

அவனுக்குப் பெண் கொடுக்கப் போகும் குடும்பத்தின் முன்னிலையில் சொல்லிவிட்டான்.. அதற்குப் பின்பும் அரண்மனையில் இருந்தால் அவரது பெகுமானம் என்ன ஆவது..?

'ஈ கிழவி வாயை வைத்துக்கிட்டுச் சும்மா இருக்காம பெகுமானம் அதி, இதி எண்டு பழிப்புக் காட்டினாலல்லோ.. இப்போ ஆரோட பெகுமானம் வளி (காற்று) யில பறக்குது..? ஈ வயநாட்டுக் கொட்டாரத்துக்கு அகத்தே (உள்ளே) இருந்து ஜீவிதம் பண்ணினாத்தான் அருள்மொழிவர்மனுக்கு பெகுமானம் கொட்டாரத்த விட்டு புறத்தே (வெளியே) போயி, எண்ட பெகுமானமும் போயி.. ம்ஹூம்.. ஈ அவந்திகாவுக்கு

அச்சனா இருக்கிறேனல்லோ.. எண்ட பெகுமானம் எங்ஙனம் நிலைச்சு..?'

போகிற போக்கில் ஓர் அம்பை எய்து வைப்போம் என்று..

"அனைத்தும் ஆவேசிக்கிற எண்ட கொச்சு மோன், விவாகத்துக்கு முன்னர் விவாகம் கழிக்கப் போகிற பெண் குட்டியும் அவளைப் பெத்தவங்களும் மாப்பிள்ளையின் இல்லத்தில தங்கக் கூடாது எண்டு அறிஞ்ஞலையல்லோ.. பாவம்.. ஈ பெண்குட்டியும் அவளிட குடும்பமும் எவுடுந்து போயி.. ஹோட்டலுக்குப் போகுமோ..?" என்று இளக்காரமாக கேட்டு வைத்தார்..

இதை யோசிக்காமல் போய் விட்டோமே என்று முகம் இருண்டு போன மேகநாதன் மறுபடியும்..

"நாங்க தஞ்சாவூருக்குக் கிளம்பறோம்.." என்று அனத்த ஆரம்பித்து விட்டார்..

"நான் சொல்லலை.. இந்த ஓல்டு மேன் வெரி ஸ்ட்ரேன்ஜ் மேன் அக்கா.. இவர் கொளுத்திப் போடறதெல்லாம் பிரம்மாஸ்திரமாத்தான் வெடிக்குது.. நம்மளை இந்த வயநாட்டை விட்டு ஓட்டி விடறதிலேயே குறியாய் இருக்கிறார் பார்த்தியா.. எத்தனை அடி வாங்கினாலும் எடுத்த காரியத்தில

இருந்து பின்வாங்காம இருக்கிற வில் பவர் இருக்கே.. அட..அட..அட..அட..”

அடுத்த ‘அட’வைச் சொல்ல முடியாமல் முதுகில் மொத்து வாங்கினான் நந்தகுமார்..

எவருக்கும் தெரியாமல் தம்பியின் முதுகில் அன்பாக மொத்திய நந்தினி..

“இருக்குடா உனக்கு..” என்று பல்லைக் கடித்தாள்.

“எங்க தஞ்சாவூரில, எங்க வீட்டில, எங்க சொந்த பந்தம் முன்னிலையில நீங்க பெண் கேட்டு வந்து, நானும் சொந்த பந்தத்தை சாட்சியாக வைத்து இன்ன இன்ன சீர்வரிசைகளை என் மகளுக்குச் சீதனமாக் கொடுக்கப் போகிறேன்னு அறிவிச்சு நிச்சயதார்த்தம் பண்ணி கல்யாணத்துக்கு நாள் குறிச்சாத்தான் எங்களுக்குப் பெருமை மாப்பிள்ளை..”

“மாமா.. மேரேஜுக்கான டேட் பக்கத்தில இருக்கு.. நீங்க தஞ்சாவூருக்கு டிராவல் பண்ணித் திரும்பி வர நேரமில்லை..” என்று ஆரம்பித்து எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டான் ரவிச்சந்திரன்..

ஊஹூம்.. மேகநாதன் அசைந்து கொடுக்க மறுத்து விட்டார்.. 'சந்தைக்குப் போகனும், காசு கொடு..' என்ற சப்பாணியின் புலம்பலைப் போல தஞ்சாவூருக்குப் போகனும் என்று புலம்பிக் கொண்டேயிருந்தார்..

"உன் ஹீரோ இப்ப என்ன பண்ணுவாராம்..?" வம்பிழுத்தான் நந்தகுமார்..

நந்தினி ஏக்கத்துடன் அவளுடைய ஹீரோவைப் பார்த்தாள்.. அவன் யாருடனோ செல்ஃபோனில் பேசிக் கொண்டிருந்தான்..

"உன்னைக் கட்டிக்கிறதுக்குப் பதில் அவர் செல்ஃபோனைக் கட்டிக்கலாம் அதுதான் அவரோட பெண்டாட்டி போல ஒட்டிக்கிட்டே இருக்குது.."

"இதை ஏற்கனெவே பலதடவை நினைச்சு நொந்துட்டேண்டா நந்தகுமாரு.. புதுசா எதையாச்சும் சொல்லு.."

நந்தினி எரிச்சல் பட்டுக் கொண்டிருந்த போது ரவிச்சந்திரன் செல்ஃபோனை அனைத்து விட்டு மேகநாதனிடம் வந்தான்..

“இப்ப என்ன..? உங்களுக்கு உங்க வீட்டில தங்கி, நாங்க அங்க வந்து பெண் கேட்டு.. ஊர் உலகத்தை நீங்க செய்யப் போகும் சீர்வரிசைகளை சாட்சியா வைச்சு எங்க மேரேஜ் எங்கேஜ்மெண்டை நடத்தனும்.. அவ்வளவுதானே மாமா..” என்று கேட்டான்..

“அவ்வளவுதான் மாப்பிள்ளை..” என்றார் அவர்..

“அதற்கு உங்க வீட்டில்தான் இருக்கனும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லையே.. உங்க பங்காளி வீட்டில் கூட இருந்து மேரேஜை பிக்ஸ் பண்ணலாமே..” அவன் யோசனை சொல்ல..

“வயநாட்டில எனக்கேது பங்காளி வீடு..” பெருமூச்சு விட்டார் அவர்..

“உண்டு அணியா.. (தம்பி)..”

கம்பீரமாக வந்த குரலில் அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. ரவிச்சந்திரனின் வயதையொத்த வாலிபன் ஒருவனுடன் பத்மானந்தன் மாடிப்படியேறி வந்து கொண்டிருந்தார்..

அத்தியாயம் 262

"அம்மே.."

அவந்திகாவின் காதில் கிறிச்சிட்டாள் அஜந்தா.. அவந்திகாவோ திக்பிரமை பிடித்தவளாய் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.. அங்கே உடன் பிறந்த தம்பி யோகானந்தன் வயநாட்டு மலைக் குன்று போல உட்கார்ந்திருக்க அவரை கண்டு கொள்ளாமல் மேகநாதனைக் கட்டித் தழுவி உறவு கொண்டாடினார் பத்மானந்தன்..

"ஞான் ரவிச்சந்திரனிட அம்மாவனாக்கும்.. நிங்க ரவிச்சந்திரனுக்குப் பெண் கொடுக்கப் போகிற அம்மாவன்.. அங்ஙன எண்டா எனிக்கு நீங்க அணியல்லோ.. எண்ட தரவாடு நிங்க தரவாடல்லோ.."

பத்மானந்தனின் பாசப் பிணைப்பில் திகைத்துப் போன மேகநாதனிடம் அவர் சொன்னதை மொழி பெயர்த்துச் சொன்னான் ரவிச்சந்திரன்..

"இவர் என்னுடைய மாமா.."

இதைச் சொல்லும் போது யோகானந்தனைப் பார்த்துக் கொண்டே அவன் சொன்னதில் யாழினி வெகுண்டாள்..

“வளர நன்னாயினுக்கு கொச்சு மோனே.. நிண்ட அம்மாவன் இங்கிருக்க அவரிண்ட சேட்டன நீ அம்மாவன்னு விளிச்சு..”

“இது என்ன பாட்டி வம்பாப் போச்சு.. என் அத்தையை மேரேஜ் பண்ணிக்கிட்ட மாமாவோட அண்ணன் எனக்கு என்ன முறையில் சொந்தமாகனும்..? மாமா என்கிற முறையில்தானே சொந்தமாகனும்..? சித்தப்பா முறையிலா சொந்தமாகனும்..?” இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று யாழினி தவித்துக் கொண்டிருக்க வந்திருப்பவர் அவந்திகாவின் மைத்துனர் என்பதைப் புரிந்து கொண்டார் மேகநாதன்..

“மலையாளத்தில் அணியன் என்றால் தம்பி என்று அர்த்தம்.. சேட்டன் என்றால் அண்ணன்..” ரவிச்சந்திரன் விளக்கம் சொல்ல..

“புரியுது மாப்பிள்ளை.. புரியுது..” என்று தான் பிறந்தது தஞ்சாவூர் சீமையிலே என்பதை மெய்ப்பிக்கும் விதமாக தஞ்சாவூர் பொம்மையாக தலையாட்டினார் மேகநாதன்..

“தரவாடுன்னா பெரிய குடும்பத்தின் வீடு என்று அர்த்தம்.. மாமா உங்களுக்கு அண்ணன் முறை சொந்தம் என்கிறதால அவர் வீடு உங்களுடைய வீடு போல என்கிறார்..”

“அப்படியா சொல்கிறார்..?” மேகநாதன் தாடையைத் தடவ.. நந்தகுமாரன்..

“ம்ஹூம்..” என்றான்..

“என்னடா..?” நந்தினி வினவினாள்..

“அத்தான் இப்பத்தான் தாடையைத் தடவறதை நிறுத்திட்டு ஆக்ஷன்ல இறங்கியிருக்கார்.. அடுத்ததா நம்ம அப்பா ஆரம்பிச்சுட்டாரா..?”

“டேய்.. உனக்கென்ன.. கமெண்ட் பண்ண வாயா வலிக்கப் போகுது..? அவங்க டென்ஷன் அவங்களுக்கு..”

“அதுக்கு நீயேன் நகத்தைக் கடிச்சுத் துப்பற..?”

“என்னோட டென்ஷன் எனக்கு..”

“தம்பின்னு நான் ஒருத்தன் கூட இருக்கிறப்ப நீ தனியா டென்ஷனாகலாமா..?” “என்ன செய்யனும்ங்கிற..?”

“டென்ஷனைப் பகிர்ந்து இந்தப் பக்கம் கொஞ்சம் தள்ளி விடுண்ணேன்..”

“அடேய் நந்து.. வந்திருக்கிறவர் வேற யாருமில்லை.. இந்த அஜந்தா சிமிட்டி இருக்கிறாள்ல..”

“என்னது.. அஜந்தா சீமாட்டியா..?”

“அவளைச் சீமாட்டின்னு என் வாயால சொல்ல மாட்டேன்..”

“அப்ப கன்ஃபர்மா நீ சிமிட்டின்னுதான் சொல்லியிருப்ப.. நெக்ஸ்ட் புரசீட்..”

“இவளோட சொந்த பெரியப்பாதான் இவர்..”

“இதைத்தான் அத்தான் விளக்கமா சொல்லிட்டாரில்ல.. நீ வேற புளிப் போட்டுத் தேய்த்து விளக்கனுமா..?”

“இவன் வேற.. சொல்கிறதை முழுசா சொல்ல விட மாட்டான்.. இவளோட பெரியப்பா எதுக்காகடா நம்ம அப்பாவோடு அங்காளி, பங்காளி உறவு கொண்டாடறாரு..”

“அதானே.. எதிரிக்கு எதிரி நண்பன்னு ஒண்ணு கூடறாரோ..”

“இருக்குமோ..”

நந்தினி பத்மானந்தனைப் பார்த்தாள்.. யோகானந்தனின் ஜாடை அப்படியே இருந்தது.. ஆனால் நடையுடை

பாவனைகளில் தான் யோகானந்தனுக்கு நேர் எதிர் என்பதை நிரூபித்தார்.. நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, கம்பீரத் தோற்றம், வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசும் பாங்கு என்று அனைத்திலும் அசத்தலாக இருந்தார்.. முக்கியமாக அவரது விழிகளில் காருண்யமும், கனிவும் பொங்கி வழிந்தன.. யோகானந்தனைப் போல சிவந்த விழிகளுடன் பயங்கரமாய் முறைக்கவில்லை.. அந்த ஒன்றிலேயே அவரை நந்தினிக்குப் பிடித்துப் போய் விட்டது.. அதனால்தானோ என்னவோ.. அவர் ரவிச்சந்திரனிடம்..

"நிங்க எண்ட மோளை விவாகம் கழிக்கனுமெண்டு ஞான் ஆக்ரஹாம் கொண்டு.. பட்ஷே.. நிங்க மனசு ஈ தமிழ்நாட்டு அணியனிண்ட மோளிடம் சிக்கி.. பரவாயில்லா நந்தினிக் குட்டியும் எண்ட மோள்தானல்லோ.." என்று சொன்னபோது கோபம் வரவில்லை..

பத்மானந்தனின் மகன் உயரமாய், கவர்ச்சிகரமான அழகோடு இருந்தான்.. அவனை வயநாட்டுப் பக்கம் பார்க்கவே முடியவில்லை என்று ரவிவர்மன் சொன்னார். .

"எந்தா கேள்வி இதி அம்மாவனே..! எண்ட மகன் வெளி நாட்டில பிஸினெஸ் செய்யப் போயி.. நிங்க இதி அறிஞ்ஞலையோ.." பத்மானந்தன் பிணக்கு கொண்டார்..

அபராஜிதனின் பெரியப்பா மகன் நேர்த்தியான உடையணிந்து கண்ணியமான தோற்றத்துடன் இருந்தான்.. அங்கே ரம்ய மாலினியும் இருந்தாள்.. மறந்தும் அவள் இருக்கும் திசைப்பக்கம் அவன் பார்க்கவில்லை என்பதில் இவன் அபராஜிதனின் பெயரிப்பா மகன்தானா என்று ஆச்சரியம் கொண்டாள் நந்தினி..

அண்ணன், தம்பி இருவருக்கும் நேர் எதிரான குணாதிசயம் இருப்பதைப் போல அவர்கள் பெற்று வளர்த்த பிள்ளைகளிடமும் நேர் எதிரான குணாதியங்கள் இருக்கின்றனவே.. நந்தினியின் பார்வை பத்மானந்தனின் மகனை அளவிட்டதில் அவந்திகா குன்றிப் போனாள்.. அவள் மனதில் ஓடும் மதிப்பீடு என்னவாக இருக்கக் கூடும் என்பதை அவந்திகாவினால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவளது விழிகளில் கண்ணீர் அரும்பியது..

அவளும்தான் என்ன செய்வாள்..? அபராஜிதனும், அஜந்தாவும் சூழ்ச்சிகளின் உறைவிடமாய் வார்ந்த

விட்டார்களே.. அவள் அப்படி வளர்க்க நினைக்க வில்லைதான்.. பிறந்த வீட்டை அண்டி வாழ வேண்டிய நிலைமை அப்படியொரு சூழலை ஏற்படுத்தி விட்டதே.. ஊதாரிக் கணவனை நம்பி யாதொரு பிரயோஜனமும் இல்லை என்று ஆனதிலே அவள் பிள்ளைகளுக்கு சூழ்ச்சியைக் கற்றுக் கொடுத்து விட்டாள்.. பிழைத்திருக்கப் போராடு என்று சொல்லிக் கொடுப்பதை விட்டு.. நீ நன்றாக வாழ வேண்டுமானால் யாரை வேண்டுமானாலும் நாசமாக்கலாம் என்று சொல்லிக் கொடுத்தாள்.. உழைத்துப் பிழை என்று சொல்வதை விட்டு விட்டு மற்றவர்களின் சொத்தையும் பணத்தையும் தட்டிப் பறித்து அதில் பிழைக்கும் கலையைக் கற்றுக் கொள்ளச் சொல்லி பிள்ளைகளுக்கு உபதேசித்தாள்.. அதன் விளைவாய் அபராஜிதன் அயோக்கியனாக வளர்ந்து நிற்கிறான்.. அஜந்தா சூனியக்காரியின் மறு உருவமாக திகழ்கிறாள்.. அவந்திகாவின் கணவருடைய அண்ணன் பிள்ளைகள் பார்ப்பவர்கள் மதிக்கும்படி உயர்ந்து நிற்கிறார்கள்..

வயநாட்டில் பத்மானந்தனின் குடும்பத்திற்கு இருக்கும் மதிப்பு யோகானந்தனின் குடும்பத்திற்கு இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.. திருமண வயதில்

பிள்ளைகளை வைத்திருப்பவர்கள் பத்மானந்தன் வீட்டில் பெண் கொடுக்கவும், பெண் எடுக்கவும் போட்டி போட்டார்கள்.. அதுவே அபராஜிதனையும், அஜந்தாவையும் கண்டு கொள்வாரில்லை..

"நிங்க ரெண்டு பேரும் ஆரானு..? அருள்மொழிவர்மனிட கொச்சு மோளும், கொச்சு மோனுமல்லோ.. நிங்க அம்மாவன் பிள்ளைகளான ரவிச்சந்திரனும், ரம்ய மாலினியும் இருக்கிற கொட்டாரத்தில நிங்கள வரன் கேட்கும் துணிவு இந்த வயநாட்டில எவருக்கு உண்டு..?" என்று அடிக்கடி யாழினி சொல்லிக் கொண்டாலும் அவள் மனதுக்கே அது பொய் என்பது மிக நன்றாகவே தெரியும்..

ரவிச்சந்திரனும், ரம்ய மாலினியும் இருக்கும் அரண்மனையில் அபராஜிதனையும், அஜந்தாவையும் வரன் கேட்டு வராதவர்கள் ரவிச்சந்திரனுக்கும், ரம்ய மாலினிக்கும், பெண் கொடுத்து, பெண் எடுக்க தவம் புரிவது ஏன்..?

சொந்தமாக குடிசை கூட இல்லாதவர்களின் வீட்டுப் பிள்ளைகளை கேரளத்து ராஜ குடும்பங்களில் இருந்து எப்படித் திரும்பிப் பார்ப்பார்கள்..?

நிதர்சனத்தைப் புரிந்து கொண்டு அவர்கள் தனித்து வாழ்ந்து காட்டட்டும் என்று ரவிச்சந்திரன் அபராஜிதனுக்காக தொழில் உருவாக்கிக் கொடுத்தால் அவன் அதை விற்றுத் தின்று விட்டு ஊரைச் சுற்றிக் கடன்களையும் வாங்கி வைத்தான்.. அஜந்தாவிற்கு சொத்துக்களை எழுதி வைத்து திருமணம் பேசி முடிக்க முனைந்தால் அவள் அதை விற்று வைர நகைகளை வாங்கிக் கொண்டு உல்லாசமாக ஊர் சுற்றி விட்டு வந்து சேர்ந்தாள்.. அதற்கு மேலும் அவர்கள் இருவருக்காக சொத்துக்களை விட்டுக் கொடுக்க ரவிச்சந்திரன் தயாராக இல்லை.. அவரவர் தலைவிதி அவரவர்க்கு என்று விட்டு விட்டான்..

ஒருவன் கரையோற கை கொடுக்கலாம்... உதவிக்கரத்தை இறுக்கிப் பிடித்து கரையோர முனையாமல் உதவி செய்பவனையும் உள்ளே இழுத்து ஆழத்தில் அமிழ்த்து விடுபவனுக்கு எப்படிக் கை கொடுக்க முடியும்..?

ஆதலினால் அத்தை மகன் என்ற வன்கொடுமை சொந்தத்திற்காக அபராஜிதனுக்கு வேலை போட்டுக் கொடுத்து விட்டு அவனது சம்பளத்திற்கு மேல் நயா பைசா கூடக் கொடுக்கக் கூடாது என்று கம்பெனி நிர்வாகிகளை எச்சரித்து வைத்யதான்.. யோகானந்தனிடமிருந்து தற்காத்துக் கொள்ள

செய்ததைப் போல அபராஜிதன் வாங்கும் கடன்களுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று உலகம் மொத்தமும் வெளியாகும் அத்தனை நாளிதழ்களிலும் வியாபார இதழ்களிலும் விளம்பரம் கொடுத்து விட்டான்.. அனைத்து மொழிகளிலும் அந்த விளம்பரம் வெளியானதில்..

"எந்துக்கு இங்ஙன செய்து கொச்சு மோனே.. அபராஜிதனோட அச்சனுக்கு சிஷா (தண்டனை) அளிச்சு.. அதில நியாயம் இருந்து.. ஈ மனுஷன் சிறுவனல்லோ.. அபராஜிதனுக்கும் அவனிட அச்சனப் போல நீ சிஷா அளிச்சு.. அவன் பாவமல்லோ.." என்று மருகினாள் யாழினி..

"நானும் பாவம்தான் பாட்டி.. அத்தை, அத்தையின் குடும்பம்ன்னு பாவம் பார்த்து என் அப்பா உட்கார்ந்த வரை போதும்.. நானும் உட்காரத் தயாராக இல்லை.. அவங்க இருக்க இடம் கிடைக்கும்.. பார்க்க வேலை கிடைக்கும்.. மேரேஜ் அது இதுன்னு வருகிறப்ப பணத்தை செலவழித்து முன்னே நின்று நடத்தி வைக்கிறேன்.. இதுதான் என்னால் முடியும்.. இதைத்தவிர வேறு எதையும் என்னிடமிருந்து எதிர் பார்க்காதீங்க.."

அழுத்தம் திருத்தமாக ரவிச்சந்திரன் அறிவித்து விட்ட பின்பும் அவந்திகாவும் அவளுடைய குடும்பத்தாரும் மாறவே இல்லை.. என்றைக்கிருந்தாலும் ரவிச்சந்திரன் அஜந்தாவுக்குத்தான், ரம்ய மாலினி அபராஜிதனுக்குத்தான் என்று ஊர், உலகம் முழுவதிலும் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.. அவர்கள் சொல்வதை எவரும் காதுகளில் போட்டுக் கொள்ளவே இல்லை.. இத்தனைக்கும் சிகரமாக அவந்திகாவின் அண்ணன் மகனான ரவிச்சந்திரனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்று நேரடியாக கேட்டு வந்தார் பத்மானந்தன்.. உன் தம்பி என் தங்கையின் கணவன்.. அவன் பிள்ளைகளுக்குத்தான் முன்னுரிமை என்று சொல்லாமல் ரவிவர்மனும் வீணாவும் அவரை உட்கார வைத்து சகபவிதமான உபச்சாரங்களையும் செய்து பேசி வழியனுப்பி வைத்தார்கள்..

மரியாதையான பிழைப்பு என்றால் எது என்று அன்று அவந்திகா புரிந்து கொண்டாள்.. இன்று மறுபடியும் அதை அவள் புரிந்து கொள்ள பத்மானந்தனின் மகன் பெரிய அளவில் வளர்ந்து ரவிச்சந்திரனின் உபசரிப்புக்கு அருகதையுள்ளவனாக அவள் முன் நிற்கிறான்..

“பிரதீபா..! எந்தா ஆலோசிக்கனது மோனே..! நிண்ட அம்மாவனின் பாதம் பணிந்து ஆசிர்வாதம் பெறனுமல்லோ..” பத்மானந்தனின் கட்டளையில் ரவிவர்மன், வீணாவின் பாதம் பணிந்து எழுந்தான் பிரதீபன்..

“வளர சுமகா இருக்கனுமல்லோ..” மனமார ரவிவர்மன் ஆசிர்வாதம் செய்ததில் அவந்திகாவின் முகம் சுணங்கிப் போனது..

“நோக்கு மோளே..! நிண்ட பெரிய அச்சனின் மோனுக்கு எண்ட சேட்டன் ஆசிர்வாதம் அளிச்சு.. ஓர் திவசத்துக்காவது நம்மட அபராஜிதனுக்கு ஈ மனுஷன் இங்ஙனம் ஆசிர்வாதம் அளிச்சிருக்குமோ..?” அஜந்தாவிடம் புலம்பினாள்..

“அதிக்கு ஓர் திவசமாவது நிங்கட மோன் நிங்கட சேட்டன் காலில் விழுகனுமல்லோ..?” என்று கேட்டு அவந்திகாவின் கண்ணீரை நிறுத்தினாள் அஜந்தா..

“அதிக்குக் கூட ஞான் சொல்லித் தரனுமோ.. தானாய் அறிஞ் அம்மாவன் பாதம் பணிஞ் அசீர்வாதம் பெற வேணாமோ..” அங்கலாய்த்தாள் அவந்திகா..

“எந்து கழுதைக்கு எண்ட சேட்டன் நிங்கட சேட்டன் காலில் விழுகனுமாம்..? ஈ மனுஷன் காலில் விழுந்தாத்தான்

ஆசிர்வாதம் கிடைக்குமெண்டா ஆ ஆசிர்வாதம் எனிக்கும் வேணாம்.. எண்ட சேட்டனுக்கும் வேணாம்.. கேட்டே..”

இப்படிப் பேசிப் பேசி என்னத்தைக் கண்டு தொலைத்தீர்கள் என்று மனம் குமுறினாள் அவந்திகா.. இதோ அவளது கண்முன்னால் சதுரங்கப் பலகை வைக்கப்பட்டு விட்டது.. உருட்டி விடப்படப் போகும் பகடைக் காய்களில் அவளது கனவுகள் பறிக்கப்படப் போகின்றன.. அதை அஜந்தா அறிவாளா..?

“ஞான் அறிஞ் அம்மே.. பட்ஷே.. இதி போல நடக்குமெண்டுதான் அறியாமல் போயி..” அஜந்தாவின் தொண்டை கமறியது..

அஜந்தாவின் கைவரிசை செல்லுபடியாகாத இடங்கள் மூன்றே மூன்றுதான்.. முதலாவது ரவிச்சந்திரன்.. மூன்றாவது தரங்கிணியின் குடும்பம்.. முதலாவதை நேரடியாக நந்தினியே அறிந்திருக்கிறாள்.. மூன்றாவதை ரம்ய மாலினியின் வாய்மொழி மூலமாக அறிந்திருக்கிறாள்..

இரண்டுக்கும் இடைப்பட்ட இரண்டாவது இடம் முதன்மையானது.. ரவிச்சந்திரனை விடவும் கண்டிப்புக்

காட்டுவது.. அவந்திகாவின் குடும்பத்திற்கு சிம்ம சொப்பனமாக திகழ்வது..

அதுதான் பத்மானந்தனின் குடும்பம்.. அவந்திகாவின் குடும்பத்தினால் அசைக்கவோ, அணுகவோ முடியாத குடும்பம்.. அவர்களுக்கு அஞ்சாத குடும்பம்.. அவர்களை அஞ்ச வைக்கும் குடும்பம்..

அத்தியாயம் 263

பத்மானந்தன் பாசமானவர்தான்... ஆனால் பலவீனமானவரல்ல.. யோகானந்தனின் பங்கை சிறிதளவும் குறைக்காமல் பிரித்துக் குடுத்து விட்டார்.. தம்பி தனது பங்கை தொலைத்து விட்டு உதவி கேட்டு வந்த போது உதவினார்.. வயநாட்டில் இருந்த ஃபேக்டரியையும் பெரிய பங்களாவையும் தம்பியின் பெயருக்கு எழுதிக் கொடுத்தார்.. இரண்டே நாள்களில் யோகானந்தன் அதை விற்று விட்டுக் குடும்பத்துடன் உலகத்தைச் சுற்றிப் பார்க்க கிளம்பி விட்டதில் இடிந்து போய் விட்டார்..

தம்பியின் குணத்தை நன்று அறிந்திருந்ததினால் தள்ளி நின்றிருந்தவர்தான்.. வயநாட்டு அரண்மனையின் தம்புரான் அருள்மொழிவர்மனின் மகளான அவந்திகாவை யோகானந்தன் திருமணம் செய்து அரண்மனைக்கு மருமகனாகி விட்டதில் தம்பியை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் உதவிக்கரம் நீட்டி விட்டார்..

அவர் கொடுத்த ஃபேக்டரியையும் அவந்திகாவின் சொத்துக்களாக கிடைத்த தொழில்களையும் வைத்து

யோகானந்தன் விட்டதைப் பிடித்து விடுவார் என்று முட்டாள்தனமாக நினைத்து விட்டார்.. அரண்மனைக்கு மருமகன் ஆன பின்பு தம்பியின் குணம் மாறி பொறுப்பு வந்திருக்கும்.. அவந்திகா யோகானந்தனுக்கு எடுத்துச் சொல்லி வயநாட்டில் பெரிய மனிதனாக வாழ வைத்து விடுவாள் என்றெல்லாம் அவர் கனவு காண அவரது கனவில் அவந்திகாவும் கூட்டுச் சேர்ந்து கொண்டு கூடை கூடையாய் மணலை அள்ளிக் கொட்டி விட்டாள்.. யோகானந்தனுடன் ஜோடி போட்டுக் கொண்டு இவளும் பொறுப்பில்லாமல் ஊரைச் சுற்றினாள்..

உலகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு திரும்பி வந்த யோகானந்தனும் அவந்திகாவும் சட்டமாக பத்மானந்தனின் அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள்.. அப்போது அபராஜிதனும், அஜந்தாவும் சின்னஞ்சிறு பிராயத்தினராய் இருந்தார்கள்..

இருப்பினும் நடந்த நிகழ்வுக்ள அஜந்தாவின் மனதில் பசுமரத்தாணி போல பதிந்திருக்கின்றன.. பிரதான வாயிலைக் கடந்து பெரிய ஹாலுக்குள் காலடி வைத்தவர்களை..

“நில் அங்கேயே..” என்ற பத்மானந்தனின் குரல் தேக்கி நிறுத்தியது..

அகம்பாவம் பிடித்த அவந்திகாவே அந்தக் குரலில் தொனித்த கறாரிலும் கண்டிப்பிலும் பயந்து போனாள்.. உள்ளுக்குள் இருந்த பயத்தை மறைத்துக் கொண்டு வெளியே ஆணவமாக தலை நிமிர்ந்து நின்றாள்.. மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த பத்மானந்தனின் பார்வையை நேருக்கு நேர் எதிர் கொண்டாள்..

பத்மானந்தனுக்கு கங்கு கரையில்லாத கோபம் பொங்கிக் கொண்டிருந்தாலும் தம்பியின் மனைவியிடம் அதைக் காட்டி விடக் கூடாது என்ற கண்ணியம் காத்தவராக, அவந்திகாவின் பக்கம் கூடத் திரும்பாமல் யோகானந்தனைப் பார்த்து..

“எங்கே வந்தாய்..?” என்று உறுமினார்..

அவரது அந்த கண்ணியத்தை உதாசீனம் என்று நினைத்துக் கொதித்துப் போனாள் அவந்திகா.. அதுவரை அவளிடம் பத்மானந்தன் கோப முகம் காட்டிப் பேசியதில்லை.. அறிவுரை கூறுவதாக இருந்தாலும் சாந்த முகம் காட்டித்தான் பேசுவார்.. அவள் அருள்மொழிவர்மனின் மகள், ரவிவர்மனின் தங்கை என்ற மரியாதை அவர் மனதில்

இருந்தது.. அதை அவளிடம் அவர் காட்டிய பயம் என்று அகம்பாவம் கொண்டிருந்தாள் அவந்திகா..

'ஈ அவந்திகா ஆரானு..? வயநாட்டு கொட்டாரத்தின் தம்புரானிட செல்ல மோளாக்கும்.. எனிக்கு ஈ பத்மானந்தன் இணையோ..? என் காலடி பட இவரிட தரவாடு (பெரிய குடும்பத்தின் பெரிய வீடு) கொடுத்து வைத்திருக்கனு மல்லோ..' என்ற கர்வம் அவளுக்கு..

அந்தத் கர்வமும் அகம்பாவமும் ஆணவமும் தலை விரித்தாட அவள் தன் கணவரின் தமையனிடம் படு திமிராக..

"அதி வினவ நிங்க ஆரானு..?" என்று கேட்டு விட்டாள்..

ஏற்கனெவே கணவனைக் கண்டித்துத் தன் கட்டுக்குள் வைத்து ஒழுங்காக குடும்பம் நடத்தாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த அவந்திகாவின் மீது கோபம் கொண்டிருந்த பத்மானந்தன் அவளது ஆணவம் மிக்கக் கேள்வியில் ஆத்திரமடைந்தார்.. அதுவரை அருள்மொழிவர்மனின் முகத் தாட்சண்யத்திற்காக பொறுமை காத்தவரின் பொறுமை காற்றில் பறந்து விட்டது..

"ஞான ஆரோ..? எந்தா தைரியம்..! ஈ தரவாடு எண்ட தரவாடு..! மனசிலாயி.. எனிக்கு மட்டும் சொந்தமான

தரவாடு..! கேட்டே.. ஈ தரவாடில ஜீவிதம் செய்ய எண்ட பார்யாளுக்கும் எண்ட பிள்ளைகளுக்கும் மட்டுமே உரிமையுண்டு.. நீயும் நிண்ட கணவனும் எந்து சொந்தத்தில இங்கு வந்து..? ஈ தரவாடு ஒந்நும் சத்திரம் சாவடியல்ல...”

கேரளத்தின் ராஜ குடும்பங்களில் பெயர் பெற்ற முதன்மையான ராஜ குடும்பம் வயநாட்டு அருள்மொழிவர்மனின் குடும்பம்.. அவரின் செல்ல மகளாகப் பிறந்து ரவிவர்மனைப் பற்றிப் பெற்றவர்கள் நினைத்து விடாமல் பார்த்துக் கொண்டு அவர்களது ஒட்டு மொத்த பாசத்திற்கும் ஏகபோக உரிமை கொண்டாடி அரண்மனையின் அனைத்துச் சொத்திற்கும் ஒரே வாரிசு போல வளர்ந்திருந்த அவந்திகா அதிர்ச்சியடைந்தாள்.. அவளைப் பார்த்து இப்படிப்பட்ட வார்த்தைகளை பத்மானந்தன் பேசுவார் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லையே..

அவமானம் தாங்காதவளாக அவள் உரக்கக் கத்தினாள்..

“ஈ தரவாடு எனிக்குச் சத்திரம் சாவடியைப் போலதான் எண்ட வயநாட்டு கொட்டாரத்தின் வாசல் புறத்துக்கு ஈடாகுமா ஈ தரவாடு..? நிங்கட அணியனை விவாகம் கழிச்சதினால ஈ தரவாட்டிற்கெல்லாம் ஞான் வர வேண்டிய கொடுமை வந்து..

என் காலடி பட ஈ தரவாடு தவம் செய்திருக்க வேண்டுமல்லோ.. ஞான் ஆரெண்டு மறந்து போனதோ.. வயநாட்டுக் கொட்டாரத்தின் தம்புரான் அருள்மொழிவர்மனோட செல்ல மோளாக்கும்.. நிங்கள ஒரு மனுஷனென பாவிச்சு பந்தம் கொண்டாடினா ஈ பெகுமானம்தான் எனிக்குக் கிட்டும்.. கேட்டே..”

“வளர சம்சாரிக்காணாம்.. அவந்திகா.. கேட்டே.. எண்ட தரவாடில நின் காலடி பதிக்கச் சொல்லி எவரும் இங்கு பறஞ்ஞல.. கேட்டே.. நிண்ட அச்சனோட வயநாட்டுக் கொட்டாரத்திலேயே நீயும், நிண்ட கணவனும் பிள்ளைகளும் ஜீவிதம் பண்ணிக்கலாம்.. அதில எனிக்கு எவ்விதமான ஆட்சேபனையுமில்ல.. கேட்டே.. ஈ கேரளத்துப் பெண்குட்டிகள் விவாகம் கழிச்சா கணவனிண்ட இல்லத்தத்தான் தன் இல்லமாக விஜாரம் கொள்வாரல்லோ.. கணவன் மதியிழக்க சுற்றினா பார்யா அவனைத் திருத்தனும்.. அதி விட்டுத் தானும் அவனோட சேர்ந்து ஊர் சுற்றினா எந்து பெகுமானம் கிட்டும்..?”

அன்று பத்மானந்தன் சொன்ன வார்த்தைகள் இன்று சம்மட்டி அடிகளாய் அவந்திகாவின் நெஞ்சில் விழுந்தன.. யோகானந்தனைக் கண்டிக்காமல் எவ்வளவு கரைத்தாலும்

கரையாத சொத்துக்களுக்கு நான் உடைமைக்காரி என்று செருக்குப் பிடித்துச் சுற்றினாளே.. ஆயிரம் தலைமுறைகளுக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவிற்கான சொத்துக்களை அறுபதே வினாடிகளில் யோகானந்தன் அழித்துக் காட்டி விடும் வல்லமை வாய்ந்தவர் என்பதை அறியாமல் போனாளே..

அவந்திகா அரண்மனையின் இளவரசிதான்.. ஆனால் கூண்டுக் கிளி.. அரண்மனைக் கிளிக்குக் கிட்டும் கூண்டு வைரங்கள் பதித்தாகத்தான் இருக்கும்.. வைடூர்யக் கூண்டாக இருந்தாலும் கூண்டு, கூண்டுதானே.. அவள் கேரளத்தின் நகரங்களில் நடக்கும் உறவினர் வீட்டு விழாக்களுக்கு குடும்பத்துடன் போய் வரலாம்.. உல்லாசமாக ஊர் சுற்றியதில்லை.. அருள்மொழிவர்மன் பழமையில் ஊறியவர்.. தன் பிள்ளைகளையும் அவ்விதமே வளர்த்தவர்.. ரவிவர்மன் வயநாட்டில் இருந்த சொத்துக்களை விஸ்தீரிக்க நினைத்ததேயில்லை.. அப்படி வயநாட்டு அரண்மனைக்குள் சிறைபட்டு என்றோ ஒருநாளில் வரும் உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளுக்காக ஏங்கிக் கிடந்த அவந்திகாவுக்கு உலகத்தையே சுற்றிக் காட்டி அசத்தி விட்டார் யோகானந்தன்.. திருமணம் என்பது பெற்றவர்கள் அவளுக்குப் பூட்டியிருந்த விலங்குகளைத் தகர்த்து விட்டது.. தளைகளற்ற சுதந்திரப்

பறவையாக அவள் கணவனுடன் உல்லாசமாக ஊர் சுற்றினாள்.. அதற்காக கணவன் கேட்டபோதெல்லாம் கணக்குக் கேட்காமல் பணத்தை அள்ளியள்ளிக் கொடுத்தாள்.. கடன் வாங்க அவர் நீட்டிய ஜாமின் பத்திரங்களில் கண்களை மூடிக் கொண்டு கையெழுத்திட்டாள்.. செல்வச் செழிப்பு மிக்க வயநாட்டு அரண்மனையில் பிறந்து வளர்ந்தவளுக்கு செலவழிக்கப் பிடித்திருந்தது.. திருமணமானவுடனே தேநிலவுக்கென கணவன் வெளிநாட்டுக்கு அழைத்துக் கொண்டு போன போதே அவரிடம் விழுந்து விட்டாள் அவந்திகா.. அன்று விழுந்தவளால் இன்று வரை எழுந்து கொள்ள இயலாமல் போய்விட்டது..

“ஞானும் எண்ட கணவனும் ஈ உலகத்தை வலம் வந்தா நிங்களுக்கு எந்தா..? நிங்க திரவியத்தில ஒற்றும் ஊர் சுற்றலையல்லோ.. ஞான் அருள்மொழிவர்மனிட செல்ல மோளாக்கும்.. என்னிடம் இல்லாத திரவியமோ..”

“அதே.. அதிதான் ஞான் பறஞ் .. இப்ப நீயும் நிண்ட கணவனும் சுற்றி வந்த சுற்றுலா எண்ட புராப்பர்டியை விற்று வந்த திரவியத்தில சுற்றியதல்லோ.. நிங்க ஊர் சுத்த வேணுமெண்டா நிங்க பணத்தில சுத்தனும்.. இல்லையெண்டா நிண்ட அச்சனோட திரவியத்தில ஊர்

சுத்தனும்.. நிங்க ஊதாரித்தனத்துக்கு படியளக்க எனிக்கு வையியான் (முடியாது).. ஈ தரவாடில நிங்களுக்கு ஸ்தலமும் (இடமும்) கிட்டாதல்லோ..”

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவது என்றால் இதுதான் என்பதை நிர்தாட்சண்யமாக அவந்திகாவிற்கு உணர்த்தியவர் பத்மானந்தன்... அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.. அவளுடைய உழைப்பில் உருவான பேக்டரியை தம்பியென்ற பாசத்தில் தாரை வார்த்துக் கொடுத்தார்.. உண்மையாக உழைத்தால் அதில் கோடி கோடியாய் சம்பாதித்திருக்கலாம்.. யோகானந்தன் அதைச் செய்யவில்லை.. மனச்சாட்சியே இல்லாமல் சில கோடிகளுக்கு அதை விற்று விட்டு மனைவி, மக்களுடன் உலகத்தைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பி விட்டார்..

எத்தனை முறைதான் இவன் உலகம் சுற்றுவான் என்று அவளுக்குத் தலைவேதனையாகி விட்டது.. வருடத்திற்கு ஓர் முறையாவது யோகானந்தன் ‘வெர்ல்டு டூர்’ என்று உலகத்தைச் சுற்றிவரக் கிளம்பி விடுவார்.. இதோ இருக்கும் திருவனந்தபுரத்திற்கும் கோழிக் கோடிற்கும் சென்று வந்தாலே ஆயிரக்கணக்கில் செலவாகிறது.. இதில் உலகத்தைச் சுற்றி வந்தால் லட்சங்களைத் தாண்டிக் கோடிக் கணக்கில்

செலவாகாதா..? உலகத்தைச் சுற்றுபவர் ஓரிரு மாதங்களில் திரும்பித் தொலைக்கவும் மாட்டார்.. மாதக் கணக்கில் சுற்றிக் கொண்டிருப்பார்.. அவந்திகாவுடன் தேநிலவுக்காக வெர்ல்டு டூர் போன போது அவர்கள் திரும்பி வர ஒரு வருடத்திற்கும் மேலானது.. உலகச் சுற்றுலாவில் இருந்து திரும்பிய ஒரே வாரத்தில் அபராஜிதன் பிறந்தான்.. அடுத்த இரண்டு வருஷங்களில் சற்று உடல் தேறியதும் அபராஜிதனை யாழினியிடம் விட்டு விட்டு வெர்ல்டு டூர் போன யோகானந்தனும் அவந்திகாவும் திரும்பி வர எட்டு மாதங்களானது.. இம்முறை இரண்டு மாதங்கள் கடந்ததும் அஜந்தா பிறந்தாள்..

இப்படிப் பெற்றவர்கள் பொறுப்பில்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்த கால கட்டத்தில் உருவானதினாலோ என்னவோ.. அபராஜிதனும் அஜந்தாவும் பெற்றவர்களை மிஞ்சிய ஊதாரிகளாய் பொறுப்பற்றவர்களாய் மாறிப் போனார்கள்..

யோகானந்தன் ஒரு விஷச்செடி... அவர் இருக்குமிடத்தில் வம்சப் பெருமை நிலைக்காது.. பத்மானந்தனால் தன் தம்பியின் ஊதாரித்தனத்திற்குத் தீனி போட முடியவில்லை.. பரம்பரையாய் வரும் வம்சப் பெருமையைக் காக்க

வேண்டுமானால் அவர் யோகானந்தனிடமிருந்து தள்ளி நின்றுதான் ஆக வேண்டும்..

யோகானந்தனுக்கான பங்கை சரி சமமாகப் பிரித்துக் கொடுத்த பின்பும் பாசத்தில் தன்னுடைய சுய உழைப்பில் உருவாக்கிய ஃபேக்டரியை எழுதிக் கொடுத்தவர்தான் பத்மானந்தன்.. உழைத்துப் பிழைக்காமல் மற்றவர்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்பவர்களைக் கூட மன்னித்து விடலாம்.. சாவரி ஏறுபவர்கள் எவ்வளவு கொடுத்தாலும் போதாது என்று சவாரி செய்பவரின் கழுத்தைப் பிடித்து நெறித்து புதை குழியில் அமிழ்த்து விடுவதை ஒரு போதும் மன்னிக்க முடியாது..

தன் குடும்பத்தையும் வம்சப் பெருமையையும் காக்க யோகானந்தனின் உறவைத் துண்டித்துக் கொள்ளத் தயாராகி விட்டார் பத்மானந்தன்.. அதை அவந்திகாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“ஈ தரவாடு நிங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல.. பரம்பரை தரவாடு.. இதில் எங்களுக்கும் பங்கு உண்டல்லோ..” என்று உரிமைக்குரல் எழுப்பினாள்..

“நின் கணவனுக்கான பங்கை என்றோ எனிக்கு விற்று விட்டானல்லோ.. இதோ அதிக்கான டாக்குமெண்ட்..”

முறைப்படி பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை அவந்திகாவிடம் காட்டினார் பத்மானந்தன்.. ஒரு வகையில் ரவிச்சந்திரனுக்கான முன்னோடி அவர்தான்.. அவர் செய்ததைப் போலவே அருள்மொழிவர்மனிடமிருந்து அரண்மனையை விலைக்கு வாங்கித் தன் பெயரில் பதிவு செய்து கொண்டான் ரவிச்சந்திரன்..

உரிமையற்றவர்களாய் பத்மானந்தனின் வீட்டை விட்டு வெளியேறிய அந்த நாளை அவந்திகா மறக்கவே இல்லை.. அதன் பின்னராவது மைத்துனனின் முன்னால் வயநாட்டில் தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டி விட வேண்டும் என்று வைராக்கியம் கொண்டாளா என்றால் அதுதான் இல்லை.. முன்னிலும் அதிகமாக செலவு செய்தாள்.. ஊர் சுற்றினாள்.. அள்ள அள்ளக் குறையாத வருமானம் கொண்ட ரவிவர்மனின் தொழில்கள் இருந்தன.. எவருக்கும் தெரியாமல் ரகசியப் பெட்டகத்தில் அருள்மொழிவர்மனும் யாழினியும் அடுக்கி வைத்திருக்கும் பணக்கட்டுக்களும் சேர்த்து வைத்திருக்கும் வைர நகைகளும் இருந்தன..

இப்படியே உல்லாசமாக ஊர் சுற்றியபடி வாழ்ந்து முடித்து விடலாம் என்றுதான் அவந்திகா ஆசை கொண்டிருந்தாள்.. அந்த ஆசைக் கனவை இடித்துத் தரை மட்டமாக்க ரவிச்சந்திரன் வந்து விட்டான்..

அத்தியாயம் 264

“**ஞா**ன் அருள்மொழிவர்மனிட செல்ல மோளாக்கும்..”

இவ்விதம் கர்வம் கொண்டிருந்த அவந்திகாவையும் அவளது குடும்பத்தையும் அடக்கி ஒரு இடத்தில் நிறுத்தி வைக்க ரவிச்சந்திரன் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.. கரையாத அருள்மொழிவர்மனின் திரவியமும் கரைந்து அவரது அதிகாரம் ரவிச்சந்திரனின் கைகளுக்கு இடம் மாறி விட்ட பின்புதான் அவந்திகாவின் ஆட்டம் சற்றுக் குறைந்தது.. அபராஜிதனும், அஜந்தாவும் வளர ஆரம்பித்தார்கள்..

“ஞான் அருள்மொழிவர்மனிட கொச்சு மோளாக்கும்..” என்ற அவந்திகாவின் டயலாக்கை அப்படியே வார்த்தை பிசகாமல் ஒலி பரப்ப ஆரம்பித்தார்கள்..

இரும்பு மனிதனான ரவிச்சந்திரனின் இரும்புக் கோட்டையான வயநாட்டு அரண்மனைக்குள்ளேயே அவனது தங்கையின் சுதந்திரத்தைப் பறித்து சிறகொடிந்தவளாக தன் அறையில் அடைந்து கொள்ள வைத்தவர்கள்தான் அவந்திகாவின் பிள்ளைகள்..

அப்பேற்பட்ட அவந்திகாவின் குடும்பத்தைக் கிட்டச் சேர்க்காமல் தள்ளி நிறுத்தி வைத்திருக்கும் தீரன்தான் பத்மானந்தன்.. ரவிச்சந்திரனுக்கு அவந்திகாவின் மீதும் அவளது குடும்பத்தின் மீதும் அளவு கடந்த வெறுப்பு இருந்ததுதான்.. ஆனாலும் பத்மானந்தனிடம் அவன் உறவு கொண்டாடியதில்லை.. தவிர்க்க இயலாத சந்திப்புகளின் போது மரியாதை நிமித்தம் நலம் விசாரித்து விட்டு நகர்ந்து விடுவான்.. அவனுடைய தந்தையுடன் பிறந்த தங்கையை தள்ளி வைத்து விட்ட புகுந்த வீட்டினர் என்ற கோபம் அவன் மனதில் உண்டு என்பது அவந்திகாவுக்கே தெரியாது.. அவள் யாழினியின் வளர்ப்பு.. ரவிச்சந்திரனோ வீணாவின் வளர்ப்பு.. வீணாவின் மகன் சொந்தங்களை விட்டுக் கொடுக்காதவனாகத்தான் இருப்பான்.. பொடித்தனம் மிகுந்த அவந்திகாவினால் ரவிச்சந்திரனின் பெருமையை உணர முடிந்ததே இல்லை..

அப்படிப்பட்டவனை பத்மானந்தனிடம் உறவு கொண்டாட வைத்து விட்ட அத்தனை பெருமையும் அவந்திகாவின் குடும்பத்தாரையே சாரும்.. என்று கொஞ்சம் கூட பயமில்லாமல் வயநாட்டு அரண்மனையிலேயே ரம்ய மாலினியிடம் அபராஜிதன் வாலை ஆட்டினானோ

அன்றைக்கே அத்தையின் குடும்பம் என்று ரவிச்சந்திரனின் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச பந்த பாசமும் அற்றுப் போய் விட்டன.. அபராஜிதனை அடித்துத் துரத்தினாலும் அவனுக்கு மும்பையில் ஓர் வேலை போட்டுக் கொடுத்துத்தான் துரத்த வேண்டியதாக இருந்ததில் ரவிச்சந்திரன் யோசிக்க ஆரம்பித்தான்..

அடுத்து வந்த நாள்களில் அவன் பத்மானந்தனைச் சந்திக்க நேரிட்ட சந்திப்புகளில் இன்முகமாக பேசிப் பழக ஆரம்பித்தான்.. மகிழ்ந்து போன பத்மானந்தன் ரவிச்சந்திரனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க விரும்பி வயநாட்டு அரண்மனைக்கே வந்து ரவிவர்மனிடமும், வீணாவிடமும் சம்பந்தம் பேசினார்..

மகனைப் போலவே ரவிவர்மனும் சிரித்த முகமாக பத்மானந்தனுக்கு உபசரனைகள் செய்து அவரது மனது வருத்தப்படாத வகையில் தனது மறுப்பைத் தெரிவித்து அனுப்பி வைத்தார்..

“எண்ட மோளுக்கும் அவளிட கணவனுக்கும் விரோதி ஆ பத்மானந்தன்.. எந்து தைரியமிருந்தா எண்ட கொட்டாரத்தில கால் பதிச்சு எண்ட கொச்சு மோனுக்குப் பெண்

கொடுக்க ஆக்ரஹாம் கொள்ளுவான்..” அருள்மொழிவர்மன் கர்ஜித்த போது..

“எனக்குப் பெண் கொடுக்கிறேன் என்று கேட்கும் தகுதியும் சொந்தமும் அவருக்கு இருக்கிறது.. கேட்டு வந்திருக்கிறார்..” என்று நிதானமாகச் சொல்லி அவரது வாயை அடைத்தவன் ரவிச்சந்திரன்..

“எந்தா கொச்சுமோனே இதி.. எண்ட மோளுக்கும் அவரிட பிள்ளைகளுக்கும் நிண்ட மேல சொந்த மில்லையோ..?” யாழினி புலம்பிய போது..

“சொந்தமிருந்து என்ன பண்ண பாட்டி..? தகுதியும் தராதரமும் இருக்கனுமே..” என்று அடுத்த கேள்வியைக் கேட்டு யாழினியின் வாயையும் மூட வைத்தவன்..

அந்த பத்மானந்தன் ரவிச்சந்திரனின் திருமணத்தில் முக்கிய பங்காற்ற வந்திருக்கிறார் என்பதில் அவந்திகாவின் குடும்பம் மனக் கிலேசம் அடைந்தது.. அதுவும் நந்தினியின் பெற்றோரைத் தன் வீட்டில் தங்கிக் கொள்ளட்டும் என்று அவர் அழைப்பு விடுத்ததில் கலவரம் கொண்டது..

வயநாட்டு அரண்மனையில் நந்தினியும், நந்தினியின் குடும்பத்தாரும் இருந்தால் ஏதேனும் ஒரு வகையில்

அவந்திகாவும் அவளது குடும்பத்தாரும் அவர்களுக்கு இடர் விளைவித்து திருமணத்தை நிறுத்தி விடலாம்..

அதற்கு அருள்மொழிவர்மனும் யாழினியும் துணையிருப்பார்கள்.. அப்படியில்லாமல் அவர்கள் பத்மானந்தனின் பாதுகாவலுடன் அவரது வீட்டிலிருந்தால் அவந்திகாவின் குடும்பத்தாரால் பக்கத்தில் நெருங்கக்கூட முடியாது..

"ஈ ரவிச்சந்திரன் கள்ளனல்லோ.. எங்ஙன திட்டம் தீட்டி ஆ பத்மானந்தன விளிச்சு.. கேட்டே மோளே.." அவந்திகா அரற்றினாள்..

"ஆ விஷயத்தைத்தான் ஞான் ஆலோசிச்சு அம்மே.. ரவியிட மனசில இப்படியொரு பிளான் ஓடும்ன்னு நான் எக்ஸ்பெக்ட் பண்ணலையல்லோ.. இவன் உதவி கேட்டால் ஆ தரங்கிணியின் குடும்பத்திடம் தான் உதவி கேட்பான்னு ஞான் விஜாரம் கொண்டு.. அங்ஙன ஆ தரங்கிணி உண்டல்லோ.. அவளிருக்கும் இல்லத்தில நந்தினிக்கு எந்து பாதுகாப்பு கிட்டுமென்று எண்ணி.." அஜந்தா யோசனையுடன் சொன்னாள்..

இப்படிப்பட்ட யோசனைகள் எதுவும் அருள்மொழிவர்மனின் மனதிலும் யாழினியின் மனதிலும் ஓடவில்லை.. அவர்களுக்கு பத்மானந்தன் வயநாட்டு அரண்மனைக்குள் வந்து விட்டாரே என்ற ஆத்திரம்.. வந்து மில்லாமல் நந்தினியின் தந்தையிடம் தம்பி முறை உறவு கொண்டாடிப் பாசப்பயிரை வளர்க்கிறாரே என்று ஆத்திரமான ஆத்திரம்..

“ஈ கொட்டாரத்தில ஈ மனுஷனோட சொந்த அணியனும் அவனிட குடும்பமும் உண்டு.. அங்ஙன பாசம் காட்டாம எங்கிருந்தோ வந்த மனுஷனிடம் அனியென்டு கட்டித் தழுவி.. கேட்டே யாழினி..”

“கேட்டு எந்து செய்ய..? ஈ கொட்டாரத்துக்கே ஞான் தம்புராட்டி இல்லயாம்.. இதில ஆளு ஆரை அணியனென்டு கொஞ்சிக் குழாவினா எனிக்கு எந்தா..?”

யாழினிக்கு அவள் கவலை.. அருள்மொழிவர்மனுக்கு அரண்மனையின் சுவர்களில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. இப்படியுமா ஓர் மனுஷி இருக்கும் நிலைமை புரியாமல் தம்புராட்டி, தம்புராட்டி என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வாள்..?

"நினக்கு மட்டுமா தம்புராட்டி பட்டம் போயி..? எனிக்கும்தான் தம்புரான் பட்டம் போயி.. எண்ட வருத்தத்த ஞான் ஆரிடம் பறஞ் ..?"

அவருக்கும் தான் அந்தக் கவலை என்பதில் ஞான் பெற்ற கவலை, பெறுக என் கணவர் என்று மட்டற்ற ஆறுதலை அடைந்தாய் யாழினி..

அவந்திகா குடும்பத்துடன் அருள்மொழிவர்மனும், யாழினியும் எஸ்டேட் பங்களாவுக்குக் இடம் மாறித்தான் ஆக வேண்டும்.. இனியும் கூட்டுக் குடும்பமாக வயநாட்டு அரண்மனையில் இருக்க முடியாது.. ரவிச்சந்திரன் அஜந்தாவைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்து வேறு ஒரு பெண்ணை மணக்கும் முடிவை எடுத்து விட்ட பின்பு அவந்திகா வயநாட்டு அரண்மனையில் எப்படி இருக்க முடியும்..? அஜந்தாவின் திருமணத்தை அது பாதிக்குமல்லவா.. இந்த ஒரு காரணத்தினால்தான் ரவிச்சந்திரனின் முடிவை அவந்திகா ஏற்றுக் கொள்வதாக இருந்தாள்.. இல்லாவிட்டால் அவளாவது, அரண்மனையை விட்டு நகர்வதாவது.. எப்போதும் போல ரவிச்சந்திரன் திட்டும் திட்டுக்களை சூடு சொரணையின்றி கேட்டு விட்டு எதுவுமே நடக்காததைப் போல அரண்மனைக்குள் வளைய

வந்திருப்பாள்.. இன்னொன்றும் இருந்தது.. ரவிச்சந்திரன் சொல்லும் போதே அவனது ஆணையை ஏற்று வெளியேறிவிட்டால் குடியிருக்க பங்களாவம் வளமாக வாழ்க்கை நடத்தச் சில சொத்துக்களும் கிடைக்கும்..

அஜந்தாவின் திருமணத்துக்குத் தேவையான சீர்வரிசையை அவன் அனுப்பி வைப்பான்.. மறுத்தால் எதுவுமே கிடைக்காமல் அகதி போல வெளியேறி விட நேரிடலாம்.. ரவிவர்மன் தன் குடும்பம்தான் முக்கியம் என்று மௌன குருவாகி விட்ட பின்பு ரவிச்சந்திரனிடம் போராடுவது கடினம்.. அவன் தந்தைக்காக தாட்சண்யம் பார்ப்பான்.. தாத்தா, பாட்டிக்காக தாட்சண்யம் பார்க்கவே மாட்டான்..

உடனடியாக இடம் மாற வேண்டாம் என்று கிசுகிசுத்தாள் அஜந்தா.. இப்போது குடி பெயர்ந்தால் ரவிச்சந்திரனின் திருமணத்திற்கு வரும் உறவினர் அதுபற்றிக் கேள்வி கேட்பார்கள் என்று சொல்லி ரவிச்சந்திரனின் திருமணம் முடியும் வரை அங்கேயே நங்கூரமிட்டு விட வேண்டும் என்று ஆலோசனை சொன்னாள்..

“விவாகம் கழிக்கும்வரை நமிக்கு டயம் கிட்டும் அம்மே.. கடைசி மணிக்கயிறுவரை நம்மால் முடிந்ததை நாம்

செய்யலாமல்லோ.. வல்லதும் பறஞ் விவாகத்தை நிறுத்தி விட்டா மணமேடையில் ஏறப் போவது ஞானல்லோ..”

அஜந்தா சொல்வதைக் கேட்கும் போது நன்றாகத்தான் இருந்தது.. ஆனால் அது நடக்க வேண்டுமே என்று ஏக்கத்துடன் பெருமூச்சொரிந்தாள் அவந்திகா.. அஜந்தாவும் இதுவரை எத்தனையோ சபதங்களைச் செய்து விட்டாள்.. அதைச் செய்து விடுவேன்.. இதைச் செய்து விடுவேன் என்று சூளுரைத்து விட்டாள்.. எந்தச் சபதமும் நிறைவேறவில்லை.. அனைத்துச் சூளுரைகளும் அமைதியாக தூங்கிக் கொண்டிருக்கிறன..

இத்தனை தினங்களாய் கவிழ்க்க முடியாதவனை மாலையும் கழுத்துமாக மணமேடையில் உட்கார்ந்திருக்கும் போதுதான் கவிழ்க்கப் போகிறாயாக்கும் என்று மலையாளத்தில் பறய்ந்து விட அவந்திகாவின் நாக்கு துடிக்கத்தான் செய்தது.. அப்படிக் கேட்பதனால் ஏற்படப் போகும் பின்விளைவுகளையும், அப்போது இருக்கும் சூழலையும் நினைத்து அமைதி காத்தாள்..

நின் சுற்றம், என் சுற்றம் எனக் காவிய காத்து வசனங்களையெல்லாம் சொல்லி தம்பி உறவுமுறை

கொண்டாடி பத்மானந்தன் தன் வீட்டுக்கு வந்து தங்கிக் கொள்ளும்படி வெற்றிலை பாக்கு வைத்து அழைத்ததில் மறுக்க முடியாமல் திணறினார் மேகநாதன்..

“இது சரியா வருமா..?” அவர் தயங்கியதில்..

“இதி ஒற்றுதான் சரி அணியனே..! எண்ட தரவாடில நிங்களும் நிங்க குடும்பமும் தங்கிக்கனுமல்லோ.. நிங்களோட பெந்துக்களை வரவழைச்சு தாம்பூலம் மாத்திக்கலாமல்லோ.. ஆ சபையில நிங்க நந்தினிக்கு அளிக்கப் போகிற சீர் வரிசைகளை அறிவிக்கலாமல்லோ..” என்று எடுத்துச் சொன்னார் பத்மானந்தன்..

“முறைப்படி எங்கள் மேரேஜ் எங்கேஜ் மெண்ட்டை நடத்தனும்னு நீங்க ஆசைப்படறிங்க மாமா.. அதை உங்கள் பங்காளி முறையில் இருக்கிற பத்மானந்தன் மாமா வீட்டில் தங்கி நடத்தி விடலாமே.. அங்கேயிருந்தே நாங்கள் பெண்ணை அழைத்துக் கொள்கிறோம்.. உங்க நெருங்கிய சொந்த பந்தங்களுக்கு இன்விடேஷனை கொரியர் பண்ணிவிட்டு ஃபோனில் சொல்லுங்கள்.. வருகிறவர்கள் தங்க நம் எஸ்டேட் பங்களாக்கள் தயாராக இருக்கின்றன.. அப்புறம் என்ன..?” ரவிச்சந்திரன் வற்புறுத்தினான்..

திருமணம் முடித்துக் கொடுக்கும்வரை வயநாட்டு அரண்மனையில் தங்காமல் பங்காளி உறவு முறையில் உள்ள சொந்தக்காரர் ஒருவரின் இல்லத்தில் தங்கிக் கொள்ளலாம் என்பதில் மேகநாதனின் சுயமரியாதை சமன் அடைந்ததில் மேகநாதன் தயக்கத்தைக் கைவிட்டுச் சம்மதித்தார்..

“ஆரானு ஈ பத்மானந்தன்...?” நந்தகுமார் நந்தினியிடம் கேள்வி கேட்டு அயர வைத்தான்..

“நீயாடா இப்படிப் பேசறது..? தஞ்சாவூர் தங்கத் தமிழ் எங்கேடா போச்சு..?”

“எங்கேயும் போகலை.. என்கிட்டத்தான் இருக்கு.. இவங்க பேசறதைக் கேட்கக் கேட்க எனிக்கும் மலையாளத்தில சம்சாரிக்கனும்னு வளர பிரேமம் கொண்டு..”

“அதிக்கு மலையாளம் பிரவாகமாய் வரனும்.. கேட்டே..”

“இந்த சேட்டைதானே வேணாம்ங்கிறது.. என்னவோ கொஞ்ச நாள் அரைகுறையாய் மலையாளத்தை தெரிஞ்சு வைச்சிருக்கே என்கிறதுக்காக என்கிட்டேயே ஃபிலிம் காட்டற பார்த்தியா..?”

“உன்கிட்டே ஃபிலிம் காட்டிட்டாலும்.. கழுதையில.. நீ உலகத்துக்கே ஃபிலிம் காட்டறவனாச்சே.. இவ்வளவு நேரமும் எல்லோரும் பேசறதைப் பார்த்துக்கிட்டும் கேட்டுக்கிட்டும்தான் இருந்த.. கேக்கறதையெல்லாம் உணக்கையாய் கேட்டுட்டு ஆரானு ஈ பத்மானந்தன்ங்கிற பார்த்தியா.. அங்கே நிக்கிறடா தம்ப நீ..”

“நான் இங்கேதான் நிக்கிறேன்.. நீ சொல்லு..”

“ஈ பத்மானந்தன்தான் அஜந்தாவோட சொந்தப் பெரியப்பான்னு ஞான் சொன்னதா ஞாபகம்”

“எனிக்குக் கேட்டதா ஞாபகமில்லை.. கேட்டே.. ஆக.. ஈ பத்மானந்தன் ஆ யோகானந்தனோட சேட்டன்ங்கிற..”

“ஆமாங்கிறேன்..”

“சொந்த அணியனை விட்டுட்டு நம்ம அப்பாவை அணியன்னு தத்துக்கு எடுத்துக் கொஞ்சிக்கிட்டு இருக்காரே.. ஏனாம்..?”

“அவங்க ஃபேமிலி பாலிடிக்ஸ் நமக்கெதுக்குடா..? இப்போதைக்கு நாம தஞ்சாவூர் கிளம்பாம வயநாட்டிலேயே

ஸ்டே பண்ண ஒரு வழி கிடைச்சிருக்கே.. அதுக்குச் சந்தோஷப் படுவியா..”

“அட.. அதை மறந்துட்டேனே.. சூப்பர் ஐடியால்ல..”

“சூப்பர் மேன் போட்ட பிளான் சொதப்புமா..? சூப்பர் ஐடியாவாத்தான் ஜொலிக்கும்..”

நந்தினியின் கண்கள் ரவிச்சந்திரனை விழுங்குவதைப் போல பார்த்ததில் அவனது கண்கள் ஜொலித்தன..

அத்தியாயம் 265

இயல்பாக வருவதைப் போல நந்தினியின் அருகில் வந்தான் ரவிச்சந்திரன்.. அவள் பரவசமானதில் நந்தகுமார் அவளது கையைக் கிள்ளினான்..

“என்னடா..?” ரவிச்சந்திரனை வைத்த பார்வை விலக்காமல் பார்த்தபடி நந்தினி அதட்டினாள்..

“என்னடா.. பக்கத்தில வயசுக்கு வந்த தம்பி இருக்கானே.. நாம காதல் பண்றதைப் பார்த்தா அவன் மனதிலும் காதல் ஏக்கம் வந்து விடாதான்னு பாவம் பார்த்துக் காதல் பண்ணுக்கா..”

“அடச்சீ.. அடங்கு..”

தம்பியை செல்லமாக தலையைக் கலைத்து விட்டு ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவனோ நந்தினி கலைத்து விட்ட நந்தகுமாரின் தலை முடியைப் பார்த்தான்.. “இவளுக்கு பாசம் வந்தாலும், கோபம் வந்தாலும் அதை என் தலைமுடி மேல்தான் காட்டுவாள் அத்தான்..” நந்தகுமார்கலைந்திருந்த தலைமுடியைக் கோதி விட்டபடி சொன்னான்..

தெரியும் என்பதைப் போல தலையை அசைத்த ரவிச்சந்திரனின் விழிகளில் அவன் தலையை நந்தினி கலைத்து விட்டத் தருணங்கள் ததும்பி நின்றன.. அவளுக்கும் அதே நினைவுகள்தான் என்பதை நந்தகுமார் அருகில் இருப்பதையும் மறந்து அவள் ரவிச்சந்திரனுடன் ஒட்டி நின்று விழியோடு விழி கலந்து கண்களால் கதை பேசிய விதம் உணர்த்தியது..

"போய் வரட்டுமா..?"

"போய்த்தான் ஆகனும்ன்னு உன் அப்பா பிடிவாதம் பிடிக்கிறாரே.."

"உங்க தாத்தா அப்படிப் பேசினா பிடிவாதம் பிடிக்க மாட்டாரா..?"

"தினமும் என்னை நினைத்துக்குவ இல்ல..?"

என்னவோ ஏழுமலை ஏழுகடல் தாண்டி அவள் செல்லப் போவதைப் போல ரவிச்சந்திரன் உருகி வழிந்ததில் நந்தினி கரைந்து போக.. காதல் என்று வந்து விட்டால் எப்படிப்பட்ட புத்திசாலியும் அபத்தமாகத்தான் பேசுவார்கள் போல என்று நொந்து போனான் நந்தகுமார்.. அறிவாளி ரவிச்சந்திரனே இப்படிக் கேள்வி கேட்டால் அறிவுக்கும் எனக்கும் காததூரம்

என்று விலகி நிற்கும் நந்தினி என்னத்தைப் பதில் அளிக்கப் போகிறாள்..?

“அது வந்து.. நான் வந்து..” எதையும் சொல்ல முடியாமல் நந்தினி திக்கித் திணற..

“அட.. இதுகூடத் தெரியலை.. என்னத்தைக் காதலிச்ச..? இந்த கொஸ்டினுக்கு மறந்தால்தானே நினைப்பதற்குன்னு நீ ஆன்சர் பண்ணனும்க்கா..” என்று எடுத்துக் கொடுத்தான் நந்தகுமார்..

“இவன் இருக்கானே..” சமாளித்துக் கொண்ட நந்தினி சிரிக்க.. சிரிக்கும்போது வெளிப்பட்ட அவளது பல்வரிசையின் அழகை ரசித்தான் ரவிச்சந்திரன்..

“என்னைப் பார்க்க வருவீங்கள்ல..” நந்தினி ஏக்கப் பட்டாள்..

“கல்யாணத்துக்கு முன்னாலே பொண்ணும் மாப்பிள்ளையும் அடிக்கடிப் பார்த்துக்கக் கூடாதுன்னு ஆர்டர் போட்டிருவாங்களே..” நந்தகுமார் பயமுறுத்தினான்.

“அதுக்கும் ஒரு பிளான் வைத்திருக்கேன்.. டோன்ட் வொர்ரி..” ஆபத்பாந்தவனாய் ரவிச்சந்திரன் கை கொடுக்க..

“அதுதானே பார்த்தேன்.. என்னோட சூப்பர் மேன் அத்தான் இதுக்கும் ஒரு ஐடியா பண்ணி வைச்சிருப் பாருன்னு நினைச்சேன்... நீங்க சொல்லிட்டிங்க...” நந்தகுமார் குதூகலப் பட்டுப் போனான்.

“என்ன ஐடியா..?” நந்தினி ஆர்வத்துடன் கேட்டாள்.

“இப்பத் தெரியும் பாரு..” ரவிச்சந்திரன் வீணாவைப் பார்த்து..

“ரம்ய மாலினியும் நந்தினியின் ஃபேமிலியோடு தங்கிக்கட்டுமா அம்மா..?” என்று கேட்டான்..

“நந்தினியின் ஃபேமிலி பத்மானந்த அண்ணனோட பங்களாவில இல்ல தங்குறாங்க..” வீணா சங்கடத்துடன் கணவரைப் பார்த்தாள்..

ரவிவர்மனின் நெற்றியில் விழுந்த சுருக்கங்கள் அவருக்கு அதில் விருப்பமில்லை யென்பதை அறிவுறுத்தின..

“ஆனால் அப்பா.. நந்தினியுடன் இருக்கும் போது நம்ம ரம்யா சந்தோஷமா இருக்கிறா.. அதனால் அவகூட நம்ம ரம்யா இருக்கட்டுமேன்னு நினைத்தேன்..” யோசனை போலக் கூறிய ரவிச்சந்திரன்..

“பட்ஷே.. உங்களுக்கு அதில் பிரியமில்லை என்றால் வேண்டாம்..” என்றான்..

மகளின் முகத்தைப் பார்த்த ரவிவர்மனின் முகம் கனிந்தது... நந்தினி அருகில் இல்லாத நாள்களில் ரம்ய மாலினி தன் அறையை விட்டு வெளியே வர மாட்டாள் என்பதை நினைவு கூர்ந்தவரின் மனம் மாறியது..

ரம்ய மாலினியொன்றும் தனியாக பத்மானந்தனின் பங்களாவுக்குச் செல்லவில்லையே.. நந்தினியுடனும் நந்தினியின் குடும்பத்துடனும் அல்லவா செல்கிறாள்.. நந்தினி வெளியூருக்குப் போவதாக இருந்தால் வேறு வழியின்றி ரம்ய மாலினி அறையில் அடைந்து கிடக்கலாம்.. ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பத்மானந்தனின் பங்களாவுக்குத்தான் அவள் சொல்லப் போகிறாள் எனும் போது ரம்ய மாலினியை நந்தினியுடன் அனுப்பி வைப்பதில் தவறொன்றுமில்லையே..

“அதிக்கு எந்தா மோனே..! நம்ம ரம்ய மாலினி நந்தினியுடன் தங்கறாில எனிக்கு எந்த ஆட்சேபனையுமில்லையல்லோ.. தினத்துக்கும் நாம போயி ரம்ய மாலினியை நோக்கிட்டு வரலாம்.. கேட்டே..” என்று சொல்லி விட்டார்..

‘அஃது..’

வெற்றிப் புன்னகையுடன் நந்தினியைப் பார்த்த ரவிச்சந்திரனின் விழிகள் ‘எப்புடி..?’ என்று வினவின..

‘சூப்பர்..’ கண்களால் பதில் அளித்தாள் நந்தினி..

“நீங்க கவலையே பட வேணாம் அப்பா.. நான் மார்னிங் அண்ட் ஈவினிங் ரம்யா கூடத்தான் இருப்பேன்.. பகலில் அம்மா போய் பார்த்துட்டு வருவாங்க.. மற்ற நேரங்களில் நந்தினி பார்த்துக்குவா.. ரம்யா சந்தோஷமா இருப்பாப்பா..”

ரவிச்சந்திரன் சொன்ன கடைசி வார்த்தைகளில் ஈர்க்கப் பட்டார் ரவிவர்மன்.. அவருக்கு என்ன வேண்டும்..? அவர் மகள் சந்தோஷமாக இருக்க வேண்டும்.. அவருக்கு

அதைவிட வேறு சந்தோஷம் உண்டா..? நந்தினியுடன் தானும் கிளம்ப வேண்டியிருக்கும் என்று ரம்ய மாலினி நினைத்துப் பார்த்திருக்கவில்லை.. எதிர்பாராத ஏற்பாட்டில் அவள் ஆனந்தத் திகைப்பில் அமிழ்ந்தாள்.. நந்தினியில்லாத சூழலில் கனவுகள் சிதைக்கப் பட்டு விட்ட ஆங்காரத்துடன் இருக்கும் அஜந்தாவை எப்படி எதிர் கொள்ளப் போகிறாள் என்ற பயத்தில் இருந்தவளுக்கு ரவிச்சந்திரனின் யோசனை விடுதலையுணர்வை விதைத்தது..

‘அப்பாடி..’

மகளின் முகத்தில் விரவிய நிம்மதியில் ரவிவர்மன் வேதனை கொண்டார்.. அவருடைய சொந்த அரண்மனையில் அவரால் பெற்ற மகளுக்கான அமைதியையும் பாதுகாப்பையும் அளிக்க முடியவில்லையே..

“எங்க ஊர்ப்பக்கத்தில கல்யாணப் பெண்ணுக்குத் துணைப் பெண்ணா நாத்தனார்தான் பக்கத்தில நிப்பாங்க அண்ணா.. மூணு முடிச்சுப் போட்டுத் தாலி கட்டறப்ப மூணாவது முடிச்சை அவங்கதான் போடுவாங்க.. அதனால நந்தினி கூடவே ரம்யாவும் இருக்கிறதுதான் சரி.. நீங்களும் வீணாவும் பக்கத்தில இல்லைன்னா என்ன..? நானும் இவளும் இருக்கிறோமில்ல.. எங்க கண்ணுக்குள்ள வைச்சுப் பத்திரமாப் பார்த்துக்குவோம் அண்ணா..”

உரிமையுடன் வெண்ணிலா கொடுத்த வாக்குறுதி அஜந்தாவின் வெறியைக் கிளப்பி விட்டது.. அடுத்தடுத்து நடந்து கொண்டிருந்த திடீர் திருப்பங்கள் எவையும் தானாக வந்த திருப்பங்கள் அல்ல.. ரவிச்சந்திரன் எனும் சாணக்யன் வகுத்திருக்கும் திட்டங்கள் என்பதை அவளது சூட்சுமம் நிரம்பிய மூளை யூகித்து விட்டது..

நந்தினி பத்மானந்தனின் குடும்பத்தின் பாதுகாப்பு வளையத்துக்குள் அனுப்பப்படுகிறாள்.. கூடவே ரம்ய மாலினியும் அனுப்பப் படுகிறாள் என்றால் இதில் மறைந்திருக்கும் மறைபொருளை யூகிக்க முடியாத அளவுக்கு அஜந்தா முட்டாள் அல்ல..

பத்மானந்தனின் இல்லத்தில் இருக்கும் வரை எவராலும் நந்தினியை அணுக முடியாது.. அவளுக்கும் ரவிச்சந்திரனுக்கும் நடக்கப் போகும் திருமணத்தையும் நிறுத்த முடியாது.. ஆதலினால் ரவிச்சந்திரனை மணப்பது என்பது அஜந்தாவுக்குக் கனவுதான்.. இப்போது அடுத்த கனவும் கலையப்போகிறது.. ரம்ய மாலினி வயநாட்டு அரண்மனையை விட்டு பத்மானந்தனின் பங்களாவுக்கு நந்தினியுடன் அனுப்பி வைக்கப் படுகிறாள்.. ரவிச்சந்திரன் திருமண ஏற்பாடுகளில் மும்முரமாக இருப்பான்.. உற்றார் உறவினரை திருமணத்துக்கு அழைப்பதில் ரவிவர்மனும் வீணாவும் மும்முரமாக இருப்பார்கள்.. தனித்திருக்கும் ரம்ய மாலினியை கவர்ந்து போகச் சொல்லி அபராஜிதனுக்கு அழைப்பு விடுக்கலாம் என்று அவந்திகா சொல்லிக் கொண்டிருந்தாள்.. அஜந்தாதான் ரவிச்சந்திரனைக் கோட்டை விட்டு விட்டு நிற்கிறாள்.. அபராஜிதனாவது

கெட்டிக்காரத்தனமாக ரம்யாவைக் கடத்தி விடட்டும் என்ற எண்ணம் அவந்திகாவுக்கு..

அஜந்தா அதை ஆட்சேபிக்கவில்லை.. அது ஒன்றுதான் அவர்களுக்கான கடைசி வழி என்பதை அறிந்திருந்ததால் மௌனமாக இருந்தாள்.. அந்த கடைசி வழியையும் ரவிச்சந்திரன் அடைத்து விட்டான்..

"எனிக்கு தலயச் சுத்துது மோளே.." அவந்திகா புலம்பினாள்..

"பொறுக்கனும் அம்மே.. வல்லதும் மார்க்கம் கிட்டுமல்லோ.."

"எங்ஙன மோளே..? ஈ விவாகத்த நிறுத்த தரவாடுக்குப் போயி.. கூடவே ஈ ரம்யாவும் போயி.. ஞான் எந்து செய்யும் மோளே.."

"இப்போதைக்கு புலம்பாமல் இருக்கனும் அம்மே.."

எரிச்சலுடன் தலையைப் பிடித்துக் கொண்டாள் அஜந்தா.. வித்தாரக் கள்ளனான ரவிச்சந்திரனின் திடிர் வியூகங்களுக்கு எதிர் வியூகத்தை உடனடியாக வகுக்க அவளால் முடியவில்லை..

“ஞான் ஒற்று பறயட்டோ..?”

“பறஞ் அம்மே..”

“ஆ தரங்கிணி பயங்கரமானவளெண்டு நி பறஞ் ..”

“ஆமாம்.. ரவிமேல வளர இஷ்டம்..”

“இதி பறயத்தான் ஞான் ஒற்று பறயட்டோன்னு பறந்தீங்களோ அம்மே..” பல்லைக் கடித்தாள் அஜந்தா..

“அதி அல்ல மோளே.. ஆ தரங்கிணியோட சேட்டன் தனபாலனிக்கு ரம்ய மாலினிமேல வளர இஷ்டமில்லோ..”

“இதி மட்டும் அபராஜிதன் கேட்டிருக்கனும்... நிங்களுக்கு ஓணம் பண்டிகையை காட்டியிருப்பானல்லோ..”

“அம்மே எந்து பறஞ் ன்னு கேட்டே.. ஆ தரங்கிணி பத்மானந்தனோட தரவாட்டுக்குள்ள போகலாமல்லோ..”

“கிட்டக்கூட நெருங்க முடியாது..”

“ஆ பெண்குட்டி பயங்கரமானவளெண்டு நீ பறஞ் ..”

“அதி நிங்களும் அறிஞ் .. பட்சே அம்மே.. எண்ட அச்சனோட சேட்டன் பயங்கரமானவர்களுக்கும்

பயங்கரமானவரல்லோ.. அவரோட தரவாடில வேற எவராலும் பாதம் பதிக்க முடியாது அம்மே..”

“அதி உண்மைதான் மோளே..”

தங்கள் குடும்பத்தினால் பத்மானந்தனின் அரண்மனையில் கால் பதிக்க முடியவில்லை என்ற விசனத்துடன் ஆத்திரத்துடன் கூறினாள் அவந்திகா..

எப்பேற்பட்ட இரும்புக் கோட்டையை ரவிச்சந்திரன் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அஜந்தாவுக்கு.. அவளால் நுழைய முடியாத இடத்தில் தரங்கிணி புகுந்து வருவாள்.. இது தரங்கிணியும் நுழைய முடியாத இடமல்லவா..?

அஜந்தாவின் கண் முன்னாடியே நந்தினியும், ரம்ய மாலினியும் கிளம்பி பாதுகாவலுடன் காரில் ஏறி உட்கார்ந்து விட்டார்கள்.. முன்னால் ஆறு, பின்னால் ஆறு என்று கார்கள் அணிவகுக்க நடுநாயகமாக அவர்கள் அமர்ந்திருந்த கார் கிளம்பி விட்டது.. கண் முன்னால் நழுவிச் செல்பவர்களை இழுத்துப் பிடித்து நிறுத்த முடியாத இயலாமையோடு கைகள் கட்டிப் போடப் பட்டவளாய் கார்களையே வெறித்துக் கொண்டிருந்தாள் அஜந்தா..

நந்தினியின் குடும்பத்தோடு ரம்ய மாலினியும் செய்வதால் அவர்களை பத்மானந்தனின் பாதுகாவலில் ஒப்படைத்து விட்டு வர ரவிச்சந்திரனுடன் வீணாவும், ரவிவர்மனும் சென்றிருந்ததால் வயநாட்டு அரண்மனையின் வாசலில் அருள்மொழிவர்மன், யாழினியோடு அவந்திகாவும் அஜந்தாவும் தனித்து நின்றிருந்தார்கள்.. நடந்த சம்பவங்களினால் துளியும் பாதிக்கப்படாமல் யோகானந்தன் டைனிங் ஹாலில் உட்கார்ந்து நேந்திரம்பழ பக்கோடாவை மொக்கிக் கொண்டிருந்தார்.. அதைப் பார்க்கப் பார்க்க நிராதரவாக நிற்கும் துக்கம் அஜந்தாவுக்குள் பெருகியது..

அவர்கள் அத்தனை பேர் இருக்கிறார்கள்.. அரண்மனை என்னவோ ஆள்களே இல்லாததைப் போல வெறிச்சென்று இருந்தது.. உடையவர் இல்லாத இல்லம் என்று நினைத்துக் கொண்டாள் அஜந்தா.. அவளும் அவளுடைய குடும்பமும் எந்தக் காலத்திலும் அந்த அரண்மனைக்குச் சொந்தக்காரர்களாக ஆக முடியாது என்பதில் அவள் மனதில் நிராசை சூழ்ந்தது.. இனி அவளும் அவளுடைய குடும்பமும் தனித்தீவுதான்.. உறவினர்கள் எவரும் அவர்களைக் கையில் பிடிக்க மாட்டார்கள்.. வயநாட்டு அரண்மனைக்கும் அருள்மொழிவர்மனுக்குமே பந்தம் அற்றுப் போகப் போகிற

போது ஞான் அருள்மொழிவர்மனின் கொச்சு மோளாக்கும் என்பதில் அவளுக்கு என்ன பெகுமானம் கிட்டி விடப் போகிறது..?

அஜந்தா சோர்வுடன் தோட்டத்தை நோக்கி நடந்தாள்.. கொட்டிக் கொண்டிருந்த வயநாட்டின் குளிர் மழையால் அவள் மனதில் மண்டிக் கிடக்கும் வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை..

அத்தியாயம் 266

அந்தப் பறவையின் சிறகுகள் பல வண்ணங்களுடன் வெகு அழகாக இருந்தன.. மயில் தோகையைப் போல் இருக்கின்றதே என்று வியந்தாள் நந்தினி.. அதை நந்தகுமாரிடம் சொன்னபோது..

“உனக்கு எல்லாமே ஆச்சரியம்தான்.. இத்துனூண்டு மைனாவோட சிறகுகளுக்கு அத்தாம் பெரிய மயில் தோகையை இணைகூட்டறயே.. இது உனக்கே ஓவர்ன்னு தோணலையா..?” என்று பழிப்புக் காட்டினான்..

“தோணலைடா.. போடா..” நந்தினி பதிலுக்குப் பழிப்புக் காட்டியதில்..

“நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு கியுட்டா சண்டை போட்டுக்கறீங்க..?” என்று ரசித்தாள் ரம்ய மாலினி..

“கியுட்டா சண்டை போட்டுக்கறோமா..? குரங்குகளைப் போலக் குடுமிப்பிடி சண்டை போட்டுக் கறோம்ங்க..” நந்தகுமார் சொன்னான்..

“குரங்குக்கு ஏதுடா குடுமி..?” நந்தினிக்கு சந்தேகம் வந்துவிட்டது..

“குடுமி இல்லாமலா அதுக ஒருத்தருக்கு ஒருத்தர் பேன் பார்த்துக்குதுக..?” நந்தகுமார் கேள்வி எழுப்பினான்.

“போடா இவனே.. பெரிசா விளக்கம் சொல்ல வந்துட்டான்.. நீயே குரங்கு.. நீ விளக்கம் சொல்கிற லட்சணம் இப்படித்தான் இருக்கும்..”

“குரங்கு கூடப் பிறந்தாக் குரங்காத்தானே இருந்தாகனும்..?”

“அப்ப.. நான் குரங்குங்கறியா..?”

“அப்ப.. நான் மட்டும் குரங்கா..”

“ஆமாண்டா.. நீ குரங்கேதான்..”

“குரங்குக்கு அக்காவும் குரங்குதான்..”

அவர்கள் கட்டி உருளாத குறையாக சண்டையிட்டுக் கொண்டிருக்க..

“வாவ்..! கொஞ்ச நேரம் போனா வயநாட்டு மலையுச்சியில இருந்து உருண்டு விடுவீங்க போல இருக்கே..” என்றபடி அங்கே வந்து நின்றான் ரவிச்சந்திரன்.

அவனைக் கண்டதும் நந்தினிக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன.. தம்பியுடன் சண்டையிடுவதை மறந்து வெட்கத்துடன் நின்றாள்..

“அட.. இது என் அக்காதானா..?” என்று தமக்கையைக் கேலி செய்த நந்தகுமார்..

“ஹாய்.. அத்தான்..” என்றான்..

“ஹாய் நந்து.. என்ன.. தோட்டத்தில அக்காவுடன் மல்யுத்தப் போட்டி நடக்கறியா..?”

“மல்யுத்தப் போட்டியா..? இவளுடனா..? அதெல்லாம் வீராங்கனைகள் கூடத்தான் நடத்தனும் அத்தான்.. இவ சும்மா வெறும் வாய் மட்டும்தான் அடிப்பா.. லேசாத் தள்ளி விட்டாக் கூட தலைகுப்புற விழுந்துருவா.. சுத்த சோதா அத்தான்.. புல் தடுக்கி பயில்வி..”

“ஹா.. ஹா...”

ரசித்துச் சிரித்தபடி நந்தினியைப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவனை விட்டுப் பிரிந்திருக்கும் துயர் அவளது விழிகளில் தெரிந்தது.. அவனை மங்களூர் எக்ஸ்பிரஸ்ல் கண்ட நாள் முதல் பத்மானந்தனின் அரண்மனைக்கு கிளம்பி

வரும் நாள்வரை ஒருநாள் கூட அவள் பிரிந்து இருந்தது இல்லை என்ற நினைவில் அவளது இமைகள் நனைந்தன.. எங்கு சென்றாலும் அவளை ஆவலுடன் அழைத்துக் கொண்டுதான் செல்வான்.. அவனது அருகாமையிலேயே வைத்திருப்பான்.. அதைக் காதல் என்றுதான் நந்தினி நினைத்திருந்தாள்.. காதலுடன் காவலும் செய்திருக்கிறான் என்று இப்போதுதான் தெரிகின்றது.. அவனது நிழலில் அவள் இருக்கும் வரை மகேந்திரபூபதியினால் அவளை நெருங்கவே முடியாது என்று அவனது கைவளைவுக்குள் அணைத்துப் பாதுகாத்திருக்கிறான்.. அவனது நிழலை விட்டு அவள்தான் நீங்கினாள்.. நீங்கியதற்கான தண்டனை உடனடியாக கிடைத்ததே..

'அப்போதும் காவல் காத்து என்னை மீட்க இந்தக் கம்மாண்டர்தான் வந்து நின்றான்..'

"ஓகே அத்தான்.. நீங்க இந்தக் குரங்குகூட ஏதாவது பேச வந்திருப்பீங்க.. கரடி போல நான் ஏன் இங்கே நிற்கனும்..? ஜூட் விடறேன்.."

நந்தகுமார் அரண்மனைக்கு ஓடிவிட.. ரம்ய மாலினி அங்கிருந்து நகரப் போனாள்..

“ரம்யா..” ரவிச்சந்திரன் அவளருகில் வந்தான்..

“அண்ணா..”

“இங்கே உனக்கு கம்பர்டபிளா இருக்கிறதா ரம்யா..? அண்ணா உன்னிடம் ஒபினியன் கேட்காம டிசைட் பண்ணிட்டேனா..?”

“ஊஹூம்.. நீ தேவையில்லாம கில்ட்டியா ஃபீல் பண்ணாதே.. பத்மானந்தன் மாமா ஃபேமிலியில எங்களையெல்லாம் நல்லாக் கவனிச்சுக்கிறாங்க.. வெண்ணிலா அத்தை நந்தினியைப் பார்க்கிறாங்களோ இல்லையோ.. நான் எங்கேன்னு தேடிக்கிட்டே இருப்பாங்க.. பக்கத்திலேயே வைத்துக்குவாங்க.. நந்தினிக்கும் எனக்கும் ஒரே ரூமைக் கொடுத்திருக்காங்களா.. நைட்டெல்லாம் தூங்காம ஒரே அரட்டைதான்.. எங்க அரட்டையில நந்துவும் கூட்டுச் சேர்ந்துக்குவான்.. மிட் நைட்டுக்கு மேலதான் தூங்கப் போவான்.. செமயா என்ஜாய் பண்றேண்ணா.. இதுக்காக உனக்குத் தேங்க்ஸ் பண்ணலாம்ன்னு பார்த்தா நீ என்னவோ கில்ட்டியா டயலாக் பேசற.. ஐ ஆம் ஸோ ஹேப்பி அண்ணா..” உண்மையாகச் சொன்னாள் ரம்ய மாலினி..

அவளது முகத்தில் தெரிந்த சந்தோஷ அலைகளில் ரவிச்சந்திரன் ஆறுதலடைந்தான்.. தங்கையின் விருப்பத்தைக் கேட்காமல் நந்தினியுடன் அனுப்பி வைத்து விட்டானோ என்று மனதுக்குள் குடைந்து கொண்டிருந்த குற்ற உணர்ச்சி அவனை விட்டு விலகி விட்டது.. நிம்மதியுடன் புன்னகை பூத்தான்.. நந்தினிக்கும் அவனுக்கும் தனிமை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன்..

“ஜஸ்ட் ஒரு வாக் போயிட்டு வந்துடறேன் அண்ணா..” என்றபடி நடக்க ஆரம்பித்தாள் ரம்ய மாலினி.

“கார்டனுக்குள்ளேதானே வாக் போகிற..?” ரவிச்சந்திரன் சப்தமாக கேட்டான்..

“யெஸ் அண்ணா.. நானும் நந்தினியும் அரண்மனைக் கேட்டைத் தாண்டக் கூடாதுன்னு ஆர்டர் போட்டிருக்காங்க..” ரம்யா கையை அசைத்தபடி நடந்து விட்டாள்..

ரவிச்சந்திரன் நந்தினியின் பக்கம் திரும்பினான்.. நந்தினிக்குள் இன்பப் பரபரப்பு உண்டானது.. எதிர்பார்ப்பின் கனம் தாளாமல் அவளது உடல் தொய்ந்தது.. அப்போதுதான் முதன் முதலாக அவனைச் சந்தித்திருப்பதைப் போல அடிமனது வேகமாக அடித்துக் கொண்டது..

அவனும் அப்படித்தான் இருந்தான்.. என்னவோ யுகம், யுகமாய் அவளைப் பிரிந்திருந்ததைப் போல அவனும்.. யுகங்கள் தோறும் அவனுக்காக காத்துக் கிடந்த காவியக் காதலி போல அவளும் ஒருவர் முகத்தை ஒருவர் காதலுடன் பார்த்தபடி அசையாமல் நின்றார்கள்.. முதலில் அசைந்து அவளை நெருங்கி இழுத்து அணைத்து முத்தமிட்டது ரவிச்சந்திரன்தான்.. கிறங்கிப் போன முகத்துடன் உடல் நடுங்க இமைகள்

மூட முதல் முத்தத்தின் ஸ்பரிசம் போல அவனுள் புதைந்து கொண்டாள் அவள்.. அவள் காட்டிய நெருக்கத்தை அவன் விரும்பினான்.. குனிந்து அவளது முடி கோதி விலக்கி செவியோரமாக முத்தமிட்டுக் கிசுகிசுத்தான்.. கிளர்ச்சியூட்டும் அவனது ரகசியப் பேச்சுக்களுக்கு மூக்கையும் இமைகளையும் சுருக்கி..

“ச்சீய்..” என்றாள் நந்தினி..

“ஏய்ய்..”

வேட்கையுடன் அவளை எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கிக் கொண்டான் ரவிச்சந்திரன்..

அவள் அவனுக்கு மட்டும் சொந்தமானவள் என்ற நினைவு தரும் இனிமை அவனுக்குப் போதையைத் தந்தது.. அவளை அணைத்தபடி அங்கிருந்த மரபெஞ்சில் அவன் அமர அவன் மடியில் சிரித்தாள் நந்தினி.. உலகை மறந்து அவனும் அவளுமாக தங்களுக்குள் சிருஷ்டித்துக் கொண்டிருந்த மாய உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தார்கள்..

தமையனுக்கும், அவனது காதலிக்குமான தனிமையைக் கொடுத்து விட்டு விலகி நடந்த ரம்ய மாலினி தோட்டத்தின் அழகில் சொக்கினாள்.. பத்மானந்தனின் அரண்மனையும், அரண்மனையின் தோட்டமும் வயநாட்டு ரவிச்சந்திரனின் அரண்மனையின் பரப்பளவில் பத்தில் ஒரு பங்கு கூட இருக்காது.. இருப்பினும் அவந்திகாவும், அவளது குடும்பத்தாரும் இல்லாத பத்மானந்தனின் அரண்மனையும், அதன் தோட்டமும் ரம்யமாலிக்குச் சொர்க்கம் போல இருந்தது..

துள்ளிக் குதித்து ஓட வேண்டம் என்று ஆசை கொண்டாள்.. எவரும் அருகில் இல்லையென்ற தைரியத்தில் கைகளை விரித்துத் தலையை ஆட்டிக் குதித்து விளையாடியவள் சுதந்திரமாக பாடி ஆட முடிந்த உற்சாகத்துடன்..

"லல்லல்லா.. லல்லல்லா.. லல்லல்லா.. லா.." என்று ராகம் இழுத்தபடி சுரிதாரின் துப்பட்டாவை விரித்து இரு முனைகளையும் பிடித்தபடி ஓட ஆரம்பித்தாள்..

காற்றின் வேகத்தில் பாராசூட் போலத் துப்பட்டா விரிந்து பறந்தது.. ரம்ய மாலினியின் துள்ளலும் கூடியது..

"பூப்பூக்கும் ஓசை - அதைக்

கேட்கத்தான் ஆசை..

புல்விரியும் ஓசை.. அதைக்

கேட்கத்தான் ஆசை..

பட்ஷிகளின் குக்குக்கூ..

பூச்சிகளின் குக்குக்கூ..

சங்கீதம் சொல்லித் தருமே

தங்கப்பெண்ணே..!

காலோடு சலங்கை பூட்டி..

தரையெல்லாம் வீணை மீட்டி

நதி பாடும் பாடல் கேளாய் பட்டுப்

பெண்ணே..!

பூமி ஒரு வீணை..

இதைக் காற்றின் கைகள்

மீட்டுதே..

கேட்கும் ஒலியெல்லாம்

அட சரிகமபதநி சரி...”

இதுபோல அவள் பாடி ஆடியதில்லை.. இந்தத் துள்ளல் அவளிடம் இருந்ததில்லை.. இன்றுதான்.. இப்போதுதான்.. இந்த நொடிதான் புதிதாகப் பிறந்தேன் என்பதைப் போல அவளது உடலிலும் மனதிலும் உல்லாசமும் உற்சாகமும் போட்டி போட்டுக் கொண்டு கும்மியடித்தன.. பாடியபடியே ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பியவள் எதிரே இருந்த மரத்தில் சாய்ந்து ஒரு காலை தரையில் ஊன்றி மறுகாலை மரத்தில் பதித்து கைகளை முன்புறமாகக் கட்டிக் கம்பீரமாக சாய்ந்து நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த பிரதீபனைக் கண்டதும் அதிர்ச்சியுடன் நின்று விட்டாள்.. அன்னியர்களிடம் அவள் பேசிப் பழகியதில்லை.. படித்தது மகளிர் கல்லூரி.. வளர்ந்தது அரண்மனையின் கோட்டைச் சுவர்களுக்கு மத்தியில்..

சிறகடிக்க முடியாமல் சிறகுகள் கட்டுண்டு இருந்த அரண்மனைக் கிளி அவள்.. அவளது அரண்மனைக்குள் கூட அவள் உரக்கப் பேசியதில்லை.. சிரித்ததில்லை.. தோட்டத்தில் ஓடி விளையாடியதில்லை.

இவைகளையே செய்யாதவள் பாடலை மட்டும் பாடி விடுவாளா..? நந்தினி அவர்களின் அரண்மனைக்குள் வந்த பின்னால்தான் அவளுக்கும் சிரிக்கத் தெரியும் என்பதை அந்த அரண்மனையில் இருந்தவர்கள் அறிந்தார்கள்.. அப்போதும் அவள் நந்தினியுடன் உலாவப் போனாள்.. மனம் விட்டுப் பேசி சிரித்தாள்.. ஓடி விளையாடியதில்லை.. வாய் திறந்து பாடியதில்லை..

அவ்விதம் வளர்ந்தவள் அடுத்தவரின் அரண்மனைத் தோட்டத்தில் அந்த அரண்மனையைச் சேர்ந்தவனின் முன்னால் ஆடிப் பாடி விட்டதில் அளவில்லாத வெட்கமடைந்தாள் ரம்ய மாலினி.. என்ன செய்வது என்று தெரியாமல் அவள் தடுமாறிய தடுமாற்றத்தில் தலைக்குப் பின்புறமாக காற்றில் விரிய விட்டு இரு முனைகளையும் பிடித்திருந்த துப்பட்டாவை விட்டு விட்டாள்.. பறக்கும் கம்பளம் போல ‘ஜம்’ மெனப் பறந்து துப்பட்டா மிகச் சரியாக பிரதீபனின் முகத்தின் மீது படிந்து சுற்றி வளைந்து மூடியது..

என்ன செய்வது என்று தெரியாமல் கைகளைப் பிசைந்தாள் ரம்ய மாலினி.. அங்கிருந்து ஓடிவிட முடியாமல் அவளது துப்பட்டா பிரதீபனின் முகத்தை மூடி அவளது கால்களுக்குத் தளையிட்டு விட்டதில் தயங்கி நின்றாள்.. அவளது துப்பட்டா அவனது முகத்தை மூடியிருக்கும் போது அதை விட்டு விட்டு அவள் எப்படிப் போவது..?

மென்மையாக மலரின் இதழை வருடவதைப் போலத் துப்பட்டாவை வருடியபடி முகத்திலிருந்து அதை விலக்க மனமில்லாமல் விலக்கி அவள் முகம் பார்த்தான் பிரதீபன்.. ரம்ய மாலினியின் முகம் அந்திவானமாய் செக்கச் சிவந்து விட்டதை ரசித்தவன் துப்பட்டாவை மடித்துப் பத்திரப் படுத்திக் கொண்டான்..

‘என்ன செய்கிறான்..?’ மருண்டாள் ரம்யா..

“துப்பட்டா..”

வாயிலிருந்து கிசுகிசுப்பாக வெளிவந்த வார்த்தை அவள் காதுகளில் விழுந்திருக்குமா என்பதே சந்தேகம்தான்.. காற்று மட்டும்தான் வருது என்ற ரீதியில் தட்டுத் தடுமாறியவளை வைத்த கண் வாங்காமல் அவன் பார்க்க.. சங்கடம் கொண்டவள் துப்பட்டாவை வாங்கக் கை நீட்டினாள்..

“எந்தா..?”

அவள் துப்பட்டாவிற்காகத்தான் கை நீட்டுகிறாள் என்பதை அறியாதவனைப் போல பிரதீபன் வினவியதில் என்ன பதிலைச் சொல்வது என்று திணறிப் போனாள் ரம்யா.. பதிலைச் சொல்ல முடியாமல்தான் வாயில் வார்த்தைகள் வராமல் காற்று வந்து மல்லுக் கட்டுகிறதே..

வாய் திறந்து பேச முடியாதவளாக விரல் நீட்டித் துப்பட்டாவைச் சுட்டிக் காட்டினாள் ரம்யா..

“நிங்களைப் போலவே ஈ துப்பட்டாவும் ஸாஃப்டா இருக்கு..”

மலையாளத் தமிழில் சம்சாரித்தான் பிரதீபன்.. துப்பட்டாவைக் கொடுக்க மனமில்லாதவனாய் அதைத் தன்னிடமே அவன் வைத்திருந்ததில் பதறிப் போன ரம்யா..

“ப்ளீஸ்.. என் துப்பட்டாவைக் கொடுத்துருங்க..” என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டாள்..

“ஸ்டாப்.. ஸ்டாப்.. தேவதை கெஞ்சலாமோ.. இந்தாங்க உங்க துப்பட்டா..” அவளிடம் துப்பட்டாவை நீட்டிய பிரதீபன்..

“நிங்களோட கானம் வளர நன்னாயிட்டுண்டு..” என்று சிநேகிதமாக புன்னகைத்தான்..

அன்னிய ஆடவர்களிடம் பேசிப் பழக்கமில்லாத ரம்ய மாலினி என்ன சொல்வது என்று தெரியாமல் மௌனம் சாதிக்க.. அவன் மரத்திலிருந்து விலகி அவளருகில் வந்தான்..

“எங்கட தரவாடோட தோட்டத்துக்கு இன்றைக்குத்தான் உயிர் வந்ததைப் போல இருக்கு.. எவ்வளவு சேலா (அழகா) ரசிச்சு கானம் இசைச்சீங்க.. உண்மையில் எங்களிட தோட்டத்தில் ஒரு நதி வந்து பூமியெனும் வீணையை மீட்டி.. சரிகபதநி பாடியதைப் போலவே இருந்ததங்க..”

சரளமான அவனது பேச்சிலும் பாராட்டிலும் ஈர்க்கப் பட்டாள் ரம்ய மாலினி.. அவளையுமறியாமல் அவள் மனது தனபாலனையும், பிரதீபனையும் ஒப்பிட்டுப் பார்த்தது.. தனபாலன் எவருடனும் சரளமாகப் பேசிப் பழகி அவள் பார்த்ததில்லை.. கர்வமாக ஒதுங்கி நிற்பான்.. முகத்தில் ஓர் தோரணை இருக்கும்.. பல விழாக்களில் அவள் அவனைப் பார்த்திருக்கிறாள்.. தனபாலன் நினைத்திருந்தால் ரம்ய மாலினி தனியே உட்கார்ந்திருந்த சமயங்களில் அருகில் வந்து பேசியிருக்கலாம்..

‘ஏன் அவன் பேசியதில்லை..?’

மனதைக் குடைந்த கேள்வியை எதிரில் நின்ற பிரதீபன் மறக்கடித்தான்.. பளிச்சென்று விரிந்த புன்னகையுடன்..

“நிங்கட பேரு எந்துவா..? தேவதையோ..?” என்றான்..

அவளது அழகை ஓர் ஆடவன் தேவதையென்று வர்ணிக்கிறான்.. இனம் புரியாத ஓர் கிளர்ச்சி கலந்த சந்தோஷம் அவளது நாடி நரம்பெங்கும் வியாபிப்பதைப் போல உணர்ந்தாள் ரம்ய மாலினி..

‘இந்த உணர்வுக்கு பேரு எந்துவா..?’ அவளது மனம் கேட்டது..

அத்தியாயம் 267

வயநாட்டின் இதமான குளிர் அவளுக்கு சுகமானதாக இருந்தது.. அவனிடமிருந்து பெற்றுக் கொண்ட துப்பட்டாவைக் கழுத்தில் போர்த்தினாற் போலப் போட்டுக் கொண்டாள்..

“தணுப்பு (குளிர்) வாட்டுதோ..?” அக்கறையுடன் கேட்டான் பிரதீபன்..

“இல்ல..” வெட்கத்துடன் அவள் முணுமுணுத்தாள்.

“ஹப்பா.. இத்தினி மணிக்கயிறில இப்பத்தான் நிங்க வாய் திறந்து ஒரு வார்த்தை பறஞ் ..” அவன் சந்தோஷமடைந்தான்..

“மணிக்கயிறா..? நிமிஷங்கள்ன்னு சொன்னாக் கேட்டுக்கலாம்..” அவனுடன் பேச அவளுக்குப் பிடித்திருந்தது..

அது அழகான பொன்மாலைப் பொழுது என்று ரம்ய மாலினிக்குத் தோன்றியது.. பிரதீபனுடன் அவள் ஒன்றும் காதல் வயப்பட்டு விடவில்லை.. சின்னப் பார்வைகள், இனம் புரியாத ரகசிய உணர்வுகள் இவை யாவும் பருவ வயதில் ஏற்படும் சலனங்கள் என்பதை அவளொன்றும் அறியாதவள் அல்ல.. அழகும் கம்பீரமும் நிறைந்த ஆண்களைக் காண

நேரிடும் போது மனதுக்குள் ஏற்படும் சிறு கிளர்ச்சியை அவளால் தவிர்க்க முடிந்ததில்லை.. அது போல்தான் இதுவும் என்று நினைத்துக் கொண்டாள்..

பிரதீபன் ஒன்றும் அன்னியனல்லவே.. அவனது அரண்மனையில்தான் அவள் விருந்தினராகத் தங்கியிருக்கிறாள்.. வீட்டுக்கு உடையவன் உபச்சாரமாக பேசும்போது அதற்குப் பதில் பேசாமல் இருப்பது அவனை அவமதிப்பதைப் போல ஆகி விடாதா..?

அவனுடனான அவளது உரையாடலுக்கு இப்படியொரு கோணத்தில் சமாதானம் சொல்லிக் கொண்டாள் ரம்யா..

“ஆ நிமிஷம்..” பல்வரிசை தெரிய அவன் சிரித்தான்..

சிரிக்கும் போது அவன் வெகு அழகாக இருக்கிறான் என்று அவளது மனம் ஜொள்ளியது..

“ரம்ய மாலினிக்கு பூக்களெண்டால் வளர இஷ்டமோ..?”

“ஏனாம்..? உங்களுக்குப் பூக்களைப் பிடிக்காதோ..?”

“அதுசரி.. நிங்களை ஞான் கேள்வி கேட்டா.. நிங்க என்னைக் கேள்வி கேட்டு..”

“சில சமயம் கேள்விக்குக் கேள்வியே பதிலாகும்..”

“ஓ.. நிங்க இவ்விதம் கூட சம்சாரிக்குமோ..?”

அவன் வியப்புடன் அவளைப் பார்த்ததில் அவள் வெட்கமடைந்தாள்.. என்னதான் சகஜமாகப் பேச முயன்றாலும் மனதுக்குள் பரபரப்பும், பதட்டமும் சூழ்ந்து அவளை என்னவோ செய்து தொலைக்கிறது.. அவளுடன் பேச அவன் காட்டும் ஆர்வத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது.. அவளை அவன் ‘தேவதை’ என்று உபாசிப்பதில் கர்வம் ஏற்படுகிறது..

‘ஞான் தேவதையாக்கும்..’

இறக்கை விரித்து வானில் பறக்க ஆசை கொண்டாள் ரம்யா.. அவனும் அவளுடைய ஆசைகளைப் பற்றித்தான் கேட்டுக் கொண்டிருந்தான்..

“பூப்பூக்கும் ஓசையைக் கேட்க ஆசை..

ல் விரியும் ஓசையைக் கேட்க ஆசை..

பட்ஷிகளின் குக்குக்குகுக்கு..

பறவைகளின் ரிங்ரிங்ரிங்..

சங்கீதம் சொல்லித் தருமே தங்கப் பெண்ணே..

..ன்னு பாடிக்கிட்டு இருந்தீங்களே.. இங்கேயுள்ள ஸ்வர்ணப் பாவை (தங்கப் பாவை) நிங்க மட்டுமல்லோ.. பின்னே ஆரிடம் ரம்யா பறஞ் ..?"

"ஏனாம்..? உங்களிடம் சொல்லக் கூடாதா..?"

"ஓ.."

மறுபடியும் ஒரு வியப்பு..

பேசாமடந்தை இத்தனை அழகாகவும் பேசக் கூடுமா என்று அவனது விழிகளில் எழும் மின்னல்.. மனதுக்குப் பிடித்தமானவனாக இல்லாவிடிலும் கூட அவனுடன் உரையாடும் உரையாடல் மனதுக்குப் பிடித்தமானதாக இருக்கிறதே.. அது ஏன்..?

"பூவே, பூவைப் பற்றிக் கானம் இசைப்பதை இப்போதுதான் ஞான் கேட்டு.."

"நான் பூவா..?"

"பின்னே.. இல்லையோ..?"

பிரதீபனின் பார்வை மலரொன்றின் இதழ்களை வருடிக் கொடுப்பதைப் போல அவளது மனதை வருடிக் கொடுத்தது.. பேச வார்த்தைகளின்றித் தவித்துப் போன ரம்ய மாலினி

மௌனத்தைக் கவசமாக்கி அதன் பின்னால் ஒளிந்து கொண்டாள்..

பேச்சற்ற பொழுதுகள் அர்த்தம் நிறைந்தவை.. அழகானவை.. மௌனத்தின் மொழியை உணராதவர்களால் காதலையும் உணர முடியாது.. அது ஆத்மார்த்தமான மொழி..! மனதோடு மனம் பேசும் மொழிக்கு மௌனம் என்று பெயர் சூட்டுவார்கள்..

வயநாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள்தான் பிரதீபனும் ரம்ய மாலினியும்.. இருந்தாலும் ரம்ய மாலினி பிரதீபனைப் பார்த்ததே இல்லை.. அவந்திகாவின் குடும்பத்துக்கு ஆகாதவர்கள் என்பதால் பத்மானந்தனின் குடும்பத்துடன் அருள்மொழிவர்மனின் குடும்பத்தினர் பேசக்கூடாது என்பது எழுதப்படாத சட்டமாக இருந்தது.. ரவிச்சந்திரன் வளர்ந்து அரண்மனையின் பொறுப்பைக் கையிலெடுத்துக் கொண்ட பின்னால் அனைத்துச் சட்டங்களும் மாறின என்றாலும் ரவிச்சந்திரனின் குடும்பத்தினர் பத்மானந்தனின் குடும்பத்துடன் பின்னிப் பிணைந்து உறவு கொண்டாடியதில்லை.. எட்ட நின்று நலம், நலமா என்ற விசாரணையுடன் நகர்ந்து விடுவார்கள்.. பிரதீபன் ரம்ய மாலினியைப் பார்த்திருக்கிறான் என்றாலும் இத்தனை அருகில் பார்த்ததில்லை.. உறவினர்

இல்ல விழாக்களில் தன் குடும்பத்தினருடன் வந்து கலந்து கொள்பவளைத் தொலைவில் நின்று பார்த்திருக்கிறான்.. இவள் கிடைத்தால் வாழ்க்கை அழகாக இருக்கும் என்று மனம் பொங்கும்.. அவள் அவந்திகாவின் அண்ணன் மகள் என்பதில் 'எட்டாக் கனி' என்ற பெருமூச்சுடன் தள்ளி நின்று விடுவான்..

இதுபோன்ற அழகானதொரு தருணம் வாய்க்கக் கூடும்.. அவர்கள் இருவரும் அருகருகில் நின்று பேசுவார்கள் என்று சொப்பனத்திலும் அவன் எண்ணிய தில்லை.. எதிர்பாராத பரிசுகளையும் சிலநேரங்களில் வாழ்க்கை வழங்கக் கூடுமல்லவா..? அப்படி வாழ்க்கை வழங்கிய பரிசாக அந்தத் தருணத்தை அவன் உணர்ந்தான்.

இதோ.. இமைகள் படபடக்க அடிப்பார்வையில் நாணத்தைத் தேக்கி அவனை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறாளே.. இந்த இளவரசி..! இவளது கடைக்கண் பார்வை அவன் மீது விழும் வரம் கிடைக்கும் என்றும் அவன் நினைத்துப் பார்த்ததில்லை.. அவள் காதலுடன் பார்க்காவிடினும்.. சின்னஞ்சிறு சொந்தத்துடன் பார்த்து வைத்தாள்.. அந்த சிறுதுளி சொந்தத்தில் இளைப்பாறியது அவன் மனம்.

பேச முடியாமல் அவளும்.. பேச்சை மறந்து அவனும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்ற பொழுது நகர்ந்தது.. பிரதீபன் அழகான அந்த மௌனத்தை அற்புதமான பாடல் வரிகளில் கலைக்க விரும்பினான்.

“மலரே..! மௌனமா..?

மௌனமே.. வேதமா..?”

அவனது பாடலில் அவளது முகம் மலர்ந்தது.. அவளை மலரென்று அவன் அழைத்ததில் அவளது மனம் ரெக்கை கட்டி வானத்தில் பறந்தது..

“மலர்கள்.. பேசுமா..?”

ஒற்றைவரியுடன் நிறுத்தியவள் இமைகள் படபடக்க அவனை ஏறிட்டுப் பார்த்து..

“எனக்குப் ‘பூ’ன்னே பெயர் கொடுத்தாச்சு..” என்று நளினமாக சிரித்தாள்..

முல்லைப்பூ பல்வரிசை முழுவதுமாக தெரியாமல் சன்னமாக இதழ் பிரித்து மெல்தாக அவள் சிரித்த சிரிப்பில் தன்னைத் தொலைத்தான் பிரதீபன்..

“பூவுக்குப் ‘பூ’ன்னுதானே பெயர் கொடுக்கனும்..?” என்றான்.

“உங்களைப் பேசி ஜெயிக்க முடியாது..”

மோகனமாய் அவள் தலைசாய்த்தாள்..

“நீங்க ஜெயிக்கனும்னா ஞான் எந்து வேண்டு மெண்டாலும் செய்வேன்.. ரம்ய மாலினி பறஞ்ஞா ஞான் அந்தக் கயல் தாண்டி வயநாட்டு மலையின் சிகரம் தொட்டு வருமல்லோ..”

“இவ்வளவு இம்ப்ரெஸ்ஸிவா பேசுவீங்களா நீங்க..?”

“ஒரப்பான (நிச்சயமா) ஞான் ரம்ய மாலினிய இம்ப்ரெஸ் பண்ணனுமெண்டு சம்சாரிக்கலயல்லோ.. சத்தியமானு ஞான் பறஞ் ..”

“போதும்.. போதும்.. உங்க வீட்டுக்கு கெஸ்டா வந்தா இப்படியெல்லாம் விருந்தோம்பல் நடத்த வேண்டாம்..”

“நீங்க எந்தா வெறும் கெஸ்ட்டோ..?”

“இல்லையோ..”

“இல்லை..”

ஊடுறுவும் பார்வையுடன் அழுத்தமான குரலில் மறுத்தான் பிரதீபன்.. அவனது துளைக்கும் பார்வையில் தன் வயமிழந்து தவித்தாள் ரம்ய மாலினி.. அவன் மீதான ஈர்ப்பிற்கு காரணம் என்ன..? அவன் அவந்திகாவின் குடும்பத்திற்கு வேண்டாதவன் என்பதினாலா..?

'என் மனதில் இடம் பிடிக்க வேண்டுமென்றால் அவன் அவந்திகாவின் குடும்பத்திற்குப் பகைவனாக அபராஜிதனை அடித்துத் துரத்துபவனாக இருக்க வேண்டும் என்ற எனது அடி மனதில் ஆசையினால்தான் இவன் அருகில் என் மனம் தடுமாறுகிறதா..?'

"நிங்க எனிக்கு வெறும் கெஸ்ட் மட்டுமில்ல.. அதிக்கும் மேலே.." அவன் பேச்சை நிறுத்தியதில் மேலே என்ன சொல்லப் போகிறான் என்று அறியும் ஆவலில் அவளது இதயத்துடிப்பு அதிகரித்தது..

"ஹலோ.. பிரதீபன்.."

ரவிச்சந்திரனின் குரலில் ரம்ய மாலினி அவசரமாக நகர்ந்து அண்ணனின் அருகில் சென்று விட்டாள். சொல்ல நினைத்ததை சொல்ல முடியாத ஏமாற்றம் பிரதீபனின் முகத்தில் கவிந்தது.. ரம்ய மாலினி தமையனின் முதுகுக்குப்

பின்னால் மறைந்து கொண்டாள்.. அவள் முகத்தைப் பார்க்க முடியாததில் எதையோ இழந்து விட்டதைப் போல இருந்தது பிரதீபனுக்கு..

“ஹலோ.. ரவி.. எப்ப வந்தீங்க..?”

“இப்போதுதான் வந்தேன்.. நந்தினியிடம் பேசிக் கொண்டிருந்தேன் தேங்க்ஸ்..”

“எந்துக்கு..?”

“நந்தினியையும், அவள் ஃபேமிலியையும், கூடவே என் தங்கையையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதற்கு..”

“அதி எங்க கடமையல்லோ.. நன்னி பறஞ் .. எங்களை வேற்று மனுஷராக்க வேணாம்.. கேட்டே..”

“ஓகே.. உங்க பிஸினெஸ் எப்படிப் போகுது..?”

ரவிச்சந்திரன் பிரதீபனுடன் பேசியபடி முன்னால் நடக்க.. நந்தினி ரம்ய மாலினியுடன் இணைந்து கொண்டாள்.. பெண்கள் இருவரும் தோட்டத்திலேயே தேங்கி விட ஆண்கள் அரண்மனைக்குச் சென்று விட்டார்கள்.. அது, இது என்று அர்த்தமற்ற பேச்சுக்களுடன் பொழுதை நகர்த்தி விட்டு அவர்கள் அரண்மனைக்குள் சென்றபோது ரவிச்சந்திரன்

புறப்பட்டுப் போயிருந்தான்.. நந்தினி ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.. அன்று இரவு அவளும் ரம்ய மாலினியும் தூங்காமல் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்..

“பிரதீபன் ஸோ ஸ்வீட்டில்ல..” என்றாள் ரம்ய மாலினி.

“அவரைத் திண்பண்டமாக்கிட்டியே ரம்யா.. பாவம் பிரதீபன்.. அவர் நிலைமை இப்படியா ஆகவேண்டும்..?” என்றாள் நந்தினி..

“நீ இருக்கியே..” சிரித்தபடி நந்தினியின் பக்கமாக திரும்பிய ரம்ய மாலினி..

“இதற்கு முன்னால் பிரதீபனைப் பார்த்ததில்லை.. அதனால் சொன்னேன்..” என்றாள்..

“ஆச்சரியமா இருக்கே.. நீங்க ரெண்டு பேரும் ஒரே ஊர் ரிலேட்டிவ்ஸ் வேற.. பார்த்ததே இல்லைங்கறியே.. எப்படி..?”

“அது அப்படித்தான்.. இவங்க அவந்திகா அத்தைக்கு எனிமீஸ்..”

“ஓ.. கதை அப்படிப் போகுதா..? அஜந்தா குடும்பத்துக்கு எனிமீஸ்ன்னா நமக்கு இவங்க ஃபிரண்ட்ஸ் ஆச்சே..

சொல்லிட்ட இல்ல.. நாளைக்கே பாசப்பயிரை வளர்த்துடறேன் பாரு..”

நந்தினி கண்களைச் சிமிட்டியதில் ரம்ய மாலினியின் சிரிப்பு அதிகரித்தது.. மறுநாள் மாலையில் ரவிச்சந்திரன் நந்தினியைப் பார்க்க வந்த போது ரம்ய மாலினி பிரதீபனைப் பற்றிச் சொன்னதைச் சொன்னாள்.. அவன் முகத்தில் மர்மப் புன்னகை தவழ்ந்தது..

“எந்தா சாரே.. எந்துக்கு இந்தப் புன்னகை..?” அவள் துளைத்து எடுத்து விட்டாள்...

சாதாரண மாகத்தான் சிரித்ததாக ரவிச்சந்திரன் சாதித்து விட்டான்.. நந்தகுமாரிடம் பேசிக் கொண்டிருந்த போது ரவிச்சந்திரனைக் குறித்த சில சந்தேகங்கள் இன்னும் விலகாததைக் குறிப்பிட்டாள் நந்தினி..

“ஆனந்தன் சார் நல்லவர்டா.. பொய் சொல்ல மாட்டார்.. அந்த மோகன் கொஞ்சம் அரை வேக்காடு.. மத்தபடி அவனும் பொய் சொல்கிற டைப் இல்லை.. ரெண்டு பேருமே இவரை பெல்ட்டால் அடிப்பார்ன்னும் துப்பாக்கியால் சுடுவார்ன்னும் சொன்னாங்கடா.. அதுதான் இன்னும் என் மனசில நெருஞ்சி முள்ளாய் நிரடிக்கிட்டு இருக்கு..”

“நீ லூஸுங்கிறதை கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டே இருக்க யாரு.. எப்பவாவது ஒரு தடவை ‘பேக்’கா இருந்தாப் பரவாயில்லை.. எப்பவுமே பேக்காத்தான் இருப்பேன்னு அடம் பிடிச்சா எப்படி.. பிரச்னையை தீர்த்து விட்டு நிம்மதியா இருக்கப் பார்ப்பியா.. அதை விட்டுட்டு இல்லாத பிரச்னையையெல்லாம் இழுத்து விட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கியே.. மெண்டலா நீ..?”

“நீ என்ன வேணும்னாலும் சொல்லிக்க.. அவங்க ஏன் அப்படிச் சொன்னாங்கன்னு தெரிந்துக்கலைன்னா என் மண்டையே வெடித்து விடும் போல இருக்குடா நந்து..”

“கோணல் மண்டையா இருந்தா அப்படித்தான் தோணித் தொலைக்கும்.. உனக்கு இப்ப என்ன தெரியனும்ங்கிற..? பெல்ட்டுன்னு இருந்தா அடிக்கத்தான் செய்வாங்க.. துப்பாக்கின்னு இருந்தா சுடத்தான் செய்வாங்க.. பெல்ட்டில சுட்டு.. துப்பாக்கியால விட்டு விளாசி அடித்தாத்தான் கோக்கு மாக்கா இருக்கும்.. இங்க எல்லாமே சரியாகத்தானே இருக்கு..?”

“நந்து.. ப்ளீஸ்..”

நந்தினி அழுக ஆரம்பிக்க நந்தகுமார் தலையில் அடித்துக் கொண்டான்..

“உன் கூடப் பிறந்ததுக்கு குட்டிச்சுவர் கூடப் பிறந்திருக்கலாம்.. படுத்தி வைக்கிற நீ.. இப்ப என்னதான் செய்யலாம்ங்கிற..”

“எஸ்டேட்டுக்குப் போயி ஆனந்தன் சாரிடம் என்ன தான் நடந்ததுன்னு முழுதாக் கேட்டுத் தெரிந்துக்கலாம்டா..”

“அத்தானை சந்தேகப்படறியா..?”

“அவருக்குப் பெண்டாட்டியாகிறதுக்கு முன்னாலே என் மனசில இருக்கிற அத்தனை சந்தேகங்களையும் தெளிவு படுத்திக்கனும்னு நினைக்கிறேண்டா..”

“பேசறதையெல்லாம் வக்கணையாப் பேசு..”

பல்லைக் கடித்தபடி நந்தினியை எஸ்டேட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான் நந்தகுமார்..

அத்தியாயம் 268

பத்மானந்தனின் அரண்மனையை விட்டு எஸ்டேட்டுக்கு போவது என்பது நந்தகுமாருக்கு எளிது.. நந்தினிக்கு எளிதல்ல.. என்ன செய்வது என்று அக்காவும் தம்பியும் தலைமுடியைப் பிய்க்காத குறையாக யோசித்தார்கள்.. இடையிடையே எல்லாம் உன்னால்தான் என்று நந்தினியிடம் சண்டைக்குக் கிளம்பினான் நந்தகுமார்.. உடனே கண்ணைக் கசக்கி நான் என்னடா செய்வேன்.. உன்னை விட்டால் எனக்கு யார் உதவி செய்வார்கள் என்று உருக்கமாகப் பேசித் தம்பியை பாசவலையில் சிக்க வைத்தாள் நந்தினி.. சரி சரி, அழுது தொலைக்காதே.. எதையாவது பண்ணித் தொலைக்கிறேன் என்று சண்டையிலிருந்து பின் வாங்கினான் நந்தகுமார்..

தமக்கைக்காக என்பதில் அதிகப் பொறுப்பு வந்ததால் ஆழ்ந்து ஆலோசித்து ஒரு வழியைக் கண்டு பிடித்து விட்டான்..

“உன்னை அத்தான் வரச் சொன்னார்ன்னு சொன்னா யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க.. அப்படியே எஸ்கேப் ஆகிடலாம்..”

“எதுக்குன்னு கேட்பாங்களேடா..”

“ம்ம்ம்.. காதல் பண்ணன்னு சொல்லு..”

“என்னடா டேய்.. அம்மா, அப்பாகிட்ட எப்படிடா இப்படிச் சொல்கிறது..?”

“கடவுளே..! கோபத்தில ஒரு வார்த்தை சொன்னா அதை அப்படியே சொல்லச் சொல்லிட்டேன்னு நினைச்சுட்டியா..? நீயெல்லாம் என்ஜினியரிங் படிச்சருக்கேன்னு வெளியில சொல்லிராதே..”

‘அதென்ன சொல்லி வைத்ததைப் போல கம்மாண்டரும் இவனும் இதையே சொல்கிறாங்க..’ நந்தினிக்கு ரோஷம் வந்து விட்டது..

“நான் யுனிவர்சிட்டி ரேங்க் வாங்கியிருக்கேண்டா.. கோல்ட் மெடல் ஸ்டூடண்ட்..”

“உனக்கெல்லாம் கோல்டு மெடல் கொடுத்திருக்காங்க பாரு.. அவங்களைச் சொல்லனும்.. கிடக்கிறதையெல்லாம்

விட்டுட்டு கிழவியைத் தூக்கி மணையில வைத்துக்கிட்டு இருக்க..”

“என்னையாடா கிழவிங்கற..?”

“ஹைய்யோ.. உன்னோட முடியலைக்கா.. இப்பவே கண்ணைக் கட்டுது.. உனக்குப் போய் ஹெல்ப் பண்ணக் கிளம்பினேன் பாரு.. என்னைச் சொல்லனும்..”

“அப்ப என்னடான்னா அவங்களைச் சொல்லனும்னு சொன்ன.. இப்ப என்னடான்னா என்னைச் சொல்லனும்னு உன்னையே சொல்லிக்கிற... என்னடா... நமக்குக் கூடப் பிறந்தது ஒரே ஒரு அக்காவாச்சே... அதுக்கு உதவனுமேன்னு நினைச்சுப் பார்க்கறியாடா..?”

“நமக்கா..? உனக்கும் எனக்கும் சேர்த்து இன்னொரு அக்கா வேற இருக்கா..? உன் ஒருத்தியையே என்னால் சமாளிக்க முடியலை.. இதில இன்னொன்னா..? எப்படிக்கா..? நம்ம அப்பா ஏக பத்தினி விரதனாச்சே..?”

“அடச்சீ.. நான் உன்னைச் சொன்னேன்டா..”

“நம்மன்னு என்னைச் சொன்னியா..? அறிவுக் கொழுந்து..”

“இருக்கிற அறிவு போதும்.. போடா..”

“உன்னோட பெரிய ரோதனைக்கா..”

“நான் உனக்குப் பாரமாகிட்டேன்ல்ல..”

நந்தினி மூக்கை உறிஞ்சினாள்.. ‘மளுக்’ எனக் கண்ணீர் அரும்பி அவளது கன்னத்தில் விழுந்து தெறித்ததில் கலவரப்பட்டுப் போன நந்தகுமார் கையெடுத்துக் கும்பிட்டு..

“வேணாம்க்கா.. டேமைத் திறந்து விட்டிராதே.. தாங்காது.. முக்கியமான பிஸினெஸ் டீலிங் ஒன்றை ஆபிஸ் லேப்டாப்பில் ஸேவ் பண்ணி வைத்திருக்க.. அதுக்கு பாஸ் வொர்டு உனக்குத்தான் தெரியும்.. ஃபோனில் அதைச் சொல்லக் கூடாது.. நேரில் வந்து ஓபன் பண்ணி மேட்டரை பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுக்கனும்னு அத்தான் உன்னை வரச் சொல்லியிருக்கார்ன்னு சொல்லு.. துணைக்கு நானும் வருகிறேன் என்கிறதால யாரும் அப்ஜெக்ட் பண்ண மாட்டாங்க..”

“லேப்டாப்பை உன் அத்தான் கையில் எடுத்துக் கொண்டு வந்து ஓபன் பண்ணச் சொல்லி இங்கிருக்கிற பிரிண்டரில பிரிண்ட் அவுட் எடுத்துக்கிட்டா என்னன்னு கேட்பாங்களேடா..”

“அவங்க கேட்கலைன்னாலும் நீயே சொல்லிக் கொடுப்பியே.. ஒண்ணு நீயா வழியைக் கண்டு பிடிக்கனும்.. இல்லேன்னா வழியைக் கண்ட பிடிச்சு சொல்கிறவன் பேச்சுக்கு வக்கணையா எதிர்கேள்வி கேட்காம வாயை மூடிக்கிட்டாவது இருக்கனும்.. ரெண்டையும் நீ செய்ய மாட்டேன்னா நான் என்னத்தைப் பண்றது..?”

“கோவிச்சுக்காதேடா நந்து.. இப்படிக் கேட்டா என்ன பதிலைச் சொல்கிறதுன்னு நாம யோசிச்சு வைத்துக்கனுமில்ல..?”

“அம்மாவும், அப்பாவும் அந்த அளவுக்கெல்லாம் யோசிக்க மாட்டாங்க.. ரம்ய மாலினியக்காவும், இந்த பிரதீபன் அண்ணாவும் யோசிச்சாத்தான் உண்டு.. அவங்களும் அத்தானைப் பார்க்க நீ பொய்சாக்குச் சொல்கிறேன்னு நினைத்துக்கிட்டுப் பேசாம இருந்துருவாங்க..”

“நந்து..!!! என் செல்லமே..! எப்படிடா கண்ணா இம்புடு அறிவா யோசிக்கிற..?”

“அதாக்கா.. உனக்கு வைக்க வேண்டிய அறிவை கைக்காம போனதில சாமிகிட்ட எக்கச்சக்க அறிவு ஸ்டாக்கிருச்சாம்.. நம்ம அப்பாவோட பிள்ளைகளுக்கு

கொடுக்க வேண்டிய மொத்த அறிவையும் என் ஒருத்தனுக்கே சாமி அள்ளி வழங்கிருச்சாம்.. அதனாலதான் உன் மேல மாடி காலியாக இருக்காம்..”

நந்தகுமார் சமயம் பார்த்துக் காலை வார நந்தினி உக்கிரமானாள்.. எஸ்டேட்டுக்கு போக வேண்டுமா, வேண்டாமா என்று நந்தகுமார் மடக்கியதில் உடனடியாக உக்கிரம் குறைந்து மலையிறங்கினாள்.. அக்காவும், தம்பியும் சொன்ன பொய்யை மேகநாதனும் வெந்நிலாவும் அப்படியே நம்பிவிட, ரம்ய மாலினியும் பிரதீபனும் நமட்டுச் சிரிப்புடன் தலையை ஆட்டி வைத்தார்கள்.. அவர்களுக்காக காரை அனுப்பி வைத்த பிரதீபன் வாட்ட சாட்டமான மலையாளி டிரைவரிடம் ரகசியமாக எதையோ சொல்லி அனுப்பி வைத்தான்.. எஸ்டேட்டுக்குச் செல்லும் வழியில்..

“பிரதீபன் சார் உங்களிடம் என்ன சொன்னார்..?” என்று கேட்டான் நந்தகுமார்..

“தோக்கு வேணுமா எண்டு ஏமான் பறஞ் ..?” என்றான் காரோட்டி..

“இவன் என்னக்கா சொல்கிறான்..?” நந்தகுமார் கிசுகிசுக்க..

“தோக்குன்னா தமிழில் துப்பாக்கின்னு அர்த்தம் வரும்டா.. ஏமான்னு சொன்னா எஜமான்..” நந்தினி நடுங்கினாள்..

“சும்மாயிரு..” அவளை அதட்டி அடக்கி வைத்த நந்தகுமார்..

“எதுக்காக உங்க எஜமான் தோக்கு வேணுமா எண்டு கேட்டார்..?” என்று டிரைவரிடம் சம்பாஷனையைத் தொடர்ந்தான்..

“யோகானந்தனிட மோன் அபராஜிதன் வயநாட்டுக்கு வந்து ரெண்டு திவசமாயி..” டிரைவர் சொன்னான்..

“இப்ப என்னக்கா சொல்கிறான்..” நந்தகுமார் நந்தினியின் காதைக் கடித்தான்..

“அஜந்தாவோட அண்ணன் அபராஜிதன் வயநாட்டுக்கு வந்து ரெண்டு நாளாச்சாம்டா..” நந்தினி பயத்துடன் சொன்னாள்..

“யாரு..? அந்த மகேந்திரபூபதியிடம் உன்னைக் காட்டிக் கொடுத்து கூட்டுச் சேர்ந்து கடத்திக்கிட்டுப் போனானே.. அந்த ராஸ்கலா..?” கண்சிவந்தான் நந்தகுமார்.

“இவ்வளவு ஆக்ரோஷம் வேணாம்டா நந்து.. அவன் எருமைக்கடா மாதிரி பலசாலியா இருப்பான்.. நீ நோஞ்சான்..”

“அதுக்கு..? அவனைச் சும்மா விட்டுறச் சொல்றியா..?”

“கம்மாண்டர் பார்த்துக்குவான்.. நீ கோபப்படாதே..”

நந்தகுமாரை அமைதிப் படுத்திய நந்தினி

டிரைவரிடம்..

“அபராஜிதன் எங்கே வந்திருக்கிறான்..? ரவிசாரோட அரண்மனைக்கா..?” என்று கேட்டாள்..

“அல்ல மேம்.. ஆ கொட்டாரத்தில ஆளுக்கு இதி தெரியாதல்லோ.. அபராஜிதன் வேறு ஒரு ஸ்தலத்தில இருக்கிறாரெண்டு எண்ட ஏமான் பறஞ் .. எங்ஙனவும் தள்ளு (அடி) வழக்கு (சண்டை) வருமெண்டு எண்ட ஏமானோட தரவாடில சம்சாரிச்சு..”

அபராஜிதன் வயநாட்டுக்கு வந்திருக்கிறான்..

ஆனால் ரவிச்சந்திரனின் அரண்மனைக்கு வரவில்லை.. மறைவாக ஒரு இடத்தில் தங்கியிருக்கிறான்.. அவன் எப்படியும் வம்புச் சண்டைக்கு வருவான் என்று பத்மானந்தனின்

இல்லத்தில் பேசியிருக்கிறார்கள்.. அதனால்தான் தனித்துச் செல்லும் நந்தினி, நந்தகுமாருக்குக் காவலாக அடியாளைப் போன்ற ஒரு ஆஜானுபாகு காரோட்டியை பிரதீபன் அனுப்பி வைத்திருக்கிறான்.. அபராஜிதன் ஆயுதம் வைத்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தினால்தான் துப்பாக்கி வேண்டுமா என்று காரோட்டியிடம் கேட்டிருக்கிறான்..

‘இந்த மாதிரியான சமயத்தில நான் வீட்டை விட்டு வெளியே வந்திருக்கிறது தப்போ..’ குற்றஉணர்வு கொண்டாள் நந்தினி.. அவளையும் நந்தகுமாரையும் தனித்து அனுப்ப மனமில்லாமல் பிரதீபன் காரைச் சுற்றிச் சுற்றி வந்தது நினைவுக்கு வந்ததில் மனம் நெகிழ்ந்தாள் நந்தினி..

அவள் யார்..? பிரதீபன் யார்..?

பாதுகாக்கிறோம் என்று அவனது குடும்பத்தினர் கொடுத்த வாக்கிற்காக இரவு பகலாய் கண்விழித்து மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் காக்கிறார்களே.. மலையாளிகள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற உயிரையும் கொடுப்பார்கள் என்று நந்தினி கேள்விப் பட்டிருக்கிறாள்.. அதை நேரடியாக உணர்ந்ததில் சிலிர்த்துப் போனாள்..

இப்போதும் பிரதீபன் உடன் வந்திருப்பான்.. நந்தினி ரவிச்சந்திரனைச் சந்திக்கச் செல்கிறாள் என்ற அனுமானத்தினால்தான் கூட வராமல் தாட்டியான கார் டிரைவரை பாதுகாப்புக்கு உடன் அனுப்பியிருக்கிறான் என்று அவள் யூகித்தாள்..

அபராஜிதன் வந்திருப்பது ரவிச்சந்திரனின் அரண்மனையில் இருக்கும் எவருக்குமே தெரியாது என்று நம்ப நந்தினி தயாராக இல்லை.. அஜந்தாதான் அவனை வரவழைத்திருப்பாள்.. அவந்திகாவுக்கும் யோகானந்தனுக்கும் அதுபற்றி தெரிந்திருக்கும்.. ஏன், அருள்மொழிவர்மனுக்கும் யாழினிக்கும் கூட அது தெரிந்திருக்கலாம்..

‘எதுவும் தெரியாததைப் போல நடிக்க அவர்களுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்..?’

நந்தினிக்கு பதட்டமாக இருந்தது.. பேசாமல் வந்த வழியிலே திரும்பி விடலாமா என்று கூட நினைத்தாள்.. இப்படிப்பட்ட சூழலில் அவளுக்கும் அவளுடைய குடும்பத்திற்கும் பாதுகாவலாக நிற்பவர்களுக்கு சங்கடம் விளைவித்து விடக் கூடாது..

காரைத் திருப்பச் சொல்லலாம் என்ற முடிவுக்கு அவள் வந்த போது எஸ்டேட் பங்களாவுக்கு கார் வந்து விட்டது.. இதற்கு மேல் திரும்பிப் போவதற்கு கேட்க வந்ததைக் கேட்டு விட்டுத் திரும்பிச் செல்வதே சாலச் சிறந்தது என்று காரை விட்டு இறங்கினாள் நந்தினி.. கூட வந்த நந்தகுமார் எஸ்டேட்டைப் பார்த்து விட்டு..

“வாவ்..” என்றான்..

நந்தினிக்கு கவலை மறந்து விட்டது.. அவள் பெருமையுடன் தம்பியைப் பார்த்து..

“அழகா இருக்குல்ல..” என்றாள்..

“கேரளாவில திரும்புன பக்கமெல்லாம் சீனரிதான்னாலும் இந்த வயநாட்டு அழகே தனிதான் போல அக்கா.. அசத்துது.. இனிமே இயர்லி லீவுக்கு ஐயா இங்கேதான் டேரா போடப் போறேன்..”

“இங்கேயோ இருந்துருடா..”

“அது எதுக்கு..? எதுவும் அளவோடு இருக்கனும்.. அளவுக்கு மீறினா இயற்கை கூட போரடிச்சுரும்.. அதோட

தஞ்சாவூரில அப்பாவோட ராஜாங்கத்தை யார் ஆள்கிறதாம்..? ஐயா வருங்காலச் சக்கரவர்த்தியாக்கும்..”

“உன் பெருமை இருக்கே.. தாங்கலை..”

நந்தினி காதுகளில் விரல்களை நுழைத்து தலையை ஆட்டியபடி எஸ்டேட்டின் அலுவலகத்தை நோக்கி நடந்தாள்.. எங்கிருந்தோ ஒரு மதுரகானம் காற்றில் மிதந்து வந்து அக்கா, தம்பியின் காதுகளில் நுழைந்தது..

“மலரே..! நின்னைக் காணாதிருந்தால்..

மிழிவேகிய நிறமெல்லாம்

மாயுண்ண போலே

அலிவோடு என் அரிகத்தின்

அணையாதிருந்தால்

அழகேகிய கனவெல்லாம்

அகலுள்ள போலே

குளிரேகும் கனவு என்னில்

சுதிராடிய காலம்

மனதாரில் மதுமாசம்

தளிராடிய நேரம்

அகம் அருவும் மயிலிணைகள்

துயில் உணரும் காலம்

என் அகதாரில் அனுராகம்

பகருண்ண யாமம்

அழகே.. நின்னைக்

காணாதிருந்தால்..”

“மோகன்..” நந்தினி முணுமுணுக்க.

“ஞான்தான் எண்டு நந்தினி மேம் அறிஞ் ..” என்று அவர்கள் முன் பிரசன்னமானான் மோகன்..

அவன் பார்வை நந்தகுமாரை அளவிட்டது.. முகம் மாறாமல் நந்தினி மோகனுக்கு நந்தகுமாரை அறிமுகப் படுத்தினாள்..

“அலோ..” மோகன் கை நீட்ட பதிலுக்கு வேண்டாவெறுப்பா கை நீட்டி ‘கடனே’ என்று கைகுலுக்கி வைத்தான் நந்தகுமார்..

அவனுக்கு நந்தினியை மோகன் ஆர்வத்துடன் பார்த்த பார்வையைப் பிடிக்கவேயில்லை..

“யாருக்கா இந்த அரைகுறை..?” நந்தினியிடம் முணுமுணுத்தான்..

“சொல்கிறேன் இரு..” சன்னக்குரலில் சொன்ன நந்தினி சப்தமாக..

“நந்து.. உன்னைப் போலவே எனக்கு வயநாட்டு சேரளம் எஸ்டேட்டில் ஒரு தம்பி இருக்கிறான்னு சொன்னேனில்ல.. அது இவன்தான்.. மோகன்.. என் கூடப் பிறக்காத தம்பி..” என்று மோகனை அறிமுகம் செய்து வைத்தாள்..

மோகனின் முகம் மாறிவிட்டது.. தம்பியாக நினைத்துப் பழகியவளை வேறு ஒரு எண்ணத்துடன் ரசித்துப் பழகி விட்டோமே என்ற குற்றவுணர்வு அப்பட்டமாக அவன் முகத்தில் தெரிந்தது..

“உன்னிடம் பேசும் போதெல்லாம் எனக்கு நந்துவுடன் பேசுகிறதைப் போலவே இருக்கும் மோகன்..” பாசத்துடன் நந்தினி சொன்னபோது தாள முடியாமல்..

“ஐ ஆம் ஸாரி சேச்சி..” என்று மன்னிப்புக் கேட்டு விட்டான்..

“இட்ஸ் ஓகேன்னு சொல்ல மாட்டேன் மோகன்.. இனிமேல் இதைப் போல பிஹேவ் பண்ணாதே.. ஆனந்தன் சார் நல்ல மனிதர்.. அவரோட பையன் நீ.. பொறுப்புடன் இருக்க வேண்டாமா..?” புத்தி சொல்லி அனுப்பி வைத்தாள் நந்தினி..

“அவன் உன்னைச் சீச்சிங்கிறான்.. நீ அதைக் கேட்காம அட்வைஸ் பண்ணி அனுப்பி வைக்கிற..”

“சீச்சீன்னு சொல்லலைடா.. சேச்சின்னுதான் சொன்னான்.. சேச்சின்னா அக்கான்னு அர்த்தம்..”

“இது வேறயா..? அவன் என்ன உன்னை ஒரு மார்க்கமா பார்க்கிறான்..?”

“அவனுக்கு நான் மலர் டீச்சராம்..”

நந்தினி புருவங்களை உயர்த்தி இறக்கினாள்.. மலர் டீச்சர் என்று மலர்விழியை வர்ணித்த நினைவு வந்து விட நந்தகுமார் குடம் குடமாய் அசடு வழிந்தான்..

“இப்பப் புரியுதா...? உனக்கு அக்கா வயசில இருக்கிறவங்களை நீ மலர் டீச்சர்ன்னு அம்பு விட்டா.. உன்

அக்கா மேலே உன் வயசில இருக்கிறவன் ராக்கெட்டே விடுவான்..”

“இதிலிருந்து நீயெல்லாம் சொல்ல வருவது என்னவோ..?”

“பிறரை நீ மலர் டீச்சரெண்டு விளித்தால், நிண்ட ஒரு அணியன் மலர் டீச்சரெண்டு விளிப்பானல்லோ..”

“அம்மா, தாயே.. மலர் டீச்சரையே மறந்துட்டேன்.. நீ மலையாளத் தமிழில பேசி சோதிக்காம ஆளைவிடு..”

அக்காவும் தம்பியும் பேசியபடி ஆனந்தனின் அறைக்குச் சென்றார்கள்..

அத்தியாயம் 269

“**வ**ரனும் மேம்.. எங்ஙன இருக்கினே.. மேம் எஸ்டேட்டை மறந்து போயி..” ஆனந்தன் எழுந்து நின்று வரவேற்றார்..

“நான் உங்களுக்கு மேமோ..? மோள் எண்டே பறயனும் சாரே..”

நந்தினி விளையாட்டாய் மிரட்டி விட்டு நந்தகுமாரை அறிமுகப் படுத்தி வைத்தாள்..

“நம்ம மோகன் போலவே இருக்கானில்ல.. இவன் நினைவில்தான் நான் மோகனிடம் பேசிப் பழகினேன்..”

ஆனந்தன் மகிழ்ந்து போனார்.. இரண்டொரு நாள்களில் எஜமானியாகப் போகிறவள் எந்தவிதப் பெருமையும் இல்லாமல் பேசியதில் இதமாக உணர்ந்தார்.. அவர்களை உட்காரச் சொல்லி உபசரித்தார்.

“சாய் கொண்டு வரட்டே..?” என்று அவர் கேட்டதில்..

“என்னடா இன்னும் இந்தக் கேள்வி வரலையேன்னு நினைத்தேன்.. கேரளாவில இதை விட்டா வேற கேள்வியே

கேட்க மாட்டாங்களா அக்கா..?" என்று நந்தினியிடம் கிசுகிசுத்தான் நந்தகுமார்..

"இங்கே வந்த புதிதில் நானும் இப்படித்தாண்டா அலுத்துக்குவேன்.." பதிலுக்கு கிசுகிசுத்த நந்தினி..

"வேண்டாம் சார்.. நாங்க உடனே திரும்பிப் போயாகனும்.. அதிக நேரம் இங்கே இருக்க முடியாது.." என்று மரியாதையுடன் மறுத்தாள்..

"மேமுக்கு எந்து வேணும்..?"

அவள் எதற்கு வந்திருக்கிறாள் என்று புரியாமல் கேட்டார் ஆனந்தன்.. தயக்கத்துடன் நந்தினி தம்பியைப் பார்த்தாள்..

"அதான் தலையில வண்டு குடையுதுன்னு கிளம்பி வந்தேல்ல.. கேட்க நினைச்சதைக் கேட்டு விடு.." என்று எரிந்து விழுந்தான்..

"அணியனுக்கு வெப்பராளமோ..?"

"ஆமாம் சார்.. தேவையில்லாம சில விஷயங்களை நான் தெரிந்துக்க நினைக்கிறேன்னு கோபப்படறான்.."

"எந்து விஷயமானு மேம்.. எஸ்டேட் பத்தியோ..?"

"இல்லை சார்.. எனக்கு ரெண்டு விவரம் தெரியனும்."

நந்தினி கேட்க நினைத்ததை கேட்டு விட்டாள்..

“அவர் பெல்ட்டால் விளாசியதில ஒருத்தன் சாகப் பிழைக்க ஆஸ்பத்திரியில கிடந்ததாய் சொல்கிறாங்க.. துப்பாக்கியால் சுட்டதில் ஒருவன் செத்துப் போயிட்டதாச் சொல்கிறாங்க.. இரண்டும் உண்மையான்னு எனக்குத் தெரிந்தாகனும் சார்.. இதைப்பற்றி மேலோட்டமா நீங்க சொல்லியிருக்கீங்க.. முழு விவரத்தையும் தெரிந்துக்கிட்டாத்தான் நான் நிம்மதியா இருக்க முடியும்.. இதனால அவர் மேல இருக்கிற காதல் குறைந்துருச்சுன்னு அர்த்தமில்லை.. அவர் எப்படிப்பட்டவரா இருந்தாலும் அவர்தான் எனக்கு எல்லாம்.. இதில் எந்தவிதமான மாற்றமுமில்லை.. எதற்காக அதைச் செய்தார்ன்னு நான் தெரிந்துக்கனும் சார்.. நீங்க எதையும் மறைக்க மாட்டிங்க என்கிற நம்பிக்கையோடு உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்.. ப்ளீஸ் சார்.. உங்களுக்கு என்ன தெரியுமோ அதை மறைக்காமச் சொல்லிருங்க சார்..”

கெஞ்சலுடன் அவள் பேசியதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்ட ஆனந்தன் சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு பேச ஆரம்பித்தார்..

“எனக்கு மட்டுமல்ல மேம்.. ஈ வயநாட்டில உள்ள மக்களுக்கு இதி பத்தித் தெரியும்.. சார் ஒரு மனுஷன பெல்ட்டால விளாசினதில அவன் சாகப் பிழைக்கக் கிடந்தான் என்கிறது உண்மைதானல்லோ..”

“என்னது..?”

அதிர்ச்சியுடன் நந்தினி நந்தகுமாரைப் பார்க்க அவன் ‘பொறு’ என்பதைப் போல கையமர்த்தி அவளை அமைதிப் படுத்திவிட்டு ஆனந்தனின் பேச்சைக் கவனித்தான்.

“ஆ மனுஷன் செய்த காரியம் எதுவெண்டு அறியுமோ..? ஈ எஸ்டேட்டில ஜோலி பார்த்த குட்டியிடம் தெற்று (தவறு) செய்ய எண்ணி.. ஆ சமயத்தில அங்ஙன போன சார் ஆ ஆளை பெல்ட் கொண்டு விளாசி.. சார் மட்டும் ஆ நிமிசம் வைகுமா (தாமதமா) போயிருந்தா ஆ பெண்குட்டியோட ஜோலிய அவன் முடிச்சு.. சார் ஆ பெண் குட்டியை காத்து ஆ மனுஷனுக்கு சிஷா (தண்டனை) அளிச்சு.. பெல்ட் எடுத்து சார் விளாசின விளாசலில ஆ மனுஷன் செத்துப் பிழைத்து.. அதுக்கப்புறம் அது போன்ற குற்றம் எதுவும் ஈ எஸ்டேட்டில நடக்கலையல்லோ..”

“கேட்டுக்க..” நந்தினியை முறைத்தான் நந்தகுமார்.

நந்தினி மெய் சிலிர்த்திருந்தாள்.. அவளுடைய கம்மாண்டர் அவனிடம் வேலை பார்க்கும் பெண்களுக்கு எஜமானன் மட்டுமல்ல.. மிகச் சிறந்த பாதுகாவலன்.. பெண்களிடம் எவனாவது தவறாக நடந்தால் பெல்ட்டால் தோலை உரித்து விடும் கோபக்காரன்..

"அந்தத் துப்பாக்கி விஷயத்தையும் சொல்லிருங்க சார்.. அதை மட்டும் நாம ஏன் பாக்கி வைக்கனும்..?"

ஆனந்தனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டான் நந்தகுமார்.. அதில் நந்தினிக்குக் கோபம் வரவில்லை.. நந்தகுமாருக்கு ரவிச்சந்திரனின் மீது இருந்த அளவு கடந்த பாசத்தையும், நம்பிக்கையையும் நினைத்து சந்தோஷம்தான் வந்தது.

"ஈ வயநாட்டு மலையில ஒளிஞ்சிருந்த தீவிரவாதி போலிஸ் துரத்தினதில எஸ்டேட்டுக்குள்ள வந்துட்டானல்லோ.. போலிஸ் அவனைச் சுற்றி வளைச்சு.. ஆ டெர்ரர் குவார்ட்டர்ஸில ஜிவிச்ச எளிய மக்களை பணயக் கைதிகளா பிடிச்சு வைச்சு.. ஆ மக்கள் பின்னாடி அவன் ஒளிய போலிஸ் ஏது செய்வது எண்டு அறியாம திகைச்சுப் போயி.. ஆ சமயத்தில நம்மட பாஸ் மாறுவேட மணிந்து மக்களோடு மக்களாக் கலந்து ஆ தீவிரவாதி அரிசில (பக்கதில) போயி..

தோக்கு (துப்பாக்கி) எடுத்து அவனைச் சுட்டுத் தள்ளி எஸ்டேட் மக்களைக் காப்பாற்றி விட்டாரல்லோ..'' ''உன்னை..'' பல்லைக் கடித்தான் நந்தகுமார். ''ஆ தீவிரவாதி ஆ ஸ்தலத்திலேயே மரிச்சுப் போயி.. எஸ்டேட் மக்கள் நம்மட பாஸைத் தெய்வமெண்டு கொண்டாடினாரல்லோ.. சார் காக்கத்தான் அறிஞ் .. அழிக்க அறிஞ்ஞலை.. கேட்டே..''

ஆனந்தனுக்கு நன்றி சொல்லி விட்டு பத்மானந்தனின் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நந்தினியின் மனதில் அமைதி சூழ்ந்திருந்தது.. அவள் உயிருக்குயிராய் காதலிக்கும் கம்மாண்டர் காவலன்தான்.. கொலைகாரனல்ல என்பதில் அவள் மனம் பாரத்தை இறக்கி வைத்து விட்டுச் சிறகைப் போல லேசானதாக மாறியிருந்தது..

''இதுக்குத்தான் கண்டதையும் நினைச்சு மனதைப் போட்டுக் குழப்பிக்காதேன்னு சொல்கிறேன்..'' நந்தகுமாரின் அறிவுரைக்கு முதன் முறையாக..

''ஆகட்டும்டா..'' என்று அமைதியின் சிகரமாக அவள் பதிலளித்ததில் அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

நீதானா அந்தக் குயில் என்பதைப் போல அவளை மேலும் கீழுமாக உற்றுப் பார்த்தவன்..

“திடிர்னு மாறாதேக்கா.. ஷாக்கா ஆகிருதில்ல..” என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவளைக் கலாய்த்தான்.. நந்தினிக்கு உடனே ரவிச்சந்திரனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.. அவனைக் கட்டியணைத்து முகமெல்லாம் முத்தம் பதித்து இவன் என் காதலன் என்று பெருமையாக கூவ வேண்டும்..

‘எப்போது சாயங்காலமாகும்..’

ஏக்கத்துடன் ஜன்னலின் வழியே வெளியே பார்த்தவள் திடுக்கிட்டாள்.. ஒருபக்கம் மலையும் மறுபக்கம் அடர்ந்த மரங்களுடன் கூடிய கிடுகிடு பள்ளத்தாக்குமான பாதையில் மலையோரமாக அடர்ந்திருந்த மரங்களின் ஊடே மறைந்திருந்து எட்டிப் பார்ப்பது யார்..? அபராஜிதனைப் போலவே இருக்கிறதே..

‘டிரைவரிடம் காட்டலாமா..?’

அதோ.. அங்கே அபராஜிதன் மறைந்து நிற்கிறான் என்று சொல்ல வாயெடுத்த நந்தினி அவன் மறைந்து ஓடி விட்டதில் திகிலானாள்.. ஓடி விட்டவனைப் பற்றி டிரைவரிடம் சொன்னால் அவன் பிரதீபனிடம் சொல்வான்.. பிரதீபன் பத்மானந்தனின் கவனத்திற்கு அதை கொண்டு செல்வான்..

பத்மானந்தன் வீட்டுக் காவலை பலப்படுத்தி விட்டு ரவிச்சந்திரனிடம் சொல்வார்.. ரவிச்சந்திரன் எதற்காக நந்தினி பத்மானந்தனின் அரண்மனையை விட்டு வெளியேறி எஸ்டேட்டுக்குப் போனாள் என்று சப்தம் போடுவான்.. அவன் அழைத்ததினால் நந்தினி எஸ்டேட் பங்களாவுக்குப் போகவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகி விடும்..

‘இப்போது மட்டும் தெரியாமல் போய் விடுமா..’

அப்படியே தெரிந்தாலும் ரவிச்சந்திரனிடம் எதையாவது சொல்லி சமாளித்து விடலாம்.. நந்தகுமார் எஸ்டேட்டைப் பார்க்க ஆசைப்பட்டான் என்று சொல்லலாம்.. எஜமானியாக ஆவதற்கு முன்பு அங்கே வேலை பார்த்த ஒருத்தியாக எஸ்டேட் அலுவலகத்திற்கு போய் மலரும் நினைவுகளை அசை போட்டதாக சொல்லலாம்..

உண்மைக்குத்தான் ஒரு வழி.. பொய்க்கு பல வழிகள்..

காதலி சொல்லும் பொய்யை குடைந்து குடைந்து விசாரிக்கும் காதலன் எங்கும் இல்லை.. அதனால் தப்பி விடலாம்.. அதை விடுத்து அபராஜிதனைப் பற்றிச் சொன்னால் ஆபத்தை அவள் தேடிப் போனதாக ரவிச்சந்திரனுக்கு கோபம்

வந்து விடும்.. நந்தினி வாயை மூடிக் கொண்டாலும் அவள் மனதிலிருந்த திகிலை முகம் காட்டிக் கொடுத்து விட்டது.

“என்னாச்சுக்கா உனக்கு.. பேயைக் கண்டு பயந்ததைப் போல இருக்க..” நந்தகுமார் கிண்டலடித்தான்.

அபராஜிதன் பேயைப் போன்றவன்தான்.. அவனை அங்கு பார்த்து விட்டதை அவள் எப்படி நந்தகுமாரிடம் சொல்வாள்..? சொன்னால் அவன் சும்மாயிருக்க மாட்டானே.. அப்படியே ரவிச்சந்திரனிடம் போய் ஒப்பித்து விடுவானே.. அதைக் கேட்டதும் ரவிச்சந்திரன் எங்கு பார்த்தாய்.. எப்போது பார்த்தாய் என்று விசாரணையை ஆரம்பித்து விட்டால் அவ்வளவுதான்.. அவள் தொலைந்தாள்..

“ஒண்ணுமில்லேடா..”

“அத்தானை சந்தேகப்பட்டு விட்டோமேன்னு வருத்தமா இருக்கா..?”

நந்தினி என்னவோ ரவிச்சந்திரனை அவள் சந்தேகிக்கவே இல்லை என்ற அர்த்தத்தில்தான்..

“அப்படியெல்லாம் இல்லைடா..” என்று தன்னிலை விளக்கத்தை சொல்ல ஆரம்பித்தாள்..

எங்கே.. நந்தகுமாரன் அவளை வாய் திறக்க விட்டால்தானே..

“அதானே பார்த்தேன்.. உனக்காவது குற்ற உணர்ச்சியில் மனது குறுகுறுக்கிறதாவது.. உன்னைப் போல ஒருத்திக்கு அத்தான் கிடைக்கக் கூடிய ஆளா..? அவரோட அழகென்ன, அறிவென்ன, அந்தஸ்தென்ன..? கிறுக்குத்தனமாய் உன்னை லவ் பண்ணித் தொலைச்சிருக்காரு..” என்றெல்லாம் பேசி அவளது கடுப்பைக் கிளப்பி விட்டான்.. நந்தினிக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது..

“தம்பியாடா நீ.. அந்த மனுஷன் இப்படியெல்லாம் நினைக்கலைன்னாலும் நீ எடுத்துக் கொடுத்து இன்னொரு பெண்கூடக் கோர்த்து விட்டிருவ போல இருக்கே.. இதுக்காடா என் கூடப் பிறந்த..?” என்று சண்டைக்கு கிளம்பி விட்டாள்..

“தெரியாத்தனமா பிறந்து தொலைச்சிட்டேன்.. கடவுள் இந்த வீட்டுக்குத்தான் உன்னை அனுப்பப் போறேண்டான்னு அப்பா, அம்மாவை மட்டும் காட்டினாரா.. அதில ஏமாந்துட்டேன்.. சம்பாதிச்சுக் கொட்டற சமத்து அப்பா, ஈஸியா ஏமாத்த முடிகிற ஏமாளி அம்மான்னு குதியாட்டம்

போட்டுக்கிட்டு வந்து பிறந்தா அந்த வீட்டில உருப்படாத உதவாக்கரை அக்காவாய் நீ இருந்து தொலைக்கிற.. என்னத்தைப் பண்றது..?" நந்தகுமார் விட்டுக் கொடுக்காமல் உசுப்பேற்றி விட ஒரு கட்டத்தில்.

"இன்னைக்கு நீ சட்னி தாண்டா.." என்று அடிக்கக் கிளம்பி விட்டாள்..

"சாம்பார் யாராம்..? நீங்களா..?" கார்க் கதவை திறந்து விட்டபடி பிரதீபன் கேட்ட போதுதான் பத்மானந்தனின் அரண்மனைக்கு அவர்கள் வந்து விட்டதை உணர்ந்தாள்.

"என்ன சண்டை..?" பிரதீபன் விசாரித்ததும நந்தினிக்கு வெட்கமாகி விட்டது..

"ச்சும்மா.." முகம் சிவக்கச் சொல்லி விட்டு வீட்டுக்குள் விரைந்து விட்டாள்..

அன்று மாலை ரவிச்சந்திரன் வந்தான்.. அவளுடன் தோட்டத்தில் பேசும் போது அவள் முகத்தையே ஊன்றிக் கவனித்தான்.. கடினமான அவனது முகமும் தீட்சண்யமான கண்களும் தீர்க்கமான பார்வையும் அவள் எஸ்டேட்டுக்கு போய் வந்த விவரத்தை அவன் அறிந்து விட்டான் என்பதை உணர்த்தி விட்டன..

“ஸாரி..” அவன் முகம் பார்க்க முடியாமல் தலையைக் கவிழ்த்தபடி சொன்னாள்..

“என்னிடம் கேட்க வேண்டியதை எஸ்டேட் மேனேஜர் கிட்டப் போய் கேட்டிருக்க.. இதுதான் என்மீது நீ வைத்திருக்கும் நம்பிக்கையா..?”

“இல்லையில்லை.. நீங்க எப்படிப்பட்டவரா இருந்தாலும் எனக்கு நீங்கதான்ங்கிற முடிவோடதான் ஆனந்தன் சாரிடம் பேசப் போனேன்..”

“அவர் சொன்னார்..”

அவளது முகத்தை இருகைகளாலும் அழுத்திப் பிடித்து விழிகளுக்குள் உற்றுப் பார்த்தவனின் விழிகளில் காதல் வழிந்தது..

“நான் எப்படிப்பட்டவனா இருந்தாலும் காதலிச் சிருப்பியாடி..? என் மீதான உன் காதல் மாறவே மாறாதா..?”

“மாறாது..”

இமை மூடிச் சொன்னாள் நந்தினி.. அவன் அவளை இறுக்கமாகத் தழுவிக் கொண்ட போது கண் கலங்க அவன் மார்பில் புதைந்தாள்.. அவனுக்குத் தெரியாமல் ஆனந்தனைப்

பார்த்து விட்டு வந்ததில் மனதில் ஏற்பட்டிருந்த உறுத்தல் மறைந்து இதம் பரவியது..

“அபராஜிதனைப் பார்த்தேன்..” மெதுவான குரலில் சொன்னாள்..

அவசரமாக அவளை விலக்கி நிறுத்தியவன்..

“எங்கே பார்த்தாய்..?” என்று அதட்டினான்..

“எஸ்டேட்டுக்குப் போயிட்டு வரும் வழியில் காட்டுக்குள் மரங்களோடு மரமா மறைந்து நின்றுக்கிட்டு இருந்தான்.. டிரைவரும், நந்துவும் அவனைப் பார்க்கலை.. அவங்களிடம் சொல்வதற்காக திரும்புவதற்குள் மறைந்து விட்டான்..”

நந்தினி விவரித்தாள்..

“இதற்குத்தான் உன்னை பத்மானந்தன் மாமாவின் வீட்டை விட்டு வெளியே வராதேன்னு வார்ன் பண்ணினேன்.. நீதான் நான் சொல்வதைக் கேட்கக் கூடாது என்கிற முடிவோடு இருக்கிறாயே..”

ரவிச்சந்திரனின் கோபத்தில் நந்தினி அழுது விட்டாள்..

“சரி, சரி..” அவளது கண்ணீரைத் துடைத்து விட்டுச் சமாதானப் படுத்திய ரவிச்சந்திரன்..

“இனிமே என்னிடம் சொல்லாம எங்கேயும் போகக் கூடாது..” என்று கண்டிப்பாக கூறினான்..

“போவேனா..?” காதலுடன் கேட்டாள் நந்தினி.

“அபராஜிதன் வயநாட்டுக்கு வந்திருக்கும் நியுஸ் எனக்குத் தெரியும்.. பத்திரமா இருன்னு சொல்லத்தான் கிளம்பினேன்.. நீ எஸ்டேட்டுக்கு வந்து போனதை ஆனந்தன் ஃபோன் பண்ணிச் சொன்னார்.. உடனே பிரதீபனுக்குப் ஃபோன் பண்ணி நீ பத்திரமா ரிட்டர்ன் ஆகி விட்டதைக் கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டேன்.. நீயோ அவன் உன்னை ஃபாலோ பண்ணினதாகச் சொல்கிற.. பத்திரம் நந்தினி.. ஜாக்கிரதை..”

ரவிச்சந்திரன் எச்சரித்து விட்டுப் போனதில் தோட்டத்தில் கூட உலாவப் போகாமல் நந்தினி பத்திரமாகத்தான் இருந்தாள்.. இருந்தும் அன்று இரவு அவளும் ரம்ய மாலினியும் உறங்கிக் கொண்டிருந்த படுக்கையறைக்குள் அபராஜிதன் நுழைந்து விட்டான்..

அத்தியாயம் 270

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நந்தினிக்கு யாரோ அவளை அடித்து எழுப்பி விட்டதைப் போல விழிப்பு வந்து விட்டது.. இமைகளைத் திறந்தாள் விடி விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் ரம்ய மாலினியின் கட்டிலின் அருகே அபராஜிதன் நின்றிருப்பதைப் பார்த்து விட்டாள்..

'இவனா..?' பாய்ந்து விளக்கைப் போட்டவள்.. அறைக்கதவைத் திறக்க ஓடினாள்..

"நில்.."

அபராஜிதன் போட்ட சப்தத்தில் ரம்ய மாலினி விழித்து விட்டாள்.. அபராஜிதன் கவனிக்கவில்லை.. ரம்யமாலிலனி உடல் நடுங்க கட்டிலில் இருந்து நழுவி இறங்கி மின்னல் வேகத்தில் ஓடி நந்தினியின் முதுக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்..

அவள் கட்டிலில்தான் இருக்கிறாள் என்ற நினைவில் நந்தினியிடம் சப்தம் போட்டுக் கொண்டிருந்த அபராஜிதன் ஆத்திரமடைந்தான்.. அவன் கையில் மடிக்கப்பட்ட கைக்குட்டை இருந்தது.. அதன் நிறம் மாறியிருந்ததில்..

“ரம்யா, ஜாக்கிரதை.. இவன் கர்ச்சீப்பை மயக்க மருந்தில் நனைத்துக் கொண்டு வந்திருக்கிறான்.. உன் முகத்தின் பக்கத்தில் அதை வீசினால் நீ மூச்சை இழுத்துப் பிடித்து தப்பித்து விடு..” என்று எச்சரித்தாள் நந்தினி..

“ஈஸிட்..?” ரம்யா பயந்து போனவளாக நந்தினியின் முதுகில் அட்டை போல ஒட்டிக் கொண்டாள்..

பெண்கள் இருவரும் அடி மேல் அடி வைத்து நகர்வது தெரியாமல் கதவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.. அவர்களின் பாதங்கள் அசைவதை வசதியாக நைட்டி மறைத்து விட்டது..

அபராஜிதனுக்கு வெறி வந்து விட்டது.. பத்மானந்தனின் காவலை மீறி அவரது பங்களாவுக்குள் நுழைவது ஒன்றும் சுலபமல்ல.. அவன் யோகானந்தனின் மகனாக இருந்ததில் உறவுக்கார பெரியவர் ஒருவர் தன் மகனென்று சொல்லி மாறு வேஷமிட்டிமிருந்த அபராஜிதனை பத்மானந்தனின் பங்களாவுக்குள் உடன் அழைத்து வந்து விட்டார்.. வயதான மனிதர்..

பாவம்.. பத்மானந்தனும் யோகானந்தனும் அவருக்கு ஒன்று விட்ட தம்பியின் பிள்ளைகளாம்..

“நோக்கனும் தாத்தா.. எண்ட அச்சனும், அம்மையும் எண்ட அம்மாவன் வீட்டில எரப்பாளிகள் போல ஜீவித்திருக்க எண்ட அச்சனோட சேட்டன் எங்கள தரவாடில நுழைய விடாம தள்ளி வைச்சு.. ஒரு தரம் அவரோட தரவாடுக்குள்ள போயி ஊன் கழிச்சுத் திரும்பனுமெண்டு எனிக்கு வளர ஆக்ரஹாம் தாத்தா.. ஒரேயொரு ராவுக்கு அங்கே தூங்கி எழுந்து கொள்ளனுமெண்டு சொப்பனம் கண்டு..”

பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டு அவன் கதை பிணைந்ததில் வயதான அந்தத் தாத்தாவின் மனம் இளகி விட்டது.. யோகானந்தனின் மகன் எதற்கு ஆசைப்படுகிறான்..? பெரியப்பாவான பத்மானந்தனின் சொத்து சுகத்திற்காக ஆசைப் படுகிறான்..? பாவம்.. சொந்தப் பெரியப்பா செல்வாக்குடன் வாழ்ந்து கொண்டிருக்கம் ஊரில் தாய்மாமன் மகனின் தயவில் அவனும் அவனுடைய குடும்பமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.. உரிமையுள்ள பெரியப்பா வீட்டில் நுழைந்து ஒரு வேளைச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு ஒருநாள் இரவு அந்த வீட்டில் தூங்கி எழுந்து வந்து விட வேண்டுமென்று கனவு காண்பதாகச் சொல்கிறான்.. கேட்கும் போதே வயிற்றெரிச்சலாக இருக்கிறது.. பணம் இருக்கிறது என்பதற்காக இந்த

பத்மானந்தன் உடன்பிறந்த தம்பியின் மகனை ஒதுக்கி வைத்து இந்த அளவுக்கு ஏங்க விடலாமா..?

"ஞான் உண்டு கொச்சு மோனே.. நிண்ட அச்சனோட சேட்டன் தரவாடுக்கு ஞான் நின்னை அழைத்துப் போயி.."

அவர் தைரியம் கொடுத்தார்.. வடநாட்டிற்கு பிழைப்புக்கா போன அவரது மகன் அந்தப் பக்கமே தங்கி விட்டது அபராஜிதனுக்கு கை கொடுத்தது.. அவன் பத்மானந்தனை விடவும் மூத்தவனைப் போல வயோதிக வேடமிட்டுக் கொண்டான்.. தள்ளாத வயதிலும் அபராஜிதனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக பத்மானந்தனின் அரண்மனைக்கு அவனை அழைத்துக் கொண்டு போனார் அந்த முதியவர்.. ஒன்று விட்ட பெரியப்பா வந்திருக்கிறார் என்று வரவேற்ற பத்மானந்தன் அவர் மகன் என்று சொன்னதால் தாடி மீசையோடு வயோதிக தோற்றத்தில் மாறுவேடமிட்டிருந்த அபராஜிதனை வீட்டுக்குள் அனுமதித்து விட்டார்..

இப்படியெல்லாம் திட்டம் தீட்டி எவராலும் நுழைய முடியாத இரும்புக் கோட்டைக்குள் புகுந்து விட்ட அபராஜிதன் இரவு உணவு உண்ட மயக்கதில் முதியவர் உறங்கியதும் மெதுவாக நழுவி நந்தினியும் ரம்ய மாலினியும் இரவு

உணவை உண்டு விட்டு வருவதற்குள் அவர்களது அறைக்குள் புகுந்து கட்டிலின் அடியில் மறைந்து கொண்டான்..

அன்று நந்தினியும் ரம்ய மாலினியும் உறங்க வருவதற்கு வெகுநேரமாகி விட்டது.. மழையில்லாமல் இருந்ததில் இரவு உணவுக்குப் பின்னர் பத்மானந்தனின் குடும்பத்தாரும் நந்தினியின் குடும்பத்தாரும் மாடி ஹாலில் உட்கார்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள்.. நந்தகுமார் பண்ணிய கலாட்டாவில் பத்மானந்தனின் குடும்பத்தினர் சிரிக்க ஆரம்பித்துவிட.. பிரதீபன் பேச்சை வளர்த்தபடி ரம்ய மாலினியை ரகசியப் பார்வைகள் பார்த்துக் கொண்டிருந்தான்.. புதிதான அனுபவத்தை தந்த அந்தப் பார்வைகளின் மழையில் நனைந்த ரம்யாவுக்கு ஒரு பொட்டுத் தூக்கம் கூட வரவில்லை.. பேசிச் சிரித்து ஓய்ந்து அவர்கள் அனைவரும் அவரவரின் அறைகளுக்குத் தூங்கப் போன போது நேரம் நடுநிசியைத் தாண்டி விட்டது..

‘இவ்வளவு நேரமா பேச்சும் சிரிப்புமா சந்தோஷம் கொண்டாடறாங்க.. தூங்க வர மாட்டேங்கிறாங்களே..’ அபராஜிதன் இருப்புக் கொள்ளாமல் தவித்தான்.

அவனிடம் மயக்க மருந்தில் தேய்க்கப்பட்ட கைக்குட்டை இருந்தது.. அதை உறங்கிக் கொண்டிருக்கும் ரம்ய மாலினியின் மூக்கில் வைத்து அழுத்தினால் அவள் மயக்கமடைந்து விடுவாள்.. எதிர்ப்புத் தெரிவிக்காதவளை இவன் எளிதில் அடைந்து விடலாம்.. பக்கத்துக் கட்டிலில் உறங்கும் நந்தினியின் மூக்கிலும் மயக்க மருந்தை வைத்து விட்டால் அவளும் மயக்கத்தில் ஆழ்ந்து விடுவாள்..

அபராஜிதன் நினைத்த காரியம் வெற்றிகரமாக முடிந்து விடும்.. மறுநாள் காலையில் விழித்து எழும்போது ரம்ய மாலினி அபராஜிதனிடம் தன்னை இழந்திருப்பாள்.. பத்மானந்தனின் வீட்டில் குழுமியிருக்கும் அத்தனை நபர்களும் அதற்குச் சாட்சியாக இருப்பார்கள்.. ரம்ய மாலினியை அபராஜிதனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதைத் தவிர ரவிச்சந்திரனுக்கு வேறு வழியிருக்காது.. குல கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் ரவிச்சந்திரன் அபராஜிதனின் கையில் ரம்ய மாலினியின் கையைப் பிடித்து ஒப்படைத்துத்தான் ஆக வேண்டும்.. அப்படி அவன் திருமணம் பேச வரும் போது ரவிச்சந்திரன் அஜந்தாவைத் திருமணம் செய்து கொண்டால்தான் அபராஜிதன் ரம்ய மாலினியை ஏற்றுக் கொள்வான் என்று அவன் நிபந்தனை விதிப்பான்..

அப்புறம் என்ன..? ரவிச்சந்திரன் அஜந்தாவையும், அபராஜிதன் ரம்ய மாலினியையும் திருமணம் செய்து கொள்வார்கள்.. அபராஜிதன் வயநாட்டு அரண்மனையின் 'தம்புரான்' ஆகி விடுவான்.. ரம்ய மாலினியுடன் நிறுத்தாமல் அதே அறையில் உறங்கிக் கொண்டிருக்கும் நந்தினியையும் ஒரு கை பார்த்து விட வேண்டும் என்ற வேட்கைதான் அபராஜிதனுக்கு.. ரவிச்சந்திரனைப் பழிதீர்க்க இதைவிட நல்ல உபாயம் வேறு கிடைக்குமா..? ஆனால், நந்தினியும் பாதிக்கப்பட்டு விட்டால் அபராஜிதனின் எண்ணம் நிறைவேறாது.. இரு பெண்களையும் பாழாக்கி விட்டான் என்று அவனை உள்ளே தூக்கிப் போட்டு விடுவார்கள்.. அது கூடாது.. அவன் ஒன்றிலேதான் மனதை வைத்து ஜெயித்துக் காட்ட வேண்டும்..

எங்கே ஜெயிப்பது..? நந்தினியும், ரம்ய மாலினியும் காலாகாலத்தில் தூங்க வராததில் அபராஜிதனுக்குத் தூக்கம் தூக்கமாக வந்து தொலைத்தது.. தூக்கக் கிறக்கத்தில் ஓர்முறை அவன் கையில் வைத்திருந்த மயக்க மருந்து கைக்குட்டையை அவன் மூக்கில் வைக்கப் போய் விட்டான்.. கெட்டதே காரியம் என்று இமைகளைச் சிமிட்டிச் சிமிட்டித் தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தான்.. ஒருவழியாக நந்தினியும், ரம்ய

மாலினியும் தூங்க வந்தார்கள்.. கட்டிலில் படுத்தவர்கள் அப்போதும் தூங்காமல் எதை எதையே பேசிச் சிரித்துக் கொண்டிருக்க பொழுது விடிந்து விடுமோ என்று கவலைப்பட்டுப் போனான் அபராஜிதன்.. பேசிப் பேசித் தானாக அவர்கள் உறக்கத்தில் ஆழ்ந்து விட அபராஜிதன் கட்டிலின் அடியிலிருந்து வெளிப்பட்டான்.. முதலில் ரம்ய மாலினியை மயக்கத்தில் ஆழ்த்தி விட்டு அடுத்து நந்தினியை மயக்கமடைய வைக்க வேண்டும் என்பது அவனது திட்டம்.. எந்தக் காரணம் கொண்டும் ரம்ய மாலினி சுய நினைவுடன் இருக்கக் கூடாது..

நினைத்ததை நிறைவேற்ற அவன் யத்தனித்த போது நந்தினிக்கு விழிப்பு வந்து விழித்து விட்டாள்.. மெலிதான வெளிச்சத்தில் அபராஜிதன் நிற்பதைப் பார்த்து விட்டவள் உடனடியாக விளக்கைப் போட்டு விட்டுக் கதவைத் திறக்க ஓடினாள்..

வெளிச்சம் பரவினால் ரம்ய மாலினி விழித்துக் கொள்வாள்.. கட்டிலின் பக்கத்தில் நிற்கும் அபராஜிதனைப் பார்த்து விடுவாள்.. கதவைத் திறக்க ஓடும் நந்தினியின் பக்கம் அபராஜிதனின் கவனம் திரும்பி விடும்.. அந்தச் சமயத்தில் ரம்ய மாலினி அவனருகில் இருந்து விலகி நகர்ந்து வந்து

விடலாம்.. நந்தினியின் திட்டம் கன கச்சிதமாக செயல்பட்டு விட்டது.. அவள் விளக்கைப் போட்டவுடன் அறையில் பரவிய வெளிச்சத்தில் கண்விழித்து விட்டாள் ரம்யா.. அருகில் அபராஜிதனைப் பார்த்ததும் பயந்து நடுங்கி கட்டிலை விட்டு இறங்கி நந்தினியின் பக்கமாக ஓடி வந்து விட்டாள்..

எதிர்பாராத இந்தத் திருப்பங்களினால் மூர்க்கம் கொண்ட அபராஜிதன் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை வெளியில் எடுத்து நீட்டினான்..

“அசையாதீங்க.. அசைந்தால் சுட்டு விடுவேன்..”

ரம்ய மாலினியை தன் முதுகுக்குப் பின்னால் முழுவதுமாக மறைத்து நின்றாள் நந்தினி..

“சுட்டுக்க..”என்றாள்..

“சுட மாட்டேன்னு நினைக்காதே..”

“ஏய்ய்.. நீ பழிபாவத்துக்கு அஞ்சாதவன்.. எதற்கும் துணிந்தவன்னு எனக்குத் தெரியும்டா.. சுடறதா இருந்தா சுட்டுக்க.. அதுக்குப் பயந்து நீ சொல்கிறதைக் கேட்பேன்னு மட்டும் நினைக்காதே.. அதுக்கு வேற ஆளைப் பாரு..”

“வேண்டாம் நந்தினி.. என் பொறுமையைச் சோதிக்காதே..”

“ஹ.. பொறுமையைப் பத்தி நீ பேசக் கூடாது.. கூடவே வளர்ந்த மாமன் மகளின் மனதைப் புரிந்து நடந்து அவ மனசை ஜெயிக்கத் துப்பில்லை.. துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு வந்துட்டான்.. நீ நல்லவனா இருந்தா உன் மாமா கட்டாயம் உனக்குப் பெண் கொடுத்திருப்பார்டா.. ஏன்னா அவர் நல்லவர்.. நீ அயோக்கியன்.. உனக்குப் பொண்ணைக் கொடுக்கிறதுக்குப் பதில் ஒரு பாட்டில் விஷத்தை வாங்கிப் பெண்ணின் வாயில் ஊன்றி விடலாம்ன்னுதான் பெண்ணைப் பெற்றவங்க நினைப்பாங்க.. நீ அப்படிப்பட்ட கீழ்த்தரமானவன்..”

“இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது.. ஒன்று இவள் எனக்குக் கிடைக்கனும்.. இல்லேன்னா சாகனும்..”

“இரண்டாவதுதான் நடக்கும்ன்னு சொல்லுங்க நந்தினி..”

“அதை அவ முதுகுக்குப் பின்னாலிருந்து வந்து என் முகத்தைப் பார்த்துச் சொல்லுடி என் அம்மாவன் மோளே..”

“உன் முகத்தைப் பார்த்தா ஒரு வருஷத்துக்கு என்னால் சாப்பிட முடியாது.. உவ்வேன்னு இருக்கும்.. எனக்குப் பசி தாங்காது..”

“ரம்யா..”

அபராஜிதன் அலறினான்.. அரண்மனையைச் சுற்றிக் காவல் காத்துக் கொண்டிருந்தவர்களின் காதுகளில் அந்தச் சப்தம் விழாமல் அடைக்கப்பட்ட அறையின் கதவுகள் தடுத்து நிறுத்தி விட்டன.. பெண்கள் இருவரும் ஊர்ந்து நகர்ந்ததில் கதவை நெருங்கி விட்டார்கள்.. நந்தினியின் முதுகு கதவை மறைந்திருக்க அவளது முதுகுக்குப் பின்னாலிருந்த ரம்யா கதவைத் திறந்து விட்டாள்..

“ரெண்டு பேரும் தப்பிக்க முடியாது ரம்யா.. இவன் கையில துப்பாக்கி இருக்கு.. நீ தப்பித்து விடு..” இதழ் பிரிக்காமல் கிசுகிசுத்தாள் நந்தினி..

“நீ இல்லாம நான் எப்படிப் போவேன் நந்தினி..?” அதே கிசுகிசுப்பான குரலில் மன்றாடினாள் ரம்ய மாலினி.

“போய்த்தான் ஆகனும்.. இவன் கையில் நீ அகப்பட்டு விடக்கூடாது..”

"நீ மட்டும் அகப்படலாமா..?"

"இது வழக்கடிக்கும் நேரமில்லை ரம்யா.. உன் அண்ணனின் மானம், மரியாதை, கௌரவத்தைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கிருக்கு.. இது அத்தனையும் நீதான்.. உன்னைக் காப்பாத்தியே தீருவேன் ரம்யா.. என் மீது சத்தியம்.. நீ இப்ப வெளியே போய்த்தான் ஆகனும்.. ஓடு ரம்யா.. இவன் சுதாரிக்கிறதுக்குள்ள கதவைத் திறந்து ஓடி விடு.. எனக்காக வேணாம்.. உன் அப்பாவுக்காக, உன் அம்மாவுக்காக, உன் அண்ணனுக்காக, ஏன், உனக்காகவும் ஓடி விடு ரம்யா.. நீ கதவைத் திறந்து விட்டதை இவன் பார்க்கிறதுக்குள்ள ஓடிவிடு.."

"முடியாது நந்தினி.. நான் ஓடி விட்டால் அந்தக் கோபத்தை இவன் உன்மீது காட்டி விடுவான்.. ஒரு நாளும் நான் அதைச் செய்ய மாட்டேன்.. என் குடும்பத்துக்காகவும், எனக்காகவும் உன்னை பலிகடாவாக்க மாட்டேன்.. அப்படித்தான் நான் தப்பிக்கனும்னா அந்த விடுதலையே எனக்கு வேண்டாம்.."

பெண்கள் இருவரும் ஒருவரையொருவர் காப்பாற்ற வாதாடிக் கொண்டிருக்கும் போது கண்ணிமைக்கும் நேரத்தில்

கத்தியொன்று பறந்து வந்து அபராஜிதனின் வலது கையில் பாய்ந்தது.. குருதி கொட்ட அவன் துப்பாக்கியை நழுவ விட்டான்.. சப்தமில்லாமல் கதவைத் திறந்து உள்ளே வந்த பிரதீபன் குனிந்து அந்தத் துப்பாக்கியைக் கைப்பற்றி அபராஜிதனின முதுக்குப் பின்னால் அழுத்திப் பிடித்து அவன் கைகளை பின்னுக்கு இழுத்து முறுக்கினான்..

“வாதில அடைச்சுத் தாக்கோலு கொண்டு நந்தினி பூட்டனும்..”

பிரதீபனின் கட்டளை காதில் விழுந்தும் அவன் என்ன சொல்கிறான் என்று தெரியாமல் திருதிருத்தபடி அசையாமல் நின்றாள் நந்தினி..

“இவர் என்ன சொல்கிறார் ரம்யா..?”

“கதவை அடைத்துச் சாவி போட்டுப் பூட்டச் சொல்கிறார் நந்தினி..”

பதில் சொல்லியபடியே கதவை அடைத்து சாவி போட்டுப் பூட்டினாள் ரம்ய மாலினி.. அபராஜிதனின் முறுக்கப்பட்ட வலதுகையில் கத்தி பாய்ந்த இடத்திலிருந்து குருதி வடிந்து கொண்டிருந்தது.. லேசாகப் பாய்ந்திருந்த கத்தியை

உறுவினான் பிரதீபன்.. வலியில் முகம் சுளித்த அபராஜிதனை வெப்புடன் பார்த்தபடி.

“நீயெல்லாம் மனுஷனோ..?” என்றான்..

“ஏண்டா அண்ணா கேட்க மாட்ட..? உன் அப்பாவும் என் அப்பாவும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான்.. உன் ஸ்டேட்டஸ் எப்படியிருக்கு..? என் ஸ்டேட்டஸ் எப்படியிருக்கு..?” அபராஜிதன் பொருமினான்..

“அதிக்கு ஆரானு காரணம்..? நிண்ட அச்சனல்லோ.. அச்சனுக்கும் நிண்ட அச்சனுக்கும் சரிசமமா பாகம் பிரிச்சு.. நிண்ட அச்சன் அனைத்தையும் அழிச்சு.. அதி நீ ஆலோசிக்க மாட்டியோ..? எண்ட அம்மை நிண்ட அம்மையைப் போல வளமான கொட்டாரத்தில ஜனிக்கலையல்லோ.. நிண்ட அம்மை அங்ஙன இல்ல.. ஈ வயநாட்டிலேயே வளர செல்வந்தரான அருள்மொழிவர்மனிட செல்ல மோளாக்கும்.. ரவிவர்மன் அம்மாவனுக்கு அளிச்ச சொத்துக்கள விட அதிகமான அளவில நிண்ட அம்மைக்கு சொத்துக்கள் கிடைச்சு.. ஆ சொத்துக்கள் நிண்ட அச்சனுக்கு கிடைச்ச சொத்துக்களை விட பல மடங்கு அதிகமல்லோ.. ஆ சொத்துக்கள் எங்கே போயி..?”

‘எண்ட அச்சன் விற்றுத் தின்றதில போயி..’

“மிண்டு அணியனே.. (பேசு தம்பி..) மிண்டு.. மௌனம் சாதிக்க வேணாம்.. அனைத்தையும் இழந்து நிண்ட அச்சன் அடைக்கலமெண்டு எண்ட அச்சனிடம் வந்து நின்னு.. எண்ட அச்சன் எண்ட அம்மைக்குத் தெரியாம அவரோட ப்ராப்பர்ட்டியை நிண்ட அச்சன் பேருக்கு எழுதிக் கொடுத்து.. ஆ ப்ராப்பர்ட்டி எங்கு போயி..?”

‘எண்ட அச்சனும் அம்மையும் அதை விற்று வெர்ல்டு டூர் போயி..’

“ஆ ப்ராப்பர்ட்டியக் கொண்டு படிப்படியா முன்னேறி ஈ வயநாட்டில பெயர் சொல்லும்படி ஜீவிதம் பண்ணியிருக்கலாமல்லோ..? நிண்ட அச்சனும் அதி செய்யலை.. நீயும் அதி செய்யலை.. ரவிச்சந்திரன் உன் பேருக்கு எழுதிக் கொடுத்த ப்ரப்பர்ட்டியை நீயும் அழிச்சு.. அதிக்கு மேலே உனிக்கு ப்ராப்பர்ட்டிய அழிச்சா நீ அதை அழிப்பேன்னு ரவி அவரிட கம்பெனியில நினக்கு வளர ஜோலி போட்டுக் கொடுத்து.. ஆ நன்னி நின்னிடம் இல்லயல்லோ..”

அபராஜிதன் பதில் சொல்லாமல் முறைத்துக் கொண்டேயிருந்தான்.. பிரதீபன் பெரிய துவாலையை எடுத்து

அவனது ரத்தம் சொட்டும் கையில் இறுக்கிக் கட்டியதில் ரத்தம் கசிவது நின்று விட்டது.. மெலிதான கயிறு கொண்டு அபராஜிதனின் கரங்களை பிரதீபன் பிணைக்க ஆரம்பத்ததில் அபராஜிதன் உரக்கச் சிரித்தான்.

"எந்துக்கு நகைக்கிற..?"

"என் கையை வேண்டுமானால் நீ கட்டலாம் அண்ணனே.. என் வாயை எப்படிக் கட்டுவாய்..? எப்படியும் என்னை வெளியில் அழைத்துக் கொண்டு போகத்தான் வேண்டும்.. அப்போது நான் ரம்ய மாலினிதான் ரகசியமாக நைட் டயத்தில அவளோட பெட்ரூமுக்கு வரச்சொன்னாள் என்று சொல்லுவேன்.. வயநாட்டு அரண்மனையில் அவள் அறையில் இவளுடன்தான் தூங்குவேன் என்று சொல்லுவேன்.. அதை இவளுடைய அண்ணன் பார்த்து விட்டு என்னை வயநட்டை விட்டுத் துரத்தி விட்டான், இப்போது பத்மானந்தனின் வீட்டில் இவள் இருப்பதாக ஃபோனில் தகவல் சொன்னதால் வந்திருக்கிறேன்.. இவள் சொல்லாமல் இத்தனைக் கட்டுக் காவலான அரண்மனையில் இவளது பெட்ரூமுக்குள் நைட்டயத்தில் தைரியமாக எப்படி நுழைவேன் என்று எல்லோரிடமும் நியாயம் கேட்பேன்.."

அவன் சொல்லிக் கொண்டே போனதில் ரம்ய மாலினிக்கு மயக்கம் வந்து விட்டது..

அத்தியாயம் 271

"நந்தினி.. நான் என்ன செய்வேன்..? இங்கே உன் ஃபேமிலி பத்மானந்தன் மாமாவின் ஃபேமிலி.. எங்க ரிலேட்டிவ்ஸ் ஃபேமிலின்னு நிறையப் பேர் இருக்காங்களே.. விடிந்தால் உனக்கும் அண்ணனுக்கும் எங்கேஜ்மெண்ட் நடக்கப் போகுது.. கேரளாவில் இருக்கிற அத்தனை ரிலேட்டிவ்ஸும் அண்ணனோட பிரண்ட்ஸும் வந்து இறங்கிருவாங்க.. எல்லோருக்கும் இவன் சொன்ன பொய் பரவிருச்சுன்னா என்ன ஆகும்..? நான் செத்து விடுவேன் நந்தினி.." ரம்ய மாலினி பதறித் துடித்தாள்..

"உஷ்ஷ்ஷ்.." ஆள்காட்டி விரலை வாயில் வைத்து அவளை அடக்கினான் பிரதீபன்.

"ஆரானு இவன்..? வளர அப்பாடக்கரோ.. ஞான் உண்டு ரம்யா.. நிங்களுக்கும் நிங்க ஃபேமிலிக்கும் களங்கம் உண்டாக ஞான் விடமாட்டேனல்லோ.. ரம்யா என்னை நம்பனும்.. ஈ அயோக்கியன் எந்து பறஞ் ..? சொல்லுவேனெண்டுதான பறஞ் ..? இவனச் சொல்ல ஆர் விடுவதாம்.."

பிரதீபன் என்ன செய்யப் போகிறான் என்று அபராஜிதன் கணிப்பதற்கள் கீழே கிடந்த மயக்க மருந்து கைக்குட்டையை எடுத்து அவன் முகத்தில் அழுத்தி விட்டான் அவன்.. அபராஜிதன் மூச்சை அடக்கினாலும் அடக்கி விடுவான் என்று கைக்குட்டையை நகர்த்தாமல் வைத்திருந்ததில் அவனது தலை தொய்ந்து விட்டது.. அவனை இழுத்துத் தரையில் கிடத்திய பிரதீபன் கருமை நிறக் கம்பளியில் அவனை உருட்டி விட்டான்.. கம்பளிக்குள் சுருண்டு கிடந்த அபராஜிதனை சப்தமில்லாமல் வெளியில் இழுத்துச் சென்றான்.. போகும் போது கதவை இறுக்கமாக மூடித் தாழிட்டுக் கொள்ளும்படி பெண்களுக்கு அறிவுறுத்த அவன் மறக்கவில்லை..

“இவனை என்ன செய்யப் போகிறீங்க..?” நந்தினி பயத்துடன் கேட்டாள்..

“டோன்ட் வொர்ரி சிஸ்டர்.. இவனைக் கொன்று விடமாட்டோமல்லோ.. இவனை எந்து செய்யனும், எங்ஙன வைக்கனுமெண்டு ஞானும் என்ட அச்சனும் டிசைட் பண்ணுவோமல்ல.. ஈ மனுஷன் ஒரு இழிபிறவி.. ரவியின் விவாகம் முடியும் வரை இவன் எங்களின் காவலில் இருப்பான்.. அதிக்குப் பின்னாலே எந்து செய்யனுமெண்டு அனைவரும் ஆலோசிக்கலாம்.. அதிவரை இதி பத்தி

ரம்யாவும் நந்தினியும் ஆலோசிக்க வேணாம்.. மறந்து விடனுமல்லோ.. கேட்டே..”

பிரதீபன் போய் விட்டான்.. கதவை இறுக்கி மூடித் தாழிட்டப் பெண்கள் இருவரும் நடுக்கத்துடன் தூங்காமல் இரவைக் கழித்தார்கள்.. புலரியில் (காலையில்) அவர்களின் அறைக்கதவு தட்டப்பட்டது..

“சாய்..” என்றபடி உள்ளே வந்தாள் வேலைக்காரப் பெண்..

டீயைக் குடித்து விட்டுக் குளித்துத் தயாரானார்கள்.. காலை உணவு முடிந்ததுமே நிச்சயதார்த்த விழா ஆரம்பித்து விடுமென்பதால் அரண்மனை முழுவதும் விருந்தினர் கூட்டம் நிரம்பியிருந்தது...

காலை விருந்து ஆரம்பமாகியிருந்ததில் பத்மானந்தனின் மனைவி நந்தினியையும், ரம்ய மாலினியையும் நந்தினியின் குடும்பத்தாருடன் அமர வைத்து விருந்து பரிமாறச் செய்தாள்.. தஞ்சையிலிருந்து வந்திருந்த உறவினர்களை மேகநாதனும் வெந்நிலாவும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருக்க நந்தினிக்கான பிரத்யேக அலங்காரம் ஆரம்பமாகி விட்டது.. அருள்மொழிவர்மன் சொல்லிக் காட்டி விட்டதால் நந்தினிக்கு

அளிக்க வேண்டிய அத்தனை வைர நகைகளையும் சொத்துப் பத்திரங்களையும் நெருங்கிய உறவினர் மூலம் மேகநாதன் வரவழைத்து விட்டார்..

தங்கத் தட்டுக்களிலும், வெள்ளித் தட்டுக்களிலும் இவர் அளிக்கும் சீர்வரிசைகள் பரத்தப் பட்டிருக்க, எதிர் சீர் வரிசையாக ரவிவர்மனின் அரண்மனையிலிருந்து வந்திருந்த தங்கத் தட்டுக்களில் வைர ஆபரணங்கள் மிளிர்ந்தன..

இரு தரப்பினரும் நந்தினிக்காக அளித்த நகைகளும் சீர்வரிசைகளும் பலகோடிகளைத் தாண்டியிருந்ததில் வந்திருந்த விருந்தினர்களும் நண்பர்களும் பிரமித்துப் போய் விட்டார்கள்..

“வயநாட்டு ரவிச்சந்திரன் விவாகம் கழிக்கப் போகும் பெண் குட்டி தஞ்சாவூர் ராஜவம்சமாமல்லோ.. ஆ பெண் குட்டியோட அச்சனும் அம்மையும் வளர செல்வந்தரா மல்லோ.. சொந்தர்யமான சுந்தரியல்லோ ஈ நந்தினி.. ரவிசந்திரனுக்குப் பொருத்தமான பார்யாள்.. கேட்டே..”

கேரளத்து மக்களின் மதிப்பான பேச்சில் நிம்மதியடைந்தார் மேகநாதன்.. அவரது மகளுக்கான சீர்வரிசைகளை அனைவரும் அறியக் குறைவில்லாமல்

செய்து விட்டார்.. இனி எவரும் அவரது மகளை ஒரு சொல் சொல்லி விட முடியாது.. பெண்ணைப் பெற்ற தகப்பனுக்கு எது வேண்டும்..? இந்த மனநிறைவுதானே வேண்டும்..

அருள்மொழிவர்மனுக்கும் யாழினிக்கும் முகங்களில் ஈயாடவில்லை.. அவந்திகாவுக்கும் அஜந்தாவுக்கும் கடுமையான காய்ச்சல் என்பதால் நிச்சயதார்த்த விழாவில் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க இயலவில்லை என்று சொன்னார்கள்.. யோகானந்தனையும் அபராஜிதனையும் எவரும் விசாரிக்கவில்லை.. இவர்களும் அவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை..

தரங்கிணியின் குடும்பத்தில் அவளைத் தவிர மற்றவர்கள் வந்திருந்தார்கள்.. தனபாலன் ரவிச்சந்திரனின் நெருக்கமான நண்பன் அவன் என்று அனைவரின் முன்னிலையிலும் காட்டிக் கொள்வதிலேயே குறியாக இருந்தான்.. ரவிச்சந்திரனின் பக்கத்திலேயே ஒட்டுப் புல்லைப் போல ஒட்டிக் கொண்டு அலைந்தான்.. வலிய, வலிய பேசினான்.. மறந்தும் ரம்ய மாலினி இருக்கும் திசைப்பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை..

தனபாலனைப் பெற்றவர்களோ ரவவிர்மனுடனும் வீணவுடனும் அளவளாவுவதைப் போல நடித்தபடி அவர்களுக்கு இவர்கள் நெருக்கமானவர்கள் என்று மற்ற உறவினர்கள் முன்னால் காட்டிக் கொண்டார்கள்.. ரம்ய மாலினியிடம் பிரியமாக ஓர் வார்த்தை பேசவில்லை.. நந்தினி நிச்சயதார்த்த விழாவின் கதாநாயகியாக அமர்ந்திருக்க ரம்ய மாலினி மனதுக்குள் தனிமையாக உணர்ந்தாள்.. முந்தைய தின இரவின் அதிர்ச்சிகளில் இருந்து அவள் இன்னமும் மீளவில்லை.. நந்தினியின் மனதைத் திருப்ப நிச்சயதார்த்த விழா இருக்கிறது.. ரம்ய மாலினிக்கு என்ன இருக்கிறது..? சோகத்துடன் பெருமூச்சு விட்டவளை ஞான் இருக்கிறேன் என்பதைப் போல பிரதீபனின் மிருதுவான குரல் அழைத்தது..

“ரம்யா..”

வேகமாகத் திரும்பினாள்.. பிரதீபன் கையில் ஜுஸ் தம்ளரோடு நின்றிருந்தான்.. கனிவான அவனது பார்வை பயப்படாதே என்று அவள் மனதுக்கு தைரியம் கொடுத்தது.

“புலரியில நிங்க ஊன் கழிக்க வந்து.. ரம்யா தட்டில இருந்த பட்ஷணம் அங்ஙனவே இருந்ததல்லோ..”

“பசியில்லை..”

“எங்ஙன பசியில்லாம போகுமாம்..? ரம்யாவின் மனசில சஞ்சலம் வந்து.. அதானல நிங்க ஊர் கழிக்காம போயி..”

“அப்படியெல்லாம் இல்லை..”

“எந்துவோ.. ஞான் அறியேன்.. ஒற்று மட்டும் ஞான் அறியும்..”

“என்ன..?”

“ரம்யாவிட வதனம் வாடிப் போயி.. ஈ ஜுஸை ரம்யா குடிக்கனும்.. இதி ரம்யாவுக்காக அல்ல.. எனிக்காக..”

ரம்ய மாலினியின் விழிகளில் கண்ணீர் நிரம்பி விட்டது.. இரவில் அவளது மானத்தைக் காப்பாற்றியவன் அவன்.. பகல் பொழுதில் அதைப் பற்றிய பெருமை எதையும் பேசாமல் அவளது பசியாற்ற வந்திருக்கிறான்..

‘இவன் எனக்குத் தாயோ..?’ அவளைப் பெற்றவர்களும், உடன் பிறந்த அண்ணனும், உற்ற தோழியும் நிச்சயதார்த்த விழாவில் மூழ்கியிருக்க அவன் மட்டும் அவளை மட்டும் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்றால் அவனது பிரியம் எத்தகையானதாக இருக்கும்..

“நானும் எனக்காக இதைக் குடிக்கலை.. உங்களுக்காக குடிக்கிறேன்..”

ரம்யா ஜூஸை வாங்கிக் கொண்டதில் முகம் மலர்ந்து போனான் பிரதீபன்.. இரவில் துப்பாக்கியுடன் நின்றிருந்த அபராஜிதனை ஒற்றைக்கு ஒற்றையாய் எதிர்கொண்டு அவன் புரட்டியெடுத்து மயங்க வைத்துக் கம்பளியில் சுருட்டி இழுத்துக் கொண்டு போனது ஞாபகத்துக்கு வந்தது..

“அவன் என்ன ஆனான்..?”

“எவன்..?”

“அந்த நாய்.. அபராஜிதன்..”

“அதி பத்தி ரம்யா கவலை கொள்ள வேணாம் கேட்டே.. ஆ பட்டி (நாய்) எண்ட கஸ்டடியில இருக்கிறானல்லோ.. ஞான் அவனை டீல் பண்ணிக்குவேனல்லோ..”

நடைபெற்றுக் கொண்டிருந்த திருமண நிச்சயதார்த்த விழாவில் அவர்கள் இருவரும் தனித்து நின்று சன்னக்குரலில் பேசிக் கொண்டிருந்ததை எவரும் கவனிக்கவில்லை..

ரம்யா சொட்டு நீர் பாசனம் போல சொட்டுச் சொட்டாக ஜூஸை உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.. ஜூஸ் தீரும்வரைதான்

அவன் அவளருகில் இருப்பான்.. அவள் குடித்து முடித்தவுடன் விலகிப் போய் விடுவான் என்று மனதுக்குள் தோன்றியதில் அந்தச் சொட்டுக்களும் தொண்டைக் குழியைத் தாண்டி உள்ளே இறங்க மறுத்தது.

"ரம்யாவுக்கு பயம் அதிகமோ..?"

மென்மையான அவன் குரலில் உடல் தூக்கிப் போட அவள் நிமிர்ந்ததில்..

"ஓ..!ஓ..! பதட்டம் கொள்ள வேணாம்.. எந்துக்கு இத்தினி பயம்..? ஞான் உண்டென்று பறஞ்ஞேனல்லோ.." என்று கனிவாக கடிந்து பேசினான்..

அவள் மீதான அவனது அக்கறையும் உரிமையான அதட்டலும் அவளது பயத்தை விரட்டிப் பாதுகாப்பு உணர்வைத் தந்தன..

"நீங்க மட்டும் அந்த நேரத்துக்கு அங்கே வராமலிருந்தால் என்ன ஆகியிருக்கும்..?" அவளது குரல் தேம்பியது..

இயல்பாக நகர்வதைப் போல அவன் அவளருகில் நெருங்கி நின்றது அவளுக்குப் பிடித்திருந்தது.. அவனது அருகாமை ஆயிரம் யானைகளின் பலத்தைத் தந்தது..

"ஞான் வராமல் எங்கு போயி..? தரவாடில வேற்று மனுஷங்க நுழைய முடியாம காவல் போட்டு.. பட்ஷே.. ஈ.. பட்டி (நாய்) எங்கட பெந்து போல வேசமிட்டு உள்ளே புகுந்து.. ஆ அபராஜிதனுக்கு ஒந்நு தெரியாதல்லோ.. நிங்களும், நந்தினியும் இருக்கும் ரூமுக்குக் காவல் ஞான்தானல்லோ.. ராவில ஞான் உறங்க மாட்டேனல்லோ.. நிங்கட ரூம் வாசலில ரா முழுக்க உலாத்திக் கொண்டிருப்பேனல்லோ.. ஓர்மை (ஞாபகம்) கொள்ளனும் ரம்யா.. எண்ட உயிருக்கும் மேலா நிங்களை ஞான் விஜாரம் கொண்டு.."

ரம்யா பேச முடியாமல் தவித்துப் போனாள்.. அன்புக்காக ஏங்கிய அந்த அரண்மனைக்கிளியின் அந்தராம்தாவில் சாந்தி நிரம்பியது.. ஆழம் காண இயலாத ஆழ்கடலின் தன்மை கொண்ட பெண் மனது அவனிடம் அடைக்கலமானது.. அவளது நீண்ட நயனங்களில் விரிந்த பிரமிப்பில் தன்னை இழந்த பிரதீபன் அவள் முகத்தையே ஆழ்ந்து பார்த்தான்..

“இன்னல (நேற்று) ராவில நிங்கட ரூமில லைட் எரிஞ்சதும் ஞான் கதவருகில் வந்து நின்னு எந்து நடக்குதெண்டு அவதாணிச்சு.. அபராஜிதன் நிங்களிடம் சம்சாரிச்சத ஞான் கேட்டு.. வாதில (கதவை) உடைக்க விஜாரம் (நினைவு) கொண்டப்ப வாதில் அசைஞ்சு.. நிங்க வாதில திறந்ததை அறிஞ் .. அறைக்குள்ள வந்து அபராஜிதன இழுத்துப் போயி..”

“நடந்ததெல்லாம் கனவு போல இருக்கு..”

“கனவோ, நனவோ.. ஞான் நிங்க அரிசில் (பக்கத்தில்) இருக்கிறப்ப துன்பம் நேராதல்லோ.. ரம்யாவுக்கு பயம் வேண்டாம்.. ஞான் எப்போதும் ரம்யாவின் அரிசில் இருக்குமல்லோ..”

‘அப்படியா.. நீ என்னை விட்டு அகலாமல் என் பக்கத்திலேயே இருப்பாயா..? எப்படி..?’ ரம்யாவின் நயனங்கள் கேட்டன..

‘அது அப்படித்தான்..!’ அவனது இமைகள் மூடித் திறந்து பதில் அளித்தன.. தேவாலயத்தின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களில் ஒன்று ரம்யாவின் நினைவுக்கு வந்தது..

‘நான் உன்னை தனித்து விடுவதில்லை..

விட்டு விலகுவதுமில்லை..’

என்ன ஒரு அற்புதமான வாசகம்.. இவனும் அதைப்போல சொல்கிறானே..

‘நீயென்ன தேவனா..? என்னைக் காக்க வந்த ரட்சகனா..’

அகிலமெல்லாம் அளந்த அந்தக் கண்ணனின் தங்கை சுபத்திரை அர்ஜினனின் மீது ஏன் காதல் கொண்டாள்..? கண்ணனின் தங்கைக்கு காண்டீபனை ஏன் பிடித்தது..? அண்ணனளவு வீரம் கொண்டவனை அவளது மனம் தேடியிருக்க வேண்டும்.. அதனால்தான் கண்ணனின் தோழனிடம் அவள் தன் மனதைப் பறி கொடுத்தாள்.. கண்ணன் கடவுள்.. அர்ஜுனன் மானிடன்.. கடவுள் அளவுக்கு அவனிடம் சக்தி இல்லாவிடினும் எதிரியை எதிர்த்து நின்று பந்தாடும் வீரம் இருந்தது.. வில்லுக்கு விஜயன் என்ற வித்தை இருந்தது..

ஆதலினால் சுபத்திரை அர்ஜுனனின் மீது காதல் கொண்டாள்..

ரம்ய மாலினியும் சுபத்திரைதான்.. அவளுடைய அண்ணனும் கண்ணன்தான்.. உலகம் முழுவதும் அவன் புகழ் பரவியிருந்தது.. தீரம் மிக்கவனின் தங்கை அவள்.. அவளது மனம் அண்ணனின் வீரத்தையும், தீரத்தையும் கொண்ட ஒருவனைக் காலம் முழுவதும் தேடிக் கொண்டிருந்தது... அப்படிப்பட்டவனாக தனபாலன் இருக்கக் கூடும் என்று அவள் நினைத்தாள்.. அதனால் அவள் மனதில் தனபாலனின் மீதான சிறு ஈர்ப்பு உணர்வு இருந்தது.. அதை தவிடு பொடியாக்கும் விதத்தில் முதல்நாள் இரவில் பெருத்த சாகசம் ஒன்றைச் செய்து எவரும் அறியாத வண்ணம் அவளையும் நந்தினியையும் காத்து விட்டான் பிரதீபன்.. ரவிச்சந்திரனின் வேகத்தையும் கோபத்தையும் அவனிடம் கண்டாள் ரம்ய மாலினி.. அவள் தேடிக் கொண்டிருந்த தீரன் அவன்தான் என்று அவளது மனம் சொல்லியது.. அபராஜிதனை அடித்துத் துவைக்கும் ஒருவன் அவளுக்குக் கணவனாக வர வேண்டும் என்று தவமிருந்தாள்.. அவளது கண் முன் அபராஜிதன் பிரதீபனால் அடித்து நொறுக்கப்பட்டு ரத்தம் சிந்தி தரதரவென இழுத்துச் செல்லப்பட்டான்.. சின்னஞ்சிறு பருவத்திலிருந்து அபராஜிதனின் மீது வெறுப்பும்,

கோபமும் கொண்டிருந்த ரம்ய மாலினிக்கு அது பெருத்த சந்தோஷத்தை அளித்திருந்தது..

“எந்துக்கு ரம்யா மௌனம் சாதிச்சு..? ரம்யா எந்தா பேசா மடந்தையோ..?” பிரதீபன் சிரித்தான்..

அவள் வெட்கச் சிரிப்புடன் திரும்பினாள்.. உத்ராவும் வினித்தும் வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும்..

“வாங்க.. வாங்க.. இவ்வளவு லேட்டா வர்றீங்களே.. நந்தினி உங்களை கொத்துப் பரோட்டா போட்டு விட மாட்டாளோ..?” என்று கலகலத்தாள்..

“ரம்யாவா இது.. காமா இருப்பீங்க.. இப்பக் கலகல பிரியாவா ரிஸீவ் பண்றீங்க.. இந்த நேற்று இல்லாத மாற்றம் என்னதுங்கிறது எப்படிங்க வந்தது..?” ஆச்சரியத்துடன் கேட்டாள் உத்ரா..

“நேத்து நைட் வந்ததுங்க..”

ரம்ய மாலினி ஓரக் கண்ணால் பிரதீபனைப் பார்க்க அவனது விழிகளில் மின்னல் வந்தது..

“கிளம்பும்போது வினித்தின் புராஜெக்ட் முடியலைன்னு லீவை டிலே பண்ணிட்டாங்க.. ஒருவழியா புராஜெக்டை

முடிச்சுக் கொடுத்து லீவை சேங்ஷன் பண்ண வைச்சு ஓடியே வர்றோம்..”

“இந்தக் கதையையெல்லாம் நான் நம்புவேன்.. நந்தினி நம்புவாளா..?”

“அவ எதைத்தான் நம்பினா..? அதுசரி.. நந்தினி உங்க வீட்டில கெஸ்ட்டா இருந்த வரைக்கும் வாங்க போங்கன்னு மரியாதை தூள் பறந்தது.. இப்ப அண்ணியாகப் போகிறா.. அவ, இவன்னு பேச்சு மாறுது.. என்ன..? வயநாட்டில எல்லாமே உல்டாதானா..?”

“ஆமாங்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?”

“ஒண்ணுமே இல்லைங்கறேன்.. அடேங்கப்பா.. சாதுக்கு சந்தோஷம் வந்தா எப்படியிருக்கும்ன்னு இப்பத்தான் பார்க்கிறேன்..”

உத்ரா உரிமையுடன் பேசிப் பழகியதில் பிரதீபன் வினித்திடம் கை நீட்டி..

“ஹாய்.. ஐ ஆம் பிரதீபன்.. ரவிச்சந்திரனிட அம்மாவன் மோன்..” என்றான்..

“அம்மாவன் மோனா..?” உத்ரா ரம்ய மாலினியைப் பார்த்தாள்..

“மாமா மகன்னு சொல்கிறார்..” என்றாள் ரம்யா..

“ஹை.. உன் அண்ணனுக்கு மாமாமகன்னா உனக்கும் மாமா மகன் தானே..?”

“அப்படித்தான் சொல்வாங்கன்னு நினைக்கிறேன்.. சித்தப்பா மகன்னு சொல்ல மாட்டாங்கதானே..” ரம்ய மாலினி சிரிக்காமல் சொன்னதில்..

“தேறிட்டிங்க ரம்யா..” என்று வாய் பொத்திச் சிரித்தாள் உத்ரா.. உத்ராவையும், வினித்தையும் நந்தினியிடம் அழைத்துக் கொண்டு போகும் வேலை வந்ததில் லேசான தலையசைவுடன் பிரதீபனிடம் சொல்லிக் கொண்டு நகர மனமில்லாமல் நகர்ந்தாள் ரம்ய மாலினி..

நந்தினியிடம் உத்ராவையும் வினித்தையும் நிறுத்திவிட்டுத் திரும்பியவளின் கண்கள் கூட்டத்திலே பிரதீபனைத் தேடின.. அவன் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டு மாடிப்படியருகே தள்ளித் தனித்து நின்று செல்ஃபோனை காதுக்குக் கொடுத்து யாருடனோ செல்ஃபோனில் பேசுவதைப் போலப் பாவனை செய்தபடி ரம்ய மாலினியைப் பார்த்தான்..

அவள் அவனைத் தேடுவதைப் புரிந்து கொண்டு அவளுக்காக அவன் தனித்து நின்றதில் ரம்ய மாலினியின் விழிகள் பிரகாசித்தன.. அவளது விழிகளுக்கு அவன் மட்டுமே தெரிந்தன.. அவனும் அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தான்..

இதம் கொடுக்கும் இன்பமான உணர்வு இது.. கூட்டத்தின் மத்தியிலும் தனித்து நிறுத்தி விடும்.. ஒருவரையொருவர் தேட வைக்கும் சொந்தம் இது..

அத்தியாயம் 272

நிச்சயதார்த்த விழா இனிதே நடந்து முடிந்து விட்டது.. விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தவர்களின் உடனடியாக திரும்ப வேண்டியவர்கள் எல்லாம் கிளம்பி விட நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் மட்டுமே அங்கிருந்தார்கள்.. அவர்களும் ஓய்வெடுக்க என்று அவரவர்க்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைகளுக்குச் சென்று விட, உத்ரா வினித்தை ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு நந்தினியிடம் வந்தாள்.. இருவரும் மாடி பால்கனியில் இருந்த வேலைப்பாடுகள் மிகுந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்..

“என்னையே சந்தேகப் பட்டுட்டியேடி..” மனத்தாங்கலுடன் சொன்னாள் உத்ரா..

“என்னைச் சுற்றி ஏதோ நடக்குது.. கண்ணுக்குத் தெரியாத மாயவலையில் நான் சிக்கியிருக்கேன்று தோணிருச்சு உத்ரா.. அது உனக்கும் தெரியும்ன்னு நினைச்சுட்டேன்டி.. அந்த கோபத்தில் பேசிட்டேன்.. ஸாரி..”

“இல்லை நந்தினி.. எனக்கும் வினித்துக்கும் எதுவும் தெரியாது.. பட்.. எங்களை வைத்துத்தான் ரவி சார் மாஸ்டர்

பிளானையே போட்டிருக்கார்.. அது தெரியாம அவர்கூட உன்னை அனுப்பி வைச்சோம் பாரேன்.. அவர் கெட்டிக்காரர்டி.. திட்டம் போட்டு காய் நகர்த்தியிருக்கார்.. ஸ்கெட்ச் போட்டு உன்னை மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில கடத்திக்கிட்டுப் போயிருக்கார்.. பட்.. இத்தனை விவரமும் இந்த நந்து பொடியனுக்குத்தான்.. அவருக்குத்தான் அது போதுமே.. என்னிடமிருந்து ஆரம்பித்து வினித்திடம் போய் அவரோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டுக்கு ஃபிரண்டுன்னு ஒரு லிங்கைக் கண்டுபிடிச்சு வினித்தையே அவரிடம் நந்தினிக்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்கும்படி கேட்க வைச்சிட்டாரே.. இந்த நந்துப் பொடியன் எதுவும் தெரியாததைப் போல என்னிடம் அந்த வயநாட்டு ரவிச்சந்திரன் நல்லவரா கெட்டவரான்னு விசாரிக்கிறான்.. உன்னையும் என்னையும் இந்தப் பொடிப்பயல் முட்டாளாக்கிட்டாண்டி..”

“அவனா பொடியன்..? செம விவரம்டி அவன்..” வாடைக்காற்று போன்ற பனிக்காற்று உடல் தழுவியதில்..

“ஹ..” என்று மெய்சிலிர்த்தாள் உத்ரா..

“கேரளத்து கிளைமேட்டே சூப்பர் நந்தினி.. நம்ம ஊர் வெப்பமாவே இருக்கு.. நீ கொடுத்து வைச்சவ..”

நந்தினிக்கு பெருமையாக இருந்தது.. இனி இந்த கேரள தேசம்தான் அவளது தேசம்.. அவளின் புகுந்த வீடு என்ற சொந்தத்துடன் பால்கனியிலிருந்து பார்த்தாள்.. மனோ ரம்யமான கேரளத்தின் இயற்கையழகு அவளது மனதை மயக்கியது.. மாசில்லாத சுத்தமான மலைக்காற்று.. பச்சைக் கம்பளம் போர்த்தியதைப் போன்ற செடி கொடிகள், கொடி வீடுகள்.. எங்கு பார்த்தாலும் கொட்டும் அருவிகள்.. நீருற்றுகள்..

‘இங்கு வாழ கொடுத்து வைத்திருக்க வேண்டும்தான்..’

தோட்டத்தைச் சுற்றிப் பார்வையைச் சுழற்றியவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. அங்கே தனபாலன் அபராஜிதனை அழைத்து வந்த பெரியவரிடம் மும்முரமாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தான்..

‘இந்தக் கிழவன்கூட இவனுக்கென்ன பேச்சு..? இன்னும் இந்தக் கிழவன் இங்கேதான் இருக்கிறானா..? துரத்தி விடலையா..?’

“நிச்சயதார்த்தம் முடிஞ்சவுடனே கேரளத்து தம்புராட்டியாவே ஆகிட்டயே.. இம்புட்டு சீரியஸா திங்க்

பண்ற..? நீயெல்லாம் இவ்வளவு சீரியஸா திங்க் பண்ணினா உலகம் தாங்குமாடி.. முதலில் இந்த வயநாடு தாங்குமா..?”

உத்ரா நந்தினியைக் கேலி செய்து கொண்டிருந்த போது..

“உத்ரா..” என்ற வினித்தின் குரல் கேட்டது..

“இதுக்குத்தான் வாயிருக்கிறது என்கிறதுக்காக மத்தவங்களை வாரிக்கிட்டே இருக்கக் கூடாது என்கிறது.. இதோ உன் பாஸ் அழைச்சிட்டார்.. ஓடு, ஓடு..”

விளையாட்டைப் போல உத்ராவை அனுப்பி வைத்துவிட்டு பிரதீபனைப் பார்த்துப் பேச வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுந்தாள் நந்தினி..

“நந்தினி..”

ரம்ய மாலினி வந்தாள்.. நந்தினி தயங்கினாள்.. ரம்ய மாலினியின் மனதில் தனபாலனைக் குறித்த இதமான ஓர் எண்ணம் இருக்கிறது.. அப்படியிருக்க தனபாலன் அபராஜிதனை அழைத்து வந்த கிழவனுடன் இணக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறான் என்பதை பிரதீபனிடம் சொல்ல வேண்டுமா என்ன..?

“எங்கேயிருந்த ரம்யா..? உன்னைத் தேடினேன்..”

“எதுக்காம்..? என் அண்ணன் எங்கேன்னு கேட்கவா..?”

“ஊஹூம்.. தனபால் அண்ணனிடம் உன்னைப் பற்றி நான் பேசவான்னு கேட்கிறதுக்குத்தான்.. தனபால் இன்னும் இங்கேதான் இருக்கிறார்..”

“பார்த்தேன்.. பார்த்தேன்.. தெளிவாக சொல்கிறதாக இருந்தால் கேட்டேன்னுதான் சொல்லனும்... அந்த அபராஜிதனை அழைத்துக்கிட்டு வந்த கிழவன் கூட இவன் உறவாடிக்கிட்டு இருக்கிறான்..”

“இவனா..?”

“அவனுக்கு என்ன மரியாதை வேண்டிக்கிடக்கு..? அங்கே பார்..”

ரம்ய மாலினி சுட்டிக் காட்டிய திசையில் என்னவோ அப்போதுதான் தனபாலனையும் அந்தக் கிழவனையும் புதிதாக பார்ப்பதைப் போல பார்த்து வைத்தாள் நந்தினி..

“பேசிக்கிட்டுத்தானே இருக்காங்க..? சொந்தக்காரங்க என்பதினால நலம் விசாரிப்பாரா இருக்கும்.. எதையும் காது

கொடுத்துக் கேட்காம தப்பா ஒரு முடிவுக்கு வந்து விடக் கூடாது ரம்யா..”

“காது கொடுத்துக் கேட்டு விட்டுத்தான் வந்திருக்கிறேன் நந்தினி..” வெறுப்புடன் சொன்னாள் ரம்யா..

“என்ன கேட்ட..?”

“தனபாலனுக்கு அபராஜிதனை பிரதீபன் அடைத்து வைத்திருக்கிறார்ன்னு தெரிந்திருக்கு நந்தினி.. அபராஜிதனுக்கு ஆதரவா அந்தக் கிழவரிடம் பேசிக்கிட்டு இருக்கான்.. பிரதீபன் செய்தது தப்புங்கிறான்..”

நந்தினிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. ரம்யாவின் கண்களில் பொங்கிய கண்ணீர் அவளின் மனதில் வலியை இனம் காட்டிக் கொடுத்தது.. தாய்மைப் பெருக்குடன் ரம்யாவை அணுகித் தன் தோளில் சாய்த்துக் கொண்டாள் நந்தினி.. ரம்யாவின் மனது படும் பாட்டை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. தரங்கிணியும், தனபாலனும் அவந்திகாவின் குடும்பத்திற்கு எதிரானவர்கள் என்ற ஒன்றுதான் அவர்கள் மீது ரம்யாவை பாசம் வைக்கச் செய்தது.. இன்று அந்த அடிப்படையே ஆட்டம் கண்டு விட்டது..

“அழுகக்கூடாது ரம்யா.. தனபாலனின் அம்மாவும் அவந்திகா பொரியம்மாவும் ஒன்றுவிட்ட அக்கா, தங்கைகள் இல்லையா.. அந்தப் பாசத்தில பேசியிருக்கலாம்.. விடு..”

“அப்படிப் பார்த்தால் பிரதீபனும் அபராஜிதனும் கூடத்தான் ஒன்றுவிட்ட அண்ணன் தம்பிகள்.. தனபாலனை விட பிரதீபன்தான் நெருங்கிய சொந்தம்.. அபராஜிதனின் சொந்தப் பெரியப்பாவின் மகன்.. இவர் நியாயத்தின் பக்கம் நிற்கவில்லையா..? அவன் அயோக்கியன்னு அடக்கி வைக்கலையா..?”

ரம்ய மாலினி குமுறினாள்.. அழட்டும் என்று விட்டு விட்டாள் நந்தினி.. ஆறுதலாக ரம்யாவை அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்தபடி பேசாமல் இருந்தாள்.. ரம்ய மாலினி மனிதர்களின் குணங்களை இனம் கண்டிருக்கிறாள்.. தனபாலன் அவள் நினைத்ததைப் போல உத்தமனல்ல என்று நந்தினியால் எடுத்துச் சொல்லிப் புரிய வைத்திருக்க முடியாது.. நந்தினிக்குத் தரங்கிணியைப் பிடிக்காது என்பதினால் ரம்ய மாலினியை தனபாலனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விடாமல் தடுக்கிறாள் என்று ரம்ய மாலினி நினைத்தாலும் நினைத்து விடலாம்.. அப்படி அவள் நினைத்து விட்டால் அதை நந்தினியால் தாங்கிக் கொள்ள இயலாது..

அழுது முடித்து விலகிய ரம்ய மாலினியின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தாலும் முகம் தெளிவாக இருந்தது.. தோட்டத்தைப் பார்த்தாள்..

“இன்னும் உறவாடிக்கிட்டுத்தான் இருக்கிறாங்க..” முகம் சுளித்தாள்..

“உறவாடினால் உறவாடட்டும்.. நமக்கென்ன அதைப்பற்றி..” நந்தினி தேறுதலாகப் பேசினாள்..

“அங்ஙன பறயனும் நந்தினி.. ஆரு ஆரோட சம்சாரிச்சா நமிக்கு எந்தா..? ரம்யாவுக்கு இதி புரியனுமல்லோ..” என்றபடி அங்கு பிரசன்னமானான் பிரதீபன்..

“நான் சொன்னா எங்கே இவ கேட்கிறா..? சொல்கிறவங்க சொன்னாத்தான் கேட்டுக்குவா..”

நந்தினி ரவிச்சந்திரனின் நினைவில் அவன் சொன்னால்தான் அவனது தங்கை கேட்டுக் கொள்வாள் என்ற அர்த்தத்தில் சொன்னாள்.. ரம்யாவோ நந்தினி பிரதீபனைத்தான் குறிப்பிட்டுச் சொல்கிறாள் என்ற நினைவில் வெட்கப் புன்னகை பூத்தபடி பிரதீபனைப் பார்த்தாள்.. அவனோ நந்தினி அருகில் இருப்பதை மறந்து ரம்யாவைத் தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான்.

‘அட..! கதை இப்படி டெர்ன் ஆகிருச்சா.. பட்ஷே இதுவும் நல்லாத்தான் இருக்கு..’ நந்தினி சந்தோஷப்பட்டுப் போனாள்.. அபராஜிதனால் அந்த இரு பெண்களுக்கும் எந்த விதமான அபவாரதமும் நேர்ந்து விடாமல் காத்து நின்ற அந்தப் பராக்கிரமசாலியை தமையனைப் போல நேசித்தாள் நந்தினி.. அவனே ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொண்டு நந்தினிக்குத் தமையனாக மாறி விட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்..? இனிது.. இனிது என்பது இதுதானா..?

“இந்தக் கிழவன் இன்னும் இங்கேயிருந்து போகலையா அண்ணா..?”

நந்தினி ‘அண்ணா’ என்று அழைத்ததில் “நந்தினி என்ன சேட்டனென்று விளிச்சு..” என்று மகிழ்ந்து போனான் பிரதீபன்..

அது ரம்ய மாலினிக்கும் பிடித்தமானதாக இருந்ததில் அவள் நந்தினியை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.. அதைக் கள்ளூரும் போதையோடு பிரதீபன் ஆழ்ந்து பார்த்ததில் வெட்கப்பட்டாள்..

“ஆ கிழவனுக்கு அபராஜிதன் செய்ய உத்தேசித்திருந்த காரியம் தெரியாதல்லோ.. எண்ட அச்சனோட சேட்டனிட தரவாடில ஒரு ரா தங்கி ஊன் கழிச்சுப் போகனுமெண்டு ஆ அபராஜிதன் பறஞ்ஞதில ஈ மனுஷன் அவனை மாறு வேஷமிட்டு விளிச்சுட்டு வந்து.. அதி எனிக்குத் தெரிந்து அபராஜிதன ஞான் தள்ளு (அடி) அளிச்சுத் துரத்திட்டேனெண்டு ஈ மனுஷன் விஜாரம் கொண்டு.. கேட்டே..”

“இல்லைன்னு நீங்க சொல்லியிருக்கலாமே.. அவன் இந்தப் பெரியவரை ஏமாற்றி இந்த பங்களாவுக்குள் நுழைந்திருக்கிறான்.. நைட் டயத்தில எங்க ரூமில ஒளிஞ்சிருந்தான்.. மயக்க மருந்தில் நனைத்த கர்சீப்பை வைத்திருந்தான்னு சொல்ல வேண்டியதுதானே..”

“ஊஹூம்..”

திடமான குரலில் அதை மறுத்தான் பிரதீபன்..

“அதி பத்தி எவருக்குமே தெரியாதல்லோ.. ஞானும், அச்சனும், ரவிச்சந்திரனும் மட்டுமே ராவில் நிங்கட அறையில அபராஜிதன் நுழைஞ்சு எண்டு அறிஞ் .. மற்றவர்க்கு அதி பத்தி பறயலைகேட்டே.. இப்ப மட்டுமல்ல.. எப்போதுமே இதி பத்தி

நமக்கு மட்டுமே தெரியனும்.. மற்றவரிடம் பறயாணாம்.. கேட்டே..”

சொந்தச் சித்தப்பா மகன் தாய்மாமன் மகனிடம் அடைக்கலமாக அண்டி வாழ்கிறான்.. ரத்த சொந்தமுள்ள பெரியப்பாவின் வீட்டில் ஓர் இரவு உணவு உண்டு தூங்கி எழுந்து போக விரும்பி ஒரு வயோதிகரின் உதவியுடன் அவரது மகனென்று பொய் சொல்ல வைத்து மாறு வேடமிட்டு வந்திருக்கிறான்.. அவனுக்கு உணவிட்டுத் தங்க வைத்து அனுப்பாமல் அவன்தான் சித்தப்பா மகன் என்று அடையாளம் கண்டு கொண்ட பிரதீபன் அவனை அடித்துத் துரத்தி விட்டான் என்ற பழி வந்து சேர்ந்திருக்கிறது.. நிச்சயதார்த்த விழாவிற்கு வந்திருக்கிற உறவினர் அனைவரிடமும் அந்த வயோதிகர் நியாயம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.. தன்மீது எந்தத் தவறும் இல்லை என்று விளக்கம் கொடுக்காமல் ஆமாம், அப்படித்தான் என்று அந்தப் பழியை தன் தலைமீது போட்டுக் கொண்டு நந்தினி, ரம்ய மாலினியின் மானம் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறானே.. இந்த பிரதீபன்.. இவன் உத்தமன் அல்லவா.. நந்தினி கைகூப்பி விட்டாள்.. ரம்ய மாலினியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. உணர்ச்சிப் பிழம்பாக மாறியிருந்தாள்..

அவள் எந்தக் குணங்களை எதிர்பார்த்தாளோ.. அந்தக் குணங்களின் மொத்த உறைவிடமாக அவள் முன்னால் நின்று கொண்டிருந்தான் பிரதீபன்..

“எந்தா இது நந்தினி.. ஞான் ஆரானு..? நிண்ட சேட்டனல்லே.. சேட்டனுக்கு அணியத்தி நன்னி பறயாணாம்.. கேட்டே..”

“எல்லோரும் உங்களைத் தப்பா நினைப்பாங்களே அண்ணா..”

“விஜாரம் கொள்ளட்டும்.. அதி பத்தி எந்தா..? ஈ வழக்கு (சண்டை) பங்காளி வழக்கெண்டு அனைவரும் விஜாரம் கொள்வதே நல்லது.. பெண் குட்டிகளின் பெகுமானம் (மரியாதை, கௌரவம்) காக்க எந்துப் பழி வேண்டுமெண்டாலும் ஏற்றுக் கொள்ளலாமல்லோ..”

“தனபாலன் இது பற்றி ரவியிடம் பேசுவாரா..?”

“பறயாண்டான்.. அவனிக்கு ரவியோட ஸ்நேகிதம் வளர பெரிசு.. அவனிட ஸ்நேகிதன் எண்டு ஊர் முழுக்க பறயறதினாலதானே பிஸினெஸ் வெர்ல்டில ஈ பொசிஷன் அவனுக்குக் கிட்டி.. அதி கெடுத்துக்க மாட்டானல்லோ.. பட்ஷே.. ரவியாட பெகுமானம் குறயதைப் போல அனைத்து

பெந்துக்களிடமும் இதி பத்தி பறய்வானல்லோ.. அபராஜிதன ஞான் அடிச்சு விரட்டினதப் பத்தி ரவி அறியும்.. அறிஞ் ம் இதி பத்தி என்னிடம் யாதொரு கேள்வியும் கேட்கலையெண்டு இவன் ஊர் முழுக்கப் பறஞ் .. ரவியிட பெகுமானம் குறயறதில ஈ தனபாலனுக்கு வளர இஷ்டமானு..”

இப்படியும் ஒருவன் இருப்பானா என்றிருந்தது நந்தினிக்கு.. ரவிச்சந்திரனின் நண்பன் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அந்த அடையாளத்தை வைத்து முன்னேறுபவன் ரவிச்சந்திரனின் மரியாதையைக் குறைக்க வாய்ப்புக் கிடைத்தால் அதை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு நண்பனுக்கே குழி பறிக்கிறான்..

‘தரங்கிணியின் அண்ணன் வேறு எப்படியிருப்பான்..?’ ரம்யாவைப் பார்த்தாள்..

‘கேட்டுக்க.. இவன் மீதுதான் உனக்கு சாப்ட்-கார்னர் இருந்தது..’ என்று சொல்லாமல் சொன்னது அந்தப் பார்வை..

“மனிதர்களை புரிந்துக்க கொஞ்ச காலமாகுது நந்தினி..” குற்ற உணர்வுடன் சொன்னாள் ரம்ய மாலினி..

“இப்போதாவது புரிந்துக்கிட்டோமே.. அதுக்குச் சந்தோஷப் படுவோம்..”

பிரதீபன் எதையும் உணர்ந்து விடக்கூடாது என்பதற்காக தன்னையும் ரம்ய மாலினியுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டு நந்தினி சொன்னதில் நெகிழ்ச்சி யடைந்த ரம்ய மாலினி..

“நீ அண்ணியில்ல.. அம்மா..” என்று நந்தினியின் தோள்களில் சாய்ந்தாள்..

“இவ குழந்தை அண்ணா..” பிரியத்துடன் ரம்ய மாலினியின் முடி கோதியபடி சொன்னாள் நந்தினி..

‘ஞான் இவளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டு வேனாக்கும்..’

பார்வையிலேயே தொட்டில் கட்டி ரம்யாவைத் தாலாட்டினான் பிரதீபன்.. அன்று மாலை ரவிச்சந்திரன் வந்தவுடன் அனைத்தையும் சொன்ன நந்தினி..

“ரம்யாவுக்கு பிரதீபன் அண்ணா மேல லவ் வந்திருக்குன்னு தோணுது ரவி..” என்று சொன்னாள்..

“குட்.. எங்கேஜ்மெண்ட் முடிந்தவுடன் உரிமையா ‘ரவி’ன்னு பெயர் சொல்லிக் கூப்பிட ஆரம்பிச்சுட்ட..” காதலனாக முதலில் அதை கண்டு கொண்ட ரவிச்சந்திரன்.

“பிரதீபன்தான் ரம்யாமாலினிக்கு ஏற்ற மாப்பிள்ளை என்று மனதில் பிக்ஸ் பண்ணியதினால்தான் பத்மானந்தனின் வீட்டில் உன்னையும் உன் குடும்பத்தையும் தங்க வைத்து கூடவே ரம்ய மாலினியையும் அனுப்பி வைத்தேன்..” என்று கண் சிமிட்டினான்..

“என்னிடம் சொல்லவே இல்லை.. பார்த்தீங்களா..?”

“உன்னிடம்தான் சொல்லலை.. அம்மா, அப்பாவிடம் சொல்லி அவங்க பெர்மிஷனை வாங்கிட்டேன்.. பத்மானந்தன் அவருடைய மகளை எனக்கு மேரேஜ் பண்ணிக் கொடுக்க விருப்பப் பட்டார்.. நாங்க சம்மதிக்கலை என்றதும் வேறு ஒரு இடத்தில் பெண்ணை மேரேஜ் பண்ணிக் கொடுத்து விட்டார்.. மகளைத்தான் நாங்க வேண்டாம்ன்னு சொல்லிட்டோம்.. அவருடைய மகனுக்காவது ரம்யாவை மேரேஜ் பண்ணிக் கொடுக்கனும்னு ரொம்பவும் கேட்டுக்கிட்டார்.. நான் விசாரித்த போது பிரதீபன் திறமையானவன்.. நேர்மையானவனு தெரிய வந்தது.. அவந்திகா அத்தையின் மைத்துனர் மகனாயிற்றே என்று யோசித்தோம்.. தனபாலனின் மேலே ரம்யாவுக்கு சாப்ட் கார்னர் வந்து விட்டதிலே இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என்று அப்பா அம்மாவிடம் பேசி சம்மதிக்க வைத்து விட்டுப் பிரதீபனுக்கு ரம்யாவைப் பெண் கொடுக்க சம்மதம்

என்று பத்மானந்தனுக்குத் தகவல் சொல்லி விட்டேன்.. அதனால்தான் உரிமையாக நமக்கு அவர் உதவ வந்தார்.. அவருடைய வம்சாவழியினர் வாக்குக் கொடத்து விட்டால் அதைக் காப்பாற்ற உயிரையும் கொடுப்பவர்கள் என்று கேரள மக்கள் மத்தியில் பிரசித்தமானவர்கள்.. அந்தப் பெருமையை வைத்துத்தான் யோகானந்தன் மாமாவிற்கு அவந்திகா அத்தையை மேரேஜ் பண்ணிக் கொடுத்தாங்களாம்.. இவர் வம்சப் பெருமையைக் குலைப்பதைப் போல வாக்குத் தவறியதில் கோபப்பட்டுத்தான் பத்மானந்தன் வீட்டில் இவரைக் கிட்டச் சேர்த்துக்க மாட்டாங்க..”

எத்தனையெத்தனை கதைகள்..! அத்தனையும் ஆழம் நிரம்பிய ஆத்மார்த்தமான பொக்கிஷங்கள்..! சென்னையை விட்டு வெளியேற மங்களூர் எக்ஸ்பிரஸில் ஏறியபோது இது போன்ற கதைகளைக் கொண்ட ஓர் ராஜவாழ்க்கை அவளுக்காக காத்திருந்ததை நந்தினி அறிவாளா..? உலகமே வியக்கும் வண்ணம் நந்தினிக்கும், ரவிச்சந்திரனுக்கும் திருமணம் நடந்து முடிந்தது.. அவர்களது திருமண வரவேற்பு விழாவுடன் பிரதீபன் - ரம்ய மாலினியின் திருமண நிச்சயதார்த்த விழாவையும் நடத்தி விட்டான் ரவிச்சந்திரன்.. அவனும் நந்தினியும் தேநிலவுக்காக ஸ்விட்ஸர்லாந்து

கிளம்புவதற்குள் ரம்ய மாலினியை பிரதீபனுக்குத் திருமணம் செய்து கொடுத்து அவன் கைகளில் தங்கையை ஒப்படைத்து விட்டுத்தான் கிளம்பினான்.. பத்மானந்தனின் மாளிகை ரம்ய மாலினியை ஆராதித்து அரவணைத்துக் கொண்டது.. அவள் எதிர்பார்த்த பாதுகாப்பை வாழ்க்கை அவளுக்குக் கிடைத்து விட்டது..

அத்தியாயம் 273

“**வா**ட் டு யு வான்ட்.. காபி, டீ.. ஆர்..”

விமானப் பணிப்பெண் இழுத்த இழுவையில் எரிச்சலடைந்தாள் நந்தினி.. வாக்கியத்தை முடிக்காமல் ‘ஃபில் அப் தி பிளாங்ஸ்’ என்று அவள் விடவேண்டிய அவசியம் என்ன..? காபி, டீ அல்லது ஏதேனும் ஓர் பானம் என்று கேட்டிருக்கலாமே.. அதைத்தானே மற்ற பணிப்பெண் கேட்கிறார்கள்..

‘காபி, டீ, ஆர் மி..? அப்படின்னு சொல்லாம சொல்கிறா..’

அவர்கள் விமானத்தில் ஏறியதிலிருந்து இப்படித்தான்.. அந்த விமானப் பணிப்பெண் மட்டும் ரவிச்சந்திரன் இருக்கும் இடத்தையே சுற்றிச் சுற்றி வந்தாள்.. அவள் ரவிச்சந்திரனுக்கு நன்கு அறிமுகமானவளாம்.. அத்தகைய அறிமுகம் என்பதை நந்தினியால் யூகிக்க முடியவில்லை.. நான் ஒன்றும் சத்திய சந்தனல்ல.. பல பெண்களுடன் எனக்குப் பழக்கமுண்டு.. உன்னைக் கண்ட நொடி முதல் நான் ஏகபத்தினி விரதன் ஆகிவிட்டேன் என்று அப்ரூவர் ஆன காதலனுக்கு

மனைவியாகியிருக்கும் நந்தினியால் அவனைக் கேள்வி கேட்க முடியவில்லை..

கோபியர் கொஞ்சிய கிருஷ்ணன் ராமனாகி விடலாம்.. கோபியர் அனைவரும் தவசிகளாகி விடுவார்களா என்ன..?

அந்த விமானப்பணிப்பெண் நந்தினியைப் பார்த்த பார்வை..

‘அடியே.. சக்களத்தி..’ என்றது..

‘இது நான் சொல்ல வேண்டிய டயலாக்..’

நந்தினி பல்லைக் கடித்தாள்..

“ஹாய்.. ரவி.. ஹௌ ஆர் யு..?” பலவருஷப் பழக்கம் போல அவள் ரவிச்சந்திரனிடம் ஓடோடி வந்து குசலம் விசாரித்தாள்..

பக்கத்தில் கழுத்தில் புதுத்தாலி மின்ன,

நெற்றி வகிட்டில் குங்குமத்துடன் அமர்ந்திருந்த நந்தினியை அவள் கண்டு கொள்ளவே இல்லை..

நிமிர்ந்து பார்த்த ரவிச்சந்திரன் அந்த விமானப் பணிப் பெண்ணைப் போல பரபரப்புக் காட்டவில்லை.. அறிமுகமானவர்களிடம் பேசுவதைப்போல வெகு இயல்பாக..

"ஹாய் ஜென்னி.. ஐ ஆம் ஃபைன்.. பை தி வே மீட் மை வொய்ஃப்.." என்று நந்தினியை அறிமுகம் செய்து வைத்தான்..

அந்த ஜென்னி ஜன்னி வந்தவளைப்போல ஆகி விட்டாள்.. நெஞ்சைப் பிடித்துக் கொள்ளாத குறையாக அவள் தடுமாறித் தவித்ததில் நந்தினிக்கு வெறுத்துப் போய் விட்டது.. இப்படிக் காண்பவரெல்லாம் வயிற்றெரிச்சல் படுவதற்கு அவளென்ன டி.வி.யையா சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறாள்..?

'புருஷன்டி.. இவன் எனக்குத் தாலி கட்டிய புருஷன்..'

இவள் பொருமிக் கொண்டிருப்பதை அறியாதவனாய் ரவிச்சந்திரன் அவள் மீது கை போட்டு சரிந்து கொண்டான்.. அவனது உடலின் அழுத்தத்தில் நந்தினியின் உணர்வுகள் கிளர்ந்தன.. அவனது விரல்கள் அவளது விரல்களோடு பின்னிப் பிணைந்து விளையாடியதில் அவள் கிறக்கம் கொண்டாள்.. அவளை அணைக்காம அணைக்கும் வித்தையை அவன் அறிந்திருந்தான்.. பலர் மத்தியிலும் எவரும் அறியாத நெருக்கத்தைக் காட்ட அவனால்தான் முடியும் என்பதில் அவள் கன்னம் சிவந்தாள்..

ஜென்னியெனப்பட்ட ஏர் ஹோஸ்டஸினால் அவன் மனைவியிடம் காட்டிய நெருக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை போல..

இமைப்பொழுதும் சோராமல் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து உபசரித்துக் கொண்டிருந்தாள்..

விமானம் ஸ்விட்ஸர்லாந்தில் இறங்கி அவர்கள் விமான நிலையத்தின் பரிசோதனைகளுக்கு ஆட்பட்டு வெற்றிகரமாக அதை முடித்து ஒருவரையொருவர் அணைத்தபடி வெளிநடப்பு செய்த போது எங்கிருந்தோ ஓடி வந்து ரவிச்சந்திரனிடம் அப்பாத குறையாக..

"ஸ்விஸ்ஸில் எத்தனை நாள் தங்கப் போகிறீர்கள் ரவி.." என்று அப்பினாள்.. அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாத நந்தினி சட்டென விலகி முன்னால் நடந்து விட ஜென்னிக்கு ஏதோ ஒரு பதிலைச் சொல்லி அனுப்பி வைத்து விட்டு வேகமாக வந்த ரவிச்சந்திரனின் விழிகளில் கோபம் மின்னியது..

"யு ஆர் மை வொய்ஃப் நந்தினி.."

“இதை எதுக்கு இப்பச் சொல்கிறீங்க..? மறந்து போயிடுவீங்கன்னு உங்களுக்கு நீங்களே ஞாபகப் படுத்திக்கறிங்களா..?”

“ம்ப்ச்.. எவளோ ஒருத்தி என்னிடம் பேச வந்தா உனக்கேன் ஜெலஸ் வருது..?”

“அவ எவளோ ஒருத்தியா..? நீங்க ரெண்டு பேரும் கொஞ்சிக் குழாவிக்கிறதைப் பார்த்தால் அப்படித் தெரியலையே.. அவ உங்களைப் பார்த்தாலே வழியறா.. ஐயாவுக்கு அவளைப் பார்த்தாலே ஜிவ்வுன்னு ஆகுது.. அதான் ரெண்டு பேரும் மலரும் நினைவுகளை அசை போட்டுக்கட்டும்ன்னு தனிமையைக் கொடுத்துட்டு நான் தனியா வந்துட்டேன்..”

“ஓ.. அந்த அளவுக்கு நீ தியாகியோ..”

அவன் கண்கள் மேய்ந்தன..

“இல்லையா பின்னே..?” அவள் நொடித்த நொடிப்பில் அவள் சொன்ன ‘ஜிவ்’வென்ற உணர்ச்சிக்கு ஆட்பட்டான் ரவிச்சந்திரன்..

போதையுடன் அவளை அவன் பார்த்த பார்வையில் அரண்டு போன நந்தினி சுற்று முற்றும் பார்த்தபடி பின்னால் நகர்ந்து..

“வேண்டாம் மச்சான்.. இது ஏர்போர்ட்..” என்று ஒற்றை விரலை உயர்த்தி இங்கும் அங்கும் ஆட்டி அவனை எச்சரித்தாள்.. அந்த விரலைப் பிடித்து அவளை அருகில் இழுத்து செல்லக் கடி கடித்தவன் இறுக்கமாக அவளை அணைத்து முத்தமிட்டான்..

“ம்ப்ச்.. பப்ளிக் பிளேஸ்..” நந்தினி அவன் மார்பில் கைவைத்துத் தள்ளினாள்..

“மக்கு.. இது ஸ்விட்ஸர்லாந்த் ஏர்போர்ட்டுடி..” அவளது தலையில் ஒரு குட்டு வைத்து அருகில் அணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்த இளஞ் ஜோடியை அவன் சுட்டிக் காட்டினான்..

“உங்களுக்குன்னு உடனடியா சப்போர்ட் கிடைச்சிருது பாருங்க..”

நந்தினி அவனைத் தள்ளி விட்டு நடந்தாள்.. இரண்டே எட்டில் அவளை அணுகி விட்ட ரவிச்சந்திரன்..

“ஏய்ய்.. உனக்கு அவ மேல ஜெலஸ்தானே..?” என்றான்..

அவனது கண்களின் கள்ளச் சிரிப்பில் அவளுக்கு கோபம் கோபமாக வந்தது..

“எவ.. அவ..?” தெரியாததைப் போலக் கேட்டாள்..

“இதுதானே வேணாம்ங்கிறது.. அவதான்.. அந்த ஜென்னி..”

“அடிவாங்கப் போறடி..?”

“அடிப்பீகளோ.. என் மாமன்மகனே.. ஞான் பெண் சிங்கமாக்கும்.. கேட்டே.. அவ மேல எனக்கென்ன ஜெலஸ்..? அவளுக்குத்தான் உங்க கையைப் பிடித்து இழுக்க விடாம நான் அடைகாக்கிறேன்னு என்மேல ஜெலஸ்..”

“வாஹ்ரே.. வா..”

‘என்னைத்தை வாய் விட்டுத் தொலைச்சேன்..?’

“ஸோ.. அவ என் கையைப் பிடித்து இழுத்துருவான்னுதான் இத்தனை கோபமா..? இதைத்தான் ‘ஜெலஸ்’ன்னு சொல்லுவாங்க...”

“சொல்லுவாங்க.. சொல்லுவாங்க.. உங்களைப் போல ஆளுக இருந்தா இதையும் சொல்லுவாங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவாங்க..”

“இவ்வளவு ஜெலஸ் இருக்கிறவ எந்தப் பெண்ணையும் என்கிட்ட நெருங்க விடாம அடை காத்திருக்கனும்.. இப்படித் தள்ளிப் போகக் கூடாதுடி..”

அவன் விழிகள் அடை காப்பது எப்படியென்பதைச் சொல்லித்தந்தன.. நந்தினியின் மனதில் நீலமலையின் மரகுடிலும், ஆலப்புழாவின் படகுவீடும், கோவளத்தின் கடற்கரையும் முட்டி மோதின.. அவர்களுக்கான ஹோட்டல் அறையை அடைந்ததும் வேகமாக கதவை அடைத்துக் கட்டிலில் அவளுடன் சரிந்தவன் அவளது மனதில் முட்டி மோதிய கனவுகளை நனவாக்கி அவளை சுகமானதொரு இம்சையிலே ஆழ்த்தினான்..

அவள் மீதான அவனது மயக்கம் தீராக் கிறக்கமாக இருந்தது.. அவன் மீதான அவளது மயக்கம் முடிவில்லாத பாதையாக நீண்டுகொண்டே இருந்தது.. எண்ணியிருந்தது ஈடேறி விட்ட சந்தோஷத்தில் ஒருவரிடம் ஒருவர் அடைக்கலமாகி ஆனந்தமடைந்தார்கள்.. நந்தினி அவனிடம்

மயங்கினாள்.. அவளது மயக்கத்தில் அவன் மயங்கினான்.. அலைபாய்ந்த அவளது மனது அவனது அணைப்பில் மட்டுமே அமைதியடைந்தது.. அவளது உடலில் பரவிப் படர்ந்தவன் அவளிடம் பேசிய ரகசியப் பேச்சுக்களைச் செயலில் காட்டினான்.. அவனது சூடான உதடுகளின் ஈரத்தில் அவளைக் குளிர்வித்தான்.. குளிரில் நடுங்கியவளின் மீது போர்வையாகி அந்தக் குளிரைப் போக்கினான்.. முடிவேயில்லாத அந்த சுகத்தில் தங்களை மறந்து அவர்கள் மூழ்கினார்கள்.. அவளது வெட்கம் கலந்த ஆட்சேபக் குரல் தேய்ந்து மறைந்து காணாமல் போனதில் அவன் திருப்தி கொண்டான்..

“தாழம்பூவில் காணும்

பொன்வண்ணம்..

நாளும் வாளும் தோகைப்

பூங்கன்னம்

எங்கே நானென்று

தேடட்டும் என்னை சிந்தாத

முத்தங்கள் சிந்த..”

கூடிக் களித்து களைத்து புரண்டு படுத்து மார்பில் அவளை இழுத்துப் போட்டு முடி கோதிய வண்ணம் அவன் பாட அவள் விழிமூடி அவன் பாடலில் சொக்கினாள்.. இரண்டு மாதங்கள் அவர்கள் ஸ்விட்ஸர்லாந்தில் தங்கினார்கள்.. அங்கிருந்த அவனது கம்பெனியின் கிளையினைத் தலைமை அலுவலகமாக்கி அவன் தொழில்களைக் கவனித்த வண்ணம் தேநிலவைக் கொண்டாடியதில் அந்த இளம் வயதில் வியாபார உலகின் நட்சத்திரக் கதாநாயகனாக அவன் எப்படி மாறினான் என்ற ரகசியத்தைக் கண்டறிந்து பூரித்துப் போனாள் நந்தினி.. அவன் அவளுடைய காதல் கணவன் என்பதில் அவளுக்கு கொள்ளை கொள்ளையாய் பெருமை வந்தது.. "ஏண்டி.. எத்தனையோ நாடுகள் இருக்க ஹனிமூன் கொண்டாட ஸ்விட்ஸர்லாந்தை ஏன் செலக்ட் பண்ணின..?"

பனிச் சறுக்கு விளையாடியபடி அவன் கேட்டான்.. குனிந்து பனித் துகளை அள்ளி அவன் மீது விசிக் குதூகலித்த நந்தினி..

"அதுவா அத்தான்.. என்னோட ஃபேவரைட் ரைட்டர், அவங்க கதைகளில் ஹீரோ, ஹீரோயின்களை மறக்காக ஹனிமூனுக்கு ஸ்விட்ஸர்லாந்துக்குத்தான் அனுப்பி

வைப்பாங்க.. அவங்க கதைகளைப் படிச்சுப் படிச்சு நான் ரெண்டு ஆசைகளை மனசில வைச்சிருந்தேன்..”

“என்னடி அது..?”

“ஒண்ணு.. ஆகாய நீலத்தில.. வெள்ளைக் கற்கள் பதித்து வேலைப்பாடு செய்யப்பட்ட சில்க் பிரிண்ட் ஸாரியை ரிசப்ஷன் சமயத்தில கட்டிக்கனும்.. இன்னொன்னு ஹனிமூனுக்கு ஸ்விட்ஸர்லாந்துக்கு போகனும்..”

“ஓ.. அதனாலதான் ரிசப்ஷனுக்கு ஸ்கை புளூ கலரில வொயிட் ஸ்டோன் பதிச்ச சில்க் பிரிண்ட் ஸாரிதான் வேணும்ன்னு அடம் பிடிச்சியா..?”

“ஆமாங்க ஆமாம்..”

“கதையைப் படிச்சு ரசிச்சுட்டு விடாம இப்படியெல்லாமாடி ஆசைப்படுவ..”

“நான் மட்டுமில்லை.. நிறைய கேர்ள்ஸ் அவங்களிடம் ஃபோனில் பேசறப்ப இந்த ரெண்டு ஆசைகளைத்தான் சொல்லுவாங்களாம்..”

“பாருடா..”

அவளைப் பார்க்கச் சொல்லிவிட்டு அவளை அவன் தின்று விடுவதைப் போலப் பார்த்து வைத்தான்.. அவள் உதட்டைக் கடித்து வெட்கிச் சிவந்தாலும் பனிக்காற்றில் உடல் சிலிர்க்க அவன் மார்பில் புதைந்து அவனைக் கட்டிக் கொண்டாள்..

வீடு முழுவதும் நெய்வாசம் கமழ்ந்து கொண்டிருந்தது.. மறுவீட்டு விருந்துக்கு வந்திருந்த மகளுக்கும், மாப்பிள்ளைக்கும் விதம் விதமாக பலகாரங்களை செய்து போட்டு அசத்திக் கொண்டிருந்தாள் வெண்ணிலா.. தமிழ்நாட்டு பலகார வகைகளை நொட்டை விட்டு மொக்கிய ரவிச்சந்திரன்..

“எந்தா சாரே.. ஈ பலகார வகைகளை விட நிங்க ‘யாழ்’ ஹோட்டல் டிஷ்ஷஸ் எங்ஙன பெட்டராம்..?” என்று வம்பிழுத்தாள் நந்தினி..

“மாமனார் வீட்டு விருந்தைவிட ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் டிஷ் பெட்டர்ன்னு எந்த மாங்காய் மடையனாவது சொல்லுவானாடி..?”

பதிலுக்கு பதில் கொடுத்தான் ரவிச்சந்திரன்.. மனைவியுடன் தஞ்சையைச் சுற்றி வந்தான்.. பிகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று வந்தார்கள்.. மாமனாரின் ஜவுளிக்கடைக்குப் போய் அவன் மனதுக்குத் தோன்றிய

ஆலோசனைகளைச் சொன்னான்.. மருமகனின் ஈடுபாடில் மகிழ்ந்து போன மேகநாதன் உடனடியாக அவன் சொன்ன மாற்றங்களைச் செய்து விட்டார்.. தஞ்சையின் மிகப் பெரும் பிரம்மாண்டமாக அவரது ஜவுளிக்கடை மாறிப் போனதில் நந்தகுமாருக்கு தலைகால் புரியவில்லை..

"நீங்க ஸ்டார் ஹோட்டல் ஓனருன்னா நான் ஸ்டார் ஜவுளிக்கடைக்கு ஓனராகிட்டேன் அத்தான்.." என்று மகிழ்ந்து போனான்..

மேகநாதனின் பூர்விக கிராமத்திற்குப் போனார்கள்.. குலதெய்வ கோவிலுக்கு மகளையும், மருமகனையும் அழைத்துக் சென்று பொங்கல் வைத்து குலதெய்வ வழிபாடு செய்த மேகநாதன்..

"இப்படியாப்பட்ட மாப்பிள்ளைக்குப் பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டு எவனோ ஒரு அயோக்கியனுக்குப் பெண் கொடுக்க நினைத்து என் மகளை வீட்டை விட்டுப் போக வைச்சிட்டேனே மாப்பிள்ளை.. அதை நினைத்து மனசுக்குள்ள எந்த அளவுக்கு துயரப்பட்டேன்னு இந்த அம்மனுக்குத் தெரியும் மாப்பிள்ளை.. என் மகள் நல்லபடியா பத்திரமா இருக்கனும்.. அவ மேல ஆசைப்பட்டு பெண் கேட்ட

மாப்பிள்ளைக்கே அவளைக் கட்டிக் கொடுக்கனும்னு என் குலதெய்வத்துக்கிட்ட நேர்ந்துக்கிட்டேன்.. அந்த நேர்த்திக்கடனை நிறைவேத்தத்தான் உங்களையும் நந்தினியையும் கிராமத்துக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்..” மருமகனிடம் விளக்கம் சொன்னார்..

“தெய்வத்தை வணங்கறது நல்ல விஷயம் மாமா.. எனக்கு இந்த ஊரையும் உங்க பண்ணை வீட்டையும் பிடிச்சிருக்கு..”

அவன் இசைவாகப் பதில் சொன்னதில் மேகநாதனின் முகம் மலர்ந்து விட்டது.. நந்தினிக்கு அவன் மீதான காதல் எப்போதும் போல அப்போதும் அதிகரித்தது.. இவன்தான் எப்பேற்பட்ட காதலனாக இருக்கிறான் என்று அவள் நெக்குருவிப் போனாள்..

ரவிச்சந்திரன் நந்தினியுடன் காவேரி ஆற்றில் குதித்து நீந்தினான்.. இருவரும் நீந்தி மறுகரையைத் தொட்டுத் திரும்பி வந்தார்கள்.. நீரில் நனைந்திருந்த முடிகள் அவனது முகத்தில் பரவி இருந்தது கவர்ச்சிகரமான அழகை உணர்த்தியதில் நந்தினி கிறங்கிப் போனாள்.. நீரில் நனைந்து அவளது உடலோடு ஒட்டியிருந்த சேலை வெளிப்படுத்திய அவளது

அங்க அமைப்புகளின் லாவண்யத்தில் அவன் வேட்கை கொண்டான்..

மரங்களின் நிழல் அடர்ந்த காவேரிப்படித்துறையில் அவன் கட்டியணைத்துக் கொடுத்த முத்தம் ஸ்விட்ஸர்லாந்தில் அவன் கொடுத்த முத்தங்களை விடச் சுவையானதாகவும் சுகமானதாகவும் இருந்தது.. சாலையிலிருந்து பார்த்த போது தூரமாகத் தெரிந்த செஞ்சிக் கோட்டை நந்தினியை 'வா' வெனக் கண்சிமிட்டி அழைத்தது..

காரின் மீது சாய்ந்து நின்று கோட்டையைப் பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனிடம்..

"இந்தக் கோட்டைதான் என் வாழ்வில் முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தது.." என்று அறிமுகம் செய்து வைத்தாள் நந்தினி..

"நான் உன் வாழ்க்கையில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தலை என்கிறாயா..?"

போட்டிக்கு வந்தவனைப் பார்க்கும் பொறாமையுடன் கோட்டையை முறைத்தான் ரவிச்சந்திரன்..

“இந்தக் கோட்டை உங்களோட ரெப்ரெசென்டேட்டிவ் ரவி.. உங்களுக்கான பிரதிநிதி.. உங்களிடம் என்னைச் சேர்த்தது இந்தக் கோட்டைதான்.. இது உங்க ஃபிரண்ட்.. எனிமி இல்லை.. நம்ம லைஃபில் நடக்கும் சில இன்ஸிடெண்ட்கள் நம் வாழ்க்கையை மாற்றி விடும் டெர்னிங் பாயிண்ட்ஸ்.. இதை நாம உணர்வதில்லை.. இந்தக் கோட்டைச் சுவர் வளைந்து நெளிந்து ஏதோ ஒரு மலைப்பாதையை எனக்கு உணர்த்தியது.. அப்போது எனக்குத் தெரியாது ரவி.. தஞ்சையின் காவேரிக் கரையில் பிறந்து வளர்ந்த நான் மலையாள நாட்டின் வயநாட்டுக்கு மருமகளாகப் போகிறேன் என்று.. அன்றைக்கே இந்தக் கோட்டையின் மலைப்பாதை வயநாட்டின் மலைப் பாதையைத்தான் சொல்லியிருக்கிறது..”

“ஆமாண்டி.. இந்தக் கோட்டை உன்னிடம் ரகசியம் சொல்லியிருக்கிறது.. லூஸாட்டம் உளராமல் வா.. அப்பப்போ ஜென் துறவியைப் போலபேச ஆரம்பிச்சிருவா.. நீயெல்லாம் சீரியஸா திங்க் பண்ணிப் பேச ஆரம்பிச்சா இந்த உலகம் தாங்குமாடி..”

விளையாட்டாய் பேசி நந்தினியின் காதைத் திருகியபடி மலைப்பாதையில் ஏறிய ரவிச்சந்திரன் செஞ்சிக் கோட்டையை

நண்பனைப் பார்ப்பதைப் போன்ற பிரியத்துடன்தான் பார்த்தான்..

செஞ்சிக்கு வந்ததினால்தான் நந்தினி தஞ்சைக்குத் திரும்பிப் போகாமல் ரவிச்சந்திரனிடம் அடைக்கலமாக வர முடிந்தது.. செஞ்சியின் மீதான அந்த அபிமானம் ரவிச்சந்திரனின் மனதில் எப்போதும் உண்டு.. அதனால தான் நந்தினி செஞ்சிக்குப் போக வேண்டுமென்ற அவளது ஆசையைச் சொன்னதும் அவளுக்காக ஒப்புக் கொள்வதைப் போன்ற பாவனையுடன் மறுக்காமல்..

“ஓகே.. டன்..” என்று சொல்லி விட்டான்.. உத்ராவும் வினித்தும் அவர்களுக்காக செஞ்சி வந்து திரும்பினார்கள்.. கேரளாவுக்குக் கிளம்பும் முன்னால் சென்னையிலிருந்த உத்ராவின் வீட்டுக்கு விருந்துக்கு போய் வந்தார்கள்..

சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் அதன் வழக்கமான பரபரப்புடன் பயணிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.. மங்களூர் எக்ஸ்பிரஸில் ஏறிய நந்தினி அவளுடைய இருக்கையில் பெட்டிகளை வைத்து விட்டு எதிர் இருக்கையைப் பார்த்தாள்.. கால் மேல் கால் போட்டுத் தோரணையாக அமர்ந்திருந்தான் ரவிச்சந்திரன்..

“ஹு ஆர் யு மேன்..?” குரலை உயர்த்தி அதட்டினாள்..

“உன் புருஷன்டி..” அவள் கையை அவன் வெடுக்கென பற்றி இழுக்க அவன் மடி மீது விழுந்தவளின் மீது அவன் கவிழ்ந்தான்..

“நான் பாடும் பாடல்..

நலமாக வேண்டும்..

இசைவெள்ளம் நதியாக ஓடும்-

அதில்

இளம் நெஞ்சம் படகாக

ஆகும்..”

அவளது காதோரம் அவன் பாடிய பாடலில் மயங்கிப் போனவளாக கண்மூடிக் கிறங்கினாள் நந்தினி.. ரயில் கிளம்பி நகர ஆரம்பித்தது.. அவள் புகுந்த விடான மலைவளநாட்டு வயநாட்டை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தாள்..

“தடக்.. தடக்.. தடக்..

கூ.. குக்கூ.. கூ...”

-முற்றும்-

பின்னுரை:

பிடிக்காத திருமணத்திலிருந்து தப்ப மங்களூர் எக்ஸ்பிரஸில் ஏறிக் கோழிக்கோடுக்குப் பயணமான நந்தினி, இப்போது மனதுக்குப் பிடித்தவனைக் காதலித்து திருமணம் செய்து கொண்ட மனைவியாக மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ புகுந்த வீட்டிற்குப் போய் கொண்டிருக்கிறாள்.. அவளை ரவிச்சந்திரனுடன் வழியனுப்பி வைத்து விட்டு நமது வாழ்க்கைக்குத் திரும்பலாம்.. வாங்கப்பா.. நமது வாழ்க்கை நமக்காக காத்திருக்கிறது..

-சுபம்-

லட்சுமி பாலாஜி பதிப்பகம்